
# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ரூபா 100 /=

ஜனவரி - மார்ச் 2021

மல்லிகை சி குமார் ஓராண்டு நினைவுச் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வடக்கின் முதல் தர
சாரதிப் பயிற்சி பாடசாலை

**226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

**021 222 4353, 0777 399 480**

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.






0777 225292
kirubaalearners
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | | |
|---|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | சித்தங்கேணி 021 225 2500 | பருத்தித்துறை 021 226 1100 | நெல்லியடி 021 226 0700 | சாவகச்சேரி 021 227 0700 |
| ஆவரங்கால் 021 222 6688 | கச்சேரி 021 222 6699 | பூநகரி 021 320 1818 | விசுவமடு 021 320 1515 | முழங்காவில் 021 300 6544 |
| கிளிநொச்சி 021 228 5505 | மன்னார் 023 225 1656 | வவுனியா 024 222 7777 | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Northway
Family Mart
Save Money. Live Better.

SunWay

Daisy
The Best Choice



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாயகத்துக்கு நல்வாழ்த்துகள்!

நீரைச் சேமிப்போம். இரசாயனம் தவிர்ப்போம்.
மண்புழு உரம், கூட்டெரு, இயற்கைப் பூச்சி விரட்டிகள்,
பயிர் ஊக்கிகள் - இவையே எம் எதிர்காலம்.

MAVAI NATURAL

திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்
0762348877 fb/Smart Farming Jaffna




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்னா . இக்பால்

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

# மல்லிகை சி குமார் ஓராண்டு நினைவுச் சிறப்பிதழ்



## உள்ளடக்கம்

### மல்லிகை சி குமார் நினைவுக் கட்டுரைகள்

சு. முரளிதரன் 05
சிவ. இராஜேந்திரன் 17
மாறன் 37
முத்து முத்துவேல் 45
தனராஜ் சுஜேந்திரகுமார் 47
மு. சிவலிங்கம் 49
ட. சிவசாமி 26
ப. செல்வராஜ் 66
மொழிவரதன் 61
இதயராசன் 70
மாத்தளை மலரன்பன் 79

### கவிதைகள்

மலையரசன் 04
மல்லிகை சி. குமார் 10
சி. கிருஷ்ணப்பிரியன் 30
இராசாத்தோட்டம் உதயசூரியன் 36
சந்திரலேகா கிங்ஸ்லி 48
செம்மலர் மோகன் 56
மை. பன்னீர்ச்செல்வம் 56
வள்ளியம்மை சுப்பிரமணியம் 60
சா. கா. பாரதிராஜா 73
சண்முகம் சிவகுமார் 75
ஜெயதர்மன் 81

### சிறுகதைகள்

மல்லிகை சி. குமார் 11
றொபின் - புன்னாலைக்கட்டுவன் 23
சை. கிங்ஸ்லி கோமஸ் 27
சி. ரா. ஜெயம் 31
க. சிவகரன் 67
க. தவச்செல்வம் 75

### கட்டுரைகள்

மல்லிகை சி குமார் 43
க. தணிகாசலம் 51
பூண்டுலோயா வித்யா 57
ஜோ. ஜெகன் 63
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ 81

### மாணவர் ஆக்கம்

எஸ். கிருசாந்தி 22
எஸ். கௌசல்யா 22
எம். பிரசாந்தினி 22

## அஞ்சலி



'மல்லிகை' ஆசிரியர்

# டொமினிக் ஜீவா

ஈழத்து தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் களங்களில் ஒன்றான 'மல்லிகை' இலக்கிய இதழை, தனது அயராத உழைப்பால் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் வெளியிட்டு வந்தவரும், 'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக பல நூல்களை வெளியிட்டு ஈழத்து இலக்கியத்துக்கு வளம் சேர்த்தவருமான, மூத்த படைப்பாளியும், முற்போக்கு எழுத்தாளருமான டொமினிக் ஜீவாவின் மறைவுக்கு 'தாயகம்' இதழும், தேசிய கலை இலக்கியப் பேரவையும் அஞ்சலியை செலுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்
THAYAKAM
Art, Literature Social science Magazine

இதழ் 101
ஜனவரி- மார்ச் 2021

பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்
நிர்வாக ஆசிரியர் :
ச. சத்தியதேவன்
ஆசிரியர் குழு :
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
வே. தினகரன்
ஆதித்தன்
வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்
அட்டை ஓவியம் :
செல்வன்
உள் ஓவியங்கள் :
இணையத்திலிருந்து
அச்சுப் பதிவு :
ஜே. எஸ் பிறின்ரேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.
தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com

விளம்பரம் :
புத்தகப் பண்பாட்டு வலையமைப்பு
ஸாரங்கசர்மா
அருந்தவராசா ஹிரித்தியா
வெளியீடு :
தேசிய கலை இலக்கியப் பேரவை
62, கொக்குவில் சந்தி
கொக்குவில்

வங்கிக்கணக்கு :
Editorial Board of thayakam
S/A no : 007236144
BOC, Chankanai



# 1000 ரூபா சம்பளக் கோரிக்கையும் உழைக்கும் மக்கள் நிலையும்

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படை நாட் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சுமார் ஆறு வருடங்களாக தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் உண்ணாவிரதம், மெதுவாக வேலை செய்தல், கையெழுத்துப் போராட்டம் போன்ற பல வடிவங்களில் இக் கோரிக்கைக்கான போராட்டங்கள் இப்பொழுதும் தொடர்கின்றன. இதற்கு முன்னர் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் போராட்டங்களிலும் இலங்கை மக்களின் கவனத்தை ஈர்த்த போரட்டங்களாக இவை அமைந்தன. காலிமுகத் திடலில் பெரும் எண்ணிக்கையான சிங்கள, தமிழ் தொழிலாளர்கள், இளைஞர்கள் மாணவர்கள் கூடி முன்னெடுத்த ஆர்ப்பாட்டம், போன்று மலையகத்தின் பல பாகங்களிலும் இது முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் மலையகத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா கோரிக்கைக்காக வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மணவர்கள் முன்னெடுத்த போராட்டம், பொது அமைப்புக்கள் முன்னெடுத்த சமூக நீதிக்கான போராட்டங்கள் என்பன தேசம் பரந்த ஒரு மாற்றுச் சிந்தனைக்கான ஆரம்பமாக பலராலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் அவை எமது நாட்டின் அதிகார பீடங்களின் மனச்சாட்சியை சிறிதும் உறுத்தவில்லை. பதிலாக தேர்தல்காலம் வந்த போது வழமையாக அவர்கள் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கு முன்வைக்கும், வெறும் உதட்டிலிருந்து வரும் வெற்று வாக்குறுதிகளில் ஒன்றாக சம்பளக் கோரிக்கையும் அமைந்தது.

பதவியிலுள்ள அரசாங்கம் தேர்தல் காலத்தில் நடைபெற்ற தமது பரப்புரையின் போது தாம் பதவிக்கு வந்தால் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்று அறிவித்தது. இன்று எதிர்க் கட்சியாக உள்ளவர்கள் கூட அதற்கு மேலாகச் சென்று ஆயிரத்தைநூறு ரூபா சம்பள உயர்வை அறிவித்தனர். 2021ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் போது ஜனவரி முதலாம் திகதி முதல் ஆயிரம்; ரூபா சம்பளம் வழங்கப்படும் என தற்போதைய பிரதமரும் நிதியமைச்சருமாகிய மகிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் அறிவித்தார். பொங்கற் பரிசாகக் கிடைக்கும் என தொழிலாளர்கள் நம்பிய அச்சம்பள உயர்வும் வெறும் உரையாகவே போய்விட்டது. பெருந் தோட்டக் கம்பனிகள் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் இதனைத் தீர்த்துக்கொள்ள தயாரக இல்லை. இது இருபத்தி மூன்று கம்பனிகள் மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கை மீது செலுத்தும் ஆதிக்கத்தின் வலுவை மக்களுக்கு வெளிப்படுத்தி நிற்கிறது.

இவை போன்ற நிகழ்வுகள், அரசியல் அதிகாரம் பாராளுமன்றத்தில் அல்ல வசதிபடைத்த ஆளும் வர்க்கங்கள், பல்தேசியக் கம்பனிகள், அவற்றுடன் இணைந்து செயற்படும் உள்நாட்டுக் கம்பனிகள் கைகளில்தான் உள்ளது என்பதை மிக வெளிப்படையாக காட்டி நிற்கிறது. வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் இன்றைய சூழலில் ஆறு ஆண்டுகளுக்கு முதல் முன்வைக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் எந்தளவுக்கு போதுமானது என்பதை பாதிப்புக்குள்ளாகும் தொழிலாளர்களே அறிவர். மனிதாபிமான அடிப்படையிலும், உற்பத்தியை ஊக்குவிக்கக் கூடிய வகையிலும் உடனடியாக அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். ஆனால் பெருந்தோட்டக் கம்பனிகளோ எழுநூறு ரூபாவை மட்டுமே அடிப்படைச் சம்பளமாக வழங்க முடியும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாப் பிடியாக இருந்து வருகின்றன. இக்கோரிக்கை தொடர்பில் தொழிலாளர்கள் தொடர்ந்து போராட வேண்டியது அவசியமானதாகும். அத்துடன் இவ் அனுபவங்களுக் கூடாக உழைக்கும் மக்கள் உண்மை நிலைமைகளை அறிந்து விழிப்புணர்வு பெறவேண்டும். இத் தேசத்தின் பொருளாதார வளத்துக்காக தம்மைப்போலவே உண்மையாக உழைத்தும், பயனின்றி இதுபோன்ற துயர்நிலைக்கு தொடர்ந்து ஆளாகும் பெரும் எண்ணிக்கையான அனைத்து உழைக்கும் மக்களுடன் ஒன்றுபட்டு தமது கரங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய அவல வாழ்வுக்கு உட்பட்டிருப்பது மலையகத் தொழிலாளர்கள் மட்டுமல்ல இலங்கை மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் தனியார் துறைகளிலும், அரச துறைகளிலும் பணிபுரிந்து மாதாந்தச் சம்பளத்தைப் பெற்று தமது வாழ்க்கையை கடன் சுமைகளுடன், துன்பதுயர்களுடன் நடத்துபவராக உள்ளனர். நாளும் பொழுதும் ஏறும் விலைவாசிகளுக்கு ஏற்ப, வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளுக்கு அமைய சம்பளங்கள் வழங்கப் படுவதில்லை. பெறுகின்ற சம்பள விகிதத்தில் பல வேறுபாடுகள் இருந்தாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் ஒருபுறம், கட்டற்ற சந்தைப் பொருளாதார நுகர்வுப் பண்பாட்டால் ஏற்படும் நுகர்வுப் பொருட்களின் விலை ஏற்றம் மறுபுறம் என தேசத்தைப் போலவே, கடன் சுமையுடன் காலத்தை தள்ளும் வாழ்க்கையாக உள்ளது. இவ்வாறு நாளாந்தம் உழைப்போடு மாய்ந்து ஒடுங்கிவிடும் பலம் மிக்க பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்மை நிலைமைகளை உணர்ந்து, விழிப்படைந்து ஒன்றுபட்டால் அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி நிலை குலைந்துவிடும். அதற்காகவே பேரினவாத, குறுந்தேசியவாத அரசியலால் இன, மத அடிப்படையில் உழைக்கும் மக்கள் பிரித்து ஆளப்படுகின்றனர். எனவே இத்தகைய உண்மை நிலைமைகளைப் புரிந்து கொண்டு அர்த்தமுள்ள தொழிற் சங்கப் போராட்டங்களை விழிப்புணர்வுடன் முன்னெடுக்க வேண்டும்

மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் தமக்கான நில உரிமையை வென்றெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இது தொடர்பான கோரிக்கை பலமாக எழுப்பப்பட்டு வருகின்றது. மக்கள் சார்ந்த அமைப்புகளால் வெவ்வேறு மட்டங்களில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1980ம் ஆண்டு தலவாக்கலை நகரில் இடம் பெற்ற தேசபக்த வாலிபர் இயக்க இளைஞர் மகாநாட்டில், தேசிய கலை இலக்கியப் பேரவையும் கலந்துகொண்டு, மலையக மக்களுக்கு இருபது பேர்ச்சஸ் காணி உரித்தாக்கப்பட வேண்டும் என அங்கு முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை வரவேற்றது. அத்துடன் தனி வீட்டுத் திட்டத்தையும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட கிராமங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் மக்களது கோரிக்கையாக அங்கு முன்வைத்திருந்தது. எவ்வாறாயினும் மாறி மாறி பதவிக்கு வந்த இனவாத அரசுகள் இக்கோரிக்கை தொடர்பில் இது வரை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளில் அமர்ந்தவர்களும் இவை தொடர்பில் உறுதியான கொள்கைத் தீர்மானத்தையோ, இவற்றை வென்றெடுக்கக் கூடிய போராட்டச் செயற்பாடுகளையோ முன்னெடுக்கவில்லை. இவைபற்றி மயைக மக்கள் சிந்திக்க வேண்டும்.

மலையக மக்களின் மண்ணின் மீதான வாழ்வாதார உரிமையை மறுப்பதைப் போலவே, மானுட அறிவியல் பண்பாட்டுக்கு முரணாக, வடக்குக் கிழக்கில் மண்ணை அகழ்ந்து கிளறி பௌத்த அடையாளங்களைத் தேட மக்களின் பாவனைக்குரிய நிலங்களை அரசு அபகரிக்க முயல்கிறது. இதனால் தென்னிலங்கையில் பேரினவாத உணர்வுக்கும், வடக்குக் கிழக்கில் குறுந் தேசிய இனவாத உணர்வுக்கும் தொடர்ந்தும் தீனி போட அரசு முயல்கிறது. தமிழர்கள் குறித்த காலப் பகுதியில் பௌத்த, சமண மதங்களை ஏற்றிருந்தனர் என்பதும், சமூக நீதிக்கான நல்லுணர்வை அக்காலச் சூழலுக்கு ஏற்ப முன்வைக்கும் உயரிய இலக்கியங்கள், நீதி நூல்கள் தமிழில் உருவாக அவை உந்துதலாக அமைந்தன என்பதும் ஆட்சியில் இருப்பவர்கள் அறியாததல்ல. இவற்றை ஆதாரமாக வைத்தே ஒன்றுபட்ட தேசத்தைக் கட்டி எழுப்பமுடியும். ஆனால் புத்தர் அன்று அரச அதிகாரத்தை துறந்து வெளிவந்து, அரசமரத்தடின் கீழமர்ந்து மக்களை அன்பால் வெல்லும் மதமார்க்கத்தை முன்வைத்தார். பேரினவாத அரசு இன்று புத்தரின் அன்பு மார்க்கத்தை அறவே மறுத்து, வெறும் சிலைகளை மட்டும் வைத்து தமது ஆளும் வர்க்க அதிகாரத்தை தொடர்ந்து நிலைநாட்ட முயல்கிறது. அத்தகைய உணர்வுடன்தான், விஞ்ஞான பூர்வமாக தீங்கு இல்லை என்றபோதும், கிழக்கில் கோரோனா பெருந்தொற்றால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் உடல்களை, அவர்களின் மதநம்பிக்கைக்கு ஏற்ப மண்ணில் புதைப்பதற்கு மறுத்து வருகிறது.

இதே வேளை சிங்கள மக்களும் தமது அடிப்படை ஜனநாயக, வாழ்வாதார உரிமைகளுக்காக இன்றும் போராடி வருகின்றனர். விலைவாசி ஏற்றம், சம்பள உயர்வின்மை, வேலை வாய்ப்பின்மை, சுதந்திர வர்த்தக நிலையங்களில் தொழிலாளர்களின் அவல நிலை, பட்டதாரி நியமனம், விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தலின் பிரச்சினைகள், தேசத்தின் நிலங்களையும் வளங்களையும் அந்நியருக்கு கையளிப்பதற்கு எதிரான கோரிக்கைகள் என்பவற்றை முன் வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். கொழும்பு துறைமுகத்தின் முக்கிய முனையங்களை அந்நிய நாடுகளுக்கும், கோப்றேற் நிறுவனங்களுக்கும் தாரைவார்த்து வரும் அரசின் திட்டங்களுக்கு எதிரான கோரிக்கைகளும் மக்களிடம் வலுவடைந்து வருகின்றன.

எனவே உழைக்கும் மக்கள் அனைவரும் தமது உரிமைகளுக்காக ஒன்றுபடுவதன் மூலம் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வலிமையைப் பெறவேண்டும். அத்துடன் இத்தேசத்து மக்களின் நலன்களுக்கு எதிராக நீண்டு தொடரும் இன, மதப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் மாற்று அரசியல் மார்க்கத்தை உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட பலத்தால் கட்டி வளர்க்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய விவசாயிகள் எழுச்சிக்கு எமது வாழ்த்துகள்

# செவ்வணக்கம்



உழைப்பை விதைத்து உணவு தரும் தோழர்களே -புது
உலகின் அறுவடைக்கு போர் முரசம் செய்தீரோ? - உயிரைத்
துச்சமாய் எண்ணி துணிவு கொண்டு செல்லுகையில்
வீரம் விளைகிறது புது விதிகளும் மலர்கிறது


எஃகினை ஒத்த இளம் வயது நெஞ்சங்களும்
செங்கொடி ஏந்தி செறுமுனைக்கு போதல் கண்டு
உணர்வுகள் கொப்பளிக்க உயருது பார் முஷ்டிகளும்
உமை வாழ்த்திப் பாடிடவே உலகெங்கும் போர் முரசம்

உணவு தரும் விவசாயி ஓரணியாய் நிமிர்ந்து நின்றால்
உலகம் புரளும் ஓடிடுவார் எதிரிகளும்
தடை இரும்பு தண்ணீர் கரும்புகை கட்டைத் தடி
அனைத்தும் பொடியாகும் அநியாயம் தாழ் பணியும்

குழந்தை தாய்மார்கள் கொள்கை மிகு முதியோர்கள்
பறை முழங்க அங்கே பாய்ந்து செல்லும் வீரக் காட்சி
காட்டாற்று வெள்ளம் போலே கரை புரண்டு எழுகுது பார்
களைகள் கலைந்தால் தான் கழனிகள் உயர்வு பெறும்

கார்ப்பரேட் கம்பனிகள் கண்ணை வைத்தார் மண்ணின் மீதே – அவர்
ஊரெல்லாம் அழித்த கதை ஒரு கோடி உள்ளதென்பேன் - இனி
கொங்கிறீட் பூமி தான் கொள்ளை போகும் விவசாயம்
எங்களுக்கு இனி என்ன தான் மிச்சமாகும்?

உணவை அழித்து ஊர் பிடிக்கும் முதலைகளை
ஓட விரட்டவென ஒருங்கிணைந்த தோழர்களே
கரம் இணைத்து நாமே கானங்கள் இசைக்கின்றோம்
சிரம் தாழ்த்தி நாங்கள் செவ்வணக்கம் செலுத்துகின்றோம்



மலையரசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சி. குமார் தனது கதைக்களங்களில் உணர்த்துபவைகள் குறித்த நோக்கு


சு.முரளிதரன்

மல்லிகை சி. குமார் ஏராளமான கதைகளை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் வாசகரிடையே பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஊடாக பகிர்ந்து கொண்டுள்ளார். சிந்தாமணி, வீரகேசரி, தினக்குரல், தினகரன் மற்றும் சூரியகாந்தி பத்திரிகைகள் அவரின் படைப்புகளுக்கு தாராளமாக கை கொடுத்தன. குறிப்பாக அவரின் இறுதிக் காலத்தில் அதிகமாக சூரியகாந்தியில் கதைகளைத் தந்திருந்தார். அவரின் நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் சூரியகாந்தியில் ஆசிரியராக கடமையாற்றியதும் அவரின் வேண்டுகோளுக்காகத் தொடர்ந்து அப் பத்திரிகைக்குக் கதைகளை வழங்க வேண்டியதாக இருந்தமை காரணமாக இருக்கலாம். மல்லிகை சி. குமார் தனது கதைகள் மூலமாக என்ன சொல்ல விழைந்தார் என்பதை அவரின் 'வேடத்தனம்' மற்றும் மனுசியம்' கதைத் தொகுப்பு மற்றும் கைக்குக் கிடைத்த பத்திரிகைகளில் காணக்கிடைத்த கதைகளை மட்டும் கொண்டு பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவரின் சிறுகதைகள் யாவும் நூலுரு பெறுமாயின் அவைகளையும் தொட்டு இந்த கட்டுரையை வியாபிப்பது முன்னெடுக்கப்படவேண்டும்.

(1)

மல்லிகை சி. குமார் குறித்து எழுத்தாளர் மு. சிவலிங்கம் கூறும் போது அவரின் கதைகள் தகவல் நிறைந்ததாகவும் தொழிலாளர்களின் பாமரத்தனங்களை அதிகார வர்க்கத்தினரும் சமூக வஞ்சகர்களும் பலியெடுக்கின்றமையைக் கண்டு அவரின் கதை மாந்தர்கள் உணர்ந்து வெகுண்டெழுவதைக் காணலாம் என்கிறார். அவரின் கதைகளில் மு. சிவலிங்கம் சொல்வதைப் போல சொந்த மக்களுக்காகப் பணி செய்ய வந்தோமென வஞ்சனை செய்யும் துரைத்தனம் மிக்கவர்களையும் பிழைப்புவாதிகளையும் தொழிற்சங்கவாதிகளையும் அரசியல் வாதிகளையும் விமர்சனம் செய்வதையும் மல்லிகை சி. குமார் தமது படைப்புகளில் தொழிலாளர்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள் அந்தத் தொழிலாளர்களாலே தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்துநிலையைக் கொண்டிருப்பதையும் காணத்தக்கதாக இருக்கின்றது. அத்தகைய பித்தலாட்டம் செய்பவர்களை அதிகாரவர்க்கம் எப்போதும் கண்டிக்காது என்பதாக அவர் எடுத்துக்கொண்ட யூகம் அதற்குக் காரணமாக இருக்கக் கூடும் எனலாம்.

"மனுஷியம்" கதையில் சக தொழிலாளி தோட்டத் துரையினால் தாக்கப்படுவது கண்டு சகபாடி தொழிலாளர் தலைவன் துரையைத் தாக்கி தண்டிப்பதும் பின்னர் அவன் கைது செய்யப்பட்டு பிணையிலெடுக்கப்படுவதற்கு அவன் சார்ந்த தொழிற்சங்கத்தால் தாமதிக்கப்படும் போது தொழிலாளர்களே நிதி திரட்டி பிணை வழங்குகின்றார்கள். அவரின் 'வேடத்தனம்' எனும் கதை தான் போட்டியிட்ட கட்சியிலிருந்து மாறி ஆளும் கட்சியில் அமைச்சர் பதவியை தலைவர் பெற்றுக் கொண்டதை எண்ணி மனம் பேதலிக்கும் அவரோடு சேர்ந்து போட்டி போட்டு ஜெயித்துவிட்ட எம்.பி ஒருவர் தனது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்துவிட்ட நிலையில் அவருக்கு பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட போகிறது என்பதை அறிந்து பின் தடாலடியாக தனது எண்ணத்தை மாற்றிக் கொள்கிறார். பிரதி அமைச்சராக எம்.பி நியமிக்கப்படுவது குறித்து அவரைச் சந்திக்க வந்த தொழிலாளர்களிடம் அவரின் உதவியாளர் தெரிவிக்கும் போது தொழிலாளர்கள் தமக்குச் சம்பள உயர்வை பிரதி அமைச்சரான பின்னர் பெற்றுத்தருவாரா எனக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கின்றார்கள். அதற்கு உதவியாளர் கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் வரை இரு வருட காலத்துக்கு அதைப்பற்றிப் பேச வேண்டாம் என அவர் கூறி வீட்டுக்குள் நுழைகையில் தொழிலாளர்களில் ஒருவன் கல்லெறிய முகப்பு ஜன்னல் உடைந்து சுக்குநூறாக நொறுங்கி விழுகின்றது. "ஏய் எங்களை ஏமாற்றி நீங்க இன்னும் எத்தனை காலம் வாழமுடியும்? இதற்கெல்லாம் நாங்களும் முடிவு கட்டாமல் விடமாட்டோம்" எனக்கூறித் தொழிலாளர்கள் ஆர்ப்பரிப்பதாகக் கதையை முடிக்கின்றார்.

அதுபோல 'ஆயிரம் ரூபாய்' கதையில் தொழிலாளர் கள் சம்பள உயர்வுக்காக ஒன்றுதிரண்டு போராடும் வேளையில் அங்கு வந்த தொழிற் சங்கத் தலைவரும் எம்பியுமான ஒருவர் பேச்சுவார்த்தையில் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு பெற்றுத் தருவதாக சொல்லி போராட்டத்தை நிறுத்த முயற்சிப்பதோடு, தாம் உயிர்த் தியாகம் செய்தாவது பெற்றுத்தருவோம் எனக் கூறி காவல்துறைக்கு கட்டுப்படச் சொல்லும்போது, போராட்டத் தில் கலந்து கொண்ட பெண் ஒருவர் "நீங்கள் உயிர்த் தியாகம் செய்ய போகின்றீர்களா? சும்மா வாய்ப்பந்தல் போடாதீங்க. எங்க தொழிலாளர் போராட்டம் வெற்றி அடைய நாங்கள் தான் உயிரை விடணும். எத்தனையோ தியாகிகளை கண்ட மண்ணு இது. எங்களின் போராட்ட உணர்வுகளை திசை திருப்ப உங்களால் முடியாது" எனச் சொல்லும் போது "ஓ அப்ப நீ தொழி லாளர்களைத் திசை திருப்பி போராடுவியோ?" ஏளனக் குரலில் தலைவர் கேட்க அதற்கு எதிர்க்குரல் எழுப்பி அப்படியே தொழிலாளர் எதிர்ப்பு போராட்டத்தை தொட ருவோம் உறுதி உரைத்து அக்கணமே திசை திருப்பு வதற்காக உயிரை விடுவேன் என உறுதி கூறி அவ் விடத்திலேயே தனக்குத் தானே அவள் தீ மூட்டி தற்கொலை செய்து கொள்ளும் போது அங்குள்ள இளைஞர்கள் ஆத்திரம் கொண்டு தலைவர் மீது பாய காவல்துறையின் தயவினால் தலைவர் தப்பித்துக் கொள்வதாக கதையை முடிக்கிறார்.

'தேங்காய்' கதையில் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தோட்டக் கோவிலுக்கு வந்து தனது உறவினர் ஒருவர் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி பெற பூஜை செய்து நேர்த்தி வைத்து சிதறு தேங்காய் உடைக்க அது சில்லு தேங்காய் பொறுக்க வந்த சிறுவர்களில் ஒருவனை பதம் பார்க்கின்றது. அதனைக் கண்டு ஆத்திரமுற்ற அங்கிருந்தோர் அவரின் ஆடம்பர வாகனத்தைச் சேதமாக்குவதும் 'சாகாத ஓட்டுக்கள்' எனும் கதையில் வேட்பாளர் ஒருவர் சுகவீனமுற்ற மூதாட்டியை வாகனத்தில் அழைத்துச் சென்று மோசடி முறையில் வாக்களிக்க வைத்து விட்டு மீண்டும் கூட்டி வராமல் அம்போ என வாக்களிப்பு நிலையத்திலேயே கைவிட்டு வர அவள் அங்கு இறந்து போகின்றாள். தனது பதவி வெறிக்கு தனது ஆயாவை பலியாக்கி தேர்தல் வெற்றி பெற்று வரவிருப்பவரை வரவேற்கும் கூட்டத்தினரிடையே அவளுடைய பேரன் சகபாடிகளோடு இரும்பு கம்பியோடு காத்திருப்பதும் மல்லிகை சி. குமாரின் இந்த தண்டிக்க வேண்டிய பொறுப்பு பாதிக்கப்பட்டவர்களதே எனும் கருத்து தொனிப்பதைக் காணலாம்.

'பாடசாலை திறப்பு விழா'வில் பிரமாண்டமாக ஏற் பாடு செய்யப்பட்டிருந்தும் வருகை தராத அமைச்சரை கண்டிக்கவோ தண்டிக்கவோ முடியாத பட்சத்தில் அந்தத் தோட்டத்தில் நைட் ஸ்கூல் நடத்தி தற்போது முதியவர் ஆகிவிட்ட ஒருவரை வைத்து திறப்பதும், மே தினக் கொண்டாட்டத்தில் தலைவராக அலங்கரிக்க தயாரான 'கொழுந்து மாலை' இறந்து போன தொழிலாளி யாகவிருந்த மூதாட்டியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த பயன்படுத்தப்படுவதும் மல்லிகை சி.குமாரின் தார்மீக எதிர்ப்புக்குரல் சார்ந்ததே எனக் கொள்ளல் வேண்டும்.

(2)

மல்லிகை சி. குமார் மலையக மண்ணில் கால் பதித்த, தன்னை அம்மண்ணில் விதைத்த, மலையக மண்ணை சுவாசமாக கொண்ட ஒரு படைப்பாளி என மேமன்கவி சுட்டியிருப்பதை சான்றுபடுத்த பல கதை கள் இருக்கின்றன. உதாரணமாக சிலவற்றை மீட்டுப் பார்க்கலாம்.

அவரின் 'ஐ லவ் யூ' கதை மண்பற்றை நேரடியாக வெளிப்படுத்தும் ஒன்றாக இருக்கிறது. தாயகம் திரும்பு வதையும் தவிர்த்து, தனது மூத்த பிள்ளைகள் தோட்டத்து வாழ்வை விடுத்து வெளியே சென்று நல்வாழ்க்கை வாழும் போதும் அவர்களை சரண் அடையாமல் சதா தனது மண்ணையும் மக்களையும் நேசிக்கும் சிகை யலங்காரத் தொழிலாளி ஒருவரின் இளைய மகன் தோட்டத்து பாறைகளிலும் வங்கிகளிலும் பாதைகளிலும் 'ஐ லவ் யூ' என எழுதி எழுதி வைத்திருப்பதை கண்டு அவனுக்கு காதல் பித்துப் பிடித்து விட்டது என அரசல் புரசலாகக் கதைகள் கேட்டு அந்த தகப்பன் தன் மகனைத் தண்டிக்கும் போது, பெண்ணுக்கு மட்டுமா ஐ லவ் யூ சொல்லணும்... மண்ணுக்கும் சொல்லக்கூடாதா.. என தந்தை எண்ணப்படி இந்த மண்ணை நேசிக்கவே அவ்வாறு எழுதினேன் என மகன் சொல்லும் போது தகப்பன் தான் தவறு செய்துவிட்டதை உணர்கின்றார்.

'கொழுந்துக்காடு' கதையில் கங்காணியாக தர்பார் செய்து ஒருவர் ஓய்வு பெற்று விட்ட நாளில் நானும் ஒரு தொழிலாளி என்பதை உணர்ந்து கொழுந்துக் காட்டில் வளர்ந்த செடியை அணைத்தபடி கேவி அழுவதுவும் 'எப்படியும் விடியும்' என்ற கதையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட நிர்வாகத்தின் திறமையின்மையால் தேயிலைப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியுறுவது காரணமாக தொழிலாளர்கள் கிழங்கு மற்றும் மரக்கறி தோட்டங்களுக்கு கூலி வேலைகளுக்கு செல்வது கண்டு, தோட்ட இளைஞர்கள் திரண்டு அவ்வாறு பிரைவேட் வேலைகளுக்கு போகின்றவர்களை தடுத்து நாம் இவ்வாறு வெளியே வேலைக்கு செல்லத் தொடங்கினால் தோட்டத்தைப் பிறருக்கு தாரை வார்த்து விடுவார்கள் ஆகவே தோட்ட நிர்வாகத்தை அச்சுறுத்தியாவது, தோட்ட நிலத்தில் பிறர் கை வைக்கக் கூடாது என்பதற்காக அர்ப்பணித்த தியாகிகள் வழியில் செயல்பட்டு, நாம் மண்ணைக் காப்பாற்றவேண்டும் என சொல்வதும் 'நெஞ்சில் உரம்' கதையில் தோட்டத்திலிருந்து படித்த ஒருவன் தோட்டத்தில் காதலித்த பெண்ணைக் கைவிட்டு அந்த மக்களிடம் அந்நியமாகிப் போய் பல காலத்துக்குப் பின் தனது போலித்தனத்தை உணர்ந்து மீண்டும் தோட்டத்துக்கு வருவதும் அங்கு மக்கள் மண்ணுக்கான போராட்டங்களை இன்னும் மேற்கொள்வதும் கண்டு தான் கபட நாடகம் ஆடியதை உணர்ந்து தன் மீதே அவன் பச்சாதாபம் கொள்வதும், தான் பூப்படைந்த நேரத்தில் கர்ப்பிணியான தனது தாய் மழைக்காலத்தில் கொழுந்து பறிக்கச் சென்ற போது தவறி விழுந்து உயிரை விட்ட பின் தன் தந்தையோடும் தோட்டத்திலிருக்கும் ஒரு சில முதியவர்கள் வாழ்க்கையைக் கழிக்கும் போது தாயகம் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படுகையில் முதியவர் ஒரு மண் பொம்மையை பரிசளிப்பது கண்டு அது எதற்காக எனக் கேட்ட காரணத்தில் அந்த மண் பொம்மை அவள் பிறந்து வளர்ந்த நிலத்தின் மண்ணை எடுத்துச் செய்தது என்றும் அதனை எப்போதும் காப்பாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதும் மல்லிகை சி. குமாரின் மண்பற்றிய சிந்தனை தான் காரணமாகின்றது.

(3)

குமார் அவர்களின் கதைகள் பல கோயில்களை நிலைக்களன்களாக கொண்டிருப்பது குறிப்பிட்டு நோக்கத்தக்கது. கோயில்கள் தோட்ட மக்களுக்கான ஒரு பொதுச் சொத்தாகும் என்பது மட்டுமல்ல பொது ஸ்தானமாகும். இந்த தோட்ட கோயில்களில் காணத்தக்க அரசியல் சித்து விளையாட்டுக்கள், ஊழல்கள், மூடத்தனங்கள், கலாசார அம்சங்கள், மக்களின் பக்தி வெளிப்பாடுகள் என பலதரப்பட்ட விடயங்களைத் தமது கதைகளுக்குள் சொல்லும் ஒருவராக இருந்திருக்கிறார். தேர்தலில் போட்டிடும் ஒரு தலைவர் தோட்ட கோயிலுக்கு மணிக்கதவு பூட்டி அலங்கரிப்பதை பிரச்சாரமாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதை தனது 'மணிக்கதவு' கதையில் காட்டுகிறார்.

'இதுவும் ஒரு திருவிழா' என்ற கதையில் தோட்டத்தில் ஒரு லயன் குடியிருப்பு எரிந்து சாம்பலாகி அகதிகளாக தகரக் கொட்டில்களில் நரக வாழ்க்கை நடத்தும் சூழலில் கோவில் திருவிழாவை விமரிசையாக நடத்தி கோவிலுக்கு கூரைத்தகடுகள் கொடுத்த அமைச்சரை அதியாக அழைத்து வந்து மேலும் கோவிலுக்கு வளங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என கோவில் கமிட்டியினர் திட்டமிடுவதும், சாய்ந்த நிலையில் கணபதி மூல தெய்வமாக இருக்கும் கோவில் பூசாரி அடிக்கும் கொட்டமும் அங்கு அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கும் ராஜ மரியாதையும் காட்சிகளாக விரிகின்றன. குமாரின் கடைசியாக கருதப்படக்கூடிய 'கரண்ட் கட்டான நேரம்' கதையில் பண நோட்டுகள் காணிக்கையாக குவியும் கோவில் ஒன்றில் தர்மகர்த்தாவின் சவடால்தனத்தை விபரிக்கின்றார். கோயிலுக்கு உதவி பெற்றுக் கொள்வதைத் தூண்டில் புழுவாகக் காட்டி மே தினத்துக்கு தொழிலாளர்களை கூட்டம் சேர்க்கும் அரசியல்வாதிகளின் உத்தியை 'கொழுந்து மாலை'யில் காட்டுகிறார்.

(4)

பண்பாட்டு விழுமியங்களைக் காக்க வேண்டியது சமூக ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் அவசியமானது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் அதனைக் கருவியாகக் கொண்டு சமூகத்தைக் கட்டுப்படுத்துவது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை நிகழ்வதை மறுதலிக்கும் என்ற கோட்பாட்டை மல்லிகை சி. குமார் கடைபிடிப்பதை அவரின் கதைகளில் காணலாம். 'போதுமடி தாயே' என்ற கதையில் சந்தர்ப்ப சூழ்நிலையால் பயங்கரவாதியாக பழி சுமத்தப்பட்டு காதலன் சிறைவாசம் செல்ல நேரிடும் போது கொடியவன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வேதனை அனுபவிக்கும் ஒருத்தி, சிறைவாசம் முடிந்து வரும் காதலன், தன் கண் முன்னே கணவனால் துன்புறுத்தப்படுவதைக் கண்டு தைரியமாக அவளை ஏற்றுக் கொள்வது, கணவனே கண்கண்ட தெய்வம் என்பதை தூக்கி வைக்கும் மரபுசார் நம்பிக்கையைத் தூக்கியெறிகின்றது.

கொழுந்துமாலை மரியாதைகள் அவர்களுக்கு மட்டுமல்ல தொழிலாளர்களுக்கும் உரித்தானது என்று சொல்வதும், திருப்புவிழாக்களுக்கு அதிதிகளாக பிரதானிகள் தேவையில்லை அர்ப்பணிப்பு செய்யும் சாதாரணமானவர்களே போதும் என சொல்வதும், ஒரு வாழைக்கன்று கதையில் திருமணத்துக்கு முன்னே கர்ப்பமாக்கிய காதலன் விபத்தில் இறந்து போய் கன்னி கழியாத இளைஞனாக காட்டப்பட்டு வாழை மரம் வெட்டப்படுவதை காணும் காதலி தான் சுமக்கும் கருவை கலைப்பதற்கு உடன்படாமல் காதலன் மேற்கொண்ட நம்பிக்கையை ஊறுபடுத்தாமலிருக்க உறுதி கொள்வதும், 'கரண்ட கட்டான போது' காணிக்கை பணத்தில் சிறு பகுதி பூசாரியால் களவாடப்பட்டு டியூசன் கல்வி பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் போன மாணவிக்கு உதவிப் பணமாக வழங் கப்படுவதும் அவருடைய தார்மிக விதிமீறல்களை காட்டுகின்றன.

(5)

எண்பதுகளுக்கு முன் மலையக தொழிற்சங்க ஊழியர்கள் மிக நேர்மையாக தமது கடமைகளைச் செய்பவர்களாக இருந்தார்கள். தொழிலாளர்களிடம் தொழிற்சங்க தலைவர்களுக்கு இருந்த மதிப்பு அவர் களுக்கும் இருந்தது. தொழில் பிரச்சினைகளுக்கு மட்டும் அல்லாமல்; சமூக மற்றும் குடும்ப பிரச்சினைகளுக்குக் கூட தொழிற்சங்க காரியாலயங்கள் அப்போது ஜில்லா என அழைக்கப்பட்டு நடுத்தீர்ப்பு வழங்குவதாக இருந் தன. ஆனால் தொழிற்சங்கத் தலைவர்களின் அரசியல் பிரவேசம் காரணமாக வாக்கு வங்கியை உருவாக்கிக் கொள்ள அதனை தக்க வைக்க பின் விரிவாக்க தொழிற்சங்க பிரதிநிதிகள் அரசியல் அவதாரம் எடுக்க வேண்டியதானதும் பிரதேசசபை மாகாணசபைகளில் நுழைய ஆசி எதிர்பார்க்கும் நடுத்தர வர்க்க மக்களி லிருந்து வருபவர்களும் தோட்டத்தலைவர்களும் அரசியல் தொழிற்சங்க தலைவர்களை நாயக வழிபாடு செய்வதும் இன்றைய தமிழ் சினிமா மொழியில் சொல்வதானால் 'அல்லக்கை'கள் உருவாக்கம் பெறுவது மல்லிகை சி. குமார் படைப்புகள் காரணமாக மலைய கத்தில் புதிய பாடுபொருளானது. இத்தகையவர்களை தமது கதை களில் படம் பிடித்து அவர்களை கதைகளின் பாத்திர மாக்கி சீண்டிப் பார்க்கும் உத்திகளை குமார் பல இடங்களில் கையாண்டிருக்கிறார். அதில் முக்கியமான ஒன்று 'மீசை' எனும் சிறுகதையாகும்.

'மீசை'யில் தனது தலைவரின் தீவிர விசுவாசியான தோட்டத் தலைவர் தமது மகனுக்கு கொப்பி வாங்க கொடுக்க முடியாத அளவுக்கு வறுமையில் இருந்தாலும் தலைவரை விசுவாசிப்பதிலிருந்து பிடி தளராதவராக இருக்கிறார். தொழிற் சங்கத்தின் தலைவரின் படத்தை பொறித்த பழைய கொப்பியை வீட்டுக்குக் கொண்டு வருவதும் மகன் அதனை பாடசாலைக்குக் கொண்டு செல்வதும் அவனது வகுப்பில் கல்வி கற்கும் மாற்று தொழிற்சங்கத் தலைவரின் மகன் அந்த அட்டையில் தலைவர் மீசை இல்லாமல் இருப்பது கண்டு அந்த படத்தில் மீசை வரைவதும் பின்னர் அது ஒரு விவகாரமாகி இரண்டு தோட்டத் தலைவர்கள் இடையே மோதல் உருவாகும் போது இடையீடு செய்ய வந்த ஒருவர் அந்த மீசை இல்லா தலைவர் தற்போது தனது தோற்றத்தைப் பொழிவாக்கி மீசையோடு இருப்பதை விளக்கமாக சுட்டிக்காட்டுகின்றார். அட்டா பத்திரி கையிலோ தொலைக்காட்சியிலோ அவரைப் பார்க்காமல் இருந்து கொண்டு நீண்ட காலமாக அந்தத் தலைவர் விஜயம் செய்யாத தொழிற்சங்க பணிமனையில் தனது காலை நேரம் செலவிட்டதை எண்ணித் தனக்குத் தானே நாணுவதாக தலைவரைக் காட்டுகின்றார்.

ஏலவே சொல்லப்பட்ட மணிக்கதவு கதையில் தனது தலைவரை தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற்ற புதிய தலைவரின் நன்றி தெரிவிக்கும் போஸ்டர்கள் தோட்ட மெல்லாம் ஒட்டப்பட்டு இருப்பதைக் கண்டு எரிச்சல் மிக்கவராகத் தொழிற்சங்கத் தலைவர் தனது வீட்டுக்குச் செல்கின்றார். அங்கு அவரது வீட்டு மலசலகூட கதவிலும் அந்த போஸ்டர் ஒட்டிப்பட்டிருப்பதைக் கண்டு, யார் தைரியமாக தனது வீட்டில் ஒட்டியதென மாற்றுக் கட்சியினரை மல்லுக்கு அழைக்கும் போது அவரது மகள் ஓடி வந்து தானே அதை டொயிலட் கதவில் இருந்த ஓட்டையை அடைக்க ஒட்டினேன் என்கிறாள். கேட்டு தான் சார்ந்த தொழிற் சங்கத் தலைவரின் வெற்றிக்காக நாளையும் பொழுதையும் செலவழித்துக் கொண்டிருக்கும் போது தமது வீட்டு டொயிலட் கதவில் உள்ள ஓட்டை காரணமாக தனது பருவமடைந்த மகள் அனுபவித்த சங்கடத்தை உண ராமல் இருந்து விட்டேனே என வேதனை கொள்ளும் போது ஒரு சாராருக்கு நகைச்சுவையாக இருந்தாலும் இந்த மக்கள் குறித்த உள்ளுணர்வு உள்ளவர்களின் உள்ளத்தை ஆழமாக கீறி விடுவதாக இருக்கின்றது.

கொழுந்துமாலை கதையில் மே தினக் கூட்டத்தை ஒழுங்கு செய்யும் அல்லக்கை ஒருவர் செயற்படும் விதம் குறித்து சுவாரஸ்யமாக அந்த கேவலத்தை பதிவு செய்கின்றார். பாடசாலை திறப்பு விழாவில் இடைத் தரகராகச் செயல்படும் ஒரு தொழிற்சங்க பிரதிநிதி பாடசாலையில் எற்படுத்தும் களேபரத்தைச் சம்பவ சம்பவமாக காட்டி மீண்டும் மீண்டும் வாசித்து நமக்குள் நாமே சிரித்துக்கொள்ளும் அளவு சித்தரித்துள்ளார். 'வேட்டி' கதையில் தோட்ட தலைவராக இளமையிலிருந்து மிடுக்காக இருந்த ஒருவர் முதியவராகி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுக்கையையே வாழ்க்கையாகி கொள் ளும் போது அவரைக் கணக்கெடுக்க ஒருவரும் இல்லாத நிலையை சித்தரிக்கும் போது இத்தகையவர்கள் கறிவேப்பிலைகளாக பயன்படுத்தப்பட்டமையை சுட்டிக் காட்டுகின்றார்.

(6)

மல்லிகை சி. குமார் அவர்கள் நாட்டில் இனங்களுக்கிடையே அர்த்தபுஷ்டியான சகவாழ்வும் சமூக நல்லெண்ணமும் நிலவவேண்டும் என ஆழ் மனதில் சிந்திப்பவராக இருந்திருக்கின்றார். 'தேங்காய்' கதையில் அரசியல்வாதியின் சிதறு தேங்காய் ஒரு சிறு வனின் தலையை பதம்பார்க்கும் போது அதற்கு எதிராக முதலில் போர்க்கொடி பிடிப்பவராக இருப்பது நிலுமினி கிழவி எனக் காட்டப்படும் சிங்கள பாத்திரமாகும். 'ஐ லவ் யூ' கதையில் காலமாற்றத்தால் தோட்டத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகையலங்காரத் தொழிலாளர்கள் மதிப்பிழந்து போகும் போது நாட்டுப்பறத்தில் உள்ள பெரும்பான்மையினர் அவரின் வாழ்வாதாரத்துக்கு வாஞ்சையுடன் உதவவதைக் காட்டுகின்றார். 'புதுவெள்ளம்' கதையில் சிங்கள குடும்பம் பள்ளத்தாக்கில் வசிக்கும் முரண்பட்டு போன தமிழ்க் குடும்பத்தை வெள்ள மற்றும் மண்சரிவு அபாயத்திலிருந்து மனித நேயத்தை முதலீடாகக்கொண்டு காப்பாற்றுவதைக் காட்டுகின்றார். அவரின் சிவப்பு மலர்கள் கதையில் ஆனந்தனும் புஞ்சிநிலமையும் தொழிலாளர் எழுச்சிக் கான மேதின ஊர்வலத்தை அரசு தடைசெய்தும் அதை பொருட்படுத்தாது ஊர்வலத்தை ஒழுங்கமைப்பதும் அதை வெற்றிகரமாக முன்னெடுக்கும் போது அரச படையின் தோட்டாக்களுக்கு பலியாகிப்போனதை நினைவில் மீட்டிப்பார்க்கின்றார். என் இரத்தம் உணர்த் தும் கதையில் அண்ணன் ஒருவரின் குருதி அவன றியாமலே அவனது தங்கையை பலியாக்கிய ஒரு இனவாத சிங்களவருக்கு கொடுக்கப்பட்டு உயிர் பிழைக்கும் போது, தங்கையை இழந்து இரத்தபாசத்தில் துடிக்கும் தன்னுடைய குருதி அவனின் உடலில் ஓடும் போது தான் படும் வேதனையை அவனும் உணர்வான் என அண்ணன் பாத்திரம் எண்ணுவதாகக் கதையை முடிக்கின்றார். 'மனுஷ்சியம்' கதையில் தொழிற்சங்க காரியாலயத்தில் டைப்பிஸ்ட் பணிபுரியும் மத்திய தர குடும்பத்து சக்ராவுக்கும் இளம் வீறுகொண்ட தொழிலாளி செங்குட்டுவனுக்கும் காதல் அரும்பி சக்ரா அவனோடு லயத்தில் வாழ்வில் மகிழ்ச்சியடைவதை காட்டுகின்றார். 'எங்களில் ஒருத்தி' கதையில் எங்கோ ஒரு இரப்பர் தோட்டத்தில் தொழிலாளர் வேலை நிறுத்த போராட்டத் தில் கைகூலிகளால் கொலை செய்யப்பட்ட 'சுராங்கனி' எனும் சிங்கள பெண் தொழிலாளிக்கு தமிழ் தொழிலாளர் களைக் கொண்ட தோட்டமொன்றில் அஞ்சலிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு எதிப்புகளுக்குமிடையில் காவல் துறையின் மதிப்பை வென்றுகொள்ளுமளவுக்குச் சிறப் பாக நடைபெறுவதைக் காட்டுகின்றார்.

மல்லிகை சி. குமார் தனது கதைகளில் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் மலையகத் தியாகிகளை உணர்வு பூர்வமாக இளைய தலைமுறையினருக்கு அறிமுகப் படுத்துவதை ஒரு தவமாகக்கொண்டிருந்தமையைக் காணலாம். அது மட்டுமல்லாமல் அவரின் பெரும்பாலான கதைகளின் அடிநாதம் நடப்பு கால வரலாற்று நிகழ்வு களைத் தொட்டு நிற்பதைக் காணலாம். அல்லது கதைகளில் நடப்புகள் பதிவு செய்யப்படுவதைக் காணலாம். அது குறித்தும் விரிவாக எதிர்காலத்தில் ஆராய வேண்டும்.

OOO

# அஞ்சலி



ஈழத்துத் திரை இயக்குநர்

## ந கேசவராஜன்

"ஈழத் தமிழ் திரைத்துறை வரலாற்றின் நாயகன்" இயக்குனர் நவரட்ணம் கேசவராஜன் அண்மையில் காலமானார்.

பனைமரக்காடு முதலிய திரைப்படங்க ளையும் பல குறும்படங்களையும் இயக்கியதுடன் ஈழத்து திரைத் துறையை வளர்ப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்ட கலைஞர்.


இந்திய திரைப்படங்களை மிஞ்சும் வகையில் வடக்கின் திரைப்படத் தொழில்துறையை வளர்த்து பாதுகாக்க வேண்டும் என்ற அவாவுடன் வாழ்ந்த அவரது இழப்பு கனதியானது. அவரது மறைவால் துயருற்றிருக்கும் உறவினர் நண்பர்கள் கலை இலக்கிய செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தாயகம் இதழும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு மனைவி பிள்ளைகள் உற்றாருடன் துயரைப் பகிர்ந்துகொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதாரம்...

எங்களின் துயில்களைத் திருடிக் கொண்டு
எங்களை துயரில்
ஆழ்த்தி விட்டு
எங்களை நிர்வாணமாக்கி விட்டு
மரத்தின் உச்சாணிக் கிளையில்
மகிழ்ச்சி காண அமர்ந்த
நீல வண்ணக் கண்ணன்....
மீண்டும் மரத்தை விட்டு இறங்கி
அபேட்சகர் என்ற
அவதாரத்தில் எங்களை தரிசிக்க
மீண்டும் வருகிறார்
ஓ....நீலவண்ணனே
மீண்டும் உன்னிடம்
நாங்கள் எங்களின்
வாக்குத் துயிலை
பறிகொடுத்து விடட்டு
நிர்வாணமாய்
நிற்க மாட்டோம்



**மல்லிகை சி. குமார்**

## கலை இலக்கிய நிகழ்வுகளில் மல்லிகை சி. குமார்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கோப்பை சோறு

"அண்ணே... நான் எப்ப பொறந்தேன், எங்கப் பொறந்தேன், என் அப்பான் யாருன்னு எனக்கே தெரியாது. அம்மாவத் தெரியும். அது ஆத்துல விழுந்து செத்த துக்கப்புறம்... யாருமேயில்லை. எப்படியோ வளர்ந்திட்டேன்.

மல்லிகை சி. குமார்

நெனச்சதைவிட ரொம்ப சிறப்பாக கல்யாணம் நடந்திருச்சி' என்று பெருமையாக எண்ணியபடியே சாப்பாட்டு ஹோலுக்குள் நுழைந்த தங்கமணி...

பரிமாறும் மேசையில் பீங்கான்களுக்கு லஞ்ச் சீட்டை போட்டுக் கொண்டிருக்கும் ரத்னம் அருகில் போய்,

"ரத்னம், இந்த வெடிங் எவ்வளவு சிறப்பா நடந்திச்சோ அதே மாதிரி கல்யாண பந்தியும் சிறப்பா நடக்கணும், அதுலக் கொற இதுல கொறன்னு யாரும் எதுவும் சொல்லக்கூடாது. எல்லாமே நேர்த்தியா நடக்கணும்" என்றார்.

இவர்தான் மாப்பிள்ளையின் தகப்பன். எதிலேயும் ஒரு நேர்த்தி திருப்தி இருக்க வேண்டுமென்று நினைப்பவர். இவரை நன்றாகப் புரிந்து வைத்திருக்கும் ரத்னம்,

"நீங்கள் எதைப் பத்தியும் கவலப்படாதீங்க. யார் யாருக்கு எது எது பிடிக்குமோ அப்படி எல்லா... ஐட்டமும் இங்க சமைச்சி வச்சி ருக்குங்க... வேணு மின்னா நீங்களே ஒருதரம் எல்லாத்தையும் பார்த்துக்கங்க. எத்தனைப் பேத்துக்கு நீங்க சமைக்கணுமின்னு சொன் னீங்களோ அதைவிட அதிகமாகவே சமைச் சிருக்கோம். அப்படியே பத்தாமப் போயிட் டாலும் ஒடனே சமைக்கிறதுக்கு சமையல் காரங்க ரெடியாத்தான் இருக்காங்க..." என்று ரத்னம் சொன்னார்.

"என்னப்பா நீ ஒரு மதிப்பு வச்சியின்னா எல்லாமே சரியாத்தான் இருக்கும்... எதிலும் குறைவு ஏற்படாது, நிறைவாகத்தான் இருக்கும்" என்ற தங்கமணி.

"இப்ப டைம் சரி... சாப்பிட ஆட்களை அழைக்கலாம்தானே?" எனக் கேட்டார். "ஓ... தாராளமா அழையுங்க. எல்லாம் ரெடியா இருக்கு" என்றார் ரத்னம்.

"ந்தா நீங்க வந்து நில்லுங்கப்பா" என்று சப்ளை செய்யும் இளந்தாரிகளை அழைக்க, அவர்கள் மேசை மீது இருக்கும் ஒவ்வொரு உணவு பாத்திரங்கள் பின்னும் கரண்டியோடு நின்றனர்.

"ஏய் பிரபு, சாதம் சமையல் எல்லாம் எவ்வளவு தான் தாராளமாக இருந்தாலும் நாம கொஞ்சம் கண்டிஷனாகத்தான் இருக் கணும். கரண்டிக்கு வந்த மாதிரி எதையும் அள்ளி வச்சிடக்கூடாது." என்றான் ராகவன்.

"ஏய் அது மட்டுமில்ல... இங்க இன்னொரு சங்கடமும் இருக்கு. எவனாவது வெளி யாளுங்க கூட்டத்தோடு கூட்டமா வந்து சாப்பிட்டிட்டு போயிருவானுங்க. அதிலேயும் நாம கவனமா இருக்கணும்" என்றான் சேகர்.

"பாவண்டா எவனாவது வந்து சாப்பிட் டிட்டுப் போவட்டும். திருடவா வருவானுங்க, இல்லையே பசிக்கு சாப்பிடத்தானே வரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுங்க..." கொஞ்சம் இரக்கப்பட்டு சொன்னான் சுரேஸ்.

அவனை முறைத்துப் பார்த்த ரத்னம்,

"ந்தாப்பாரு சுரேஸ்.... இது அப்படி ஒண்ணும் தர்ம சத்திரமில்ல. வர்றவனுக்கெல்லாம் வாரிக் கொடுக்க. இது ஐயா வீட்டுக் கல்யாணம். நாமத்தான் கவனமா இருக்கணும். அந்த சேகர் சொன்னதில எந்தக் குத்தமுமில்லை. வீணா ஒரு கோப்பை சோறு போறதையும் நான் அனுமதிக்கமாட்டேன். அன்னத்த வீணா விரயம் பண்ணக்கூடாது" என்றான் ரத்னம்.

"பாவமின்னு ஒருத்தனுக்கு ஒரு கோப்ப சோறுக் கொடுத்திட்டாப் போதும், பத்து பேரு கியூவில வந்து நிப்பானுங்க. அப்படி எவனாவது கியூவில நொழைஞ்சி வந்தா தொரத்தியே புடணும்..." என்று கடுமையாகவே சொன்னார்.

இவர்கள் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தங்கமணி,

"இந்தாப் பாருங்க.... இப்ப எதுக்கு அந்தக் கதையெல்லம். இங்க அப்படி எந்தப் பயலும் வரமாட்டானுங்க" என்றவர்,

"வெடிங்கிக்கு எங்க வராம இருந்திடுவாரோன்னு நான் சந்தேகப்பட்ட நம்மத் தலைவர்... இந்தக் கல்யாணத்துக்கு வந்ததுல எனக்கு ரொம்பப் பெருமை... அவருக்குத்தான் முதல் விருந்த கொடுக்கணும். அவர் அவசரமா கண்டிக்குப் போக இருக்குதாம். முதல் பந்தியை அவருக்கே வச்சிடுங்க." என்று சொன்னார்.

"சரிங்க தலைவரையும் அவரோட வந்தவுங்களையும் அழைச்சிக்கிட்டு வாங்க" என்று ரத்னம் சொன்னதோடு மற்ற சப்ளையர்களையும் சுறுசுறுப்பாக இயங்க வைத்தார். சிறிது நேரத்தில் தலைவரையும் அவரோடு சேர்ந்து வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு வந்தார் தங்கமணி.

அவர்கள் சாப்பாட்டு ஹோலை விட்டு வெளியேறும் வரை வேற எவரையும் அதற்குள் அனுமதிக்கவில்லை.

தலைவர் மத்திய மாகாண சபையில் ஓர் உறுப்பினராக இருப்பதால், அவர் இன்று பள்ளேகலைக்குப் போக வேண்டும். எனவே இந்த ஈட்டிங் ஹோலில் அவருக்கும் அவரோடு வந்தவர்களுக்கும் விசேஷ விருந்துபசாரம் நடந்தது.

***

மெயின் வீதியில் கிழக்கு திசை கடைகளின் கடைசித் தொங்கலிலுள்ள சாராயத் தவறணையை கடந்து அப்பாலுள்ள போக்கில் நீர் வடிந்து போகாமல் அடைப்பட்டுக் கிடப்பதால், அதை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முருகேசு – வடிகான் ஓரத்தில் இருக்கும் மைல் கல்லில் உட்கார்ந்து இருக்கும் சுக்ருவை அண்ணார்ந்து பார்த்து விட்டு,

"ஏண்டா சுக்கு... பக்கத்து அன்ன பூரணா கல்யாண மண்டபத்தில கல்யாணம் நடக்குதே சாப்பாட்டுக்குப் போகலையா?" என்று கேட்டான்.

"ஆமாண்ணே போகணும்தான்" என்ற சுக்ரு. "இந்நேரம் சாப்பாடு போட்டிருப்பாங்கத்தானே?" எனக் கேட்டான்.

"நேரம் சரி" என்ற முருகேசு தன் வேலையில் ஈடுபட்டான்.

"அங்கப் போறதைப் பத்தி ஒண்ணுமில்ல, ஆனா... கூட்டத்தில நின்று சோறு வாங்குறதுக்குள்ள நல்ல நெரிப்படணும். கியூவில நிக்கவே சங்கடமாக இருக்கும்" என்றான் சுக்ரு.

"அதுக்கென்னா கியூவில நின்று நெரிப்பட்டாலும் ருசியான கொழும்பு கறி வகையோட நல்ல சாப்பாடு கிடைக்கும் தானே..." என்ற முருகேசு போக்குக்குள் கையைவிட்டு எட்டிய தூரம் வரைக்கும் கிடந்த குப்பைகளை இழுத்து வெளியில் போட்டான்.

"அங்க சோறு கெடைக்காதுன்னு யாரு சொன்னது? அது வெல்லாம் கிடைக்கும். ஆனா... சோத்த வாங்கி நான் அங்க வச்சி சாப்பிட மாட்டேன். லஞ்சி சீட்டோட சோத்த சுற்றி எடுத்துக்கிட்டு வெளிய வந்திடுவேன்" என்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்... மண்டபத்துக்குள்ள நல்லா உட கார்ந்திருந்து சாப்பிடத்தான் மேசை நாற் காலியெல்லாம் இருக்குமே. அதுல வச்சி சாப்பிட்டா என்னாவாம்?"

"மாட்டேன்.... சுற்றி எடுத்த சாப்பாட்ட அப்படியே சுடருப் புள்ளைக்கிட்டக் கொண்டு போய் கொடுத்திடுவேன். அது சாப்பிட்டா நான் சாப்பிட்ட மாதிரிதான்"

"சுடருப்புள்ளையா? அது யாருடா சுடரு?

"அது வந்து சுடருதான். அதுக்கு வீடெல் லாம் இல்ல. ஸ்டேசனுக்குப் பக்கத்தில பழைய எண்ணக் காம்பிரா இருக்குதில்ல, ஒரு பக்கம் பாதி சுவர் இடிஞ்சி பாழடைஞ்சிக் கெடக்கே... அதுலத்தான் சுடர் இருக்கா..., பாவம் ரெண்டு கண்ணும் தெரியாது. கூனிக் கூனி நடக்குமே ஒரு கெழவி அவத்தான் சுடரோடப் பாட்டி. அந்த ஒயில் ஷரூம் பக் கம் ஸ்டேஷன்காரங்க யாரும் வரமாட்டாங்க. அதுதான் ஒடைஞ்சிக் கெடக்க. பாவம் அந்த சுடருக்கு அந்த கெழவியம்மாத்தான் துணையா இருக்கா.... ஆனா அது எங்கே யாவது போயி அந்திக்குத்தான் ஏதாவது கொண்டு வரும். முன்னயெல்லாம் கெழவி எங்கப் போனாலும் சுடரையும் கூட்டிக் கிட்டதுதான் போவும். இப்ப அநேகமா சுடர அது தன்னோடக் கூட்டிக்கிட்டுப் போவாது. கெழவிக்கே இப்ப நடக்க முடியாது. இந்த லச்சணத்தில அந்த குருட்டுப் பொண்ணையும் இழுத்துக் கிட்டு அதுவால போக முடியுமா?

அதோட சுடருக்கு ரெண்டு காலும் சமமா இல்ல. வலது காலு கொஞ்சம் குட்ட. அது அவ பொறந்தப் பொறவியாம். ஒரு பத்து வருஷத்துக்கு முன்ன ஸ்டேஷன்ல வச்சி யாரோ ஒருத்தி....

"அம்மா இந்த கொழந்தையை கொஞ்சம் பிடிங்க.... வெளியப் போயிட்டு வந்திடு றேன்னு... சொல்லிப்டு டோயிலட் பக்கம் போனவத்தானாம்... இன்னும் அந்த தாய்க் காரி வந்து சேரல்லயாம்... பாவம் கெழவிதான் இந்தப் பத்து வருஷமா சுடர வளர்க்கிறாள்." என்றான் சுக்ரு.

கெழவி அங்க இல்லாத நேரத்தில நான் அடிக்கடி போயி சுடருக்கு ஏதாவது திங்க வாங்கிக் கொடுத்திட்டு வருவேன். பாவம் அந்தப் புள்ள அங்க தனியா இருக்கிறத நெனச்சா எனக்குப் பயமாக இருக்கு. ஏன்னா சில பொறுக்கிப் பயலுக அந்த ஒயில் ஷரூம் பக்கம் போயித்தான் கஞ்சாவ சுருட்டிக் குடிப்பானுங்க. ஆனா... இப்ப கொஞ்ச நாளா எவனும் தண்டவாளத்தை தாண்டி அங்க வர மாட்டானுங்க. போன வாரம் கஞ்சாப் பொட்டணத்தோட அந்த கோஷ் டில ரெண்டு பேரு பொலிசுக்கிட்ட மாட்டிக் கிட்டானுங்க. அதோட எவனும் அந்த ஒயில் ஷரூம் பக்கம் வர்றதில்ல. இருந்தாலும் எனக்கு பயமாகத்தான் இருக்கு" என்றான் சுக்ரு.

"ஏண்ணே நீ வேலை செய்யுற யு. சி.யில எனக்கும் ஒரு வேல வாங்கித்தர முடியுமா...?" எனக் கேட்டான்.

"அங்க வேலப் பிடிக்கணுமின்னா நகர சபையில சரியான ஷரூல்ஸ்ஸெல்லாம் இருக்கு. முன்ன மாதிரி இப்ப இல்ல. தகுந்த அத்தாட்சி எல்லாம் காட்டணும். குறிப்பாக 'பேர்த் சட்பிக் கேட்.... அது ஒங்கிட்ட இருக்கா?" என்று முருகேசு கேட்டதும்,

"அண்ணே... நான் எப்ப பொறந்தேன், எங்கப் பொறந்தேன், என் அப்பான் யாருன்னு எனக்கே தெரியாது. அம்மாவத் தெரியும். அது ஆத்துல விழுந்து செத்த துக்கப்புறம்... யாருமேயில்ல. எப்படியோ வளர்ந்திட்டேன்.

கடைசியா பாஞ்சாலையில வேல செஞ் சேன். அங்க யாரோ 'எச்சப் பனிக்கத்த' திருட.... கடைசியில அது ஏந்தலையில விழுந் திருச்சி. நான் எதுவும் செய்யல்ல. ஆனா... பழி..? அப்புறம் மூட்டத் தூக்கலாமின்னு பஜாருக்குப் போனா... ஒரே கலபலா... அங்க உள்ள நாட்டாமக்காரனுங்க என்ன வேலை செய்ய விடாம வெரட்டிட்டானுங்க."

"அவனுங்க எதுக்கு வெரட்டணும்?" என்ற முருகேசு காலை விட்டு மேலே ஏறினான். அவன் சாரத்தில் சேற்று நீர் வடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனுங்களுக்கின்னு ஒரு சங்கம் இருக்காம். அதுல சந்தாக்கட்டி நெம்பரா கணுமாம். அவுங்க ஒரு கார்ட் கொடுப் பாங்களாம். அதுக்கு அப்புறந்தான் நான் டவுன்ல மூட்டத் தூக்க முடியுமாம்." என்றான் சுக்ரு.

"பிற கென்னா நீ அவுங்க யூனியன்ல சேர்ந்துக்க"

"சந்தாக்கட்ட சல்லி...?'

"ஏன் கட்ட முடியாதா?"

"ஒரு வருஷ சந்தாப் பணத்த முதல்லேயே கட்டணுமாம். அதுக்கு நான் எங்கப் போவேன்?" உதட்டைப் பிதுக்கினான் சுக்ரு.

இதைக் கேட்டு சற்று யோசித்த முருகேசு.

"இன்னிக்கி பின் நேரத்தில பிரவேட்டா ஓர் இடத்தில ஒரு வேல இருக்கு. எனக்கு ஒதவியா நீ வர்றியா? ஒனக்கு சம்பளம் வாங்கித் தாறேன்..." என்றான்.

"என்னா வேல....?"

"ஒரு வீட்டுல டொயிலட் புலோக்காக்கிக் கெடக்காம். அதை எடுத்து விட்டு குழியையும் துப்பரவாக்கணும். நல்ல சம்பளம், சாராய மெல்லாம் கெடைக்கும்."

"நான் சாரயமெல்லாம் குடிக்கமாட்டேன். சம்பளத்த கொஞ்சம் கூட்டிக் கொடுத்தா சரி...."

"அதுக்கென்னா... கரைக்டா தர்றேன்..."

"சரி... ஆனா... இப்ப ஏதாவது சல்லி இருந்தா கொடே..."

"ஏமாத்தாம... கண்டிப்பா வருவத்தானே?"

"ஏந் தலைக்கு சத்தியமா நீ சொல்லுற எடத்துக்கு வந்திடுறேன்..." தன் தலையில் அடித்துச் சத்தியம் செய்தான் சுக்ரு.

சாரத்தை இடுப்ப வரைக்கும் சுருட்டி உள்ளே போட்டிருக்கும் கலுசனின் பின் பக்க பையிலிருந்து எடுத்த தாள் சல்லியை சுக்ருவிடம் கொடுத்தான் முருகேசு. அதை பணிவோடு வாங்கிக் கொண்ட சுக்ரு....

"அண்ணே... எங்கே எந்த எடத்துக்கு நான் வரணுமின்னு சொல்லலையே...?" என்று கேட்டான்.

"பழைய தியேட்டருக்கு மேலே ஆரியா புரம் கொலனி இருக்கில்ல. அதுல... போன முகப்புலையே இருக்கிற வீடுகளில் ஒன்று. அதாவது, பத்தாம் நெம்பர் வீடு. பேபி புளு கலர் பெயிண்ட் அடிச்சிருக்கும். முன்பக்க சுவரில் சிவப்பு கலரில் நெம்பர் பத்துன்னு எழுதியிருக்கும்."

"வீட்டுல நாய் இருக்கா...?"

"அந்த பயமெல்லாம் வேணா... அங்க எந்த நாயுமில்ல..."

"அப்ப சரி மூணு மணிக்கு முன்ன வந்து சேர்ந்திடுறேன்." - என்றான் சுக்ரு.

"இந்த வேல செஞ்சி கிடைக்கிற சல்லியில அந்த சுடருப் புள்ளைக்கு ஒரு பாவாட வாங்கித் தரணும். பாவம் அது ஒரு கிழிஞ்சப் பாவாடையைத்தான் கட்டியிருக்கு" என்ற சுக்ரு, "அண்ணே நீ கொடுக்கிற சம்பளத்தில ஒரு பாவாடை வாங்கலாம் தானே?" எனக் கேட்டான்.

"ஏய் ஒனக்கும் சேர்த்தே வாங்கிக்கலாம்..." என்ற முருகேசு... சாரத்தை இழுத்துக் கட்டிக் கொண்டு.

"அடே நீ மட்டும் இந்த வேலையை செஞ்சிப் பழகிட்டா... அப்புறம் நீ தான் ராஜா.

இந்த வேலையை செய்ய இப்ப ஆட்கள் குறைவு. இவன் வர மாட்டானா, அவன் வரமாட்டானான்னு அந்தந்த வீட்டுக் காரனும் காத்துக் கிட்டிருக்கானுங்க. நீ பிரவேட்டா இந்த வேலையைச் செய்யத் தொடங்கிட்டா... கையில காசுதான். இது ஒண்ணும் அடிமைத் தனமான தொழில் இல்ல." என்று முருகேசு சொன்னான்.

சுக்ருவின் மனதிலும் ஒரு நம்பிக்கை பிறந்தது. 'எவனையும் நாம தேடி போற வேலையில்ல. ஆட்களே நம்மைத் தேடி வரு வாங்க. முருகேசண்ணே சொல்லுற மாதிரி இந்த வேலையை தொடர்ந்து செய்ய வேண டியதுதான்". என்று எண்ணிக் கொண்டான் சுக்ரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணே இப்ப நான் கல்யாண மண்டபத்துக்குப் போகப் போறேன். சுடரு பசியோட இருக்கும். அதுக்கு நான் கல்யாண சாப்பாட்டக் கொடுத்திட்டு மூணு மணிக் குள்ள அந்த ஆரியாபுர வீட்டுக்கே வந்து சேர்ந்திடுறேன்" என்று சொல்லிவிட்டு. அன்னபூரணா கல்யாண மண்டபம் இருக்கும் திசையை நோக்கி நடந்தான்.

***

கல்யாண மண்டபத்தின் ஈட்டிங் ஹோல் அல்லோலோல கல்லோலப்பட்டது.

"பாரு சாப்பாட்டுக்கு இப்படி கியூவில நெரிபட வேண்டி இருக்கு..."

"பாரு மந்திரி, தலைவர்ன்னு வந்திட்டா அவுங்களுக்கு ஸ்பெஷலா ஒரு கவனிப்புதான். ஆனா... நம்ம மாதிரி ஆளுங்களுக்கு எந்த கவனிப்பும் இல்ல. அவுனுங்களும் மொய்தான் கொடுக்குறானுங்க, நாமலும் மொய் தான் கொடுக்குறோம். ஆனா... நமக்கு சாப்பாட்டு விசயத்தில எந்த சப்போட்டுமில்ல... கியூவிலத் தான் நிக்கணும்."

"சரி சரி கதைச்சதுப் போதும். முன்னால தள்ளிப் போங்க..."

ஹோலின் உட்பக்க சுவரில் ஒட்டி நின்ற படி சாப்பாட்டுக்காக நெரிப்பட்டுக் கொண டிருக்கும் மக்களையும் அவர்கள் பலவிதமாக பேசுவதையும் கேட்டுக் கொண்டிருந்த சுக்ரு... தனக்கு முன்னால் கியூவில்...

சிறிது சந்து விழுந்த இடைவெளியில் பசக்கென ஓடிப்போய் நின்று கொண்டான்.

"ஏய்.. ஏய்! என்னா இடையில வந்து நொழையிற..." பின்னால் நின்ற ஒருவன் கத்தினான்.

"அடேயப்பா... எதுக்கு என்னப் பிடிச்சு தள்ளுற..." முன்னால் நின்ற ஒரு பெண் கத்தினாள்.

சுக்ருவின் உடையையும் கலைந்துபோய் கிடக்கும் தலை மயிரையும் பார்த்து

'இவன் கல்யாணத்துக்காக வந்த ஆளே இல்லை. யாரோ பிரவேட் ஆள். ஒருவேளை டவுன் ரௌடியாகவும் இருக்கலாம்" என்று பின்னால் நிற்பவன் சுக்ரு மீது சந்தேகப் பட்டாலும்... அதை வெளிக்காட்டாமல் அதேநேரம் நெருங்கி ஒட்டி நிற்காமல் சிறிது தள்ளியே வந்து கொண்டிருந்தான். கியூ... மெல்ல மெல்ல நகர்ந்தது. சுக்ரு உணவு பரிமாறும் இடத்தை அடைந்து லஞ் சீட் போடப்பட்டிருக்கும் பீங்கான் கோப்பையும் எடுத்துவிட்டான். கறி குழம்பு எல்லாம் மணம் வீசியது.

'இந்தச் சாப்பாட்டைக் கொண்டு போய் சுடருக் கிட்டக் கொடுத்தா... நல்லா ருசித்து சாப்பிடுவா... என்று எண்ணிக் கொண்டே சோற்றுப் பாத்திரம் இருக்கும் இடத்தை நெருங்க...

"ஏய்...! ஏய்...! நீ என்னாடா இதுக்குள்ள நொழைஞ்சி வர்ற... வையிடா கோப்பையை அங்க.. கொண்டுப் போய் வை!" என்று கத்தினான் ராகவன்.

"அண்ணே... சாப்பாடு எனக்கிலண்ணே... கண்ணுத் தெரியாத அந்தக் குருட்டுப் பொண்ணு சுடருக்குத்தானே..." கெஞ்சினான் சுக்ரு.

"போடா நீ எல்லாம் டவுன சுத்துற நாய்ங்க. ஒனக்கெல்லாம் இங்க ஏதுடா சாப்பாடு!" கையில் இருக்கும் சோற்றுக் கரண்டியால் சுக்ருவின் முகத்தில் குத்தப் போன ராவன் சுக்ருவின் கையிலிருந்த கோப்பையை பிடுங்க முயற்சித்தான்.

"அண்ணே... வேணாண்ணே... அந்த சுடரு ரொம்ப பாவம் ண்ணே..." சுக்ரு சொல்லிக் கொண்டிருக்கும் போதே... அவனுக்குப் பின்னால் போன ரத்னம்....

அவனின் பிடரியில் ஒரு அடியை கொடுத்து அவனின் பின் பக்க சட்டைக் கலரை இழுத்துப் பிடித்தபடி முன்னால் தள்ளிவிட, அவன் கதவு ஓரத்தில் போய் விழுந்தான். அவனின் தலை கதவின் நிலைப்படியில் அடிபட... அவனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது. தடுமாறி எழுந்தவன் பக்கத்தில் கிடந்த கதிரையில் அப்படியே உட்கார்ந்து கொண்டான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களும்... கியூ வில் நின்ற பலரும் சுக்ருவை திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனர். ஏதோ ஒரு சாதனையை நடத்தி விட்டவர் போல... பரிமாறும் இடத்தில் போய் கம்பீரமாக நின்றான் ரத்னம். கியூவில் நிற்பவர்களிடமிருந்து ஒரே சலசலப்பு.

"டவுன் ஓரத்தில உள்ள கல்யாண மண் டபத்தை புக் பண்ணினாலே இதே கரைச் சல்தான். சோத்துக்கின்னே ஒவ்வொருத்தனும் ஓடி வந்திடுவானுங்க"

"ஆமா அவன் என்னா... முழுப்பான சோத்தையுமா கேட்டான்...? பாவம்... ஒரு கோப்ப சோத்தை மட்டுந்தானே கேட்டான்... அதைக் கொடுத்தா... என்னாக் கொறையப் போவுது?"

"மாப்பிள்ளை வீட்டுக்காரனுங்க சரியான கஞ்சத்தனம் பிடிச்சவனுங்க. இப்படிதான் இருப்பானுங்க..." பலரும் இப்படியாக பேசிக் கொண்டிருக்கும் போதே....

வெளியிலிருந்து உள்ளே புகுந்த மூன்று நான்கு பேர்... கியூவை உடைத்துக் கொண்டு முன்னால் போய் சோறு பரிமாறும் இடத்தில் போய் நின்றனர். அவர்கள் குடித்திருக் கிறார்கள் என்பது அவர்கள் தடுமாற்றத்தோடு நிற்கும் நிலையிலிருந்தே தெரிந்தது.

"சோறப் போடய்யா...! நாங்க சுருக்காப் போவணும்!" – ஒருத்தன் கத்த

"என்னய்யாப் பார்க்கிற! நான் சொல்லுறது ஒங் காதுல்ல வெளங்கலையா ?" என்றான் மற்றவன். அவர்களை முறைத்துப் பார்த்த ரத்னம்...

"இப்படி ஊடையில புகுந்து வந்தாக் கேட்டா எப்படி...? போங்க கோய் கியூவில நில்லுங்க!" என்றான்.

"ஏய் என்னா... என்னைப் போய் கியூவில நிக்க சொல்லுறியா....? நான் யாரு தெரியுமா... பொண்ணோட அக்காப் புருஷன்! என்று சொன்னதோடு,

"ஏண்டா... உங்க கட்சித் தலைவர் வந்தா ஸ்பெஷலா கூட்டிப் போய் சாப்பாடு போட்டு விருந்து வைப்பீங்க. ஆனா... பொண்ணு கொடுத்தவன் வந்து சோறு கேட்டா... நெரிப்பட்டு கியூவில நிக்கணுமா?" என்று சொல்லிக் கொண்டே ரத்னத்தின் நெஞ்சி சட்டையைப் பிடித்து இழுக்க அது ஒருபக்க சேப்போடு டர்ர்ரென்று கிழிந்தது. ரத்னத்தின் கை சும்மா இருக்குமா? அடிக்கு அடி உதைக்கு உதை...., அந்த மூன்று பேர்களும் ரத்னத்தை தாக்க... உணவு பரிமாறும் ராவகன், பிரபு, சுரேசெல்லாம் அவர்களை தாக்க... மேசையில் இருந்த சோறு, கறி, குழம்பெல்லாம் பறந்தன. சாப் பிட்டுக் கொண்டிருந்தவர்கள் சாப்பாட்டை போட்டுவிட்டு ஓடினர். மாப்பிள்ளை வீட்டுக் காரர்களுக்கும் பெண் வீட்டுக்காரர்களுக்கு மிடையில் பெரிய சண்டையே நடந்து. பீங் கான் கோப்பைகள் கண்ணாடி கிளாசுகள், பிளாஸ்டிக் நாற்காலிகள் எல்லாம் உடை பட்டன.

"ஏய் நம்ப பொண்ணு வீட்டுக்காரனுங்க எவனும் இங்க சாப்பிடாதீங்க! எல்லாரும் வெளிய வாங்க!" ஒருவன் கத்த பலரும் வெளியேறினர். தங்கமணி, பெண் வீட்டாரை சமாதானப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண் டிருந்தார்.

"ஏய் செதறிக் கெடக்கும் சோத்தையெல் லாம் கூட்டி எடு.. ஒனக்கு ஒரு கோப்ப சோத்த தர்றோம்" என்று சுக்ருவை பார்த்துச் சொன்னான் ராகவன்... சுவரில் சாய்ந்தபடி இங்கு நடந்தவைகளையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுக்ரு,

"வேணாய்யா... ஒஞ்சோறு! இப்ப எனக்கு எதுக்கு. ஏங்கையில முருகேசண்ணே கொடுத்த காசு இருக்கு. சுடருப்புள்ளைக்கு இதுல நான் ஹோட்டல்ல சாப்பாடு வாங்கிக் கொண்டு போய் கொடுப்பேன். இப்ப நான் ஆரியா புரத்து வீட்டுக்குப் போய் வேலை செய்தாலும் எனக்கு சல்லிதான். இனிமே இந்த எச்சி சாப்பாட்டுக்கு வரவே மாட்டேன். கீழே கிடக்கிற சோத்தப் பொறுக்கி நீயே சாப்பிடு!" உரக்க சொல்லிக் கொண்டே அந்த இடத்தை விட்டு வெளியேறினான் சுக்ரு.

○○○


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சி. குமார் அவர்களின் கவிதை உலா

## (மாடும் வீடும் கவிதை நூலை மனதில் கொண்டு)

சிவ. இராஜேந்திரன்




மாட்டைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் பலரும் பேசிக் கொள்ளும் காலம். வறுமை மட்டும் மலையக உழைப்பாளர்களைத் தொடர்ந்து துரத்தி வருகின்றது. மேடையில் பேசியதெல்லாம் காற்றோடு போய் விட்டன. தனியார் கம்பனிகள் தோட்டங்களை முற்றாக அழிக்கும் திட்டத்துடன் வேலைகளைத் தொடங்கி விட்டனர்.

மல்லிகை சி.குமார் தனது வழமையான வேட்டி சட்டையுடன் புறப்பட்டுவிட்டார். கையில் ஒரு குறிப்புப் புத்தகம் மற்றும் பேனை. தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் கஸ்டங்களைப் பதிவு செய்ய வேண்டும். விடுதலைக்கான வழி முறைகளை சொல்ல வேண்டும். உலா தொடங்கி விட்டது.

மக்களே வாருங்கள்! எனது வாழ்க்கையிலிருந்து தொடங்குகின்றேன். தேயிலைக் கூடையை சுமந்து மேடு பள்ளம் என எனது தாய் பட்ட துன்பங்களும், வேதனையும், கண்ணீரும் இன்றும் தொடர்கின்றது. எந்த மாற்றமும் இல்லை.

**நான் அப்பாவான பிறகும்**
**என் மகன் முதல்**
**அனைவருக்கும்**
**அதே பாதிப்பு தான்**
**சொல்லுங்க...**

வேடிக்கை மனிதர் போலே நாம் வாய் மூடி மௌனித்து இருக்கு முடியுங்களா?

பெரிய மல்லியப்பு தோட்டத்திலுள்ள 'தெப்பக் குளத்துக்கு' மேலே நின்று பார்க்கின்றார். கருப்புக் கூரைகள் வரிசையாகத் தெரிகின்றன. பழைய சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுந்தான். அதற்காக வெள்ளைக் காரன் போட்ட அதே தகரங்கள் மாற்றப்படக் கூடாதா? தந்தத்தைப் பாதுகாக்க அங்கே தங்கக் கூரை. இங்கே தொழிலாளர்களுக்கு ஓட்டைக் கூரை. அதுவும் கூட சொந்தமில்லை. எவ்வளவு காலத்துக்கு நாம் ஏமாறுவது?

**பேரனுக்குப்**
**பேரன் வந்தும்**
**எந்த கூடும்**
**சொந்தமில்லை**

அங்கே பாருங்கள்! தூரத்தில் ஆடு ஒன்றை கொண்டு செல்கிறார்கள். ரோதை முனிக்கு அதை வெட்டி பலி கொடுத்து படையல் செய்வதற்காகத் தான் ஓட்டிச் செல்கிறார்கள். அதற்கு ஒன்றுமே தெரியாது. இந்த ஆட்டினைப் போல தானே நமது மக்களும் பலியாடுகளாக இருக்கிறார்கள்.

**இந்த**
**ஆடுகளின் மீது**
**அடிமை சாசனம்**
**எழுதியதும்**
**நீங்களே**

மலைகளில் மேய்கின்ற இந்த ஆடுகளின் கண்ணீரையும் விற்றுக் காசாக்கி அந்த பணத்தில் பன்னீர் வாங்கித் தெளித்துக் கொள்ளும் உங்களின் மக்கள் விரோத போக்கை அறியாத ஆடுகள் தலை குனிந்தபடியே பலி பீடத்துக்குப் போகின்றது. கழுத்து இரண்டாவதற்கு முன்னர் முயற்சி செய்து பார்ப்போம். :

**உங்களால்**
**முறுக்கப்பட்ட**
**கயிறு**
**அறுமா என்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிற்றினை கவிதைகளால் அறுக்கும் முயற்சி தொடர்கின்றது. சாத்தியமாகுமா? யோசனையுடன் நடக்கின்றார்.

மல்லியப்பூ தோட்டத்து சின்னஞ் சிறுவர்கள் அவரை சூழ்ந்து கொள்கிறார்கள்

"நரியும் காகமும் கதைய சொல்லுங்க மாமா" அவர் கூறும் கதை வேறு மாதிரியல்லவா இருக்கும்.

**அன்று ஒரே**
**ஒரு நரியிடம்**
**ஒரே ஒரு காக்கை**
**ஒரே ஒரு**
**தரம் மட்டுமே**
**ஏமாந்து போனது**

இவர்கள் காலம் காலமாக ஏமாந்து போவதை எடுத்துச் சொல்கின்றார். வாய்ச்சவடால்களைக் கேட்டு வடையை நழுவ விடும் மக்கள் பல முறை 'வடைக்காக'ஏமாந்து போனார்கள்.

**வாங்கித் தருவோம்**
**மாதச் சம்பளம் என்று**
**வரிந்து கட்டின**
**கோமணங்கள்**

…………

**தோட்டம் மாறும்**
**கிராமமாய்**
**என்றதெல்லாம்**
**ஊமை கண்ட கனவுகள்**

பல முறை ஏமாற்றப்பட்ட மக்களின் நிலையை எடுத்துச் சொல்கிறார்.

மார்கழி மாதம் வந்து விட்டது. பனி வீசும் குளிரில் பெண்கள் வயத்திலுள்ள தனது வீட்டின் முன் பக்க வாசல்களில் கோலம் போடுகிறார்கள். அவர்களின் விரல்களைப் பார்க்கின்றார். அவற்றில் எத்தனை வெடிப் புக் கோலங்கள். அவர்கள்; போடும் கோலங்கள் அழ காகத் தான் இருக்கின்றன. ஆனால் வாழ்க்கைக் கோலம் தான் 'காலா கோலமாக' இருக்கின்றது.

**இவர்கள் போட்டக்**
**கோலத்தால் தான்**
**இன்று**
**யார் யாரின்**
**வாழ்க்கை எல்லாம்**
**அலங்காரத் தேராக**
**ஆக்கப்படுகின்றது**

…………………

**கரங்கள் எல்லாம்**
**ஒன்றிணைந்தால்**
**இந்த**
**அலங்கோல**
**நிலை மாறும்**

நம்பிக்கையுடன் எழுதுகின்றார்.

பிள்ளைகள் பஜனை பாடல்கள் பாடிக் கொண்டு செல்கிறார்கள். ராமனுக்கு சங்கீர்த்தனம்...கோவிந்தா கோவிந்தா..பாடல் தொடர்கிறது சிலர் முகத்தில் ராமம் (நாமம்) போட்டிருக்கிறார்கள். அவர்கள் நடந்து சென்ற பாதையில் இருந்த புற்கள் வளைந்து பின் நிமிர்கின்றன. இவர்களோ குனிந்தபடியே இருக்கிறார்கள். கவிதை தொடங்குகின்றது.

**நீயோ**
**என்றோ**
**வளைந்தாய்**
**இன்னும்**
**நிமிறவில்லை**

...

**உனக்கு**
**நாமம் போட்டு**
**தன் நாமத்தில்**
**பல கணக்கை**

சேர்த்தவர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் பாடும் கோவிந்தா கோசம் மலைகளில் எதிரொலிக்கின்றது. ஆனால்,

**உன் தலையைத்**
**தடவிய**
**நரிகளால்**
**உன் வாழ்க்கையே**
**இங்கு**
**கோவிந்தா**
**கோவிந்தா**


சிந்தித்தப் பாருங்கள். உங்களுக்குப் பின்னால் எத்தனை கோவிந்தன்களும், லச்சுமணன்களும், ஏன் ஏப்ரஹாம்களும்... அவர்களது தியாகத்தையும் நினைவில் கொண்டு புதிய பஜனை கீதம் எழுதுங்கள்.

**உனது பாடல்**
**எழுச்சிக் கீதமாய்**
**எங்கும் ஒலிக்கும்**

நம்பிக்கையுடன் பாடுகின்றார் – நடக்கின்றார். அவரது மனக்குரல் ஓங்கி ஒலிக்கின்றது.

தனியார் வந்தால் தாங்குவார்கள். இலாபம் கிடைக்கும் என்று மலையகத்தில் இருந்து போன பல்கலைக்கழக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரிவுரையாளர்கள் எழுதினார்கள். கூட்டம் கூடி பேசினார்கள். அவர்களுக்கு 'கிடைக்க வேண்டியது' கிடைக்கும். மக்களுக்கு என்ன கிடைக்கும்? இலாபத்துக்காக குளிர் காயவரும் தனியாரால் எல்லாம் அழியப் போகிறது என்பதை அவர்கள் நிச்சயம் அறிவார்கள். ஆனால் பணத்துக்கு முன்னால் பட்டம் என்ன? பதவி என்ன?

இன்று தோட்டங்கள் அழிக்கப்பட்டு விட்டன. எங்கும் புதர்க் காடுகள். அங்கொன்றும் இங்கொன்றுமாக தேயிலைச் செடிகள்.

**ஆழ் புதை**
**அறுவுக் காட்டுக்குள்ளே**
**(ஒன்று அல்லது இரண்டு)**
**தலை காட்டும்**
**தளிர்கள்**

இனி எல்லாமே அழிக்கப்படும். கோபம் அதிகரிக்க வேகமாக நடக்கின்றார்.

பாடசாலையில் நடைபெறும் பாரதி விழாவுக்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பாரதியின் படங்கள் பல காட்சிகளாக வைக்கப்பட்டுள்ளன. மறு புறம் தோட்டத் தொழிலாளர்கள் சீதளக்ககாற்றை சுவாசித்த வண்ணமாக கொழுந்துகளைக் கிள்ளுகின்றார்கள். ஆண் தொழிலாளர்கள் தலைப்பாகையுடன் கவ்வாத்து வெட்டுகின்றார்கள். குமார் அண்ணன் பாரதியை உழைப்பாளர்களில் காண்கிறார்.

**தலைப்பாகையும்**
**அணிந்துக் கொள்ளும்**
**கோட்டும் கூட**
**உன்னைத்தான்**
**நினைவு கூறும்**
**குனிந்து கிள்ளும்**
**கொழுந்தில் கூட**
**உன் கூரிய**
**எழுது கோலின் சாயல்**

பாரதியே! இந்த ஊமைச் சனங்கள் பல கனவுகளைக் காண்கிறார்கள். எந்தக்கனவும் நனவாக மறுக்கிறது. எனவே அக்கினிக் குஞ்சோடு வா ஒளிக்கீற்று பரவட்டும். கண்கள் திறக்கட்டும். வேறு யாரை அழைக்க முடியும்?

வட்டகொடை பக்கம் அவரது கவனம் திரும்புகிறது. மக்களின் போராட்ட குணாம்சத்தை சீவி செதுக்கிய சி.வி பிறந்த வீடு உடைக்கப்படுவதாக தகவல். சி.வி தவழ்ந்த வீட்டை கலா பவனமாக்குவோம், மலையகக் குன்றில் நிறுவுவோம். நினைவு தூபி என்று சத்தமிட்ட வாய்கள் எங்கே போனது?

**இன்று**
**ஊமையாகி விட்டனவோ? கோபம் பீறிடுகின்றது**
**துதிபாடிகள்**
**இருக்கும் வரை**
**மரண வீட்டடில் கூட**
**உங்களுக்கு**
**மாலைகள் கிடைக்கும்**

சொகுசு பல்லக்கில் போகும் போது எங்களையும் கொஞ்சம் எட்டிப்பாருங்கள். மலைகளிலும் கொஞ்சம் ஏறி வாருங்கள். காலமெல்லாம் ஏமாற்றப்பட்டு சுரண் டப்படும் இந்த மக்களுக்கு ஏதாவது செய்யுங்கள். இல்லையெனில்,

**உங்கள்**
**முகவரிகள் கூட**
**முகம் தெரியாமல்**
**மூழ்கடிக்கப்படும்**

கவிதையால் எச்சரிக்கின்றார். நாங்கள் குனிந்த நாணல்களாகவன்றி கூரான முட்களாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

**உதிர்ந்து போனவர்களின்**
**உதிரத்தில்**
**வளர்ந்த**
**நாங்கள்**
**நிச்சயம்**
**கூனாய்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருக்க மாட்டோம்**
**கூராய் இருக்கின்றோம்**

நம்பிக்கை வரிகள் எழுதப்பட்டு விட்டன.

தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு அறிவித்தல் இருக்கின்றது. 'இங்கு சிறுநீர் கழிக்கக் கூடாது'. அருகில் இருப்பதோ 'பார்'. இந்த அறிவித்தலை யார் பார்ப்பார். போதையில் வரும் சிலர் அண்ணனைக்கண்டு ஒதுங்கி நிற்கின்றார்கள். கோபம் கலந்த புத்திமதி கூறுகிறார்.

**நண்பனே**
**மயக்க நிலையை**
**உதறித் தள்ளு**
**நீயும்**
**உன் கூட்டமும்**
**நிமிர்ந்தால்**
**பகடைக்காயாய்**
**உங்ளை**
**உருட்டிக் கொண்டிருக்கும்**
**சகுனிகளை**
**மலைகளிலிருந்தே**
**உருட்டி விடலாம்**

போதையை நிறுத்துங்கள். போராட புறப்படுங்கள்.

நானுஓயா 'சோட்கட்' பதையில் நின்றவாறே கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் பார்க்கின்றார். அட்டன் சிங்கமலை வரை தேயிலைத் தோட்டங்கள் பரந்து கிடக்கின்றது. இரு நூறு வருட உழைப்பின் சாரம் தெரிகிறது. மாயத்தனம் செய்யும் பொன்நிற மான்களால் மயங்கிப் போன காலங்களும் ஞாபகத்துக்கு வருகின்றது. விலைவாசி பட்டமும் இயக்குபவனால் உயரப் பறக்கின்றது. மக்களைக் காக்க வேண்டிய கண்ணன்கள் கைகளைக் கட்டியவாறு கௌரவர்களுக்குப் பின்னால் கர்ணனாக நிற்கின்றார்கள்.

நாங்கள் செய்த தவறுகள் என்ன? யோசனை விரிவடைகின்றது.

**சிலரை**
**மலையக மனிதர்களாக ஆக்க**
**மலர் கிரீடம் சூடினோம்**
**எங்களின் முதுகு**
**கூன் விழுந்ததற்கு**
**நிச்சயமாய்**

இதுவும் காரணம் தான் வேறு என்ன காரணமாக இருக்கக் கூடும்?


டெறிக்கிளார் தோட்டத்தின் பெயரை எழுதி முடிந்ததும், கவிதை எழுதும் சிந்தனையோடு நடந்து செல்கிறார். டெவன் தோட்டம் தெரிகிறது. இன்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இதே இடத்தில் இடம் பெற்ற போராட்டத்தில் தியாகியான லட்சுமணனைப் புதைத்த இடம் தெரிகின்றது.

**வீழ்ந்தவன் எங்களின்**
**கொடி சுமந்த தொண்டன் என்று**
**அன்று ஆர்ப்பரித்த**
**கட்சிகள் எல்லாம்**
**கதிரைக்காக மட்டும்**
**யாகம் வளர்க்க**
**முற்பட்டதால் தான்**
**இன்று கல்லறை நிலமும்**
**களவாடப்படுகின்றது.**

இதை விட வேறு எவ்வாறு கவிதை எழுத முடியும்?

தொழிலாளர் தலைவர்கள் உரிமைக்காகப் போராடி இரத்தம் சிந்தி, தூக்குமேடையில் உயிர் நீத்த தினமான மேதினத்தை கூத்தாடும் தினமாக நாசம் பண்ணும் தொழிலாளர் விரோத தொழிற்சங்கங்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி வேகமாக செல்லும் பெண்கள் வருகிறார்கள். அண்ணன் பேசுகிறார்.

இங்க பாருங்க! தங்கச்சிமார்களே இத கொஞ்சம் கேளுங்க. சும்மா ஏமாறாதீங்க. இனியாவது ஒரு புது சபதமெடுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர் வாழ்க**
**இவர் வாழ்க**
**என**
**அடுத்தவன் வாழ**
**கோசம் போடும் நீ**

உனக்காக, உழைக்கும் மக்களுக்காக ஒரு தரமேனும் குரல் கொடுத்ததுண்டா? சிந்தித்துப் பாருங்கள்.

**இந்த மேதினத்திலாவது**
**இந்த**
**சபதத்தை**
**முன் வை**
**உனக்காக**
**உன் விடிவுக்காக**
**நீயே கூவ**
**சபதமெடு**

இல்லையெனில் காலமெல்லாம் கஞ்சிக்கும் வழியின்றி செத்துப் போக நேரிடும்.

அதோ இளைஞர்கள் வருகின்றார்கள். இளைஞர்கள் காலைச் சூரியனை நிகர்த்தவர்கள் அல்லவா? அவர்கள் தான் மலையக வரலாறை மாற்றி எழுதக் கூடியவர்கள்.

**உங்களால்**
**முடியுமென்று**
**நம்பிக்கையோடு**
**எதிர்பார்க்கின்றோம்**
**இருளாய்க் கிடப்பதை**
**மாற்றி**
**சம நிலைப்படுத்தவும்**
**உங்களால் முடியுமென**
**நம்பிக்கை**
**கொள்கிறோம்**

நம்பிக்கையுடன் உலாவினை முடிக்கின்றார். நாமும் உறுதி கொள்கின்றோம். மனுசியமும், வேடத்தனமும் அவரது கண் முன்னே விரிகின்றன.

OOO

# அஞ்சலி

## வைத்தீஸ்வரன் சிவஜோதி




தேசிய கலை இலக்கிப் பேரவையின் தலைநகர் கிளையின் செயற்பாடுகள் விரிவுபடுத்தும் விதத்தில் 90களில் கொழும்பில் ஈடுபாடு கொண்டு செயற்பட்ட செயற்பாட்டாளர். கருத் தரங்குகள், புத்தக வெளியீட்டு நிகழ்வுகள், நாடக அரங்காற்றுகைகள், ஒத்திகைகள், நாடக ஆற்றுகையின் போது ஒளி, ஒலி அமைப்பு என்று சகல செயற்பாடுகளிலும் முழுமூச்சாக இயங்கியவர். மாதம் ஒரு நூல் வெளியீட்டில் புத்தக அச்சாக்கம், செவ்வை பார்த்தல், வீடுதோறும் நூல் அறிமுகம், புத்தகப் பண்பாட்டுப் பயணம், தமிழ்நாட்டில் நாராய் நாராய் அரங்கப் பயணம் என பல தளங்களிலும் உடன் இருந்து செயற்பட்டவர்.

தேசிய கலை இலக்கியப் பேரவை நிகழ்வுகளின்போது, மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நாம் வருகைத்தந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது பயணம் தே.க.இ.பேரவை வேலைமுறைகள் பற்றி மிகவும் அக்கறையுடன் கேட்டறிவார். அவரின் புன்னகையுடனான முகமும் யாரையும் மதித்தேற்கும் சுபாவமும் மறக்கமுடியாதது. மேலும் இலங்கையின் அனைத்து மக்களின் விடுதலைக்காகவும் அக்கறையோடு செயற்பட்டவர். எனவே அவரின் இழப்பு பேரவைக்கும், சமூக செயற்பாடுகளுக்கும் பேரிழப்பாகும். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் துணைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் தோழர்கள் நண்பர்களுக்கும் தே.க.இ.பேரவையின் மலையகப்பிராந்தியம் தனது அனுதாபத்தை தெரிவித்து துயரை பகிர்ந்துகொள்கின்றது.

தாயகம் இதழின் அறிமுக நிகழ்வுகளிலும் தாயகம் விநியோகத்திலும் கொழும்பில் செயற்பட்ட அன்னாருக்கு அஞ்சலியைத் தெரிவிப்பதோடு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தாயகம் இதழ் தெரிவிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் அழைப்பு



கல் நெறைஞ்ச பாதையில
காடு மல ஏறயில
வெங்குச்சான் குத்து தடி
விரலில் ரெத்தம் சொட்டுதடி

கையில தான் காஞ்ச ரொட்டி
காலையில சுட்ட ரொட்டி
கண்ணுல தான் தண்ணீர் முட்டி
கன்னமெல்லாம் வழியுதடி

கையில தான் கறுப்புக் காரை
கண்ணுல தான் பஞ்ச ரேகை
நேரத்தக்கு சங்கு கேட்க
நேற புடிக்கு போறோமடி

கங்காணி ஏச்சதுவும்
கடுப்பான பேச்சதுவும்
எல்லாமே வாங்கியாச்சி
இனி என்ன மிச்சமுண்டு

தலை கூட கனத்து வர
தங்கம்மா தவறி விழ
அது கூட வம்பாச்சி
ஆரிடம் நான் சொல்லி அழ

வாரத்துல ஏழு நாளும்
வறுத்தெடுத்து புழியுறாங்க
உரிம கேட்ட வாய் தொறந்தா
ஒதைக்கிறாங்க நெஞ்சி மேலே

கவ்வாத்த வெட்டி வெட்டி
காப்புக் காய்ச்ச கைகள் எல்லாம்
கருத்தோடு ஒன்னு சேரும்
காலந்தான் வந்திருச்சி

வெட்ட வெட்ட துளிர விட்டு
வெரசா எழும் தேயில போல்
பெண்கள் எல்லாம் ஒன்னா நிற்கும்
பெரு நாளும் வந்திருக்கு

காலமெல்லாம் தூங்கி தூங்கி
கருத்தழிஞ்சி போனது போல்
இனி மேலும் இருக்காலாமோ
இளசுகளே வாங்க வாங்க

**எஸ்.கிருசாந்தனி**

**(மாணவி)**

# சிறுவர் பாடல்

சாராயத்தக்கு ஓட்டுப் பொட்ட படுவா படுவா - நம்ம
சனத்திற்கு எல்லாம் போச்சி போச்சி மடையா மடையா
சாராயத்த குடிச்சிப் புட்ட அழகா அழகா - இப்புடி
சாய்ந்து போய் கிடக்கிது தானே சரியா சரியா

கூலிய கேட்டு நம்ம சனம்தான் கோசம் போடுது
தாழிய வித்து ஐயோ ரோட்டில் நிற்குது
காஞ்ச ரொட்டி கெடைக்காம பசியில் சாகுது
கருணை இல்லா திருட்டுக் கூட்டம் நாளும் பெருகுது

ஓட்ட வாங்கி போனவன் எவனும் திரும்பி பார்க்கல - நம்ம
ஒப்பாரி கூட செவிடர்கள் காதில் உரத்து கேட்கல
ஏணியாக இருக்கும் நம்மல தானே எட்டி ஒதைக்கிறான்
பெட்டி பாம்பா நம்மள தானே பூட்டி வைக்கிறான்

கெட்டது என்றால் நங்க தானே திரும்பி பார்க்கனும்
கேள்விய கேட்கும் துணிவும் தானே நாளும் கூடனும்
தலைய குனிஞ்சி நடப்பதில் தான் நியாயம் இல்லயே
நல்லதுக்கா ஒன்று சேர்ந்தால் தோல்வி இல்லையே

சிறுவர்கள் நம்ம எல்லாம் சேர்ந்து வாழனும்
பெரியவர் மெச்ச தானே வாழந்து காட்டனும்
சாதி மத பேதங்களை ஒழிச்சி கட்டனும்
சரி நிகராய் வாழத் தானே பணிகள் செய்யனும்



**எஸ். கௌசல்யா**

**எம்.பிசரசாந்தினி**


**(மாணவிகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குடி குடியை கெடுக்கும்" என்பதைப்போல மணியத்தின்ர குடியால இந்தக் குடிசை வீடுதான் நிரந்தரமென்ற தலைவிதி

# கோணிப்பை



வ. றொபின்
**புன்னாலைக்கட்டுவன்**

கனமழை மண் சுவர்களைக் கரைத்துக் கொண்டிருக்கிறது. கறையான் அரித்த ஓட்டைக் கூரைகளினூடாய் ஒழுகும் மழை நீரைச் சேமிக்க ஆங்காங்கே பாத்திரங்கள் அடுக்கப்பட்டு இருக்கின்றன. குடைக்குப் பதிலாய் உரப்பை ஒன்றை முக்கோணமாக மடித்துத் தலையில் மாட்டிக் கொண்டு ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டு தனது குடிசை நோக்கி வேகமாய் நடக்கிறான் கண்ணன். அந்தக் கயிற்றின் அந்தப்பக்கம் தாயாடு ஒன்றும் அதன் பின்னால் இரண்டு மறிக் குட்டிகளும் இழுபட்டுக் கொண்டு மழையில் நனைந்தபடி மே....மே..... என்று ஆனந்தக் குரல் எழுப்பிக் கொண்டு துள்ளிக் குதித்த வண்ணம் வந்து கொண்டிருக்கின்றன குதூகலமாய்... வெங்காயம் அறுக்கச் சென்ற கமலம் தனது தகரக் கத்தியுடன் தோட்டத்துக் கிணத்தடியில் விழுந்து கிடந்த தேங்காயை எடுத்துக் கொண்டு. காய்ந்து கிடந்த சில பொயிலைக் கட்டைகளைப் பொறுக்கி கட்டி தலையில் வைத்துக்கொண்டு குடிசை நோக்கி தோட்டத்து வரம்புகளின் வழி விரைந்து நடக்கிறாள்.

தோட்டம் கட்ட போன மணியம் மம்பட்டியை தோளில் வைத்துக்கொண்டு இடுப்பில் சுரண்டியைச் செருகிக்கொண்டு மழைத் தூறலில் நனைந்த குறையாக வீடியை புகைத்தபடி கல்லடி ஒழுங்கையில் கால் பதிக்கிறார் ஏதோவொரு அலுவலுக்குப் போற அவசரத்தில்.

மூவரும் முத்திசையிலிருந்து ஓரிடத்தில் சந்திக்கப் பொழுதும் இருண்டுவிட்டது. அவுட்டு வந்த ஆட்டைத் தாவாரத்துக்குள் கட்டிவிட்டுக் குளிப்பதற்காய் கிணத்தடிக்குச் சென்றான் கண்ணன். தலையில் காவி வந்த விறகை முற்றத்தில் போட்டுவிட்டு மதியத் துக்கும் சேர்த்து இரவு சமைப்பதற்காய் குசினிக்குள் சென்றாள் கமலம். மணியத் தாரும் மம்பட்டிய விறாந்தை வளையில கொழுவிப் போட்டு பூவரச மரத்தின்கீழ் நிண்ட கரியல் சைக்கிள எடுத்துக்கொண்டு அவசரமா வெளிக்கிட்டார் தவறணைக்கு. மூவரும் உழைப்புக்காறர். ஆனால் கண்ணன் மட்டும் உழைத்துக்கொண்டே படிக்கும் மாணவன். மணியம் உழைக்கிற காசு முழு வதையும் குடித்து அழிப்பதில் கெட்டிக் காரன். கமலமும் என்ன செய்வாள் "குடி குடியை கெடுக்கும்" என்பதைப்போல மணி யத்தின்ர குடியால இந்தக் குடிசை வீடுதான் நிரந்தரமென்ற தலைவிதி. தவறணைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன மனுசன் திரும்பி வாறதுக்குள்ள டக்கென்று சோறு கறி காய்ச்சிப்போட்டு "அவற்ற உழைப்பெல்லாம் எனக்குத் தாற மாரி அவருக்கு வாய்க்கு ருசியா சாப்பாடும் குடுக்க வேணும்".... என்று வாய்க்குள்ள முணுமுணுத்துக்கொண்டு கருவாட்டையும் பொரிச்சு வச்சிட்டாள் கமலம். உலை வைச்ச தண்ணியில ஊத்திக் குடிச்ச தேத்தண்ணி தான் அவளின்ட வேலைக் களைப்புக்கு ஆறுதல். அம்மா பசிக்குது சாப்பாட்டத் தாவனனை என்று கண்ணன் குசினீக்க வர, சாப்பாட்ட போட்டுக் குடுத்துட்டு கிணத் தடிக்குப் போட்டாள் குளிப்பதற்கு...

ஆடுகளை மேய்ப்பதும், அம்மாக்கு உதவி செய்வதும், கல்வியால் தன் குடும்பத்தைக் கரைசேர்க்க எண்ணி ஊக்கமுடன் படிப் பதும்,வாழ்வில் உழைப்பால் உயர்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை வாசிப்பது மாய்க் கண்ணனின் பொழுதுகள் நகர்ந்தன. குடிசைக்குள்ளே ஒரு மூலையில் தடிகளால் கட்டிய பறனில் புத்தகங்கள் அடுக்கப் பட்டிருக்கும். மண்ணெண்ணெய் பருகி காரி ருள் போக்கி கவனமாய்க் கண்ணன் படிக்கக் குப்பி விளக்கு எப்போதும் துணையிருக்கும் அவனுக்கு. மணியத்தாற்ற தாண்டவத்தில பல விளக்குகள் உடைபட்ட சம்பவங்கள் நிறைய உண்டு. இவ் வருடம் க.பொ.த. சாதா ரண தரப் பரீட்சை நடக்கவிருப்பதை நன்கு ணர்ந்து நன்றாகப் படித்து வந்தான். அப்பா விற்கு வேலை இல்லையென்றால் அம்மாவின் சேமிப்பு இடங்களான தேயிலைப் பேணி, அரிசிப் பானையெல்லாம் தேடுதல் போட்டு இருக்கிற சில்லறையெல்லாம் தவறாமல் அள் ளிக்கொண்டு போவிடுவார் தவறணைக்கு. பரீட்சையும் நெருங்கிவிட்டது தினமும் நடக் கும் குடும்பச் சண்டைகளுக்கு நடுவிலும் நடுச்சாமத்தில் எழுந்து படித்துக்கொண்டிருப் பான் கண்ணன். ஏனென்றால் சண்டை முடி யவே இரவு பத்து மணி ஆகிவிடும். பரீட்சைக் காலம் நெருங்கியது. வறுமைச் சூழல், குடும்ப வன்முறை போன்றவற்றால் உள நெருக்கீட் டுக்கு ஆளாகியிருந்தும் தனது கல்வியைக் கைவிடவில்லை கண்ணன். அன்று வெள்ளிக் கிழமை காலையில் எழுந்து ஆட்டுக்கு இலை குழை வெட்டிப் போட்டுட்டு படுக்கைக்குக் கீழே மடித்து வைத்த வெள்ளைச் சேட்டை யும், பெருவிரல்கள் வெளியே தெரிய கடந்த இரண்டு வருடங்களாகத் தனது கால்களுக்குக் காவலாய் இருக்கும் சப்பாத்தையும் அணிந்து கொண்டு, நெற்றியிலே திருநீற்றால் குறி ஒன்றும் வைத்துக்கொண்டு பள்ளி செல்லத் தயாரானான். மணியத்தார் இன்னும் நல்ல தூக்கத்திலிருக்கிறார். அம்மா குழைச்சுத் தந்த பழஞ்சோற்று உருண்டையைச் சாப்பிட் டுப் பள்ளிக்கூடம் நோக்கி நடக்கத் தொடங் கினான்...

அதிபர், ஆசிரியர்கள் வழங்கிய ஆசியுடன் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்டு தன்னால் சாதிக்க முடியுமென்ற நம்பிக்கையோடு வீடு நோக்கி நடக்கலானான்... "இன்னும் இரண்டு நாளில் ஓ எல் சோதினை தொடங்குதாம். உன்ர பெடியனும் எழுதுறானோ?" எண்டு புல்லுப் புடுங்கிக் கொண்டே கமலத்திடம் கேட்டாள் சரஸ்வதி..

"ஓமடி அவன் பாஸ் பண்ணுவான் எண்டு எனக்குத் தெரியும். ஆனாலும் மனசுக்க சின்னப் பயம். நான் கும்பிடுற அம்மாளாச்சி என்னைக் கைவிடாது. என்ர பெடியன் பெரியாளா வந்து என்னை இருத்தி வச்சு சோறு போடுவான்" எண்டு தனது உள்ளக் கிடக்கைகளைப் புலம்பிக் கொண்டிருந்தாள் கமலம்.. மணியத்தாரிட்ட அடி வாங்கிய அநேகமான நாட்களில் சரஸ்வதி தான் கமலத்துக்கு ஆறுதலாக இருந்திருக்கிறாள். அதுமட்டுமன்றி கண்ணன்ர படிப்புச் செல வுக்கு அவசரமா காசு தேவைப்படேக்க அஞ்சு, பத்து மாறிக் கொடுப்பதும் அவள் தான். வேலை முடிஞ்சு போகேக்க தன்ர ஆட்டுக்கும் ஒரு புல்லுக்கட்டைத் தூக்கிக் கொண்டு வெளிக்கிட்டாள் கமலா. பரீட் சைக்காகக் கண்ணன் மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கின்றான்.

மணியத்தாரும் தன் பங்குக்கு இடை யிடையே சட்டி, பானைகளை உடைப்பதும், கமலத்துக்கு உதைப்பதுமாகத் தன்னுடைய நாளாந்த வேலைகளைச் சரியாகச் செய்து கொண்டிருக்கிறார். இருவருக்கும் இடையில் நின்று சமாதானத் தூதுவராய் கண்ணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னாலான தடுப்பு முறைகளைக் கையாளு கின்றான். எதுவுமே கைகொடுக்கவில்லை. சண்டை ஓய்வுக்குவரும் கணப்பொழுதில் கண்ணயர்ந்து உறங்கிவிடுகிறான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மணியத்தார் வேலைக்கு விடுமுறை கொடுத்தாலும் குடிப் பதற்கு விடுமுறை கொடுப்பதில்லை. அன்றா டம் உழைப்பதை அன்றே அழித்திடுவார். கம லமும், கண்ணனும் தோட்டத்துக்குப் போய் விட்டார்கள். குடிக்கப் போறதுக்குக் காசில் லாமல் வீட்ட நிண்டு சுழண்டுகொண்டு நிண் டார். கமலத்தின்ர சேமிப்பு பகுதிகளிலும் காசுகள் இல்லை. என்ன செய்வதென்று தலையைச் சொறிஞ்சுகொண்டு நிண்ட நேரம் பார்த்து பழைய புத்தகம், இரும்பு, பித்தளை, பிளாஸ்ரிக் பொருட்கள் விலைக்கு வாங்கப்படும் என்ற ஒலிபரப்போடு சிறிய கன்ரர் வாகனமொன்று கல்லடி ஒழுங்கைக் குள் வந்துகொண்டிருந்தது. கண்ணனின் புத்தகங்களை அள்ளி வித்துப்போட்டு தன்ர அலுவல் பார்க்க புறப்பட்டார் மணியம். வீடு வந்த கண்ணன் தன்னுடைய புத்தகங்கள் விற்கப்பட்டதை அறியாது நாளைய பரீட் சைக்காகப் படித்துவிட்டு உறங்கி விட்டான்.

அதிகாலை எழுந்து தமிழ்ப் பாடத்தின் முக்கியமான சில பகுதிகளை மீளவும் படித்து விட்டு பரீட்சைக்குச் செல்லத் தயாரானான். சீருடை அணிந்து வெளிக்கிட்ட குறையில் கண்ணன் மிகவும் பதட்டத்துடன் அவசர அவசரமாய் எதையோ தேடிக்கொண்டிருந் தான். புத்தகங்களைக் கிளறி எறிகின்றான், பக்கங்களைப் புரட்டிப் போடுகின்றான். இதைக் கவனித்த கமலம், 'என்ன தம்பி நடந்தது? என்னத்த தேடுறாய்' எண்டு குசினிக்குள் இருந்தவாறே குரல் கொடுத்தாள். 'வரலாற்றுப் புத்தகத்துக்க வச்ச என்னு டைய அட்மிசன காணேல... புத்தகத்தையும் காணேல...' என்று கண்கள் கலங்கியவாறு பதிலளித்தான். இது எதையுமே அறியாத மணியம் நல்ல குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார் உல்லாசமாக. பரீட்சைக் கான நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கண்ணன் ஏன் பரீட்சை மண்ட பத்திற்கு வரவில்லையெனக் கண்ணனின் நண்பர்கள் அவனது வருகையை எதிர் பார்த்தவாறு அவனுக்கு என்ன நடந்திருக்கு மென்று பரபரப்புடன் பேசிக்கொண்டிருந் தார்கள்.

இரும்புக்கடையில் மணியம் வித்த கண்ண னுடைய புத்தகங்களைக் கோணிப்பையில் போட்டு எடை போட்டுக் கொண்டிருந் தார்கள் கொழும்புக்கு ஏற்றுவதற்கு... ○


## புதிய சஞ்சிகைகள்

### அறிந்திரன்



சிறுவர்களுக்கான மாத இதழ்
ஆசிரியர் :
அறிவன் அண்ணா
முகவரி :
அறிந்திரன்,
கணபதி,
இணுவில் (PO)

தொலைபேசி : 076 028 8853
மின்னஞ்சல் : arinthiran20@gmail.com
விலை : ரூபா 20/-

### எங்கள் முற்றம்



கலை இலக்கிய சமூக மாத இதழ்
ஆசிரியர் :
அழ. பகீரதன்
முகவரி :
ஆசிரியர்
எங்கள் முற்றம்
மறுமலர்ச்சி மன்றம்
காலையடி, பண்டத்தரிப்பு

தொலைபேசி : 077 104 1945
மின்னஞ்சல் : marumalarchy1972@gmail.com
விலை : ரூபா 20/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரின் முன் மல்லிகைப் பூச்சூடிய மல்லிகை சி. குமார்

ட. சிவசாமி
பெரிய மல்லிகைப்பூ தோட்டம்,
தலவாக்கலை

தலவாக்கலை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தில் பிறந்து இறுதிவரை அத் தோட்டத்திலேயே தனது வாழ்வினை வாழ்ந்து கழித்த மக்கள் கவிஞனும் எனது தோழனுமாகிய திரு சி.குமார் அவர்களைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

இவரின் படைப்புகள் யாவும் சாதாரண தேயிலைத் தோட்ட மக்களைச்சார்ந்தே காணப்படும். இதற்கு முக்கிய காரணம் உழைக்கும் மக்களைப் பற்றி இவர் தொடர்ந்து சிந்தித்தது ஆகும்.

இவரும் மக்களின் பிரதிநிதியாக நின்று எதிரிகளுக்கு தனது பேனை முனையால் எதிர்ப்புகளையும் கோஷங் களையும் வெளியிட்டுள்ளார். அதனால் இந்த படைப் பாளி பல கொடுமைகளுக்கும் எதிர்புகளுக்கும் ஆளாகியமை குறிப்பிடத்தக்கது.

இவரிடம் பிறவி ஆற்றலாக ஓவியம் வரையும் ஆளுமை காணப்பட்டது, அத்தோடு சிறந்த நாடக ஆசிரியராகவும் நாடகக் கலைஞராகவும் செயல்பட்டவர். இவரின் "ஆடிவரும் ஆட்டம்" ஒரு சிறந்த மேடை நாடகமாக அக்காலத்தில் புகழப்பட்டது. "வீடுகளுக்கு வந்து சந்தா வசூலிக்கும் கங்காணிகளை... மக்கள் எதிர்த்து போராடுவது போல் இவர் ஆடிவரும் ஆட் டத்தில் பாத்திரம் அமைத்திருப்பார். அதில் தனது நண்பர்களுக்கும் பாத்திரம் வழங்குவார்.

இவர் தேயிலைத் தோட்டத்தில் சில காலம் பணிபு ரிந்தார். அக்காலத்திலே தேயிலை தோட்ட நண்பர்களுக்கு ஏற்படும் துயரங்களை இவர் எதிர்த்து செயற்பட்டிருக்கிறார்...

இளைஞர் சேவைகள் மன்றம் அமைத்து தோட் டத்தில் உள்ள அனைவரையும் சீர்திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இவரை எதிர்ப்பவர்களை இவர் சிறிய புன்முறுவலுடன் கடந்து அவர்களைத் தன்வசம் ஈர்ப்பார்.

இவர் தொழில் புரியும் காலத்தில் பாரதியார், வள்ளுவர் போன்றோர்களின் கருத்துக்களை அதிக மாகவே எங்களிடம் பகிர்வது இவரின் சிறப்பாகும். இவர் பாரதியின் ரசிகராகவும் இருந்துள்ளார். அவ ருடைய கவிதைகளிலும் பாரதி தொடர்பாக இவர் அதிகம் எழுதியுள்ளார்.

இவருடன் இணைந்து தொழில் புரிந்த காலங்களில் மிகவும் அன்பாக பழகும் இவர் இறுதிவரை அப் பண்பினைத் தன்னிடம் பேணி வந்துள்ளார்.


இவர் சாதாரணதரம் படித்துவிட்டு பிறகு தேயிலைத் தொழில் மேற்கொண்டார். அதன் பின்பு மிருக வைத்திய சாலையில் பணிபுரிய சென்று விட்டார். இவர் வேறு இடத்திற்குப் பணி புரியச் சென்றாலும் தொடர்ந்து எங்களிடம் தோட்டத்தில் நடக்கும் அவலங்களைக் கேட்டறிந்து அதனை கவிதைகள், கட்டுரைகள் மூலமாக வெளி உலகுக்கு கொண்டுவருவார். இவர் மாடும் வீடும், மனுஷியம் மற்றும் இறுதியாக வேடத்தனம் என்ற நூலையும் வெளியிட்டார். இவர் தனது பெயருக்கு முன் மல்லிகையைச் சூடி மலையகம் எங்கும் தனது சுவாசத்தை பரப்பி வருகிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொடுக்காமல் ஒரு இனிப்பு மிட்டாயயும் எடுத்து வாயில் போட்ட வரதன் "அங்கிள், நான் மட்டும் இந்தக் கடையை நடத்தினால் வேற லெவல்" என்றான்.



# சிலம்பாட்ட வீரனின் வாக்கு மூலம்

சை. கிங்ஸ்லி கோமஸ்

மணிவேல் தனது பெட்டிக்கடையை மூடிக் கொண்டு இருந்தான். வரதன் ஓடோடி வந்துகொண்டு இருந்தான். "அங்கிள் நாலு கோல் லீப்" என்றான். "கடனுக்கா காசுக்கா" என்றார் மணிவேல். "காசுக்கு அங்கிள் பழைய கடன் எவ்வளவுன்னு சொல்லுங்க" என்று வரதன் கேட்டதும் ஆச்சரியத்துடன் மணிவேல் வரதனைப் பார்த்துவிட்டு "ஆயிரத்து அறுநூறு ரூபாய்" என்றார். வெடுக் கென பணத்தை கொடுத்த வரதன் ஒரு சிகரட்டை பற்றவைத்துக் கொண்டு "குட்நைட் அங்கிள்" என்று விடை பெற்றான். குப்பென்று வீசிய மதுவாடை மணிவேலையும் போதையாக்கிவிடும் போல் இருந்தது.

தனது வீடு நோக்கி நடக்கத் தொடங்கிய மணிவேலுக்கு இருட்டில் முன்னால் யாரோ நடப்பது போல் தெரிய யாரப்பா அது என்று சத்தமாக கேட்டார். "முருகன் முருகன்" என்ற பதில் மட்டுமே கேட்டது. மணிவேல் "என்ன முருகன் இந்த நேரத்திலை" என்று கிட்ட நெருங்கும் போது முருகனின் மதுவாடையும் மணிவேலை திண்டாட வைத்துவிட்டது. கூர்ந்து மணிவேலை கவனித்த முருகன் "கொழும்புக்கு போயிற்றுவாரேன் முதலாளி" என்றான். "என்ன விசேசம் முருகா" என்று மணிவேல் விசாரிக்க தனது மகளை கொழும்பில் ஒரு வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிட்டு வருவதாகவும் அந்த சிங்கள மாத்தையா பிள்ளையை படிக்க வைப்பதாகவும், ஒரு வேலையும் இல்லையாம் சின்னஞ்சிறு பிள்ளையுடன் விளையாடுவதும் படிப்பதும் தான் வேலை யாம் என்று முருகன் கூறும்போதே மணிவேல் காரித் "தூ...." என்று சளியைத் துப்பிவிட்டு எதுவும் பேசாமல் முருகனை முந்திக்கொண்டு நடக்கத் தொடங்கினார். முருகனின் முகத்தில் துப்ப வேண்டியது, மணிவேலால் வேதனையை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்த சின்னஞ்சிறிய மாணவி, இவளை வீட்டு வேலைக்கு அடிமையாக விட்டு வந்து அவர்கள் கொடுத்த பணத்தில் மது அருந்தி சுகம் காணும் முருகன் போன்றவர்களையும் தரகு தொழில் செய்யும் வரதன் போன்ற வர்களையும் தன்னிடம் துப்பாக்கி கிடைத் தால் சுட்டுக் கொண்டுவிடலாம் என்ற ஆத்திரத்துடன் வீடு நோக்கி நடந்தார் மணிவேல்.

காலம் உருண்டோடியது. மணிவேலின் பேரனும், பேத்தியும் தோட்டப்பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து நகர் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினார்கள். மணிவேலும் தனது சிறிய கடையில் செய்யும் வியாபாரம் மூலம் தனது குடும்பத்தையும் இளம் விதவையான தனது மகளின் பிள்ளைகளையும் கவனித்து வந்தார்.

ஒரு நாள் வரதன் கடைக்கு வந்தான். “அங்கிள், இரண்டு சிகரட்” என்றான். அவனை முறைத்து பார்த்த மணிவேல் வேண்டா வெறுப்பாக சிகரட்டுகளைக் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொண்டார். பணத்தைக் கொடுக்காமல் ஒரு இனிப்பு மிட்டாயயும் எடுத்து வாயில் போட்ட வரதன் “அங்கிள், நான் மட்டும் இந்தக் கடையை நடத்தினால் வேற லெவல்” என்றான். அவனை ஆச்சரியமாகப் பார்த்த மணி வேலைப் பார்த்து “ஒரு நாலைக்கு பத்து போத்தல் கள், அறுபது ரின் பியர் பத்து டி, 100 டபிலட் வித்து இந்தக்கடையை 3 தட்டுக்கு அடிச்சு இருப்பேன். உங்களை மாதிரி கொஞ்சம் அரிசியும், மாவும், லாம் பெண்ணையும் விற்கமாட்டேன்” என்றான்.

மணிவேலுக்கோ பற்றிக்கொண்டு வந்தது ஆத்திரம். ஆனால் போதையில் இருப்ப வனிடம் என்ன பேசுவது என்று மௌனித் திருந்து விட்டார். பெரிய கங்காணி குடும் பத்தில் பிறந்த வரதன் அந்த தோட்டத்தில் பெண்களையும் பிள்ளைகளையும் கொழும் பிற்கும் மற்றைய பகுதிகளுக்கும் வீடுகளில் வேலை செய்ய அனுப்பும் பிரதான தரகன். சிங்களம் சரளமாக பேசும் அவன் சின்ன வயதிலிருந்தே பிழையான பாதையில் பய ணிக்கத் தொடங்கியவன். தொழிற்சங்கம் ஒன்றிற்காய் அடாவடித்தனங்களில் ஈடு படுவதும் தேர்தல் காலங்களில் தோட்டங் களுக்கு தொழிற்சங்கம் கொடுக்கும் சாராயம், சாப்பாட்டு பாசல்களை விநி யோகிப்பதும் தோட்டத்தில் எந்த நல்ல காரியம் நடந்தாலும் குழப்பம் விளைவிப்பதும் தோட்டப் பாடசாலையில் அல்லது தோட்ட இளைஞர்கள் பொதுவான நல்ல வேலைத் திட்டங்களை செய்யும் போது அவர்களுக்கு தெரியாமல் பிரதேச அரசியல் வாதிகளை அழைத்து வந்து அந்த நல்ல விடயம் அந்த அரசியல்வாதியின் மூலமாகவே நடைபெறு வதாகவும் பொய்யாக செய்திகளையும் முக நூல் படங்களையும் போடுவதும் தோட்ட திருவிழாக் காலங்களில் சாராயம், பியர் விற்பனை செய்வதுவும் என்று இருப்பதுடன் தோட்டத்தில் உள்ள பெண்கள், பிள்ளைகள் பற்றி கொச்சையாக பேசுவதும் எல்லாப் பெண்களும் தன்னை விரும்புவதாகவும் அவர்களுடன் தான் உறவு கொண்டுள்ள தாகவும் பொய்யாக பேசித் திரிவான். அவன் கா.பொ.த சாதாரண தர பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையாதவன். அத னால் யாரும் படிப்பதை சிதைப்பதில் அவன் மிகக் கெட்டிக்காரன். அடிக்கடி அரசாங்க வாகனங்களில் வருவதும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடனும் மற்றைய அதிகாரிகளு டனும் சிறந்த நட்பைப் பேணுவதிலும் மிகக் கெட்டிக்காரன். அரசாங்க காணி ஒன்றையும் தனது பெயருக்கு எழுதியெடுத் திருப்பதாகவும் அந்தக் காணியில் திருமண மண்டபம் ஒன்றை அமைக்கப் போவதாகவும் கூறித் திரிகின்றான்.

இவனை மணிவேலுவிற்கு கண்ணில் காட்ட முடியாது. ஏனென்றால், அவர் ஒரு முன்னாள் திராவிடக்கழகசெயற்பாட்டாளர். பின் இடதுசாரி அரசியலில் ஈர்க்கப்பட்டு பல போராட்டங்களில் பங்கெடுத்தவர். அவர் ஒரே மகள் ஒரு அரச நிறுவனத்தில் உயர் பதவியில் பணியாற்றுகின்றாள். அவ ளது கணவர் வாகன விபத்தொன்றில் இளம் வயதிலையே மரணித்து விட்டதினால் மக ளையும் மகளின் பிள்ளைகளையும் பாது காப்பதில் மணிவேலுவிற்கு மிகுந்த அக்கறை. தனது எண்பது வயதிலும் உடற்பயிற்சியும், யோகாவும் செய்து நோயில்லாமல் வாழ்பவர்.

தீபாவளிக் காலம் தோட்டத்து இளைஞர் கள் தலைநகரில் வேலை செய்துவிட்டு தோட்டம் வந்திருந்தனர். அவர்களின் தலை முடியும் தோடுகளும் இடுப்பிலிருந்து விழுந்து விடும் என அஞ்ச வைக்கும் காற்சட்டைகளும் பெரிய பெரிய கையடக்க தொலைபேசிகளும் பார்க்க பயமாக இருக்கினம். மணி வேலு விற்கு போன் காட்ர்களும், டேட்டாக் காட்ர் களும் அதிகமாக விற்பனையாகும் காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மணிவேல் தனது வியாபாரத்திலும் ஒரே நேர்த்தியை பின்பற்றுவார். சிறுவர்களுக்கு சிகரட் விற்பதில்லை. அதிக கொள்ளை லாபம் பெறுவதில்லை. யாருக்கும் போட்டியாக வியாபாரம் செய்வதில்லை. தோட்டத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய், கறிகளை, நாட்டு முட்டைகளையும் அதிகமாக விற்பனை செய்வதுவும் தானும் அவற்றை உண்பதும் என்று வாழ்ந்து வந்தார்.

தீபாவளிக்கு மறுதினம் மாலை மூன்று மணியிருக்கும். இளைஞர்கள் பதட்டமாக தோட்டத்தை நோக்கி ஓடுவதைக் கண்ட மணிவேல் என்ன வென்று விசாரித்தார். "தாத்தா முருகன் அண்ணனின் மகள் விஜி பத்தவச்சுக்கிச்சாம்" என்று கூறிக்கொண்டு ஓடினர்.

இடிந்துபோய் அமர்ந்துவிட்டார் மணிவேல். தனது பேர்த்தியும் முருகனின் மகளும் ஒரே வகுப்பு. அவளை இவ்வாறு அனியாயப் படுத்தி விட்டார்களே. சற்று நேரத்தில் தோட்டத்திலிருந்து வந்த வரதன் சிகரட் ஒன்றை பத்தியவாறு கூறினான். "அங்கிள், அந்த பால்வேன் ரைவருக்கும் முருகன் மகளுக்கும் லவ்வாம். அதுதான் காரணம்" என்றான். உடனே, தனது கையடக்கத் தொலைபேசியில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் அதே கதையைக் கூறினான். இவன் இந்தக் கதையை கட்டிக் கூறுகின்றான் என்பது அவனது கண்களைப் பார்த்த மணிவேலுவிற்கு விளங்கியது. தீபாவளிக்கு முன்தினம் தான் கொழும்பிலிருந்து முருகனின் மகள் வந்தாள். வந்த அவள் நகரத்திலிருந்து தோட்டத்திற்கு பால்வேனில் ஏறிவந்ததைக் கண்ட வரதன் நன்றாக கோர்க்கின்றான் என்பது மணிவேலுவிற்கு மாத்திரம் விளங்கியது .

மணிவேல் சாதாரனமாகவே தற்கொலை செய்துகொள்பவர்களின் மரணவீடுகளுக்கு செல்லமாட்டார். அதனால் முருகனின் வீட்டிற்கு 10 இராத்தல் பாணும் 2 முப சீனியும் அனுப்பிவிட்டார். வரதனின் கட்டுக்கதையும் காட்டுத்தீபோல் தோட்டம் எங்கும் பரவியது.

சிலநாட்களுக்கு பின் மணிவேலின் மகள் சனிக்கிழமை மணிவேலுவிற்கு தேநீர் கொண்டுவந்து கொடுத்தபோது கடைக்கருகே நின்று கொண்டு இருந்த வரதன் மோசமான பார்வை ஒன்றை பார்த்து, "ஆ தேவி மேடம், எப்படி இருக்கிங்க. நம்மளோட கதைக்க மாட்டேங்கிறீங்க" என்றான். மணிவேலுவின் மகளோ அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, "அப்பா நான் போறேன்" என்று கூறிவிட்டு விரு விரு என்று நடக்கத் தொடங்கினாள். அன்று மாலை வீடு திரும்பியபோது மணிவேலுவின் பேரன், "தாத்தா, அந்த வரதன் அங்கிள் நான் ஸ்கூல்ல இருந்து வரும்போது எனக்கும் தங்கச்சிக்கும் டொபியும், கூல்றிங்கும் குடுத்தார். நாங்க வேனாம்மின்னு சொல்லிட்டு ஓடிவந்திட்டோம்" என்றான்.

மணிவேலுவின் கண்கள் சிவந்தன. பல சிறுவர்களுக்கு அவன் போதைப் பாவனையை பழக்குவதற்காக இவ்வாறு செய்வதாக கேள்விப்பட்டு இருந்தார். ஏதோ முடிவெடுத்தவராய் "அதைமட்டும் வாங்கிவிட வேண்டாம்" என்று பிள்ளைகளுக்கு கூறினார்.

மறு தினம் மணிவேலு சற்று பதட்டமாகவும் யாரையோ எதிர்பார்த்தும் தனது கடையில் இருந்தார். மாலை ஏழு மணி. அம்மாவாசை இருட்டு. வரதன் சிகரட் வாங்க கடைக்கு வந்தான். போதை தலைக்கேறிய நிலையில் இருந்தான். தயாராக வைத்திருந்த சிலம்பத்தை கையில் எடுத்தார். சிறு வயதிலிருந்தே சிலம்பத்தில் மிகக் கெட்டிக்காரனான மணிவேல் சிலம்பத்தை சுற்றி முதலடியை வரதனின் கழுத்துக்கும், இரண்டாம் அடியை அவனது கைக்கும், மூன்றாம் அடியை அவனது இடுப்பிற்கும் கொடுத்தார். தடால் என்று கீழே விழுந்த வரதனின் கால்களுக்கு மூன்று அடி கொடுத்தார். அவனை பக்கத்தில் உள்ள புதருக்குள் தள்ளிவிட்டு வீட்டை நோக்கி நடந்தார்.

மறுதினம் பக்கவாதம் வந்தவனாக பேச்சு மூச்சின்றி காலுடைந்து வைத்தியசாலையில் கிடத்தப்பட்டு இருந்த வரதனைப் பார்க்க பிஸ்கட் பக்கற்றுடன் சென்றார் மணிவேல். ❍

தாயகம் 102 வது இதழுக்கான ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 15.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை அண்ணன்

மல்லிகைக்கு மட்டும் தான்
வெள்ளையாய் சிரிக்கத் தெரியுமா?
மல்லிகை அண்ணனின்
சிரிப்புக் கூட வெள்ளை தான்
அந்தச் சிரிப்பு
பூவின் ஈரம் கொண்டது
புலரியின் சாரம் கொண்டது

அண்ணா! லெட்சுமணன் இன்னும்
உறங்கவில்லை
அவர் இந்த மலைகளில் தான்
அலைந்து திரிகிறார்
பேரினவாதத் துப்பாக்கிகள் நமை நோக்கி
நீண்டிருக்கையில்
அவர் எப்படி உறங்குவார்
ஒடுக்குமுறைக்கெதிரான
அவர் குரலும் உறங்காது


அது போலத்தான் அண்ணா
நீங்களும்


துயரங்களும் போராட்டங்களும்
நிரம்பிய நம் வானத்தில்
நட்சத்திரமாக இருப்பீர்கள்
எழுத்தால் பேச்சால் சிரிப்பால்
நம் நினைவுகளில் வாழ்வீர்கள்

நம் தேச கவியே
நம் நேச கவியே
நம் பாடுகளைப் பாடிய கவியே
நம்மோடு தான் இருப்பீர்கள்

எந்தக் கனவைச் சுமந்து
வாழ்ந்தீர்களோ
அந்தக் கனவைச் சுமந்து
முன்னே செல்ல
இன்னொரு தலைமுறை
இங்கே இருக்கிறோம்

சுடலை கொளுத்தும் போது
எரிந்து சாம்பலாய்ப் போகும்
தேயிலை விளாறைப் போல
நம் துயரங்களும் ஒரு நாள்
சாம்பலாய்ப் போகும்
பொசுங்கிப் போகும்
அது வரை நம் மனங்கள்
கனன்று கொண்டிருக்கும்
நீர்த்துப் போகாது





சி. கிருஷ்ணபிரியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மழைய பார்த்து ஒன்னும் சரி வராது. இன்னக்கி மட்டும் தான் மழை பேயுற மாதிரி... அடுப்புக்குள்ள குந்திக்கிட்டு இருக்காம வெளிய வாங்க. நேரம் ஏழு மணி....

# மழையில் நனைந்த குருதி

சி. ரா. ஜெயம்



"நாசமா போன மழ நம்ம ஆளுகள கொன்னுப்புட்டு தான் நிக்கும் போல. என்னடா பெரிய எழவா இருக்கு... சொல சொலன்னு ச்சீ ஈரக்கொல எல்லாம் ஆடிப் போவும் போல" மீனம்மா அத்தை தாழ்வாரத்தில் நின்றவாறே சத்தமாக சொன்னார். அடிக்கும் காற்றில் அவரது கோபத்துடன் கூடிய புலம்பல் உள் காம்பிராவில் சுருண்டு படுத்திருக்கும் பிள்ளைகளுக்குக் கூட கேட்டிருக்க வாய்ப்பில்லை.

காற்றும் மழையும் விட்டபாடில்லை. கடந்த நான்கு நாட்களாக கடும் மழை.

"சூரியன் நனைஞ்சி போயிருச்சி போல... ஒரே மங்கலா இருக்கு.." பலரின் முடிவு அவ்வாறு தான் இருந்தது.

இடையிடையே மின்னல், இடி காதுகளைப் பிளந்தன. ஏதோ தாழமுக்கமாம். அதையும் இரண்டு வரி செய்தியாக கடைசியில் கூறினார்கள். கொரோனா செய்தி, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சுட்டுக் கொண்ட செய்தி, இருபதாவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள், நடிகை குஸ்பு கட்சி மாறியமை, ஐ.பி.எல் போட்டி பற்றிய விடயங்கள் தான் விசேட செய்தியாகவும் 'பிரேக்கிங் நியுசாகவும்' சொல்லிக் கொண்டிருந்தார்கள். மோசமான கால நிலை, மழை, வெள்ளம், மண் சரிவு, அனர்த்தங்கள், பசி, பட்டினி, வேலையின்மை, தற்கொலை போன்றன எல்லாம் சாதாரண நிகழ்வுகளாகி விட்டமையால் செய்திகளாக வருவதற்கு வாய்ப்பில்லை தான்.

"போன தடவ இப்புடி பேய்ஞ்ச மழயில தான் ரெண்டு ஸ்கூல் புள்ளக தண்ணியில அள்ளு பட்டு போனாங்க... இன்னக்கி ஒரு வருசம் ஆகுது. அநியாயம் அந்த புள்ளக.... அவுங்க அம்மாமாரு என்னா பாடுபட்டிருப்பாங்க... நெனைக்கவே நெஞ்சு அடைக்குது... இந்த கஸ்ட காலத்துல புள்ளைகள வளர்த்து ஆளாக்குறது லேசான காரியமா?" மாரியம்மாள் பாடசாலை மாணவர்கள் இறந்த செய்தியை தனது பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தினார். தொழிலாளியின் கவலைகள் தொழிலாளிகளுக்குத் தானே தெரியும்.

"மழைய பார்த்து ஒன்னும் சரி வராது. இன்னக்கி மட்டும் தான் மழை பேயுற மாதிரி... அடுப்புக்குள்ள குந்திக்கிட்டு இருக்காம வெளிய வாங்க. நேரம் ஏழு மணி.... பெரிய தொர வங்களாவுக்கு கீழ நாலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பர் மல..சும்மா வாய கிண்டாம சுருக்கா வந்து சேருங்க..." இந்த அடி மழை காற்றிலும் சின்னையா கங்காணியின் குரல் நன்றாகக் கேட்டது.

ரஜகல்ல தோட்டம் வெள்ளைக்காரன் காலத்தில் இராச கல்லுத்தோட்டம் என்ப தாகத் தான் இருந்தது. பலாங்கொடையிலி ருந்து பொகவந்தலாவை போகிற பாதையில் சரியாக 'நடு சென்டரில்' இருக்கும் மதுரை வீரன் சிலைக்கு 'பீச்சாங் கை'பக்கமாக செல்லும் பாதையில் சரியாக மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றால் இந்த தோட்டத்தை அடையலாம். அங்குள்ள முச் சந்தியிலிருந்து பார்த்தால் 'பெஞ்சு போட் டது போல்' ஒரு கல் காணப்படும். அதில் தான் முற் காலத்தில் துரைமார் அமர்ந்திருந்து தோட்டத்தைப் பார்ப்பார்களாம். 'ராச கல் லுன்னு' இந்த தோட்டத்தக்கு பெயர் வருவ தற்கு இதுவும் ஒரு காரணமாகும். ராச கல்லுத் தோட்டம் ஒரு காலத்தில் தேயி லைக்குப் பேர் போன தோட்டமாகும். 'தனி யார் மயமுனு' சொல்லி 'நாசமா போன வனுங்க' தோட்டங்களை தனியாருக்கு 'வித் தானுங்களோ' அன்றிலிருந்து அழிவு ஆரம் பித்து விட்டது. கீழ் டிவிசன் மூடப்பட்டு விட்டது. அனைத்திலும் இனவாத குடியேற் றம். மருந்துக்கும் தேயிலைச் செடி இல்லை. 1983 கலவரத்தில் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டு விட்டன. மாரியம்மாள் மட்டும் மூன்று தகரத்தினுள்ளே இன்று வரை வரலாறு சொல்ல அமர்ந்து இருக் கிறாள். 'பெரிய சாமி' கூடிய விரைவில் அவளையும் அடித்து விரட்டுவார் என்பது மட்டும் உறுதி.

மேல் டிவிசன் காட்டுக்கு என ஒதுக்கப் பட்டுவிட்டது. பெரிய துரைமார், 'ராலாமி' வனத்துறை அதிகாரிகள், பொலிஸ் ஆகி யோருக்கு மட்டுமே சொந்தமான இக்காடு இப்போது முள்ளுப் பற்றைக் காடாகி போனமை பற்றி ஒருவருக்கும் கவலை இல்லை. வங்களாவில் அப்புவாக இருக்கும்; ராசதுரை மற்றும் புஞ்சி பண்டா ஆகி யோருக்கு மட்டுமே ஏனைய ரகசியங்கள் தெரியும்.

காட்டுக்கு ஓரமாக பெரிய துரை வங்களா உள்ளது. நீச்சல் தடாகம், பூந்தோட்டம், மரக்கறித் தோட்டம், மாடு வளர்ப்பு, புற்றரை, விளையாட்டுத் திடல், ஊஞ்சல் என இரண்டு ஏக்கருக்கு மேல் இயற்கை இன்பம் கொட்டிக்கிடக்கும். இங்கு வேலை பார்த்த ஒரு துரை சாவதற்கு முன் சொன்னானாம்.

"நான் இறந்த பிறகு சொர்க்கம் வேண்டாம்

மீண்டும் துரையாக ரஜகல்லயில் பிறக்க வேண்டும்;"

சொர்க்கம் இருக்கிறதோ இல்லையோ தெரியாது... ஆனால் மாதிரி சொர்க்கம் மலைநாட்டில் உள்ளது. அதனைத் தனது ஊனாலும் உடலாலும் உருவாக்கியவர்கள் ஓட்டை லயத்தில் வாடுகின்றார்கள்

மழையா? காற்றா? போட்டியிடுவது போல இருந்தது. ஓ வென்ற சத்தம் மட்டுமே கேட்ட வண்ணமிருந்தது. பன்றிக்குத் தப்பி யிருந்த வாழைகள் எல்லாம் தூரோடு சரிந்து விழ்ந்தன.

காற்றுக்கு மரங்கள் மீது இவ்வளவு கோபம் ஏனோ தெரியவில்லை. தலையைப் பிடித்து ஆட்டி கைகளை ஒடிப்பது போல கிளைகளை முறித்துப் போட்டன. காட்டு மாரி கோவிலுக்கு அருகில் இருந்த பெரிய வாகை மரம் இரண்டாகப் பிளந்து விழுந் தமை 'ஆளுகளுக்கு' ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

"அம்மா மாரியம்மா... எங்கள நீ தான் காப்பத்தனும்" மக்களின் பிரார்த்தனையிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்தது. எல் லோராலும் கைவிடப்பட்டு 'அஹிங்சக மினிசுவாகிப்' போன தொழிலாளர்களைக் காக்கவென வேவல்வத்தை தோட்டத்தை முற்றாக எரித்த அம்மாவா வரப்போகிறாள்?

'பாடமாத்தி' சந்தியிலிருந்து கங்காணி பலமாக சத்தமிடுவது கேட்கின்றது.

"நேரம் என்னானு தெரியுதா? ஓங்களுக்கு எங்க தெரியப் போவுது.... கவுட்டிக்குள்ள தலய வச்சிக்கிட்டு சுருண்டா என்னா நடக்கு துனே தெரியாது... சுருக்கா வாங்க பொம்பள ஆளுகளா... இந்த அம்மா வாரதுனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறேன்.. இல்லாட்டி நல்லா தான் சொல்லுவேன்... கால் வெரசு போட்டு நடந்து வரட்டும்" கங்காணியின் குடையி லிருந்த கம்பிகள் வளைந்து ஓடிந்தே போய் விட்டன. இதை யாரும் சொன்னால் 'ஊத்த பேச்சி' தான் வாங்க வேண்டி வரும்.

இன்று பதினாறு தொழிலாளர்கள் மட் டுமே வேலைக்கு வந்திருந்தார்கள். ரெட்டு, படங்கு எல்லாவற்றையும் தூக்கிப் புரட்டியது காற்று. கைகளால் இருக்கிப் பிடித்தவாறே பெண்கள் வரிசையாக போனார்கள்.

"பார்த்து வாங்க புள்ளகளா...மரத்துல உள்ள காஞ்ச ஓடியெல்லாம் தலையில விழு வுது." சிவனம்மாள் சத்தமிட்டு சொன்ன வாறே முன்னாள் நடந்தார். அடுத்து பார்வதி கடைசியாக சீதையம்மாள் இவர்கள் தான் வயதில் மூத்தவர்கள். வறுமையின் கொடுமை இந்த குளிர் மழை காற்றிலும் உழைக்க வேண்டிய நிலை. உயரமாக வளர்ந்திருந்த சவுக்கு, முருங்கை மரத்து இலைகள் எல்லாம் காற்றினால் பிடுங்கப்பட்டு பறந்தன. சில இலைகள் தொழிலாளர் முகத்தில் பளார் என்று அடித்து கீழே விழுந்தன. ஏதோ அசம் பாவிதம் நடக்கப் போகின்றது என்ற எண் ணம் தொழிலாளர்களிடையே தோன்றியது ஒன்றும் வியப்பில்லை.

ஆண்களில் ஐந்து பேர் பெரிய துரையின் வங்களாவுக்கு செல்லும் பாதையில் உள்ள "மூத்திரக்காய்' மரத்தின் கிளைகளை வெட்டி அகற்றுவதற்காகப் போனார்கள். மூன்று நாட்களுக்கு முன்னர் வேகமாக வீசிய காற்றில் ஒரு சிறு கிளை ஓடிந்து பாதையில் விழுந்து விட்டது.

"பாலையா மே சத்தியே.. கொம்பனி லொக்கா எனவா... தொர இந்த வீக் வாரது... பார அப்சட் போனா...லெட தமாய்.... லொக்கு அத்து ஒக்கம கப்பலா தாண்ட... ஒயா தமாய் ..ஏக்கட்ட ஹரி நிலதாரியா" பெரிய துரை ஓடர் போட்டான். பெரிய ஐயாமார் வரும் வழியில் ஒரு சிறு கிளை விழுந்தாலும் பெரிய பிரச்சினை தானே.

பெரிய கணக்கப்பிள்ளை பாலையாவை நீ தான் சரியான அதிகாரி என்று பெரிய துரை சொன்னது அவருக்கு பெரும் சந்தோசத்தை ஏற்படுத்தியிருந்தது. .

கடந்த மூன்று நாட்களாக உயிரைப் பணயம் வைத்து கிளைகள் வெட்டப்பட்டன. இன்னுமிருப்பது மூன்று மரங்களில உள்ள கிளைகள் மட்டுமே ஆகும்.

"சரியான காத்தா இருக்குதுங்க ஐயா... நேத்தும் கிருஸ்ணன் நூலுல தப்புனான். அந்த பெரிய மரத்துல ஆரவாசி வெட்டிக் கிட்டு இருந்த போது அப்புடியே வாது ஒடஞ்சி விழுந்திருச்சிங்க." என்றான் ராமு.

"கவனமா இருக்கனும்.... மாடு மாதிரி வேல செஞ்சா அப்புடி தான்... நான் மரத்துல ஏறி வெட்டி காட்டவா?... காத்து வீசுற பக்கமா வாதுகள சாய்க்கனும்... ஒங்களுக்கு ஒரு மசுரும் தெரியாது" கணக்கப்பிள்ளை யோட பேசி பயனில்லை என்பதை அனை வரும் விளங்கிக் கொண்டார்கள்.

வங்களாவுக்கு கீழே உள்ள பெரிய வாகை மரங்கள் தூரோடு சரியும் நிலையில் இருந்தன. அது பற்றி பேசினால் கணக்கப் பிள்ளைக்கு மேலும் கோபம் தான் வரும் என்பதை அவர்கள் அறிவார்கள். அதை விட வாகை மரங்களை வெட்டுவதற்கு நாட் டில் உள்ளவர்கள் தான் வருவார்கள். அது வேறு விவகாரமாகும்.

"வரதன்.... கயிற நல்லா போட்டுக் கட்டு. அடுத்த தொங்கல பெரிய மரத்துல கட் டுங்க..." சிவகுமாருக்குத் தெரியாத வேலையே இல்லை. மழையோடு மழையாக கிளைகளை வெட்டும் வேலை தொடர்ந்தது.

சரியாகப் பத்து மணி.

திடீரென காற்று பலமாக வீசியது.

"கவனம்... சிவராமு.. கவனம் மரத்த புடிச்சிக்க.... வாது ஒடையிது... ஒதுங்குங்க... ஓடுங்க..." சிவகுமார் பலமாக சத்தம் போட் டான். அவனது குரல் காற்றின் சத்தத்துக்கு மேலாக கேட்டது.

"வங்களாவுக்கு கீழ உள்ள வாக மரம் சாஞ்சிருச்சி.. ஓடி வாங்க ஆளுகளுக்கு காயம் போல ஓடி வாங்க" கங்காணி பதட்டத்துடன் சத்தமிடுவது கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராம் மரத்திலிருந்தவாறே பாய்ந்து இறங்கினான். காலில் ஏதோ வெட்டியது போல இருந்தது.

"அம்மாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ?" அவனது மனம் பட படத்தது.

அனைவரும் ஓடினார்கள். மழையாவது காற்றாவது சக தொழிலாளிக்கு துன்பம் என்றால் ஓடி வந்து உதவுவது வேறு யாராக இருக்க முடியும்?

"ஐயோ வந்து பாருங்க... அம்மாவ பாருங்க..." சீறி அடிக்கும் காற்றையும் மழை சத்தத்தையும் மேவி ஒலித்தது. தொழிலாளர்களின் குரல்.

சாய்ந்து கிடக்கும் பாரிய வாகை மரத்தின் கீழே சிவனம்மா, பார்வதி ஆகிய இருவரும் நசுங்கி போய் கிடந்தார்கள். இரத்தம் பீறிட்டது. மழை நீரில் கரைந்தது குருதி. பெண் தொழிலாளர்கள் தலைகளிலும் மார்பிலும் அடித்துக் கொண்டார்கள். தங்களது கண் முன்னே நிகழ்ந்த சம்பவம்.

"ஐயோ... அம்மா..." சிவராம் ஓவென கத்தினான். மற்றையவர்களும் சத்தமாக கதறினார்கள். எல்லோரும் ஒன்றிணைந்து முயன்றாலும் மரத்தைப் புரட்ட முடியவில்லை.

விடயமறிந்து சகல தொழிலாளர்களும் கூடி விட்டனர்.

ஒத்தக்கடை சுபசிங்க மரம் அறுக்கும் வாளோடு ஓடி வந்தான்.

"தள்ளுங்கப்பா... தள்ளி நில்லுங்க" யாரோ சத்தமிடுவது கேட்டது.

வந்த வேகத்தில் மெசினை ஸ்டார்ட் செய்து மரத்தை வெட்டத் தொடங்கினான் சுபசிங்க. கொஞ்ச நேரத்தில் மரம் இரண்டானது. மரத்தின் மேல் பகுதியை வெட்டுவதற்கு முன்பாகவே தொழிலாளர்கள் அதனை புரட்டிப் போட்டார்கள். இரண்டு தொழிலாளர்களையும் தூக்கி எடுத்தார்கள். பேச்சு மூச்சு இல்லை. உடலெல்லாம் ஒரே இரத்தம். மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் சொட்டுச் சொட்டாக விழுந்தது. காலையிலிருந்து எடுத்த கொழுந்து இரத்தத்தால் சிவப்பாகிக் கிடந்தது.

"லேசான சூடு இருக்குது. லொரிக்கு சொல்லுங்க" கங்காணி சத்தம் போட்டார்.

அம்மாவை மடியில் வைத்து கதறினான். சிவராம்.

"தம்பி ஓங்காலுலயும் காயம்..." சிவகுமார் சொன்னது அவனது காதுகளில் கேட்கவில்லை. காலில் உள்ள பெரிய காயத்தை விட அம்மாவின் குருதிப் பெருக்கும் மயங்கிக் கிடக்கும் விதமும் அவனை நிலைகுலையச் செய்தது.

பார்வதியின் கணவர் ரட்ணமும் வந்து சேர்ந்தார். ஏற்கனவே கடும் சுகவீனமடைந்து இருந்த அவர். மனைவியின் நிலையைக் கண்டதும் அப்படியே மயங்கி விழுந்தார். கீழ் பக்கமாக கொழுந்தெடுத்த ராசம்மா அக்கா ஏதோ பிழைத்து விட்டார். காலில் அடிபட்டு நடக்க முடியாமல் இருந்தது.

மூன்று பேரையும் மடுவத்துக்குத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டார்கள். வழி எங்கும் குருதி நீரோடு கலந்து எஞ்சியிருக்கும் தேயிலைகளுக்கு உரமானது. இந்த வேதனையின் காரணமோ என்னவோ மழை சற்று ஓய்வெடுத்து இருந்தது.

தோட்டத்து மக்கள் அனைவரும் கூடி விட்டனர். தலையில் அடித்துக் கொண்டு அழுதனர். வேறு என்ன செய்ய முடியும்?

அரை மணி நேரத்துக்குப் பின்னர் கொழுந்து லொரி வந்து சேர்ந்தது. மூன்று பேரையும் ஏற்றினார்கள். ராசம்மா அக்கா பித்துப் பிடித்தது போல ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தார். கால்களில் பெரிய கட்டு கூடி இருந்தார்கள். சிவகுமாரின் கதறல் ஓயவில்லை. அம்மாவை மடியில் வைத்தபடி நெஞ்சை தொட்டுத் தொட்டு பார்த்த வண்ணமிருந்தான். மழை நீரால் ஊறிப்போயிருந்த அம்மாவின் கைகளை கன்னத்தோடு ஒற்றிக் கொண்டான். பார்வதி அக்காவையும் இடையிடையே தொட்டுப்பார்த்துக் கொண்டான். ஐந்து பேர் லொரியில் ஏறிக் கொண்டனர். ரட்ணத்தையும் முன் பக்கமாக ஏற்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். அவர் சுற்று முற்றும் பார்த்த வாறு கைகளால் சாடைக்காட்டி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். தனக்கிருந்த ஒரே துணையும் இன்று போய் விட்டது.

தோட்ட பாதை அவசரத்துக்கு வாக னங்கள் செல்லக் கூடியதாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ராச கல்லு தோட்டத்தில் நிலமை படு மோசம். படிக்கட்டில் இறங்குவது போல லொரி ஆடி ஆடி இறங்கியது.

மரம் விழுந்த இடத்தையும் அங்கு தோய்ந்து கிடக்கும் குருதியையும் மண்ணை அள்ளிப் போட்டு மூடினார்கள். மழை நீர் அதனையும் கழுவி தேயிலைக்குக் கொடுத்தது.

மாலையில் செய்தி வந்து சேர்ந்தது. பார் வதியும் சிவனம்மாவும் ஏற்கனவே இறந்து போனார்கள். வெற்று உடல்களைத் தான் ஆசுப்பத்திரிக்கு கொண்டு போய் உள் ளார்கள். ராசம்மா அக்காவை இரத்தினபுரி வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டார்கள்.

மலையகம் முழுவதும் செய்தி பரவியது.

"நம்ம ஆளுக என்னா பாவம் செஞ் சாங்களோ"

"நாசமா போன மழையும் காத்தும் இன்னும் எத்தன பேர கொண்டு போக இருக்குதோ தெரியல"

எங்கும் இதே பேச்சு தான். பலருக்கு இப்படி ஒரு துயர சம்பவம் பற்றிய செய்தி தெரியாமலே போய் விட்டது.

வேலை நேரத்தில் மரணித்த இந்த தொழி லாளர்களுக்கு காப்புறுதி, நட்ட ஈடு எதுவும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

"அடுத்த கூட்டு ஒப்பந்தத்தில சரி வேலக் காட்டுல சாகுற தொழிலாளிகளுக்கு நஸ்ட ஈடு குடுக்கனுமுனு பேசுவானுங்களா? சொல்லுங்க ஆளுகளா? ஊமைக மாதிரி நிக்கிறீங்க"

"தொரவுட்டு வங்களாவுக்கு போற ரோட் டுல வாது ஒடிஞ்சி விழுந்தா. மரத்தை எல்லாம் வெட்டுறானுங்க. தொழிலாளிய கொல்லப்போற வாக மரம் அவனுங்க கண் ணுக்குத் தெரியல" மடுவத்திலுள்ள சுவரில் சாய்ந்தவாறே குமாரசாமி தாத்தா சத்த மிடுவது கேட்கின்றது.

மழையும் காற்றும் அந்த சத்தத்தை 'அமுக் கியவாறே' மீண்டும் பல மடங்கு வேகத்துடன் தனது வேலையைத் தொடங்கியது.

## அஞ்சலி



தமிழ் ஆய்வாளர்

### தொ. பரமசிவம்

"பகுத்தறிவாளர்கள் பக்தியைப் பேச மாட்டார்கள். பக்தி இலக்கியம் படிக்க மாட்டார்கள். ஆனால், தொ. பரமசிவன் பெரியாரைப் பற்றியும் பேசுவார், பெரியாழ்வாரையும் பற்றிப் பேசுவார். பல்துறை வித்தகர். மானுடவியல் சார்ந்து இயங்கியவர்கள் தமிழகத்தில் குறைவு. ராகுல சாங்கிருத்தியாயனுக்குப் பிறகு, மயிலை சீனி வேங்கசாமிக்குப் பிறகு தொ. பரமசிவனை நாம் வைக்க முடியும். கடவுள் மறுப்பை மனதில் கொண்டிருந்தாலும் கோயில்கள் குறித்த ஆய்வுகளைச் சிறப்பாக செய்தவர்" என்கிறார் மதுரை தியாகராசர் கல்லூரியில் அவருடன் பல ஆண்டுகள் பணியாற்றிய பேராசிரியர் கு. ஞானசம்பந்தன்.

தொ.ப வின் ஆய்வுகள் இன்றைய காலத்தில் வாசித்து விவாதிக்கப்படவேண்டியவை. அவரது இழப்பு தமிழ் ஆய்வில் இன்று அவரை மீள வாசிப்பதற்கான தேவையை வலியுறுத்துகிறது. தேசிய கலை இலக்கியப்பேரவையும் தாயகமும் தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்


முன்பெல்லாம் அப்பா
முதல் நாள் மாலை சென்று
மறுநாள் விடிய வருவார்
முடிச்சவிழ்த்த விதம் பற்றி
மூச்சும் விட மாட்டார்
அடுத்தவர் கதை கேட்க
அம்மாவும் பழகவில்லை

குடும்ப சண்டை
கொடுக்கல் வாங்கல்
பீலிச்சண்டை கோழிச்சண்டை
பேரன்களின் பந்து சண்டை
மருமகள் பிராது
மாமனின் கண்சிமிட்டல்
அம்மாவின் முறைப்பாடு
ஆடுகள் மேய்ந்த கதை
வாக்குத்தவறல்
வாளிகளை எத்தி தள்ளல்
அத்தனை பிராதுகளும்
அடுத்த நாள் மறந்து போகும்
பஞ்சாயத்து முடிவுகள் தான் – வாழ்க்கைப்
பாதையினை தெளிவாக்கும்

அடுத்த நாள் விடியலிலே
அடுத்தடுத்து நிரை பிடிக்க
அன்புதான் பெருக்கெடுக்கும்
வெத்திலையும் பாக்கும் -உறவின்
வெற்றிடத்தை நிரப்பி வைக்கும்

இப்போது
பஞ்சாயத்தில் வாதம் வைத்தல்;
பக்க ஞாயம் எடுத்துரைத்தல்;
பெரியோரை மதித்து
பெருமையுடன் தலை நிமிர்தல்
எல்லாமே அழிந்தது போக
பலதுக்கும் தீர்வுகள்
பட்டென்று வருகுது பார்
கை நீள கயிற்றுத் துண்டு
காதலுக்கு ரயில் பாதை
தொங்குதற்கு துப்பட்டா
தோல்விக்கு நஞ்சு போத்தல்
நேராக ரயில் பாதை
நெருப்போடு சங்கமித்தல்
கதையினை முடித்திடவே
கல்லடி பாலம் செல்லல்
வேகமாக செத்தழிய
மேல் கொத்மலை நீரில் பாய்தல்
……………
……………
மகிழ்வான நாட்களுக்காய்;
மக்கள் எப்போ கூடிடுவார்?
பஞ்சாயத்து எப்போ
பணிய லயம் வந்து சேரும்?

**இராசாத் தோட்டம் உதயசூரியன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் நினைவுகளுடன் சில நிமிடம்...



மாறன்

வேரும் எனது தந்தையின் தாத்தாவு மான ஜெகநாதன் வாத்தியார் இந்த மல்லிகைப்பூ தோட்டத்தில் கால் பதித்த போதே இந்த தோட்டத்தில் உள்ளவர்களுக்கு தான் கற்ற சிலம் பம் உள்ளிட்ட கலைகளை கற்றுக் கொடுத்ததோடு மாலை நேரங்களில் கல்வியையும் போதித்துள்ளார். அப் போதே இந்தச் சமுதாயம் தொடர் பான சீர்திருத்த சிந்தனைகள் எங்கள் குடும்பத்தில் விதையிடப்பட்டிருக் கின்றன. அதனைத் தொடர்ந்து அவரின் புதல்வர்களும் எனது தந்தையின் தாய்மாமன் மார்களுமான கதிர்வேல், பழனிவேல் ஆகியோர் பல சமூக சீர்திருத்த நாடகங் களை மல்லியப்பூ தோட் டத்தில் அரங்கேற்றியுள்ளனர். அதன் தாக்கம் சிறுவயதில் இருந்தே எனது தந்தைக்கு ஏற்பட்டதே அவர் எழுத்து லகில் பிரகாசிக்க முதல் வித்தையிட்டிருக்கின்றது.

இலக்கியவாதிகள் என்போர் தனது குடும்பத்திற்கோ, தன்னை சார்ந்த உறவுக் கட்டமைப்புக்குள்ளோ கட்டுப் பட்டவர்கள் கிடையாது. அவர்கள், ஒரு சமூகத்தின் குரலாய், மாபெரும் உந்து விசையாக, தன் பேனை முனைகள் மாற்றானுக்கு பகடைக்காய்களாய் ஆகிவிடக் கூடாது என்பதில் ஆணித்தனமாக இருப்பார்கள். தன் பேனை சிந்தும் மைத் துளிகள் வாளின் வீச்சை விட கூர்மையாய் இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்புக் கொண்டவர்கள், அரசியல் வாதிகளுக்கு சாமரம் வீசா மல் எதிர்நின்று கவியாயுதம் படைப்பார்கள். இவை யாவும் ஒருங்கே பார்த்தால்.... தந்தையே! ஐயம் தேவை யில்லை நீ ஒரு மக்கள் கவிஞன் தான். எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல் உங்கள் பேனையை தான் சார்ந்த சமூகத்தின் விடுதலைக்கான ஆயுதமாகவே பயன்படுத்தி யுள்ளீர்கள். கடைசி காலத்தில் உங்கள் கணணி கீப்போடும் இந்த சமூகத்திற்காகவே குரல் எழுப்பின.

நீங்கள் எங்களுடன் இல்லாத பொழுதிலும் நீங்கள் விட்டுச்சென்ற படைப்புக்கள் இன்னமும் இந்த மக்களின் விடுதலைக்காய் முழங்கிக் கொண்டே தான் இருக்கின்றன. நீங்கள் சொல்லி நான் கேட்டவையும் உங்கள் அருகில் நின்று நான் கண்ட காட்சிகளையும் இங்கு இவ்விதழுக் காய் பரிமாறி கொள்கிறேன்.

என் தந்தையை பற்றி பேசும் முன்னர் எங்கள் குடும்பத்தைப் பற்றிப் பேச வேண்டிய தேவை உள்ளது. இந்தியாவில் இருந்து வந்த எங்கள் குடும்பத்தின் ஆணி

தலவாக்கலை, பெரியமல்லிகைப்பூ தோட்டத்தில் சின்னையா கதிராய் தம்பதிக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். ஆரம்ப காலம் முதலே இவரைச் சார்ந்தவர்கள் அதாவது எங்கள் குடும்பத்தின் முன்னோடிகள் வாசிப்பு துறையிலும் கலைத் துறையிலும்; ஈடுபட்டதனால் இவர் இயல்பாகவே அத்துறைச் சார்ந்து ஈர்க்கப்பட்டார். குறிப்பாக அப்பாவின் மாமன்மார்கள் உள்ளிட்டோர் நாடகங்கள் போடுவதோடு மட்டும் அல்லாது கல்கி, ஆனந்த விகடன் போன்ற சஞ்சிகைகளையும் மற்றும் அக்காலத்தில் இந்தியாவிலிருந்து ஏனைய இதழ்களை யும இத் தோட்டத்தில் அறிமுகம் செய்தனர். சிவியின் வழிகாட்டலில் இதனை அவர்கள் செய்ததாக அப்பாவே சிவியின் நூற்றாண்டு விழா நூலில் குறிப்பிட்டிருப்பார். இதுவே இவருக்கு வாசிப்பின் மீது தீரா தாகத்தை உருவாக்க காரணமாய் அமைந்தது.

அப்பா தனது பாடசாலை கல்வியினை தலவாக்கலை சுமன மகா வித்தியாலயத்தில் பயின்றார். அக்காலத்தில் அப்பாடசாலையில் வெளிவந்த "தமிழோசை" என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையில் தனது ஆக்கங்களை முதன்முதலாக வெளியிட்டிருக்கிறார். இவரின் ஓவியம், கவிதைகள், கதைகள் என்பன தமிழோசை சஞ்சிகையை அக் காலத்தில் அலங்கரித்ததாம்.

பாடசாலை நாட்களில் தமிழ், வரைதல், வரலாறு போன்ற பாடங்களில் அதிகமான நாட்டத்தினை கொண்டிருந்திருக்கிறார். இவரது வரைதல் பாட ஆசிரியர் இவருக்கு அதிகளவான ஊக்கத்தை வழங்கியதாக அடிக்கடி கூறுவார். இவருடைய ஓவியங்களை மேல் வகுப்பு மாணவர்களிடம் காட்சிப்படுத்தும் பண்பும் அந்நாட்களில் இருந்திருக்கிறது. பாடசாலை நாட்களில் ஆசிரியர்களுக்கு மிகவும் விருப்பமான மாணவனாக இவர் இருந்துள்ளார். ஆனாலும் அன்றைய குடும்ப சூழ்நிலை காரணமாக எஸ்.எஸ்.சி எனும் சாதாரண வகுப்போடு பாடசாலைக் கல்வியை நிறுத்திக்கொண்டார். ஆயினும் அவருக்குக் கிடைக்காத கல்வியை எனக்கும் என் சகோதரிக்கும் வழங்கி எங்களை பல்கலைக்கழகம் அனுப்பி பட்டப்படிப்பு வரை படிக்க வைத்து அழகு பார்த்தார்.

பாடசாலைக் கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் ஒரு கட்டத்தில், தான் அணிந்திருந்த ஆடையுடன் ஒரு பேனை மற்றும் ஒரு டவல் என்பனவற்றை எடுத்துக் கொண்டு கண்டிக்கு வேலை தேடிச் சென்றுள்ளார், ஊர் பேர் தெரியாத, அறிமுகம் இல்லாத ஊரில் சென்றிறங்கிய என் தந்தையை வழியில் கண்ட ஒருவர் இவரை ஏமாற்றும் நோக்கில்.. வேலை வாங்கித் தருவதாகக் கூறி இவர் வைத்திருந்த சிறுதொகைப் பணத்தை அபகரித்துக் கொண்டு, இவரை முகவரி தெரியாத இடத்தில் விட்டு விட்டுத் தலைமறைவாகியுள்ளார். கையில் காசும்... இல்லாமல் தெரிந்த முகங்களின் அடையாளமும் இல்லாத இவரை ஒரு நபர் "இங்கே இருக்க வேணாம். ஒழுங்கா வீட்டுக்கு போனு" தன் வசம் இருந்த சில்லரைக் காசுகளைக் கொடுத்து மீண்டும் தலவாக்கலைக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இதனை பல தடவை அப்பா நகைச்சுவையாகச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

பாடசாலையை விட்டு விலகிய பின் அப்பா எழுதிய முதலாவது சிறுகதை "மது வேட்டையாகும்" இதுவே இவரது முதல் சிறுகதையாகும். அதாவது பாடசாலையை விட்டு விலகிய மாணவன் ஒருவன் எவ்வாறு மதுவினால் திசைதிருப்பப்படுகிறான் என்ற கருப்பொருளில் அந்த சிறுகதையை எழுதியுள்ளார். அதன் பின் 1963 இல் "பூரணி" என்ற சிறுகதை வீரகேசரி நாளிதழில் பிரசுரிக்கப்பட்டது. அதற்கான ஓவியத்தினையும் அப்பாவே வரைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறு வயதில் கல்கி மற்றும் ஏனைய இந்திய சஞ்சிகைகளில் ஓவியம் வரையும் "சந்திரா" மற்றும் "மணியம்" போன்ற ஓவியர்கள் மூலம் ஈர்க்கப்பட்டுத் தானும் ஓவியம் வரைந்ததாக அப்பா கூறுவார், அத்தோடு அக்காலத்தில் இந்தியாவில் இருந்த "வர்ணம்" என்ற ஓவிய ஆசிரியரிடம் தபால் மூலமாக ஓவியம் தொடர்பான நுணுக்கங்களையும் இவர் பயின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் ஊக்கமே பின்நாளில் ஜெர்மனிய நாட்டின் ஓவிய கண்காட்சியிலும் இவரது படைப்பு வெளிவர காரணமாய் அமைந்தது எனலாம்.

இன்று போல் அன்று இலத்திரனியல் உபகரணங்களின் பாவனைகள் இருக்கவில்லை. எனவே அன்றைய நாட்களில் தோட்டப்புறங்களில் இடம்பெறும் திருமண வைபவங்கள், பிறந்தநாட்கள், மரணச்சடங்குகள், அரசியல் கூட்டங்கள், அறிவிப்பு பலகைகள் மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகள் என்பனவற்றுக்கு அப்பாவிடம் வந்துதான் ஓவியங்களையும் அதற்கான கவிதைகளையும், வாழ்த்து மடல்களையும் பெற்றுச் சென்றுள்ளனர். குறிப்பாக தன்தோட்டத்தினைச் சார்ந்தவர்கள் மாத்திரமின்றி பக்கத்துத் தோட்டத்தினரும் இவரிடம் ஓவியம் மற்றும் பதாகைகள் வரைவதற்காக வருகைத் தந்துள்ளனர்.

அன்றைய நாட்களில் அப்பாவின் அண்ணா இராசுவினால் ஆரம்பிக்கப்பட்ட "தமிழ் இலக்கிய மன்றத்தின்" துணைகொண்டு இவர் பல்வேறு வகையான செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இரவு நேர வகுப்புகள், மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் என்பனவற்றுடன் 1970-1975 காலப்பகுதியில் "மல்லிகை" என்ற எழுத்துப் பிரதியை தோட்ட இளைஞர்களுடன் இணைந்து மாதத்திற்கு ஒரு இதழ் என வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு 80 பக்க அப்பியாச கொப்பியில் இந்த மல்லிகை இதழ் வெளிவருமாம். உள்ளே சிறுகதை, கவிதைகள், துணுக்குகள், சித்திரங்கள் என்று ஏராளம்... மாதத்திற்கு ஒரே இதழ். அதைதான் அனைவரும் மாறி மாறி படிப்பார்களாம்.

சிறுவயது முதலே வாசிப்பில் அதிகம் நாட்டம் கொண்ட இவர் கல்கி, கல்கண்டு, ஆனந்தவிகடன், கொந்தளிப்பு, ஈழநாதம், சிந்தாமணி, ஈழகேசரி, மல்லிகை, மலைமுரசு, மழைச்சாரல், குன்றின்குரல், லண்டன்முரசு, தாயகம், தமிழர் தாயகம், நான், தீ, மகுடம், கொந்தளிப்பு, செங்கதிர், மல்லிகை போன்றவற்றைத் தொடர்ந்து வாசிப்பதில் அதிக நாட்டம் கொண்டிருந்தார்... இன்றும் கூட எங்கள் வீட்டில் அன்று பத்திரி;கையில் வெளிவந்த 'பொன்னியின் செல்வன்' போன்ற தொடர் கதைகளை வெட்டி அதனை ஒட்டிப் பாதுகாத்து வந்த பதிவுகள் உள்ளன. மேலும் அன்று வெளிவந்த பல பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், இதழ்கள் என்பனவற்றையும் அப்பா பொக்கிஷமாக பாதுகாத்து வைத்துள்ளார்.

வீட்டின் வறுமை நிலை காரணமாக அப்பா தனது பருவ வயதில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்ய தொடங்கினார். சுமார் இரண்டு வருடங்கள் அவர் தேயிலைத் தொழிலாளியாக இருந்துள்ளார். அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் பட்ட துன்பங்கள், அவர்கள் வாழ்வியல் போராட்டம், அடிமை முறை, ஆதிக்க வர்க்கத்தின் அடக்குமுறை, தொழிலாளர்களின வறுமை, சந்தோசம், இன்பம், கொண்டாட்டம் இவை எல்லாவற்றையும் களத்தில் இருந்து கொண்டே அனுபவித்தார். அங்கிருந்து தான் தனது கதைக்கான கருவையும், பாத்திரங்களையும் இவர் பெற்றுக்கொண்டார். இவரது கதைகள் அனைத்துமே தோட்டத் தொழிலாளர்களின் துயர வாழ்வினை உலகிற்கு வெளிக்கொணர்வதற்கு காரணமாய் இருந்தது. இக்காலப் பகுதியில் இவர் பெற்றுக்கொண்ட அனுபவங்களே ஆகும்.

ஒருமுறை அப்பா வேலை முடித்து விறகுக் கட்டு (மிளாரு) கட்டிக் கொண்டு வரும் போது அன்றைய தோட்ட கண்டெக்டர் முத்துசாமி "டேய்! நீ எப்படி எனக்கு கூறாமல் விறகு பொறுக்கி வருகிறாய்... நீ எங்கேயோ யாருக்கும் தெரியாமல் தான் விறகு வெட்டிக் கொண்டு வருகிறாய்" என அவருக்கு உரிய வசை மொழியில் இவரை வாழ்த்தியுள்ளாராம். இது அப்பாவின் மனதில் ஆதிக்க வர்க்கத்திற்கு மக்கள் எவ்வாறு அடிமைப்படுத்தப்படுகின்றனர் என கேள்வி எழுப்ப இதனை வெளி உலகிற்கு சொல்ல வேண்டும் என எத்தனித்தார். உடனே... "ஒரு கட்டு விறகு" என்ற தலைப்பில் முத்துசாமி கண்டெக்டரை "சாமி முத்து" என மாற்றி அன்றைய நேரத்தில் தோட்டப் பகுதியில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த சிந்தாமணி இதழுக்கு ஒரு சிறுகதையை அனுப்பியுள்ளார். ஓரிரு நாட்களில் "ஒரு கட்டு விறகும்" வெளிவர, முத்துசாமி கண்டெக்டர் முகத்தில் எள்ளும் கொள்ளுமாக வெடித்து சிதறியதாம். மறுபுறம் தோட்டத்தில் இருந்த சக தொழிலாளிகளுக்கு இது உற்சாக பானமாக மாறிப்போனது. கங்காணி முதல் தோட்ட துரை வரை அப்பாவை கண்டித்து மூன்று நாட்கள் வேலையிலிருந்து நிறுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தனராம்.

இவ்வாறு அவர் சிறு பிராயத்திலேயே அடக்கு முறைக்கு எதிராக தனது குரலை எழுப்பியுள்ளார். சிந்தாமணி இதழில் அப்பாவின் பன்னிரெண்டு கதைகள் வெளி வந்ததாகவும் பின் காலப்போக்கில் அதன் வெளியீடு நிறுத்தப்பட்டதாகவும் கூறுவார். இவ்வாறு அப்பா தன் வாழ்வில் அனுபவித்ததும் சக தொழிலாளிகள் அனுபவித்ததுமான துயரங்கள், சோகங்கள் மற்றும் வெற்றிகள் என்பனவே இவர் தனது கதைக்கான கருப்பொருளாக கொண்டுள்ளார். பின்னர் இவர் முகங் கொடுத்த தொடர் நெருக்கடி காரணமாக தேயிலைத் தொழிலை விட்டுவிட்டு அரசாங்க மிருக வைத்திய சாலையில் பணிபுரியச் சென்றுள்ளார்.

தலவாக்கலை மிருக வைத்திய சாலையில் பணிபுரியும் காலப்பகுதியில் இவரின் முதலாவது கவிதைத் தொகுப்பான "மாடும் வீடும்" வெளிவந்தது. இருப்பினும் இவர் முதலாவதாக ஒரு சிறுகதைத் தொகுப்பினை வெளியிடவே உத்தேசித்திருந்தார். எனினும், அப்பாவின் சிறுகதைகளை வெளியீடு செய்வதாகக் கூறி கதைகளை வாங்கிச் சென்றவர்களிடமிருந்து இவருக்கு எந்தப் பதிலும் வராமல் போகவே ஆங்காங்கே பத்திரிக்கை களிலும் ஏனைய சஞ்சிகைகளிலும் வெளிவந்த கவிதை களை ஒருங்கிணைத்து 'மாடும் வீடும்' என்ற தொகுப்பினை 1995 ஆம் ஆண்டில் "கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம்" உதவியின் ஊடாக வெளியிட்டார்.

மாடு... வீடு.... சாதாரணமாக தேயிலை தோட்ட மக்களின் வாழ்வியலோடு இணைந்த இரண்டு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள். இந்த தலைப்பினையே சற்று ஆழமாக அவதானித்தால் அது அன்றைய நாட்களில் ஆட்சியில் இருந்த மலையக மந்திரிகளை சூட்சுமமாக சுட்டிக்காட்டும் குறியீட்டு சொல்லாக பயன்படுத்தியிருப்பார். இக்கவிதைகளில் பல அரசியல் விவாதங்களை அங்கதச் சுவையுடன் வெளிகொணர் வதாகவும் சில தீர்க்கதரிசன கனவுகளை நம்மிடம் விட்டுச் செலவதாகவும் அமைந்திருக்கும். "மாடும் வீடும்" நூலுக்கு கவிப்பேரரசு தான் அணிந்துரை எழுதி யிருக்கின்றார். அப்போது இந்த நூலுக்கு அணிந்துரை எழுத வைரமுத்து யார்? விழா மேடைகளிலேயே பலர் விமர்சனம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் தொகுப்பு வெளிவந்து "மாடும் வீடும்" என்ற தலைப்பில் ஈர்க்கப்பட்ட அரசியல்வாதிகள் உடனடி சன்மானமாக அப்பாவை தலவாக்கலையில் இருந்து நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்ததுடன், அன்றைய வருட சாகித்திய விருது விழாவிலிருந்தும் இவரின் பெயரையும் நீக்கிவிட்டனர். ஆனால் ஒரு கலைஞனாக அதனை இன்முகத்துடன் இவர் ஏற்றுக்கொண்டார். ஒரு சிறிய கவிதைத் தொகுப்பு இன்றளவும் எம் சமூகத்தில் தாக்கத்தை செலுத்தி வருகின்றது என்று எனக்கு இன்றும் ஆச்சரியமாக இருக்கிறது.


மேலும் மலையக மக்களின் வாழ்வியலை அரசிய லிலிருந்து பிரிக்க முடியாது. தொழிலாளர்கள் அனுப விக்கும் ஒவ்வொரு துன்பத்திலும் அரசியல்வாதிகளின் முகங்களே பிரதிபலிக்கும். எனவே மக்கள் என்று "அரசியல்வாதியின் தலையீடின்றி ஜனநாயக ரீதியான சுதந்திரக்காற்றை அனுபவிக்கிறார்களோ அன்றுதான் அரசியல்வாதிகளை அதிலிருந்து பிரிக்க முடியும்" எனவே என்னுடைய அனைத்து கதைகளிலும் அரசியல் வாதிகளின் பாத்திரம் இருக்கும். அதனை பிரித்துப் பார்க்க முடியாது என்று அப்பா அடிக்கடி கூறுவார்.

மேலும் தனது இளம் பராயத்தில் தோட்ட பொது இடங்கள், மைதானம் மற்றும் மக்கள் கூடும் இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தோழர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உதவியுடன் பல நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார். இதிகாச கதைகள், புராணங்கள், சுதந்திர வேட்கை, மாக்ஸிய சிந்தனைகள் போன்ற கதை அம்சங்களை கொண்ட பல நாடகங்களை இவர் மேடை யேற்றி உள்ளார். போராளிகள், ஏது நிம்மதி போன்ற நாடங்கள் குறிப்பிடத் தக்கவை.



மேலும் அன்றைய நாட்களிலேயே இலங்கை வானொலி சேவையில் ஒலி பரப்பாகும் "குன்றின் குரல்" நிகழ்ச்சிக்கு நாடகங்களையும் தயாரித்து வழங்கியுள்ளார். தனது தோட்டத்தில் இருக்கும் சக தோழர்களையும் இவர் தனது நாடக கதா பாத்திரங்களில் இணைத்துக் கொள்வதில் ஆர்வமாக இருந்துள்ளார். குறிப்பாக தனது வருங்கால மனைவி சரோஜாவுக்கும் இவர் தனது நாடகங்களில் வாய்ப்பு வழங்கியமையை வீட்டில் கிண்டலாக அவ்வப்போது அம்மாவும் அப்பாவும் கதைத்துக் கொள்வார்கள்

அக்காலத்தில் வானொலி நாடகங்களுக்கு இசையமைப்பு என்பது கடினமான ஒன்றாகும். அவ்வாறு இருக்க ஒரு காட்சியில் "இடிமுழக்க" சத்தத்தினை ஏற்படுத்த வேண்டுமாம். எவ்வாறு இசை செய்வது என்று யோசித்தபோது தொலைவில் ஒரு சத்தம்... பார்த்தால் சிலர் தோட்டத்து லொறியிலிருந்து தகரங்களை வேகமாக கீழே போட்டுக் கொண்டிருந்தார்களாம். அது இடிக்கு ஒப்பான சத்தமாகவே இருக்க உடனடியாக தகரங்களின் துணைக் கொண்டு தனது கதையில் இடி முழக்கத்தினை தத்ரூபமாக வெளிப்படுத்தினாராம்.

ஒருமுறை அப்பாவின் அண்ணன் இராசு "சோக்ரடீஸ்" என்ற கதையை நாடகமாக இயற்ற சோக்ரடீஸ் பாத்திரத்திற்கு யாரை நடிக்க வைப்பது என்ற குழப்பத்தில் இருந்த போது அங்கே வந்த அப்பாவை "நீ சோக்ரடீஸ் ஆக நடி" என கூறவும் சிறிதும் யோசிக்காமல் அப்பாவும் அக் கதாபாத்திரத்தை ஏற்று சிறந்த முறையில நடித்து பாராட்டும் பெற்றுள்ளார். நாடக ஆசிரியராக மட்டுமல்ல நடிகனாக, ஒப்பனைக் கலைஞராக, மேடை வடிவமைப்பாளராக, பின்னணி குரல், இசை, ஓவியம் என பல்துறை அம்சங்களை நாடகத் துறை சார்ந்து அப்பா செய்துள்ளார்.

ஒரு கலைஞனுடைய நூல் வெளியீடு என்பது "பெண்ணின் பிரசவ வலிக்கு ஒப்பானதாகும்". பிரசவம் கூட பத்து மாதத்தில் வெளிவந்துவிடும். ஆனால் ஒரு வறுமைப்பட்ட கலைஞனின் வெளியீடு பிரசவ நிகழ்வினும் கொடுமையானது. பல தடைகளை கடந்து தான் அதற்கான விடை தெரியும். எழுத்தாளர்களின் ஆக்கங்களில் சில பிரசவமாகும், சில குறைப் பிரசவமாகும், சில கருவிலே கலைந்து போகும், இன்னும் சில மாற்றான் வீட்டு தத்துப் பிள்ளையாகும். அப்பாவின் கருவுக்கும் இவையாவும் பொருந்தும்.

அதிகமான தொகுப்புகளைக் கைவசம் வைத்திருந்த போதும் பொருளாதார சிக்கல் அத்துடன் ஏமாற்று வாதிகளின் கைவரிசை போன்றவையால் இவரது நூற்றுக் கணக்கான கருக்கள் பிரசவம் ஆகாமலே கலைந்து போயிருக்கின்றன. மீண்டும் அதனைத் தன் வசப்படுத்த முடியாமல்... மாற்றான் வீட்டில் தத்துப் பிள்ளையாக இருக்கும் தன் பிள்ளையை தூரத்திலிருந்து ரசித்துக் கொண்டிருந்திருக்கிறார் இந்த மனிதன்! எனினும் பெயர் சொல்ல முடியாத அந்த நபர்கள் தந்தையின் கண் முன்னேயே இவருக்குரிய மரியாதையையும் கௌரவத்தையும் பெற்றுக்கொண்டது எங்களுக்கு என்னவோ மன வேதனையே...

பல்வேறு வகையான விருதுகளை இவர் பெற்றுள்ள போதும் முதல் முதலாவதாக இவர் பெற்ற விருதினை எங்களுக்கு கூறியிருக்கிறார். 'மாடும் வீடும்' கவிதைத் தொகுப்பு வெளிவந்த சமயத்தில் ஒரு மேடையில் இவருக்கு முதல் முதலாய் ஒரு பொன்னாடை அணிவிக்கப்பட்டதாம், அப்போது அங்கிருந்த அரசியல் தலைவர்களில் ஒருவர் "அட பாருடா மாற்றான் தோட்டத்தின் மல்லிகை இங்கு வந்து மணந்துக் கிட்டு இருக்குன்னு" சொன்னாராம். இருப்பினும் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகத்துடன் அந்த பொன்னாடையினை வாங்கி வந்துள்ளார். பின்பு இவர் இலங்கையின் இலக்கியத் துறைக்கு வழங்கப்படும் அதிமுக்கிய விருதுகள் அனைத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் ஒரு கவிஞருக்குரிய தோரணையில் எந் நிகழ்வுக்கும் சென்று நாங்கள் கண்டதில்லை. வீட்டில் அம்மா மற்றும் நாங்கள் கட்டாயப்படுத்தினால் மாத்திரமே சற்று உடை அலங்காரத்தை மாற்றிச் செல்வார். எப் போதும் எளிமையாகவே தன்னை உலகிற்கு அடை யாளப்படுத்திக் கொள்வார். ஒரு சில வேளைகளில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட இவரை அங்குள்ள கூட்டத்தினரே அடையாளப்படுத்திக் கொள் ளவதில் தடுமாறிய சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. அத்தகைய சம்பவங்களை அப்பா மகிழ்ச்சியுடன் கூறு வார். இவரது எளிமைக்கு காரணம் மக்களோடு மக்களாக சாதாரணமாக வாழ வேண்டும் என்ற மன நிலையே எனலாம்.

வீட்டில் தனியறை, தனி மேசை, கதிரை என எதனையும் உரிமையாகக் கொண்டு அதிலிருந்து கதை படைப்பதில்லை... பெரும்பாலான படைப்புகளை படுக் கையிலும் எங்கள் வீட்டுச் சமையல் அறையிலும் இருந்துக்கொண்டே எழுதி முடிப்பார். தனது கதைக்கான கருவினை எப்போதுமே தன்னுடனேயே வைத்துக் கொண்டிருப்பவர். தான் கண்ட காட்சி, அனுபவம், தன்னுடன் பேசுபவர் கூறும் கதைகள் என்பனவற்றினை தனது கதைக்கான கருவாக எடுத்து அதனை தனக்கான பாணியில், மொழிநடையில், சுவையுடன் வெளிக் கொணர்வார்.

அப்பாவின் எழுத்துத் துறைக்கு அம்மாவின் பங்கு அளப்பரியதாக இருந்தது. சொந்த தாய்மாமன் மகளை மணம் முடித்தவராக இருப்பினும் எல்லா குடும்பத்திலும் இருக்கும்; அனைத்து சம்பாஷணைகளும் இங்கும் சகஜமாக இடம்பெறும். நாங்கள் பெரியவர்களான பின்பும் அவர்களின் காதலும், நேசமும் மற்றும் ஊடல்களும் தொடர்ந்து கொண்டே தான் இருந்தன.

அப்பாவின் கதைகளில் எழுத்துப்பிழை பார்ப்பது, தேயிலைத் தோட்ட வழக்கு மொழிகளை கூறுவது, கதைகளுக்கு பொருத்தமான தலைப்பு வைப்பது மற்றும் அப்பாவின் கதைக்கான முதல் விமர்சனம் என்பன எல்லாமே அம்மாவின் வசமே. அப்பா எழுதி பத்திரி கையில் வெளிவந்த கவிதை மற்றும் சிறுகதைகளைச் சேகரித்து மற்றவர்களுக்கு காட்டுவதில் அம்மாவுக்கு அளவில்லா சந்தோசம். அம்மாவின் இறப்புக்குப் பின்னர் அப்பா மட்டுமன்றி அவரது படைப்புகளும் தாயில்லா பிள்ளையாகவே வெளிவந்தன. எனது அப்பாவின் ஒவ்வொரு படைப்பிலும் எனது அம்மாவின் வாசம் நிச்சயம் இருக்கும். "இந்த மல்லிகை மணப்பதே ரோஜாவால்தான்" என்று இருவரும் மாறி மாறிச் சொல்லி வீட்டில் ரசித்து மகிழ்வர்.

அப்பா தன்னை நாடி வரும் அனைவருக்கும் இல்லை என்று சொல்லாமல் புத்தகங்களை இரவல் கொடுக்க கூடியவர். எத்தனைமுறை ஏமாற்றப்பட்டாலும்; தன்னை நாடி வருவோர்க்கு வஞ்சகம் பார்க்காமல் தன் வசம் உள்ள புத்தகங்களை உடனே எடுத்துக் கொடுத்து விடுவார். அதில் என்ன அவ்வளவு பெரிய ஆனந்தம் அப்பாவுக்கு என்று தெரியவில்லை. எத்தனை முறை நாங்கள் கூறினாலும் புத்தகம் கேட்பவருக்கு இல்லை என்று கூறாமல் அள்ளிக் கொடுப்பவர்.

அப்பாவின் சொந்தப் படைப்புகளான 'மாடும் வீடும்' (1995) மற்றும் 'மனுஸியம்' (2001) என்பனவற்றின் பிரதிகள் கூட எங்களுடைய வீட்டில் இல்லை. நாளை கொண்டு வந்து தருகிறேன் என்று சொன்னவர்கள் எல்லாம் வாக் குத் தவறி விட்டார்கள். எங்கள் ஞாபகத்துக்கு கூட அப்புத்தகங்களின் பிரதி எங்களிடம் இல்லை. அப்பா வின் தேவைக்குக் கூட இன்னொருவரிடம் தனது சொந்த படைப்புகளை இரவல் வாங்கிய சந்தர்ப்பங்களுமுண்டு.

"கொடுங்கள் தந்து விடுகிறோம்" அல்லது "புத்தகமாக போட்டுவிடலாம்" என்று கூறிய வாக்கின் காரண மாகத்தான் இரண்டு தொகுப்புகளுக்கு பின்னர் எதையும் வெளியிட முடியாமல் போய்விட்டது. தொகுப்புக்கு வரும் முன்னரே கையெழுத்துப் பிரதி கதைகள் நூற்றுக்கணக்கானவற்றை பிறருக்கு கொடுத்து ஏமாந்தார், இதனை புரிந்து கொண்ட சமயத்தில்தான் தொகுப்புக்கு முயற்சிக்காமல் தொடர்ந்து வீரகேசரி, தினகரன், சூரியகாந்தி, வானவில் போன்ற பத்திரிக்கைகளுக்கும் ஜீவநதி, மல்லிகை போன்ற சஞ்சிகைகளுக்கும் தொடர்ந்து எழுதினார். 20 தொகுப்புக்கள் வெளியிடக் கூடிய ஆக்கங்கள் வெளியில் முகவரி தெரியாதவர் களிடம் இன்றும் கைவசம் உள்ளன... என்பது மன வருத்தத்தை தருகிறது, அப்பா எவ்வளவோ முயன்றும் அது அவரது கரம் சேரவில்லை...

அப்பா இறுதி காலத்தில் 'வேடத்தனம்' (2019) என்ற நூலினை வெளியிட முயற்சித்துக் கொண்டிருந்தார். அப்போது அதிகமான பொழுதுகள் வைத்தியசாலைகளில் இருந்து தொலைபேசியின் மூலமாகவே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். "தான் எவ்வாறு முகமூடி அணிந்த மனிதர்களினால் ஏமாற்றப்பட்டேன் எனது படைப்புகள் எவ்வாறு பிறர் வசமானது" என்பதனை குறியிட்டு காட்டவே 'வேடத்தனம்' என்ற தலைப்பினைத் தெரிவு செய்தார். இந்நூலினை அவர் தன் மனைவிக்குச் சமர்ப்பணம் செய்தார். இருந்தும் என்ன செய்ய குழந்தை பிரசவிக்கும் போது அது தகப்பனும் தாயும் இல்லா அனாதைக் குழந்தையாகவே இந்த பூமியில் கால் பதித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலைத் தோட்டத்து லயத்தில் பிறந்த இவர் இறுதிவரை அந்த லயதிலேயே குடிகொண்டிருந்தார். ஆரம்பத்தில் "மலைப்பொன்னி" என்ற புனைப்பெயரை கொண்டிருந்தபோதும் பிறகு தான் பிறந்து வளர்ந்த தோட்டமான பெரிய மல்லிகைப்பூவின் "மல்லிகை"யை அடைமொழியாக கொண்டு தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார். எழுத்தின் மூலம் புகழ் அடைந்த இவருக்கு பொருளாதாரம் கைகொடுக்கவில்லை. இறுதி வரை இவரது பல கனவுகள் நிறைவேறாது அவருடன் ஆழப்புதைந்து போயின. தந்தை எழுதியவற்றில் தலைப் பிடப்பட்ட 'மண்ணை விட்டுப் போகாதே', 'தங்க பொத் தான்' போன்ற நாவல்களும் மற்றும் சில சிறுகதைத் தொகுப்புகளும் எதிர்காலத்தில் உங்கள் வசம் வந் தடையும். அது எங்கள் தந்தைக்கு ஆத்ம திருப்தியும் வழங்கும் என நம்புகிறோம்.

இவர் ஒரு குடும்பம் சார்ந்து வாழாது ஒரு சமூகத்தின் இருப்பிற்கும் அதன் விடிவிற்கும் முன்னோடியாக இருந்துள்ளார். 'தொடர்ந்து எழுதவேண்டும்... மலையக சமூகத்திற்காக தொழிலாளர் வர்க்கத்திற்காக... என் எழுத்து பயனுறவேண்டும். எதையும் எழுத வேண்டும் என்பதைவிட இதைதான் எழுத வேண்டும் என்பதற்காக எழுதிக்கொண்டிருக்கிறேன்" என்பார்.


எனது தாயாரின் எதிர்பாராத பிரிவு தந்தையை அதிகம் பாதித்தமையால் அவர் "ரோஜா உதிர்ந்தமையால் மல்லிகை வாடுகிறது" என்று இறுதியாக எழுதினார்.. அம்மா மண்ணை விட்டுச் சென்று ஆண்டுகள் ஒன்று மறைந்த போதே அவரது புகழ் உடலும் பூமிக்குள் மறைந்துவிட்டது. ஆயினும் அவர்களின் ஜீவன் எங்க ளோடுதான் உள்ளது. ரோஜா மல்லிகையின் வாசனை இன்னும் எங்கள் விட்டின் ஒவ்வொரு அணுவிலும் மணம் பரப்பிக்கொண்டுத்தான் இருக்கின்றது.

எங்கள் வீட்டில் மட்டும் அல்ல. இந்த மண்ணிலும் பச்சை படர்ந்த தேயிலைக் காடுகளிலும்... அவரது படைப்புகளுக்குப் பாத்திரங்களாக அமைந்த மக்களின் மூச்சுக்காற்று இந்த மண்ணில் உள்ளவரையும் எங்கள் தந்தையின் படைப்புகள் வாழும்... மல்லிகை வாடினாலும் மணம் என்றுமே வீசிக்கொண்டேதானிருக்கும்... அவ ரின் எழுத்துக்கள் என்றும் நிரந்தரமாய் உயிர் பெற்று வாழும்....

**பட்டை மரமாய் கறுத்து**
**நின்றாலும் வேரின் ஈரத்தாலாட்டில்**
**நாளை அவை தளிர் விடும்**
**மீண்டும் தளிர்க்கும்**
**நம்பிக்கையுண்டு.**

நன்றி

மாறா நினைவுகளுடன்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டப்புறங்களில் நாடகங்கள்

மல்லிகை சி. குமார்




மலையகத் தோட்டங்களில் காமன்கூத்து, அர்ச்சுனன் தவசு, பொன்னர்சங்கர் போன்று கூத்துக்கள் பல இடங்களில் நடந்தாலும் 1945, 1946 காலகட்டத்திற்கு முன்பே தலவாக்கலை பகுதியில் மேடை நாடகங்கள் போடும் பழக்கம் சிறிது சிறிதாக மேலோங்கத் தொடங்கிவிட்டது. இந்த ஆர்வத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து இங்கே வருகை தந்து தங்கள் நாடகங்களை நடத்திய சில நாடக சபாக்களே காரணம். அதிலும் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளின் நாடக சபா இங்கு நடத்திய நாடகங்களும் இந்த முயற்சிக்குக் காரணமாகும்.

தலவாக்கலை நகரை அடுத்துள்ள லிந்துல சிறு நகரில் தலவாக்கலை நகரிலிருந்து கிழக்குத் திசையாக ஒரு மூன்று மைல் தொலைவில் உள்ள நகர், அங்கு "லோடன் சாப்பு" என்ற தகர கொட்டகையில் தான் இந்திய நாடகக் குழுவினரின் நாடகம் நடக்கும்.

தேயிலைத் தோட்டத்து பெரிய கங்காணிமார், நகர்ப்புற வர்த்தகர்கள், உத்தியோகத்தர், தொழிலாளர்கள் என்று பலரிடமிருந்தும் ஆதரவுகள் குவிந்தன. தோட்டங்களில் விடிய விடிய கூத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தமிழ்நாட்டு நாடக சபாக்கள் போடும் மேடை நாடகங்கள் ஒரு புது அனுபவமாக இருந்தன.

சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், அரிச்சந்திர புராணம், கண்ணகி கோவலன், லவன் குசன், நல்லதங்காள் போன்ற நாடகங்கள் அவர்களுக்கு பெரும் வியப்பையும் ஆச்சரியத்தையும் தந்தன. அதிலும் ஒவ்வொரு கட்டத்திற்கும் பின்னணியாக உள்ள காட்சியமைப்புகள் தத்ரூபமாகவும் இருந்தன. இதற்கு நாடக சபாவில் பணிபுரிந்த ஓவியர் கொண்டைய ராஜுவின் உழைப்பும் ஒரு காரணம், நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு அவரின் பின்னணி, திரைச் சீலை ஓவியங்கள் மிகவும் நேர்த்தியாக இருந்தன. "ராமபிரானும் லட்சுமணனும் சீதைபிராட்டியை தன் படகில் ஏற்றிக் கொண்டு குகன் படகோட்டி செல்லும்போது நீர் அலையும் அதன் பின்னணிக் காட்சியும் அவ்வளவு அற்புதமாக இருக்கும்" என்று என் மாமா பழனிவேல் இறுதிக்காலம் வரையும் சொல்லி வியந்து கொண்டிருந்தார். இந் நாடகங்கள் நடக்கும் காலத்தில் கொண்டைய ராஜு உடன் சிறிது காலம் நட்பாக இருந்தவர்தான் என் மாமா.

இக் காலத்தில் நாடக வாத்தியாராக இருந்த திரு குமாரசாமி என்ற உள்ளூர்வாசி தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்த நாடக சபா மீண்டும் தமிழ்நாடு சென்றபின் குமாரசாமி அவர்கள் இங்கு ஒரு நாடகக் குழுவை அமைத்து மேற்குறிப்பிட்ட நாடகங்களைத் தன் முயற்சியால் நடத்த தொடங்கினார். பல பகுதிகளிலும் அவரின் நாடகம் நடந்தது. அத்துடன் நாடகத்திற்கான சீன்களை வேறு இடத்தில் நாடகம் நடத்துபவர்கள் இவரைத் தேடி வந்து வாங்கிப் போவதை என் சிறு பராயத்தில் கண்டிருக்கிறேன்.

அவர் பெரிய மல்லிகைத் தோட்டத்தில் தான் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். அவர் மூலம் தொடர்ந்து புராண நாடகங்கள் நடந்து வந்த நேரத்தில் அதற்கு மாறாக 1947 காலப்பகுதியில் சமூக நாடகங்கள் மேடை ஏறின. மலையகத்தின் கவிஞரும் அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதியும் ஆகிய சி. வி வேலுப்பிள்ளை அவர்கள் தலவாக்கலை பகுதியில் இலங்கை இந்திய காங்கிரசின் அமைப்பாளராக இருந்ததோடு "நல உரிமை சங்கம்" என்ற நற்பணியை தொடங்கி சில சமூக சீர்திருத்தங் களையும் செய்துகொண்டிருந்தார். தமிழ்நாட்டிலிருந்து வந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள், கையேடுகள் போன்ற இதழ்களை தன் நல உரிமைச் சங்கத்தின் மூலம் இப்பகுதி இளைஞர்களுக்கு இலவசமாக கொடுத்து வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தினார். எனவே தலவாக் கலை நகருக்கு அருகாமையில் உள்ள தோட்ட இளைஞர்கள் இவரின் தூண்டுதலால் வாசிப்பு பழக்கத் தில் முன் நின்றனர். நாவல், சிறுகதைகள், சஞ்சிகைகள், தொடர் நவீனங்கள் போன்றன இவரின் மூலம் இளை ஞர்களுக்கு கிட்டின. எனவே நாவல்களை அடிப் படையாக வைத்து சமூக நாடகங்கள் இளைஞர் குழுக்களால் மேடை ஏறின.

பத்மாவதி சரித்திரம் இது "அதிஷ்ட லீலா" என்ற பெயரில் நாடகமாகியது. இதனை நாடகமாக்கியவர் திரு பாகவதர் கருப்பையா. அன்றைய காலத்தில் இப்பகுதியில் பல முறை மேடையேற்றப்பட்ட நாடகம் இதுவாகும். இதனைத் தொடர்ந்து ஜெயசிம்மன், ,பதிபக்தி போன்ற சமூக நாடகங்களும் மேடை ஏறின.

ராஜபார்ட் வேடம் கலைந்து நவீன ஆடை ஆபரணங்களான கோட், சூட், டை என புதிய வார்ப்பு நாடகங்களான... அதேநேரம்... சில சினிமா படக் கதைகளும் மேடை ஏறின. திரு கருப்பையா பாகவதருடன் இணைந்திருந்த பழனிவேல் அவர்கள் சகுந்தலா, அல்லி அர்ஜுனா மற்றும் நாட்டார் பாடல்கள் கொண்ட நிகழ்ச்சிகளையும் மேடையேற்றினார்.

அந்நேரம் பெரிய மல்லிகைப்பு தோட்டத்தை அடுத்துள்ள நானு ஓயா தோட்டத்தில் திரு சுப்பிரமணியம் என்ற செட்டிக் கருஞ்சிவலை திராவிட முன்னேற்ற கழக கருத்துக்களைக் கொண்ட நாடகங்களை அங்கு மேடையேற்றி ஒரு பரபரப்பை ஏற்படுத்தினார்.

தூக்கு மேடை, துளி விஷம், பாவாடை சாமியார் பெருமூச்சு, பரப்பிரமம் போன்றன மக்கள் மனதை கவர்ந்த நாடகங்களாகும். திரு செட்டி கருஞ்சிவலையான சுப்பிரமணியம் இப்பகுதி இளைஞர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் நூல்களை வழங்கி பகுத்தறிவு சிந்தனைகளையும் வளர்த்தார். இவருடன் தலவாக்கலை நல்ல தம்பியும் சேர்ந்து செயல்பட்டார்.

ஆரம்பத்தில் மலைநாட்டு எழுத்தாளர் சங்கத்திற்கு திரு செட்டி நிதி வழங்கியமையும் குறிப்பிட வேண்டும். பதுளையில் நடந்த முதலாவது ம.எ.ச கூட்டத்திற்கு என்னையையும் பதுளைக்கு அழைத்துப்போனவரும் இவரே, நல்ல இலக்கிய ஆர்வலர்.

பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தில் இக்காலகட்டத்தில் திரு. சி. இராசு என்பவர் தமிழ் இளைஞர் மன்றம் ஆரம்பித்து அதன் மூலம் சமூக சீர்திருத்த நாடகங்கள் போடப்பட்டன. "குடி கெடுக்கும் குடி" என்ற நாடகம் பலரின் பாராட்டையும் சில குடிகாரர்களால் எதிர்ப்பும் பெற்றுக்கொண்டது.

நாடகம் போடுவதோடு பெரியவர்களுக்கான விழாக் களும் எடுக்கப்பட்டன. விழாக்களில் கருத்துள்ள கதம்ப நிகழ்ச்சிகளும் நடந்தன... இளம் நடிகர்களும் உருவா கினர். தோட்டத்தில் உள்ள பழைய நாடக வாத்தியார் களும் இம்மன்றத்தில் கௌரவிக்கப்பட்டனர். வட்ட கொடை இளைஞர் மன்றம் சார்பாக வெளி வந்த "இளைஞன் குரல்" (1956) என்று சீர்திருத்த மாதாந்த ஏட்டில் இணை ஆசிரியர் குழுவில் திரு. இராசு பங்குபற்றி நல்ல கட்டுரைகள் தந்தார் என்பது குறிப்பிட வேண்டும்.

இதனைத் தொடர்ந்து வாழ்வியல் நாடகங்களோடு தோட்ட நிர்வாகம் செய்யும் கெடுபிடிகளை நகைச் சுவையோடும் சமூக அக்கறையோடும் வெளிப்படும் நாடகங்களை மு. சிவலிங்கம் யாத்து தந்தார். எனவே இவரின் நாடகம் என்றால் நிர்வாகத்திற்கு ஒரு பயம் இருந்தது உண்மையே... "ஆடிவரும் ஆட்டம்", "இறுதிப் பாதை" போன்ற நாடகங்கள் நிர்வாகத்திற்கு எதிராக அலைமோதி விட்டன எனலாம். இன்றும் அந்நாடகங் களுக்கு வரவேற்பு இருக்கிறது. ஆனால் அதில் பங்குபற்றிய முக்கிய நடிகர்கள் தற்போது இல்லை... சிலர் இறந்து விட்டார்கள்.... சிலர் இந்தியா போய் விட்டார்கள் .

அதன்பிறகு... தமிழ் இளைஞர் முன்னேற்ற மன்றம் தோன்றி சில சீர்திருத்தங்கள் செய்தது. தோட்டத்தில் வாசிப்பு, பேச்சு, நடிப்பு என விட்டுப்போனவற்றை மேல் எழுப்பியது. சமூக நாடகங்களோடு தொழிலாளர் வர்க்க சிந்தனையை இந்நாடகங்கள் வெளிப்படுத்தின. அதற் கான ஆக்க இயக்க வேலைகளை மல்லிகை சி. குமார் என்ற நான் முழு ஈடுபாட்டோடு வெளிப்படுத்தினேன். குறிப்பாக "போராளிகள்" நாடகம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. எனவே தலவாக்கலைப் பகுதி யில் நாடக வளர்ச்சி குன்றிப் போகவில்லை. ஆனால் தோட்டத்தில் நாடக ஆசிரியர்களாக இருந்து செயல் பட்டவர்கள் தோட்ட நிர்வாகத்தால் தலைமைகளினாலும் வஞ்சிக்கப்பட்டவர்கள். இதில் நாடக ஆசிரியரும் ஓவியரும் ஆகிய குமாரசாமி அவர்கள் தோட்ட நிர்வாகத்தால் போலீஸ் மூலம் தண்டிக்கப்பட்டார். கால ஓட்டத்தில் இந்த நாடகக் கலைஞர்கள் கரைந்து போனது போல அந்தப் படைப்புகளும் கரைந்து கொண்டுதான் இருந்தன... ஒரு காலத்தில் விறுவிறுப்பாக மேலோங்கி எழுந்த நாடகக் கலை.... தற்போது.... நினைக்கவே கண் கலங்குகிறது.... ❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை எழுத்தாளர் மல்லிகை சி. குமார்




முத்து முத்துவேல்

(இக்கட்டுரை மல்லிகை சி. குமார் அவர்களோடு ஓராண்டு காலம் பாடசாலையில் உடன் கற்ற மாணவனாகப் பழகியதன் காரணமாகப் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதுவே குமார் அவர்களைப் படைப்பிலக்கியத் துறைக்கு ஆற்றுப்படுத்தவதற்கான புறச்சூழல் ஆகும். இக்கட்டுரை அவரது ஆக்கங்கள் குறித்த ஒரு மதிப்பீடாக அமையாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்)

மல்லிகை சி.குமார் என்றதொரு பெயர் இலங்கையின் 'சிறுகதைப் படைப்பாளி' என வாசகர் பலராலும் அறியப் பட்ட பெயர் எனலாம். மலையகச் சிறுகதை உலகில், உழைக்கும் மக்களின் உணர்வுகளை அனுபவ ரீதியாகப் பதிவு செய்த ஒரு ஆற்றல்மிகு படைப்பாளி ஆவார்.

சிறுகதை எழுதுவதற்கான ஆர்வம் அவருள் விளைந்தது அவரது பாடசாலைக் காலத்திலேயே ஆகும். இவ்வார்வம் குமாருக்குள் விளைந்தமைக்கான காரணியாக அமைந்தது அவரது தொடர்ச்சியான சஞ் சிகை வாசிப்பே எனலாம். சஞ்சிகைகளில் வெளியாகும் ஆக்கங்களை மிகுந்த ஆர்வமுடன் வாசிப்பது மட்டு மின்றி அவை குறித்த கருத்துகளையும் எம்மோடு பகிர்ந்துக் கொள்வார்.

அவரது சிறுகதை படைக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தி யதில் பிறிதொரு காரணியும் உண்டு. நாங்கள் படித்த பாடசாலையில் வெளியான கையெழுத்து பிரதி அவரது ஆற்றலை வளர்த்தது. 'தமிழோசை' என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்த இதழில் சி. குமாரும் எழுதி யிருந்தார். அவரது எழுத்துலகப் பிரவேசத்துக்கு இது பெரிதும் துணையாக அமைந்தது. எவ்வாறாயினும் அது பற்றிய பதிவுகள், ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன.

குமாருடனான எனது பாடசாலை வாழ்க்கை ஓராண்டு காலம் மட்டுமேயாகும். 1959-ம் ஆண்டு நான் தலவாக்கொல்லை அரசினர் சிரேஸ்ட பாடசாலையில் எட்டாம் வகுப்பில் சேர்ந்து கற்கத் தொடங்கினேன். அந்த ஆண்டு அதே வகுப்பில் குமார் அவர்களும் என்னோடு கற்றார். 1959-ம் ஆண்டுக்கு முந்திய காலங்கள் குறித்து என்னால் கூற முடியவில்லை.

குமார் ஒரு தொழிலாளி வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். அவரது தந்தை திருவாளர் சின்னையா ஒரு காலத்தில் குமாரை தொழிலாளியாகப் பெயர் பதிந்து வேலைக்கு அனுப்பிவிட்டார். தொழிலாளர்களுடனான ஊடாட்டம் அவரிடம் விருத்தியடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. பெரிய மல்லியப்பு தோட் டத்தில் அவரது கால் படாத இடமே இல்லை எனலாம். தொழிலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை நேரடி யாகவே அனுபவித்தார். பிற்காலத்துப் படைப்புகளுக்கு இவ்வனுபவங்களே அடிப்படையானது.

எட்டாம் வகுப்பில் குமாரோடு கற்கையில் ஈடுபட்ட ஒரு வருட காலம், படைப்பிலக்கியம், ஓவியம் ஆகிய கலைகள் தொடர்பில் அவருடனான அனுபவங்கள் மிகச் சுவையானதாகவே இருந்தன. அவர் சராசரியான மாணவனாக இல்லாமல் தேடல் மற்றும் ஆக்கம் ஆகிய இரண்டு துறைகளிலும் தேர்ச்சியடைந்தார். எந்த ஒரு விடயத்தையும் நுணுக்கமாக அணுகும் திறமையும் அவரிடம் காணப்பட்டது.

அந்நாட்களில் எமக்கு அறிமுகமான இந்திய சஞ்சி கைகள் சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். கல்கி, ஆனந்த விகடன், கலைமகள், கல்கண்டு என்ப னவே அச்சஞ்சிகைகள் ஆகும். இவற்றுள் குமாரின் படைப்பிலக்கியம் ஓவியம் ஆகியவற்றினாலான ஆற் றலை வளர்ப்பதில் 'கல்கி'யே முழுமையாகத் துணை நின்றது என்று குறிப்பிடலாம். கல்கி ஒவ்வொரு வாரமும் சிறு கதைகளைப் பிரசுரிக்கும். அவற்றுக்கான அட்டை தேர்ந்த ஓவியர்களைக் கொண்டு மிகவும் சிறப்பான வகையில் தீட்டப்பட்டனவாகவிருக்கும். மேலும் ஒவ் வொரு ஆண்டும் 'தீபாவளி பண்டிகையை அடிப்படை யாகக் கொண்டு 'சிறப்பு மலர்' ஒன்றை வெளியிடுவதை வழமையாகக் கொண்டிருந்தது. இந்த மலர்களில் மணி யம், லதா, வினு போன்ற திறமையான ஓவியர்கள் தரம் மிக்க ஓவியங்களை வரைந்திருந்தனர்.

மேலும் கல்கி நாவல்களுக்குப் பேர் போன சஞ்சி கையாகவும் விளங்கியது. 'கல்கி' எனும் எழுத்தாளரே பொன்னியின் செல்வன் போன்ற நாவல்களை கல்கியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார். மணிவண்ணன் என்ற பெயரில் நா. பார்த்தசாரதி, ராஜேந்திரன் போன்றோரும் 'வாசகர்களைக் பிணிக்கும்' வகையில் மிகச் சிறந்த நாவல்களை எழுதி வந்தனர்.

இவ்வாறு கல்கியில் வெளியவந்த நாவல்கள் யாவற்றையும் ஒருங்கு சேர்த்து நூலாக கட்டிப் பேணுவதிலும், மேற்குறிப்பிட்ட சிறப்பு மலர்களில் வெளி வந்த ஓவியங்களைக் கோப்புகளில் சேகரித்துப் பேணுவதிலும் குமார் மிகவும் ஈடுபாடுகாட்டி வந்தார். அவரது படைப்பிலக்கியம் தொடர்பான பங்களிப்பு குறித்துப் பேசுவதற்கு முன்னால், அவரது ஓவியச் சேகரிப்பு அவருக்கு எவ்வாறு உதவியது என்பதைப் பார்க்க வேண்டும்.

பள்ளிக் கூடத்தில் நேரசூசிக்கேற்ப பாடங்கள் நடைபெறும் நேரங்களைத் தவிர மற்றைய நேரங்களிலெல்லாம் ஓவியம் தீட்டுவதே குமாருக்கு வேலையாக இருக்கும். இவ்வாறு ஓவியந் தீட்டுவதற்கு அவரது ஓவியச் சேகரிப்பு துணை நின்றது எனலாம். பிற்காலத்தில் அட்டன் தொழிலாளர் பொழில் நிறுவனத்தில் உழைக்கும் மக்களின் ஓவியங்கள் பலவற்றைக் காட்சிப்படுத்தி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து வந்த நாட்களில் குமாரின் மறைவுக்குச் சற்று முன்னதாக கூட பெயர் பலகை வரைவதை தொழிலாகக் கொண்டிருந்தார் என்பது நோக்கற்பாலது. தொழில் இல்லாத போது அவருக்கான பொருளை ஈட்டிக் கொள்வதற்கு பெயர் பலகை தீட்டுவது துணை நின்றது. இன்றும் கூட பல தோட்டங்களின் பெயர் பலகைகளில் அவரது ஆற்றல்களைக் காண முடியும். தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் அவரது ஓவியங்கள் இன்றும் அவரது திறமையைப் பறைசாற்றுகின்றன.

இனி குமாரது இலக்கிய ஈடுபாட்டிற்கான களம் எவ்வாறு அமைந்தது என்பதனைப் பார்க்கலாம். மலையகத்தில், இன்று பேசப்படுகின்ற, வாசகர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற ஆய்வாளர்கள், படைப்பாளிகள், கவிஞர்கள் யாவருக்குமே ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபதுகளே எழுத்துலகில் நம்பிக்கையோடு நுழைவதற்கான காலமாக இருந்தது. 1960 ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியிலும் வீரகேசரி முதலான பத்திரிகைகள் மலையக எழுத்தாளர்களுக்கான தனிப் பக்கங்களை தமது ஞாயிறு வெளியீடுகளில் திறந்தன. இக்கால எல்லையில் வீரகேசரி மலையக எழுத்தாளர்களுக்கெனச் சிறுகதைப் போட்டிகள் பலவற்றை நடாத்தி பரிசிலகளை வழங்கியது. இப்போட்டிகளில் எழுதியோரும் பரிசில்கள் பெற்றோரும் தொடர்ச்சியாகப் பத்தரிகைகளில் எழுதத் தொடங்கினர். தாம் பரிசில்கள் பெறாத போதும் சளைக்காமல் எழுதி வந்தோருள் குமார் முக்கியமானவராவார். பின்னாளில் வீரகேசரி, சிந்தாமணி, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் அவர் தொடர்ந்து எழுதினார். பிரசித்தமான எழுத்தாளனாக விளங்க வேண்டும் எனும் வேட்கை பலவேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் விடாமல் எழுதுவதற்கு மூல காரணமாக அமைந்தது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தொழிலாளியாக இருந்து தான் எதிர் நோக்கிய பிரச்சினைகள், மக்கள் ஏமாற்றப்படும் விதம், தொழிற்சங்க கோமாளித்தனங்கள் போன்றனவெல்லாம் அவரை சிறந்த எழுத்தாளராக மாற்றியது.

பெரும்பாலும் நடைமுறை வாழ்க்கையில் தனது அனுஸ்டானத்தில் கண்டவற்றை அப்படியே சிறுகதை வடிவத்தில் கொணரும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. இதற்கு உதாரணமாக "ஒரு கட்டு விறகு" என்ற கதையைச் சுட்டிக்காட்டலாம். இவரது கதைகளில் சம்பவக் கோர்வை தோட்டங்களில் நிகழும் உண்மை நிலவரங்களைக் கொண்டமைந்திருக்கும். உரையாடல்களும் மலையக மக்களின் பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அவரது மனுசியம் மற்றும் வேடத்தனம் ஆகிய தொகுப்புகள் மற்றும் பத்திரிகைகளில் வெளி வந்த சிறு கதைகள் புதிய அணுகுமுறைகளைக் கொண்டிருந்தமையைச் சுட்டிக்காட்டலாம்.

குமார் சிறுகதைகளை எழுதுவதிலேயே முழுமையாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கவிதை எழுதுதல் தனக்கு இயலாத ஒன்றாக உள்ளது என்பதை அவர் ஒரு முறை என்னிடம் குறிப்பிட்டார். பத்திரிகைகளில் புதுக்கவிதைகள் நிறையவே வெளிவருவதைப் பார்த்து 'தானும் புதுக் கவிதை எழுதலாம்' என்ற எண்ணத்தை உருவாக்கிக் கொணடார். அதன் அடிப்படையில் "மாடும் வீடும்" என்ற பெயரில் கவிதை நூல் ஒன்றினை வெளிக் கொணர்ந்தார். இந்நூல் அரசியல் சார்ந்த ஒரு விமர்சனமாகவே பார்க்க வேண்டிய ஒரு படைப்பாக உள்ளது. அரசியல் வாதிகள் மீது கண்ட குறைபாடுகளைக் கண்டனத்தோடு எடுத்துரைக்க அவர் முற்பட்டதன் விளைவாகவே இக்கவிதைத் தொகுப்பினைக் காண முடியும். இக்கவிதை நூல் பல எதிர் வினைகளையும் ஏற்படுத்தி இருந்தது. அனைத்தையும் அவர் உறுதியுடன் எதிர் கொண்டார். தொடர்ந்து எழுதினார். அவரது சிறுகதைகளின் தொகுப்பாக வெளி வந்த வேடத்தனம் மரணத்தின் பின்னரே வெளியாகியது.

ஒரு தொழிலாளியாக, எழுத்தாளனாக, மனிதாபிமானம் மிக்க செயற்பாட்டாளனாக வாழ்ந்த மல்லிகை. சி. குமார் ஒரு முன்னுதாரணமாவார். மலையகத்தில் கலையும் இலக்கியமும் வளர வேண்டும், மக்கள் சம உரிமைகளுடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருந்த அவது விருப்பனை அடைவதற்குரிய பணிகளை முன்னெடுப்பதே அவருக்கு நாம் வழங்கும் கௌரவமாக அமையும். ❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா எனும் இலக்கியவாதி...

தனராஜ் கஜேந்திரகுமார்

2019ம் ஆண்டில் ஒரு சனிக்கிழமை நாள்... ஒரு செயலமர்வு தொடர்பாக நுவரெலியா சென்றிருந்த வேளை நான் சந்தித்த நண்பர் ஒருவர் மாறனின் அப்பா நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்று சொன்னார். "மாறனின் அப்பா" என நண்பர்கள் வட்டத்தில் அறியப்பட்டவர் அமரர் மல்லிகை சி.குமார் அவர்கள். செயலமர்விற்கான தயார்படுத்தல்கள் நிறைவடைந்த பின்னர், வேறொரு வளவாளருக்கு முன்னெடுத்துச் செல்லும்படி கைய ளித்துவிட்டு மாறனுக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்தேன். பல முயற்சிகளுக்குப் பின்னர் தொடர்புக்கு வந்த மாறனிடம் "இப்போது நான் வைத்தி யசாலைக்கு வருகிறேன்... என்ன வாங்கிவர வேண்டும்" என்று கேட்க போது, "உணவு ஏதும் வேண்டாம். முடிந்தால் மாதுளை ஜூஸ் வாங்கி வா என்ற போது மாறனின் குர லில் கலக்கமோ பதற்றமோ தெரியவில்லை என்பது ஓரளவு ஆறுதல் அளித்தது. அந்த தெம்பில் மாதுளை களோடு வைத்தியசாலைக்குச் சென்றேன்.

பார்வையாளர் 'பாஸ்' இனை காட்டி உள்ளே அழைத்துச் சென்றார் மாறன். செல்லும் வழியில் அப்பாவின் தேகநலம் பற்றி விசாரித்துக் கொண்டே செல்லும்போது அன்றைய நாளில் காலையில் சில அரசியல் பிரமுகர்களும் அப்பாவை வந்து பார்த்து விட்டுப் போனார்கள் என்று கூறினார். அப்படியே வார்டை நோக்கிச் சென்றோம். மலையகத்தின் மாபெரும் இலக்கிய ஆளுமை என்ற மரியாதை பெருமளவில் இருந்தாலும் "அப்பா" என்ற அன்பும் உரிமையும் அதனை விட அதிகமாக இருந்தது.

அருகில் சென்றதும், போர்வையை இழுத்து விட்டபடி, "எப்படி இருக்கிங்க சாமி... வீட்டில் எல்லோரும் நல்லா இருக்காங்களா..." என்று மிகச் சரளமாகக் கேட்ட அப்பாவை கண்டு வியந்து போனேன். சிறு காயம் பட்டு மருந்து கட்டிக்கொண்டு, அதனைப் பற்றியும் வருத்தம் பற்றியும் பலரிடமும் கூறி சுய பச்சாதாபப்பட்ட பலரைக் கண்டிருந்த எனக்கு தனது நோய் நிலையிலும் என்னை முந்திக்கொண்டு நலன் விசாரித்த மேன்மையை ஈடு செய்ய முடியாத நிலையில் அவரது சுகநலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, அவரது உதடுகள் என்னவோ "வேடத்தன"த்தின் வெளியீட்டினைப் பற்றி உச்சரித்துக் கொண்டிருந்தன. "நான் வருவேன் மகன்.. புத்தக வேலை இன்னும் இருக்கு" என்று கூறியபோது, அதனை பொய்யாக்கப் போகும் கூற்றுவனின் சதியை நாம் யாருமே அறிந்திருக்கவில்லை. அந்த வார்த்தைகளின் நடுவே முதன்;முதலில் சந்தித்த போது உற்சாகமும் தன்னம்பிக்கையும் மிக்கவராகத் தெரிந்த அப்பா மின்னிச் சென்றார். உங்களுக்காகவும் நூலுக்காகவும் நாங்கள் இருக்கிறோம். நீங்கள் எழுந்து வருவதற்கு தைரியத்துடன் இருக்க வேண்டும் என்று அவரது தலையை வருடிய தருணங்களில் எனது கரத்தை இறுகப் பற்றிய போது அவரது படைப்பின் மீது அவருக்கிருந்த காதலின் உறுதியை உணர்ந்தேன்.

நோயுற்றிருக்கும் அப்பாவை பார்க்கச் சென்று அவரது மனநிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக அவருடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது கண்ணில் பட்ட சேலைன் துளிகள் ஏதோ மனக்கலக்கத்தைக் கொடுப்பதாகவே இருந்ததை நான் மட்டுமே அறிவேன். ஏற்கனவே அப்பா மறைந்து விட்டார் என்று பரவிய வதந்தியும் இக்கலக்கத்துக்கு காரணமாயிருந்தது எனலாம்.

தான் துன்பத்திலிருக்கும் காலத்திலும் பிறரது நலம் தேடும் அப்பாவின் பாசத்தையும் குரலையும் நான் உணரும் கடைசி நாளாக அந்த நாள் இருக்கும் என்பதை அறியாமலேயே விடைபெற்று மீண்டும் செயலமர்வுக்கு சென்று விட்டேன. வழியில் லுணுகலை ஸ்ரீ அக்காவை தொடர்பு கொண்டு அப்பாவின் சுகநலம் பற்றி பேசிக் கொண்டிருந்ததில் அன்றைய நினைவு முழுதும் அப்பாவையே சுற்றியிருந்தது. அன்று மாலை பதுளை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் வேளை, அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்பாவுடன் பரிமாறிக் கொண்ட நினைவலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து போயின. அந்த நினைவுகள் அவரைப் பற்றி பேசும் ஒவ்வொரு தருணத்திலும் மின்னிச் செல்வதை தவிர்க்கவே முடியாதவனாகி நின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம்.

2003 ஆம் ஆண்டளவில் பள்ளிப்பருவத்திலிருக்கும் எங்களுக்கு தமிழ்ப்பாடத்தின் தேவை கருதி மலையக எழுத்தாளர்களை செவ்வி காணும் செயற்றிட்டம் வழங்கப் பட்டிருந்தது. அதில் எனது உற்ற நண்பனின் குழுவினருக்கு கிடைத்தவர் எழுத்தாளர் மல்லிகை சி.குமார் அவர்கள். அவரது இலக்கியங்கள் பற்றி அறியும் ஆவலில் சந்திக்க செல்லும் நோக்கம் இருந்தாலும் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. பின்னர் பல்கலைக்கழக வாழ்வில் நுழையும் போது அந்தவாய்ப்பினை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளும் விதமாக மாறன் " மல்லிகை சி.குமாரின் மகன்" என்ற அடைமொழியுடன் அறிமுகமானார். அதன் பின்னர் ஒரு நாள் மாறனின் வீட்டுக்கு செல்வதற்கு தயாராகி சென்ற வேளையில் முதன்முதலில் அப்பாவைக் கண்டேன். மரியாதையுடன் எழுந்த நிற்க, "உட்காருங்கப்பா..." என்று பக்கத்தில் அமர்ந்தார். மெல்லிய தயக்கத்துடன் பேசிக் கொண்டிருக்கும்போது, சரோஜா அம்மா தேநீரோடு வந்து உபசரித்தார். "எங்கப்பா இருக்கீங்க... வீட்டில் அம்மா, அப்பா என்ன செய்றாங்க" என்ற கேட்ட போது, சொந்த ஊர் பற்றி சொன்ன பின் "அம்மா இறந்துட்டாங்க"என்று சொல்லும் போது உள்ளிருந்து சரோஜா அம்மா, "ஏன்ப்பா அப்படி சொல்றீங்க... அம்மா நான் இருக்கேன்.. கவலைப் படாதீங்க.. என்று சொல்லிய போது பதில் சொல்ல முடியாமல் எனது குரல் கம்மியிருந்தது. அந்தளவில் அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவும் அப்பாவும் குடும்பத்தை அன்பாலயமாக்கி வைத் திருந்ததை இன்றும் கூட வியந்து கொண்டிருக்கின்றேன்.

இலக்கிய கர்த்தா என பாடசாலை நாட்களில் "மனுஷி யம்" மூலம் பரிச்சயமான அப்பா, மனதில் நின்றதென்னவோ பாசமிகு தந்தையாகத்தான். ஒருநாள் நான் வீட்டுக்கு சென்றிருந்த வேளையில் அம்மா சுகவீனமுற்றிருந்த போது, அன்றைய இரவு உணவு என் கையால் தயாரானது. குறைகளுடன் இருந்த அவ்வுணவினை சிலாகித்து பேசிய அப்பா, பிறர் மனம் புண்படாது நடந்துகொள்ள வேண்டும் என்பதில் இருந்த கரிசனையை உணர்த்திவிட்டிருந்தார்.

இலக்கியம் சாராத இனிய அனுபவங்களை அதிகமாக அனுபவித்த மகிழ்ச்சி சரோஜா அம்மாவின் திடீர் இழப்பால் ஆட்டம் கண்டிருந்தது. அந்த துயரத்தினை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இலக்கியத் தளத்தில் பயணிக்க எத்தனித்த அப்பாவின் சிந்தனை, படைப்புகளை நோக்கியதாகவே அமைந் திருந்தது. அந்த நேரத்திலேயே அடிக்கடி நோய் வாய்ப்படும் நிலைமையும் காணப்பட்டது. இந்நிலையிலும் ஊடகமொன்றுக்கு செவ்வியளிப்பதற்காக குளிர் நிறைந்த வெளியில் சில மணித் தியாலங்கள் நின்றதால் சுவாசப் பிரச்சினைக்கு ஆளானார். தன் தேக நலத்தைப் பொருட்படுத்தாமல் இலக்கியத்துறை நோக்கி செயற்படுவதாக மாறன் குறைப்பட்டுக் கொண்டதும் உண்டு.

அதன் பின்னர் அதிகமாக சந்திக்காத போதும் அவ்வப் போது தொலைபேசியில் அப்பாவின் நலம் குறித்து கேட்டறிந்து கொள்வதில் தவறியதில்லை. அத்தனை பெரு மைகளை தன்னுள் அடக்கிக் கொண்டு, அன்பும், நற் பண்பும், நிறைந்த அப்பாவின் பல படைப்புகள் களவாடப்பட்டு, வெவ்வேறு விதங்களில் வெளிவந்துள்ள போதிலும், இன்னொருவர் பெயரில் சரி என் படைப்புகள் வெளிவருகின்றதே என்றும் பாவம், பிழைத்துப் போகட்டும் என்று சிரித்துக் கொண்டே சொல்லும் போதிலும் அப்பாவின் வெள்ளை மனம் பளிச்சிடும். சந்தித்த சில பொழுதுகளில் சில அனுபவங்களை பகிரும்போதும் எவ்வித தலைக்கனமும் இன்றி இயல்பாக இருப்பதில் அப்பாவுக்கு நிகர் அவரேதான்.

அவரது இழப்பு நேர்மையாக எழுதும், எழுத விழையும் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் பாரிய இடைவெளியினை விட்டுச் சென்றுள்ளது என்பதைத் தாண்டி, அன்பான தகப்பனை இழந்த சோகத்தை அதிக மாகத் தந்துள்ளது என்றே நினைக்கத் தோன்றுகின்றது. அவரது இழப்பின் பின்னர், அவரது வாழ்க்கை வரலாற்றினை அவரது குரலாலேயே கேட்டு அதன் வலி களையும், சுவாரசியங்களையும், கடந்து வந்த பாதைகளையும் எண்ணி நெக்குருகிய போது அதனை எழுத்துருவில் கொண்டுவர வேண்டும் என்ற அவா இன்னும் அதிகமாகவே வேரூன்றியது. இருக்கும் வரை இலக்கியப் பணியில் பிரதிபலன் எதிர்பாராது இயங்கிய அப்பாவின் இறுதிப் படைப்பினை அவரது கண்கள் காணவில்லைவெனினும் பாதங்கள் அவரது இறுதிப் பயணத்தில் கண்டன. வாழ்வில் செம்மையை, நேர்மையை, உழைப்பினை முழுமையாகக் கடைப்பிடித்த அப்பாவுக்கு இலக்கியத் தளத்தில் உரிய காலத்தில், உரிய கௌரவம் தரப்படாமல் விடப்பட் டிருந்தாலும், அவரது அன்பும், கனிவும் நிறைந்த அக்கறை அவர் பெறாப் பிள்ளைகளாகிய எங்கள் மனதில் என்றும் "பேரருள் ஈந்த பெருமானார்" என்றதாகவே உயரத்திலேயே இருக்கும். மனுஷியம் வேர் கொள்ளும் காலத்தில் அப்பாவின் சிந்தனைகள் கிளைகளாய் நிழல் பரப்பும்.

கவிதை

# சுவர்களுக்கப்பால்



*இப்பொழுதெல்லாம்*
*அவர்களைப் பற்றியும்*
*அவர்களுக்கெல்லாம் அப்பாலும்*
*அவர்களையெல்லாம் தாண்டியும்*
*சுவர்களின் மீதும்*
*சுவர்களில் இருந்தும்*
*சுவர்கள் தோறும்*
*கலர் கலராய் விகாரமாய்*
*அத்தனை*
*இயற்கை சுவர்களையும்*
*ஆயிரமாயிரம்*
*இனவாத சங்கதி சொல்லும்*
*இருண்ட அடையாளங்களாகிப் போயின!*
*சுவர்கள் வெறுமையாய்*
*இருந்த பொழுதெல்லாம்*
*தேசமும் ஒன்றாகித்தான் இருந்தது*
*ஆடை உடுத்திக் கொண்ட*
*அத்தனை சுவர்களுக்குள்ளும்*
*இத்தனை அம்மணங்களா?*
*தீட்டிய வர்ணங்களை*
*வெறித்து வெறித்து*
*உற்றுப் பார்க்கின்றேன்*
*ஒவ்வொரு சுவர்களுக்குள்ளும்*
*உருவேற்றி வைத்திருப்பது என்பது*
*சிங்களதேசியத்தின் துவேசம் மட்டும் தான்*
*சித்திரங்களாய் எந்தச்சுவரையும்*
*எனக்கு இரசிக்க தோணவில்லை*
*அத்தனை அழுக்குகளையும்*
*அம்மணமாய் நின்றவர்கள்*
*அள்ளித் தெளித்ததினாலோ*
*நிறம் தீட்டப்படும்*
*எல்லாச் சுவர்களிலும்*
*நிர்வாணம் தெரிகின்றது*
*அத்தனை வர்ணச் சுவர்களிலும்*
*இப்பொழுது அப்பிக்கிடக்கின்றது*
*இனத்துவேசக் காறை*
*ஆதலினால்*
*எத்தனை வர்ணம் பூசினாலும்*
*எந்தச் சுவரையும்*
*எனக்கு இரசிக்க தோன்றவில்லை*
*வார்த்தைகளால், வர்ணங்களால்*
*வரலாறுகளால்*
*வஞ்சிக்கப்பட்ட தேசத்தில்*
*ஒவ்வோர் கோடிச்சுவர்களுக்குள்ளும்*
*முத்திரவாடை அடிக்கத்தான் செய்கின்றது*

**சந்திரலேகா கிங்ஸ்லி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளி வர்க்க நிலையை அதிகம் பேசிய

## மல்லிகை சி. குமாரின் படைப்புக்கள்

மு. சிவலிங்கம்



மக்கள் எழுத்தாளர் மல்லிகை சி. குமார் அறுபதுகளில் பிரவாகமெடுத்த மலையகப் படைப்பாளர்களில் மிக முக்கியமானவராவார். அறுபதுகளிலிருந்து இன்றுவரை இருநூறுக்கும் மேற்பட்ட கதைகளைத் தந்தவர். அவ்வாறே இருநூறுக்கும் மேற்பட்ட கவிதைகளையும் தந்தவர். நூற்றுக்கணக்கான சுவர் ஓவியங்கள், கோவில் சித்திரங்கள் வரைந்தவர். பல நகரங்கள், தோட்டங்கள். முழுவதும் விளம்பரப் பலகைகள் எழுதியவர். கணினி அறிமுகமாவதற்கு முன்பே பலவகையிலான எழுத்து வடிவங்களைத் தந்தவர்.

இலக்கிய உலகில் இரண்டு தொகுப்புகள் மட்டுமே வெளிவந்த நிலையில், பத்திரிக்கைகளிலும், சஞ்சிகைகளிலுமே நிறைய எழுதி, அதிகமான வாசகர்களைத் தன் வசம் கொண்டவர்.

மலையக இலக்கியம் 1920களிலிருந்து கோதண்டராமன் நடேசஐயர் மூலமே தோற்றம் பெற்றது. அவருக்கு அடுத்த நிலையில் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்திலும், தமிழிலும் படைப்பிலக்கியங்கள் எழுதத் தொடங்கினார். இந்த இருவருக்குப் பிறகே மலையக இலக்கியம் அறுபதுகளிலிருந்து பல எழுத்தாளர்களின் படைப்புக்களால் தோற்றம் பெற்றன. மலையக மக்களின் சமூக நிலைமைகள் அவ் வாக்கங்களில் மிளிரத் தொடங்கின.

இருந்தபோதிலும் நடேசஐயர் ஒருவரே மலையக மக்களின் அவல நிலைமைகளுக்கு தோட்ட நிர்வாகங்களின் அட்டூழியங்களும், அரசுகளின் அலட்சியப் போக்குகளுமே காரணம் என்று அந்த இரண்டு சக்திகளுக்கு எதிராக போர் குரல் எழுப்பி இலக்கியங்கள் படைத்தார்.

கட்டுரைகளும், பாடல்களும் துண்டுபிரசுரங்களும் மக்கள் மத்தியில் பிரச்சாரங்களாக உருவெடுத்தன. நடேசஐயருக்கு அடுத்தநிலையில் சி. வி. வேலுப்பிள்ளை அறியப்பட்டாலும், அவர் மக்களின் பிரச்சினைகளையும், துயரங்களைப் பற்றியே எழுதியிருந்தார். அம் மக்களின் துயரங்களுக்கு காரணிகளாகவிருந்த தோட்ட நிர்வாகங்களையும், அரசுகளையும் எதிர்த்து, சாடல் இலக்கியங்கள் படைக்கவில்லை எனலாம். ஆனால், அறுபதுகளில் எழுதத் தொடங்கிய மல்லிகை சி. குமார் அரசுகளையும், தோட்டநிர்வாகங்களையும் எதிர்த்து குரல் எழுப்பி இலக்கியம் படைத்ததில் நடேசஐயருக்கு அடுத்த வரிசையில் நிற்பதை நாம் இங்கு அடையாளப்படுத்த வேண்டியுள்ளது.

மல்லிகை சி. குமாரின் படைப்புக்கள் யாவும் கற்பனையாக வாசகர்களின் ரசனைக்கு மெருகூட்டுவதாக கதை... கவிதை... பண்பியல்... அழகியல்.... மொழியியல்... நடையியல்... என இலக்கணவியல் புனையப்படவில்லை! குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பாணியிலான கதைகளை மலையக இலக்கியத்துக்குள் கொண்டு வரவில்லை! எல்லாமே மக்களின் யதார்த்த வாழ்க்கையாகவே சித்தரிக்கப்பட்டன. மக்கள் பேசும் மொழியிலேயே எழுதப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995-ம் ஆண்டில் வெளிவந்த "மாடும் வீடும்" என்ற கவிதை நூல், முழுக்க மலையக அரசியலை விமர்சித்து எழுதப்பட்ட கவிதைத் தொகுப்பாகும். இத் தொகுப்பு தோட்ட நிர்வாகங்களுக்கும், அரசுக்கும் எதிராக ஆவேசக் கணைகளை எய்த கவிதை வரிகளாகக் காணப்பட்டன. இவரது சிறுகதைகளும் தோட்ட நிர்வா கங்களுக்கும், அரசுக்கும் எதிராக விரல் நீட்டி எழுதப்பட்ட ஆத்திரப் படைப்புக்களாகும்.

"மாடும் வீடும்" என்ற கவிதைத் தொகுப்பு அட்டன், கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் என்ற சமூக நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டது. இத் தொகுப்புக்கு பதிப்புரையை பி. மோகன் சுப்பிரமணியம் அவர்களும், முகவுரையை கொந்தளிப்பு ஆசிரியர் மு. நேசமணி அவர்களும் எழுதியுள்ளனர். கவிதை நூலுக் கான அணிந்துரையை கவிஞர் வைரமுத்து வழங்கியுள் ளமை பெருமைக்குரியதாகும். கவிஞர் தனது அணிந் துரையில், "அலங்காரத்துக்காக கவிதை எழுதும் கவி ஞர்கள் மத்தியில், மல்லிகை சி. குமார் உணர்வு பூர்வமாகக் கவிதை வடித்திருக்கின்றார். ஒரு சில கவிதைகளில் வாழ்க்கை எங்கோ ஓரிடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. பல கவிதைகளில் வாழ்க்கை அங் கங்கே ஒட்டிக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள கவிதைகள் யாவும் வாழ்க்கையாகவே இருக்கின்றன.. ஆயிரம் கிளிஞ்சல்களுக்கு மத்தியில் ஒரு சிப்பியும், ஆயிரம் முத்துக்களுக்கு மத்தியில் ஓர் இடம்புரி முத்தும், ஆயிரம் இடம்புரி முத்துக்களுக்கு மத்தியில் ஒரு வலம்புரி முத்தும் கிடைக்கும் என்பார்கள். குமாரின் கவிதைகள் அனைத்தும் வலம்புரி முத்துக்கள்.." என்ற மனம் நிறைந்த கருத்தைத் தந்துள்ளார்.

கவிஞர் மல்லிகை சி. குமார் அவர்களை சிலர் தங்களது கட்டுரைகளில் படிப்பறிவு குறைந்தவர் என்று எழுதியிருந்தார்கள். அது பிழையான தகவலாகும். எழுத்தாளர் குமார் க.பொ.த சாதாரணதரம் சித்திய டைந்தவர்.. அரச மிருக வைத்தியசாலையில் தொழில் புரிந்தவர். தனது அனுபவத்தின் பேரில் பசு வைத்தியம், பசு பிரசவம், ஏனைய பிராணிகளுக்கான மருத்துவம் கற்றுக் கொண்டவர். இந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவரது நெருங்கிய நண்பரான மருத்துவர் காசிநாதர் முக்கியமானவர். காசிநாதர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். நல்லதொரு இலக்கிய ஆர்வலர். இவர்கள் இருவரும் இணைந்து செயல்பட்ட தலவாக்கலை மிருக வைத்தியசாலை தனது சேவையில் பொதுமக்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றிருந்தது. துரதிஸ்டமாக அரச மிருக வைத்தியசாலை மூடப்பட்டதன் காரண மாக குமார் தோட்டத்தில் தொழிலாளராக பணிபுரிய நேரிட்டது.

மலையக இலக்கியத்தில் மல்லிகை சி. குமாரின் முக்கியத்துவத்தை அறிந்த மறைந்த படைப்பாளர் சாரல் நாடன் தனது சாரல் பதிப்பகம் மூலம் இவரின் சிறுகதைகளை "மனுசியம்" என்ற தொகுப்பின் மூலம் வெளியிட்டிருந்தார். அந்த ஆரம்ப காலத்தில் மல்லிகை சி. குமாருக்குக் கிடைத்த நூல் வாய்ப்புக்கள் இந்த இரண்டுமேயாகும். இவைகளுக்கப்பால் மேற் கூறியது போன்று பத்திரி;கைகள், சஞ்சிகைகள் மூலமே படைப்புகள் தந்து சர்வதேச மட்டத்தில் புகழ் பூத்த படைப்பாளராக உயர்ந்த ஓர் எழுத்தாளன் என்றால் அது மல்லிகை சி. குமார் என்ற ஒருவரையே அடையாளப்படுத்தும்.

அவரது மரணவீட்டில் இறுதி அஞ்சலி செய்வதற்கு நான்கு நாட்களாக ஆயிரக்கணக்கில் பாடசாலை மாணவர்களும், பல்கலைக் கழக மாணவர்களும், ஆசிரியர்களும், கல்விசார் சமூகத்தினரும் சக படைப் பாளர்களும், வாசக பெருமக்களும் அலை அலையாக வந்து, அஞ்சலி செய்து சென்றமை ஓர் வியப்பைத் தந்தது. இது வரை காலமும் ஓர் எழுத்தாளனுக்கு, ஓர் இலக்கியவாதிக்கு இவ்வாறான ஓர் இறுதி அஞ்சலி நடந்தமை மல்லிகை சி. குமாரின் மரணத்திலேயே என்று அறுதியிட்டுக் கூறலாம். எந்தவொரு மக்கள் படைப்பாளனும் இலக்கியமும், எழுத்தும் இருக்கும் வரை வாழ்ந்து கொண்டேயிருப்பான்.! குமாரின் நாமம் படைப்புலகில் நிலைத்திருக்கும்...

OOO




எங்கட புத்தகங்கள்
காலாண்டு சஞ்சிகை
எழுத்து பதிப்பு வாசிப்பு
ஒக்டோபர் 2020
விலை : 100/-
முகவரி:
906/23,
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்




நடி
மாணவர்களுக்கான அரங்க
இரு திங்கள் இதழ்
கார்த்திகை, மார்கழி 2020
விலை : 50/-
தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்
தொலைபேசி: 0775991949




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமை என்றொரு சொல்

க. தணிகாசலம்

தோழமை என்ற உயர்ந்த மானுட உறவுக்கு வரலாற்று இலக்கணமாகத் திகழ்ந்த

## ஏங்கெல்ஸின்

200வது ஆண்டு நினைவாக இக்கட்டுரை இடம் பெறுகிறது



தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணம் குகப்படலத்தில் வரும் பாடல் அடிகள் மூலம் பிரபலமான 'தோழமை' என்ற சொல், அடிப் படைச் சமூக விடுதலைக்காக ஒன்றிணைந்து செயற்படும் மாக்சிஸ்டுகள் இடையே உள்ள உறவைக் குறிப்பிடும் தமிழ்ச் சொல்லாக இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. மனிதர்களிடையே நிலவும் அனைத்து உறவுகளிலும் அறிவார்வமும், அன்பின் விரிவும், செயலூக்கமும் உள்ள மானுட உறவாக அது மிளிர்கிறது. இதனால் வெறும் அழைத்தலுக்கு உரிய சொல்லாக அன்றி துயர் தோய்ந்த வாழ்வில் மாற்றங்களை நிகழ்த்தலுக்கான உறவாக இது அமைகிறது. அத்துடன் ஏனைய பால் வேறுபாட்டைச் சுட்டி நிற்கும் உறவுச் சொற்களைப் போலன்றி, 'பால்' கடந்த உறவுச் சொல்லாக, இத்தகைய கருத்தும், செயலும் இணைந்த பெண்களைச் சுட்டி அழைக்கும் சொல்லாகவும் அமைந்துள்ளமை இதன் சிறப்பாகும். இதன் மூலம் பெண்விடுதலைப் பண்பாட்டை முன்னெடுக்கும் குறியீட்டுச் சொல்லாக இது திகழ்கிறது. இத்தகைய தோழமை உறவின் (Comradeship) மேன்மைக்கு முன்னுதாரணமாக, மனிதகுல விடுதலைக்காக ஒன்றி ணைந்து தமது வாழ்வை அர்ப்பணித்த மாமேதைகளான பிரடரிக் ஏங்கெல்ஸ், கார்ல் மார்க்ஸ் இருவரும் வாழ்ந்தனர். அவர்களது தோழமை உறவின் சிறப்பை, எமது வாழ்க்கைச் சூழலிலும், இலக்கியங் களிலும் வெளிப்படும் உறவுகளுடன் இணைத்து நோக்குவதன் மூலம் மனித உறவுகளின் மேன்மையை புரிந்து கொள்ளவும், அதனைச் செழுமைப்படுத்தவும் முடியும்.

மனித இனத்தின் உயிர்வாழ்வுத் தேவைகளுக்கான முன்முயற்சி களில் மனிதர்களுக்கிடையே ஏற்படும் பல்வேறு உறவுகளின் பிணைப் பில் மலர்ச்சி அடைவதுதான் மனித வாழ்க்கை. அவை அன்பு, பாச உணர்வுகளின் விரிவை அடிநாதமாகக் கொண்டு மனிதர்களின் அன்றாட வாழ்வின் உயிர்ப்புக்கும், உயர்வுக்கும் உரமூட்டுபவையாக அமைகின்றன. சமூக பொருளாதார உற்பத்தி உறவுகளின் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் உருவான இவ் உறவுகள் அவ்வளர்ச்சி நிலை களுக்கு ஏற்ப பல்வேறு வகைப்பட்ட படிநிலை உறவுகளாக அமைந்துள்ளன. காலத்துக்கும், சூழலுக்கும் ஏற்ப மாறுதல் அடையும் இயல்பை உடையனவாகவும் இவ்வுறவுகள் அமைகின்றன.

மனிதகுல வரலாற்றில் தனித்தனியே விலங்குகளை உடமைகளாக்கி வளர்த்துப் பயன்பெறும் நிலையும், 'உழவு கலப்பை' போன்ற பல உற்பத்திச் சாதனங்களை உருவாக்கிப் பயன்படுத்திப் பெற்ற உற்பத்திப் பண்டங்களின் பெருக்கமும், அவற்றைப் பேணிப் பாதுகாத்து விற் பனைப் பண்டங்களாக மாற்றிய மனித நடவடிக்கையும், தனியுடமை அமைப்பின் வளர்ச்சிக்கு வித்திட்டன. இத்தகைய தனியுடமைச் சமூக பொருளாதார அமைப்பில் எழுந்த போட்டிகளும், போர்களும், தோற்றவரை அடிமைகளாக்கி அவர்களது உழைப்பில் மேலும் தத் தமது வாழ்வுக்கு வளம் சேர்த்த வரலாறே மனிதகுல வரலாறாக நீண்டுள்ளது. இத்தொடர் வளர்ச்சியின் வடிவங்களே, தனியுடமையை பாதுகாத்து நிற்கும் நிலப்பிரபுத்துவ முடிமன்னர் ஆட்சி முதல் இன்றைய முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி வடிவங்களாகவும் நீடிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அதிகாரம், குடும்ப அதிகாரம், அவற்றைப் பாதுகாக்கும் அறிவியல் பண்பாட்டு அதிகாரம், போன்ற பல மக்களை ஒடுக்கும் அதிகாரங்களின் பிறப்பிடமாகவும் தனியுடமை அமைப்பே திகழ்கிறது. இத்தகைய தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டே இன்றைய குடும்ப சமூக உறவுகள் யாவும் விரிந்தும், சுருங்கியும் வளர்ந்தும், தேய்ந்தும் வருகின்றன.

தனிச்சொத்துரிமையின் அடிப்படையில் உருவாகி இன்றுவரை தொடரும் குடும்ப உறவுகளாக கணவன்-மனைவி, தாய்-தந்தை, பெற்றோர்-பிள்ளை, அண்ணன்-தம்பி, அக்கா-தங்கை, சகோதரன்-சகோதரி, மாமன்-மாமி, தாத்தா-பாட்டி, மைத்துனன்-மைத்துனி என விரியும் பல்வேறு உறவுகளைக் குறிப்பிடலாம். தனிச் சொத்தின் முதல் உரிமையாளரான தந்தை ஆதிக்கத்தை – ஆண் அதிகாரத்தை மையமாக வைத்தே இவ்வுறவுகள் யாவும் எழுந்தன. அதற்கு அப்பாலும், சமூக வெளியில் காதலுறவு, நட்புறவு என்பனவும் ஆசிரிய-மாணவர் உறவு, தொழிலாளி-முதலாளி உறவு என பல்வேறு உறவுகளாக அவை விரிவடைகின்றன. இத்தகைய உறவுகள் யாவும் ஏதோ ஒருவகையில், தனியுடமைப் பொருளாதார அதிகாரத்துவ அமைப்பு உருவாகிய காலம் முதல் அவற்றின் எல்லைகளுக்கும், தாக்கங்களுக்கும் உட்படுவதுடன் இன்றுவரை அவற்றால் பாதிப்படைந்தும் வருகின்றன.

இவ்வுறவுகளுக்கு இடையே ஏற்படும் பாதிப்புக்களின் வெளிப்பாடுகளையே பெரும்பாலும் கலை இலக்கியங்கள் கருப்பொருட்களாகக் கொண்டிருப்பதை நாம் அடையாளம் காண்கிறோம். பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் இன்றைய நவீன இலக்கியங்கள்வரை இதற்கு உதாரணங்களாக அமையலாம். ஆனால் அவற்றை அவை தோன்றிய காலம், இடம் என்பவறைக் கருத்தில் கொள்ளாது, இன்றும் மக்களை ஏற்கத் தூண்டும் பொழுது, மக்களை ஒடுக்கும் அதிகார வர்க்கத்தினரின் கொடுமைகளுக்கான காரணங்களை மக்கள் அறியாதபடி மூடி மறைக்க அவை உதவுகின்றன, அத்தகைய அதிகார வர்கத்தினரின் ஒடுக்குதல்களை தொடர்ந்தும் ஏற்று வாழும் மனநிலை மக்களிடம் தோற்றுவிக்கப்படுகிறது. இத்தகைய போக்கால் பழந்தமிழ் இலக்கியங் களில் மறைமுகமாகவும், சில இடங்களில் வெளிப் படையாகவும் இடம்பெறும் ஒடுக்குதல்களுக்கு எதிராக எழுந்த அன்றைய குரல்கள் முதன்மை அற்றவையாக மறைக்கப் படுகின்றன. வெறும் பழமையைப் போற்றி வழிபடும் பண்பே முதன்மை அடைந்து மேலெழுகிறது. இதனால் அவற்றை வரலாற்று நோக்கில் மக்கள் புரிந்து ஜனநாயக உணர்வு பெற உதவும் கலை இலக்கியங்களின் முதன்மைப் பணிகளில் ஒன்றும் தடைப்பட்டு வருகின்றது.

'தோழமை என்றொரு சொல்' என்றதும் கம்பராமாயணத்தில் குகனும் பரதனும் சந்திக்கும் இடம் கலை இலக்கிய ஆர்வலர்களின் நினைவில் வரும். முடியை இழந்து காட்டுக்குச் செல்கிறான் இராமன். கங்கைக் கரையில் வேட்டுவர் தலைவனாகவும், தோணி ஓட்டுனராகவும் இருந்த குகனை இரமன் காண்கிறான். இருவருக்கும் இடையில் உயர்ந்த நட்புறவு ஏற்படுகிறது. இராமன் அவ் இடத்தை விட்டு அகன்றதும், தனது பரிவாரங்களுடன் இராமனை பின் தொடர்ந்து வந்த தம்பியாகிய பரதனை தொலைவில் கண்டபோது, பகமையுடன் இராமனைப் பின் தொடர்ந்து, படைகொண்டு வருவதாக தவறாக எண்ணிய குகன் இராமனின் நிலைக்காகக் குமுறி எழுகிறான். அவர்களைத் தாக்குவதற்காக வேடர்சேனையை தயார் செய்கிறான். கம்பரின் கவிதை வரிகள் குகன் இராமன் மீது கொண்ட நட்புறவின் இறுக்கத்தையும், பரதன் மீது கொண்ட சீற்றத்தையும் உணர்த்தும் ஆவேசக் குரல்களாக கவிதை நயத்துடன் ஒலிக்கின்றன.

"ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேளநெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல் அவர் சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றவர் ஏசாரோ"

இங்கு காப்பிய நாயகன் இராமனுக்கும், வேட்டுவர் தலைவனான குகனுக்கும் இடையிலான உறவை தோழமை உறவாக கம்பர் குகனுக்கூடாக இப்பாடல் வரிகளில் வெளிப்படுத்துகிறார். அத்துடன் இராமனும் குகனை 'என் உயிர் அனையாய் நீ உன் இனைய தம்பி நின் கேழ்" என்று தன் உயிராகவும், இலக்குவனையும், சீதையையும், பரதனையும் இணைத்து தமது உறவை 'முன்பு உளெம் ஒரு நால்வோம், முடிவு உளது என உன்னா அன்பு உள இனி, நாம் ஐவர்கள் உளர் ஆனோம்' என எண்ணிக்கையையும் சுட்டி உறவின் வட்டத்தை விரித்துக் கொள்வதாக கம்பரின் உயர்ந்த கவியுள்ளம் கற்பனையில் விரிகிறது. ஆனால் கவிதை வெளிவந்த காலவெளியின் கட்டுத்தளை தன் குரல்களை நில உடைமையாளர்களுக்கு குற்றேவல் செய்யும் அடிமைகளின் குரல்களாகவே குகனுக்கூடாக வெளிப் படுத்தி நிற்கிறது. 'நாவாய் வேட்டுவன் நாய் அடியேன்' என்றும் 'ஊன் உள துணை நாயேம் உயிருள' எனவும் பல இடங்களில் நாய்போல 'அடிதாழா உத்தம'னான இராமனுக்கு 'அடி நாயேன்' எனவும் கவிதை வரிகள் விரிகின்றன. திருவாசகத்தில் 'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு, தாயிற் சிறந்த தயவான தத்துவனாக' 'நாயாக' தம்மைத் தாழ்த்தி நின்று இறை அன்பை வேண்டுவது போல, திருமாலின் மானுட அவதாரமான இராமனை குகனும் அந்;நிலையில் நின்று 'நெஞ்சில் நிரம்புறும் அன்பால் இன்றே நற்பணி செய்திட இறைவா! நன்றே வந்தனன் நாய் அடியேன் யான்' என கூறுவதாக இங்கு குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் 'எல்லாம் பிரம்மம்' என பக்தி உறவுக்கான பரந்த தளத்தை அன்றிலிருந்தே முன்வைத்து வந்தாலும், 'வர்ணாச்சிரம தர்மத்தின்' அடிப்படையில் 'ஆண்டான் பிரம்மம்', 'அடிமைப் பிரம்மம்' என 'பரப்பிரம்மமே' வர்க்க, சாதி, பால், இன, நிற, மதம் என பல்வேறு படிநிலை உறவுகளாக பிளவுபட்டு எங்கும் கொடுமைகள் நிறைந்த வாழ்வின் விளைநிலமாக, கீதை பிறந்த மண்மட்டுமல்ல உலகே இருந்து வருவதுதான் இன்று வரை யதார்த்தமாக உள்ளது. இதே இராம பக்தியை மக்களிடம் தூண்டிப் பதவிக்கு வந்த இந்திய அரசு, குகனின் வழித்தோன்றல்களான இந்தியப் பழங்குடி மக்களை, அவர்களது வாழ்விடமான காடுகளிலும், மலைகளிலும், வயல்களிலும் இருந்து உயிர் இழப்புகளுடன் துரத்தி அழிக்கிறது. அவர்களது மண்ணின் வளங்களை 'கோப்றேற்' முதாலாளிகளின் கொள்ளை இலாபங்களுக்கு இரையாகக் கொடுக்கிறது என்பதை இத்தகைய உறவு நிலைகளின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் சமகால உதாரணமாகக் கொள்ளலாம். அத்துடன் இலங்கை போன்ற ஏனைய நாட்டு மக்களிடமும் இத்தகைய மனித வாழ்வு பற்றிய மதம் சார்ந்த உலக நோக்கு, மக்களை ஒடுக்கும் அரசுகளுக்கு துணைபோகும், பண்பாட்டு மேலாதிக்கத்தின் கருத்தியலாக, இலத்தரனியல் ஊடகங்களின் உதவியுடன், கலைத்துவ அழகுடன் திணிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு, பாரதி தான் வாழ்ந்த கால, இடச், சூழலின் பின்னணியில் நின்று, கொலனித்துவ அடிமைத்தனத்துடன் இணைந்த, ஒடுக்குதலகள் நிறைந்த வாழ்நிலைக்கு எதிராக தனது கவிதை வரிகளில் இதற்கு மாறுபாடான கருத்தை வெளிப்படுத்துவதை தெளிவாகக் காண முடிகிறது. கம்பனைப் புகழ்ந்தேற்றிக் கவிதை பாடிய பாரதி, அதே 'பிரம்மத்' தத்துவத்தை ஏற்றிருந்தாலும், தான் வாழ்ந்த காலமும், வெளியும் தன்மீது ஏற்படுத்திய மாறுதலை உளத்தில் கொண்டு இவ்வாறு கவிதை பாடுகிறார்.

'நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?'

என கொலனித்துவ ஒடுக்கு முறையளர்களுக்கு எதிராக, அடிமைத்தனத்தின் குறியீடாக 'நாய்களோ" என்ற சொல்லை முன்வைத்து தனது கோபக் கனலை கவிதைகளுக்கு ஊடாக மக்களிடம் மூட்டுகிறார். அத்துடன் அவரது 'நான்' விரிந்து 'நாங்கள்' என 'முப்பது கோடி ஜனங்க'ளின் தேசபக்த உறவாக- அனைத்து மக்கள் உறவாக, உறவுகளின் எண்ணிக்கையும் விரிவடைவதை அவரது எழுச்சிக் கவிதையில் காணலாம். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கை முழக்கத்தை தான் வெளியிட்ட பத்திரிகையின் மகுட வாசகமாகக் கொண்டும், ருஷ்யப் புரட்சியை 'ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி' என வரவேற்றும் இருந்த பாரதி, தான் வாழ்ந்த காலத்தின் கவிதைக் குரலாக இவற்றை வெளிப்படுத்துவதாக இதனைக் கொள்ளலாம்.

**'எல்லாம் பிரமம்' என பக்தி உறவுக்கான பரந்த தளத்தை அன்றிலிருந்தே முன்வைத்து வந்தாலும், 'வர்ணாச்சிரம தர்மத்தின்' அடிப்படையில் 'ஆண்டான் பிரமம்', 'அடிமைப் பிரமம்' என 'பரப்பிரம்மமே' வர்க்க, சாதி, பால், இன, நிற, மதம் என பல்வேறு படிநிலைகளாக பிளவுபட்டு எங்கும் கொடுமைகள் நிறைந்த வாழ்வின் விளைநிலமாக கீதை பிறந்த மண்மட்டுமல்ல உலகமே இருந்து வருவதுதான் இன்றுவரை யதார்த்தமாக உள்ளது.**

அதே பிரெஞ்சுப் புரட்சியின் அர்த்தமுள்ள கொள்கை முழக்கங்கள் புரட்சிக்குப் பின்னர் அர்த்தமிழந்து பெரும் எண்ணிக்கையான உழைக்கும் மக்களை முதலாளித்துவ அமைப்பின் புதிய அடிமை விலங்குகளுக்கும், உழைப்புச் சுரண்டலுக்கும் ஆட்படுத்தியபோது அவற்றுக்கு எதிராக விழிப்புணர்வு பெற்றவர்களாக ஜேர்மனியில் மார்க்சும், ஏங்கெல்சும் உருவாகினர். மானுட விடுதலைக்கான செயல்பூர்வமான கருத்தியல் ஆயுதமான மாக்சியத் தத்துவத்தை உலகுக்கு அளித்த இருவருக்கும் இடையே ஏற்பட்ட தோழமை உறவு, மனித உறவுகள் யாவற்றிலும் உயர்ந்த உறவாக தோழமை உறவை மேம்படுத்தி இருந்தது. வள்ளுவரின் குறள் வரிகள் 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைய' முன்வரும் தனிமனித உறவின் அவலநிலையைப் போக்கும் பயன் விளைவை தந்து நின்றது. அதற்கு அப்பாலும், வரலாறுதோறும் ஒடுக்குதல்களுக்கு உட்பட்டுவரும் மனித இனத்தின் இடுக்கண் களைவதற்கான தேவையை நிறைவேற்றும் அன்புறவின் விரிவு காலத் தின் தேவை ஆகியது. அதற்கான புதிய சமூக அமைப்பு மாற்றத்துக்கான வழிமுறையை, தோழமை உணர்வுடன் இணைந்து தேடிய முதல்வர்களாக கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரும் இருந்தனர். இவர்களால் மனித குலத்தின் மாபெரும் சிந்தனையாளர்கள் காலந் தோறும் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிக்க முடிந் ததுடன், பொதுவுடமைச் சமூக அமைப்பு மாற்றத்தின் திறவுகோலாக அமைந்த மாக்சிச தத்துவத்தையும் உலகுக்கு அளிக்க முடிந்தது.

அவர்கள் முன்வைத்த மார்க்சிய வழிமுறையை ஏற்று ருஷ்ய மண்ணின் நிலைமைகளுக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஷ்யப் பொதுவடமைப் புரட்சியை வழி நடத்தி வெற்றி கண்டவர் தோழர் லெனின். தன்னைப் போன்ற உறுதியும் தெளிவும் மிக்க தோழர் ஸ்டாலின் போன்ற தோழர்கள் பலருடன் இணைந்து, கோடிக்கணக்கான மக்களின் ஆதரவுடன் அப்பணியை முன்னெடுத்த அவர் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இடையே ஏற்பட்ட தோழமை உறவு பற்றிக் குறிப்பிட்டுள்ள வரிகள் நினைவிற் பதிக்கத் தக்கவை ஆகும்.

'மார்க்சுக்கும் ஏங்கெல்சுக்கும் இடையே இருந்த தோழமை உறவு, மனிதர்களுக்கு இடையில் நட்பைப் பற்றி தொன்மைக் காலத்தில் கூறப்பட்ட மிகவும் உணர்ச்சிகரமான கதைகளைக் காட்டிலும் உயர்வானது'

நான் மார்க்ஸையும், ஏங்கெல்சையும் இன்றும் நேசிக்கிறேன். அவர்களைத் திட்டுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. இல்லை.. அவர்கள் உண்மையான மனிதர்கள். நாம் அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையை நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது.

-லெனின்

மனிதகுல வரலாறு அனைத்திலும் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக ஆன்மீக அடிப்படையிலும், அறிவியல் தத்துவார்த்த அடிப்படையிலும் வழிகாட்ட முனைந்தவர்களின் பட்டியல் நீண்டதாகும். அத்த கையவர்களது உணர்வு நிலைகளின் தொடர்ச்சியை ஏற்று, சமூக விஞ்ஞான அடிப்படையில் விமர்சித்து ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்குவதற்கான தத்துவத்தை இணைந்து தருவதற்கான காலமும் சூழலும் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் இருவருக்கும் வாய்த்தது. மனிதகுல விடுதலை எனும் குறிக்கோளின் அடிப்படையில் மார்க் சுக்கும் ஏங்கெல்சுக்கும் இடையே ஏற்பட்ட தோழமை உறவு என்பது அதற்கான கருத்து ஒருமிப்பு, அறிவுத் தெளிவு, அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டு உறுதி என்பவற் றால் மேன்மை அடைந்ததாகும். தனக்கும் ஏங்கெல்சுக்கும் இடையே ஏற்பட்ட அத் தோழமை உறவின் படிவளாச்சிப் போக்கை கார்ல்மாக்ஸ் தனது உணர்வு கலந்த எழுத்தின் மூலம் இங்கு வெளிப்படுத்துவதைக் காணலாம்.

'1844ல் பிரசுரமான 'அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனத்துக்கு ஒரு கோட்டுச் சித்திரம்' பொருளாதார வகைகள் குறித்த விமர்சனம் மீது ஏங்கெல்சின் வரையுரு தோன்றியதில் இருந்து அவருடன் நான் கடிதத் தொடர்பு மூலமாக இடைவிடாமல் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தேன். அவர் வேறொரு பாதை வழியாக நாம் வந்தடைந்த விடையை எட்டியிருந்தார்... 1845-ன் வசந்த காலத்தில் அவரும் பிரெஸெல்ஸில் குடியேறி விட்டபொழுது, ஜெர்மன் தத்துவத்தின் தத்துவார்த்தக் கணோட்டத்துக்கு எதிரான எங்களுடைய கண் ணோட்டத்தில் பொதுவாக நாங்கள் இணைந்து செயற் படத் தீர்மானித்தோம். சொல்லப்போனால், எங்களுடைய சமீபகாலம் வரைக்குமான தத்துவார்த்த மனச் சாட்சியுடன் கணக்குத் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தோம். 'ஹெக லுக்கு பிந்தைய தத்துவத்திற்கு ஒரு விமர்சனம்' எனும் வடிவத்தில் இதை நாம் நிறைவேற்றவும் செய்தோம்... எங்களது முதன்மையான நோக்கத்தை – சுய-தெளிவை நாம் அடைந்துவிட்டிருந்தோம்.'

-கார்ல் மார்க்ஸ் அரசியல் பொருளாதார விமர்ச னத்திற்ஒரு பங்களிப்பு', 1859ன் முகவுரையில் இருந்து.

அதுபோலவே ஏங்கெல்சின் எழுத்துக்களில் இருந் தும், அவரோடு இணைந்து 'பொதுவுடமை அறிக்கை' போன்ற பல நூல்களை கருத்தொருமித்து வெளியிட்ட அனுபவங்களுக்கு ஊடாகவும் அவரது அறிவுக் கூர்மை யையும், தோழமைப் பண்பையும் உணர்ந்த கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் எழுதிய வரிகளில், மிகுந்த தன்னடக்கத்துடன் தனது தோழமை உணர்வை வெளிப்படுத்தி இருந்தார்.



'முதலாவதாக எல்லாமே எனக்குத் தாமதமதமாகவே தெரிகிறது. இரண்டா வதாக நான் எப்பொழுதும் உங்களது காலடியைத் தொடருகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்' எனக் குறிப் பிட்டுள்ளதாக கூறுகிறார் வால்கேவ்

மனிதகுல விடுதலை, முன்னேற்றம் என்பவற்றுக்காக உழைக்கின்ற உணர் வையும், உந்துதலையும், அதனை அடை வதற்கான அறிவுத் தெளிவையும் ஏற்ப டுத்தும் வரலாற்றுப் பொருள் முதல்வாத உலகநோக்கை முன் வைத்தவர் கார்ல் மாக்ஸ். அத்தகைய 'உலகை மாற்றி அமைக்கும்' செயல் முனைப்பில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க சக்திகளின் வலிமையான எதிர்ப்பை எதிர்கொள்வதில் மட்டுமல்ல, அவர்கள் தம்மைப் பாதுகாக்கும் அரண்களாக முன் வைத்திருக்கும் பல பண்பாட்டு விழுமியங்கள் மீதும் அவதானமாக இருந்தார். உலகை மாற்றி அமைக்கும் செயலுக்கு கோடிக்கணக்கான மக்களின் கருத்தொருமிப்பும், அர்ப் பணிப்பும் மிக்க நடவடிக்கைகளும் மிக அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார். அதனை அவர் வாழும் காலத்திலேயே நிதர்சனமாக 'பரிஸ் கம்யூன்' போராளிகளின் பெரும் தியாகங்களின் அனுபவங்களில் இருந்து அவரால் பெறமுடிந்தது. இதுபோன்ற பல நடைமுறை அனுபவங்களுக்கு ஊடாக மிகுந்த தன்னடக்கத்துடன் அவர் புகழை விரும்பாத மன நிலையை பெற்றிருந்தார். அவரது மனநிலையுடன் உடன்பாடு கொண்ட ஏங்கெல்சையும் இணைத்து அதனை வெளிப்படுத்தும் சமூகப் பயன்மிக்க வரிகளாக கீழ் வரும் வரிகள் அமைகின்றன.

'புகழைப்பற்றி நாங்கள் இருவரும் சல்லிக் காசு கூட பொருட்படுத்துவதில்லை. தனிமனிதத் துதி குறித்த எனது வெறுப்புக்கு எடுத்துக்காட்டு: அகிலம் இருந்த காலகட்டத்தில் எனக்குப் புகழ்பாட மேற்கொள்ளப்பட்ட ஏராளமான வியூகங்களை நான் அனுமதித்ததில்லை. அவற்றில் பல்வேறு நாடுகளில் இருந்து புகழ் விளம்பர வட்டத்துக்குள் புகுமாறு தொல்லைகள் என்னை விரட்டின. அவ்வப்போது ஒரு அறை விட்டதைத் தவிர்த்து அந்த முயற்சிகளுக்கு நான் என்றுமே பதிலளித்ததில்லை'

– 'மார்க்ஸ் உண்மையில் கூறியதென்ன?' எர்னஸ்ட் ஃபிஷர்

மனிதர்கள் ஒவ்வொருவரும் சமூகம் சார்ந்து வாழும் வாழ்வை இயல்பாகக் கொண்டுள்ளனர். அதனை மறைத்து அதீத தனிமனித வாத உணர்வை மக்களிடம் திணிக்கும் இன்றைய போட்டிப் பொருளாதார, நுகர்வுப் பண்பாட்டு அமைப்பு, மக்களை சமூக உணர்வு அற்றவர்களாக ஆக்கி வருகிறது. 'ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்' என்ற உயர்ந்த மானுடப் பண்பாட்டை உலகில் தோற்றுவித்த கார்ல் மார்க்ஸ், தனது 'சமூக நானி'ன் இயல்பு பற்றிய தன்னிலை விளக்கத்தை இங்கு சிறப்பாக முன்வைக்கின்றார்.

'ஒரு சமூக உற்பத்திப்பொருளாக எனக்கு அளிக்கப்பட்ட சிந்தனையாளர்கள் பயன்படுத்துகின்ற மொழி போன்றவை மட்டுமே எனது விடயமல்ல. எனது சொந்த வாழ்க்கையே ஒரு சமூகச் செயற்பாடுதான். இந்தக் காரணத்தினால்த்தான் நான் நானாக உருவாக்குவதை சமூகத்திற்காக ஒரு சமூக ஜீவனாகச் செயற்படுகிறேன் என்ற உணர்வுடன் உருவாக்குகிறேன்'



கார்ல் மாக்ஸின் மேற்குறித்த 'சமூக நானி'ன் அடிப்படையில் அமைந்த ஏங்கெல்ஸ் உடனான தோழமை உறவு வர்க்க, இன, மொழி, மத, பால், நிற வேறுபாடுகள் யாவும் கடந்த மானிட உறவாக மட்டுமல்ல அத்தகைய மானிட சமூக அமைப்பை உருவாக்க அயராது உழைக்கும் நாடுகள், தேசங்களின் எல்லைகள் கடந்த உழைக்கும் மக்களின், உயிர்ப்புள்ள தோழமை உறவாகவும் மலர்ந்திருந்தது. 'சுயநலத்தை நிராகரி, பொதுநலத்தை முன்னெடு' என்ற தோழர் மாஓசேதுங் அவர்களின் வார்த்தைகள் இத்தோழமை உணர்வுகளின் தொடர் வளர்ச்சிக்கு மேலும் வலுவைத் தருகின்றன. மனிதர்களுக்கு இடையே நிலவும் உறவுகளின் மேன்மையை கவிஞர்கள் 'என் உயிர் அனையாய் நீ,' எனவும் 'உயிரில் கலந்த உறவாக'வும் இலக்கிய மொழியில் பலவாறு சிறப்பித்துக் கூறுவர்.

'ஏங்கெல்ஸை தனது இன்னொரு நானாக 'இரண்டாவது நான்' (Alter Ego) என்பதாக கார்ல் மார்க்ஸ் 'பெக்லன் ஜீமர்' என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(வினவுத் தளம்)

இங்கு கருத்தால் ஒன்று கலந்தும், வேறுபாடுகளுக்கு இடம் தந்தும் நிற்கின்ற சுதந்திரமும், சமத்துவமும் நிறைந்த உறவாக இவர்களது தோழமை உறவு விரிந்த அன்பின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதை நாம் அடையாளம் காண்கிறோம். இவர்கள் மனிதகுல விடுதலைக்காக இணைந்தளித்த மாக்சியத் தத்துவம் போலவே, இவர்களது தோழமை உறவும் அவ் விடுதலை உணர்வை உந்தி முன்தள்ளும் தோழமை உறவுகளுக்கு இலக்கணமாகவும், புதிய பண்பாட்டு உறவுகளுக்கு வலிமை சேர்க்கும் புத்தாக்க உறவாகவும் மலர்ந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுக்குள் இருள்

## ஓயாதிருக்க

நீண்ட பயணங்களும்
நெடுந்துயர் வாழ்வும் எம் சொத்தென்க..
விடுதலை கீதங்களும்
விடுகதை பேச்சுக்களும் எமை நீங்காதிருக்க...
வெடிக்கும் குருதியும்
விரவிடும் குருதியும் வழிந்தே படர...
உன் விடிந்தும் விடியாத இரவுகளின்
வயது இருநூறு...

கொடுமையைக்கண்டு
கொதித்தெழும் நெஞ்சங்கள்
உனக்கான விடுதலை கீதத்தை இசைத்தபடியே
வீதிவீதியாய் வலம்வரட்டும்... அப்போதும்...

உன் கைகள்
அசைக்கமுடியா ஆணிகளாய்
பிரிக்கமுடியா அடிமை அரசியலை வணங்கட்டும்...
இந்திய வீதிகளின்
பஞ்சவர்ணங்கள் உனக்கு கிளுகிளுப்பூட்டட்டும்...
உனதறியாமை கிணற்றில்
வழியும் ஊற்று வற்றாமலிருக்கட்டும்...

உன் நிம்மதியை பறிக்கும்
ஆழிகளின் ஓசை மறைக்கப்படட்டும்..
அணைய மறுக்கும் தீப்பொறிகள்
அவரவர் தேவைகளுக்காய் அடக்கப்படட்டும்...

ஓ...ஓ... மானிடா...
மானுட எதிரலைகள்
கடலலையை ஒத்தவை
ஓயாது ஆர்ப்பரிக்கும்...
உன் ஐம்புலன்களும்
இனிப்புத்தடவிய விசயங்களை
உண்டு கிடக்கட்டும்...அப்போதும்
ஆயிரமாயிரம் கணங்கள் கடந்தும்
ஓயாமல் ஆர்ப்பரிக்கும்
மானுட எதிரலைகள்
கடலலையை ஒத்தவை..
ஓயாமல் ஆர்ப்பரிக்கும்....

**செம்மலர் மோகன்**

விடியலுக்கு முன் வருவதும்,
இருண்ட பின் செல்வதும்,
வாடிக்கையாகிவிட்டது.
பிள்ளையின் அகம் பார்த்து
மகிழவும்,
மனைவியின் முகம் பார்த்து
பகிரவும்,
மண்ணெண்ணெய் விளக்குக் கூட
மறுதலிக்கும்.
சேற்று நீரில் புதைந்து புதைந்து
என் கணுக்கால்கள்
நிறம் மங்கிவிட்டன.
கடனில் விதைத்த விதையும்,
அடகுப் பணப் பசளையும்,
வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி
வளர்த்த பயிரும்,
பருவம் சுமந்து தலை கவிழ்ந்தன.
பிசகு நேர்ந்திடாமல் இருக்க
வேண்டாத கடவுளில்லை,
வைக்காத நேர்த்தி இல்லை.
பல நாள் தவம் வரமாகும் நேரம்
நெற்களைப் பிரித்து;
பொறிக்குள் இறக்கி;
தவிட்டை நீக்கி;
மூட்டையில் அடைத்து;
ஆயிரம் ஆசைகள் அகத்தில் விரிய
விளைச்சல் பணமானபோது;
பட்ட கடனில் பாதி தேறவில்லை.
இந்த லட்சணத்தில்!
கண்ட கனவு எப்படிப் பலிக்கும்?
நேர்ந்த நேர்த்தி எப்படி மெய்க்கும்?
அடுத்த விளைச்சலுக்கு!
யாரிடம் கை நீட்ட?
எதை அடகு வைக்க?
எந்தக் கடவுளை நான் கேட்க?
மீண்டும் ...!
விடியலுக்கு முன் வருவதும்!
இருண்ட பின் செல்வதும்!
வாழ்க்கையாகிவிட்டது.

**மை.பன்னீர்செல்வம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புமிகு திருமதி கோ. ந. மீனாட்சியம்மாள் அவர்களுடனான கற்பனை உரையாடல்

'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டது

பூண்டுலோயா வித்யா




உரையாடல் இடம் பெற்ற ஸ்தானம்:: மல்லியப்பு, அட்டன்

திகதி: 23.05.1940

வித்: வணக்கம் அம்மா. தோட்டத் தொழிலாளர்கள் படும் கஸ்டங்களைப் பற்றி பாடல்கள் எழுதி இருக்கிறீங்க. பல தோட்டங்களில் உங்களது பாடல்களைப் பக்தியோடு பாடி வருகின்றார்கள். நீங்களே பாடிக் காட்டியும் இருக்கின்றீர்கள். உங்களது கணவர் மதிப்புமிகு கோ. நடேசையர் அவர்களும் தோட்டங்களை உருவாக்கிய இந்திய ஜனங்களின் சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றார். உங்கள் இருவரினதும் பங்களிப்பை வரலாறு மதிக்கும். ரொம்ப நன்றி அம்மா. உங்கள் புஸ்தகம் பற்றி கொஞ்சம் சொல்லுங்க. ஏன் அது வெளியிடப்பட்டது? விளக்கமாக சொல்லுங்கள்.

மீனா: வணக்கம்... என்ன சந்திக்க நேரடியா வந்திருக்கிறீங்க. முதல்ல நன்றி சொல்லனும். எங்களது கருத்துகள் நமது மக்களை அடைய வேண்டும். அதை நீங்கள் செய்ய வேண்டும். எமது நோக்கத்தை சொல்கிறேன் எழுதிக் கொள்ளுங்கள்.

இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிக் கொண்டே வருகின்றது. இலங்கை வாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேரந்து தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்காக தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடையே பிரச்சாரம் பாட்டுகள் மூலமாகச் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாடல்கள் மூலம் எடுத்துக் கூற முன் வந்துள்ளேன். இந்தியர் களைத் தூக்கதில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்கு தீரமாகப் போராடும்படி அவர் களை இப்பாட்டுகள் தட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது அவா.

வித்: மிகவும் நன்றி அம்மா. தெளிவான விளக்கம் சொன்னீர்கள். பாரத தேவியை முன் வைத்து பாடல் ஒன்று எழுதி இருக்கிறீர்கள் அம்மா. அதற்கான காரணம் என்ன?

மீனா: பாரதத்திலே சுதந்திரப் போராட்டம் நிகழ்கிறது. பல வழிகளைப் பயன்படுத்தி போராடுகிறார்கள். பாரதியார் சுதந்திர தேவியை அழைத்து பாடுகின்றார். நாட்டுப்பற்றை வளர்க்க, சுதந்திரம் பெற உயிர் தியாகம் கூடச் செய்கின்றார்கள். தேசப்பற்று வளர்கின்றது. பாரத தேவி சுதந்திரத்தின் சின்னம். அதை பின்பற்றி நமது மக்களும் வெள்ளைக் காரர்களிடமிருந்தும், உள்ளூர் தேசத்து இந்திய வெறுப்பாளர்களிடமிருந்தும் விடுதலை பெற பாடியுள்ளேன். இதை கேளுங்கள்.

**பாரத நாட்டினிலே தீரத்தைப் படிப்போம்**
**பாரத தேவியைப் பாடிப் பாடியே கொண்டாடுவோம்**
**ஏழைக் கண்ணீர் வடிய நாமும் பார்க்கலாமா**
**ஏளனம் செய்வோரை நம்மில் சேர்க்கலாமா**
**கோழைகளல்ல வென்று கூறிக் கூறியே நாம் கூடுவோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்: பாடல் அருமையாக உள்ளது அம்மா. சிறப்பான விளக்கம் கொடுத்தீர்கள். நமது மக்களின் வரலாறு பற்றி கொஞ்சம் கூறுங்கள்.

மீனா: நமது வரலாறை நீங்கள் கட்டாயம் தெரிந்துக் கொள்ள வேண்டும். வரலாறை மறந்த சமூகம் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. கேளுங்கள் கண்டி சீமைக்குப் போனால் நல்ல படியாக வாழலாம் என்று சொல்லித் தான் நமது மக்களை அழைத்து வந்தார்கள். வரும் வழியிலேயே பலர் இறந்து போனார்கள். 'ஆதி லட்சுமி' என்கிற கப்பல் கடலிலே மூழ்கிப் போச்சு (கண்களைத் துடைத்துக் கொள்கிறார்). மன்னாரில் இருந்து கால் நடையாகவே வந்து சேர்ந்த மக்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து இந்த நாட்டை பசுஞ்சோலையாக்கினார்கள். இந்தப் பாடலைப் பாருங்கள்.

**பாய் கப்பல் ஏறியே வந்தோம் அந்நாள்**
**பல பேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம்**
**தாய் நாடென்றெண்ணி யிருந்தோம் இவர்கள்**
**தகாத செய்கைக் கண்டு மனமிக நொந்தோம்**

வித்: ஆஹா அருமை... அருமை.

மீனா: அது மட்டுமா? இந்த பணம் தரும் சோலைகளை உருவாக்க எத்தனை உயிர்களை ஈடாகக் கொடுத்தோம் தெரியுமா?

**பொழில் சூழும் அழகிய சிங்கார நாடு**
**புலி இதற்கு இந்தியர் ஆடுகளைப்போல**
**பல்லாயிரம் பேர்கள் உயிரிதற்கு ஈடு**

**அன்ராச புரம் பாதை தனிலே**
**ஐயோ இந்தியர்கள்**
**துன்புற்று மாண்ட கதை உங்கள் நெஞ்சை**
**துளைத்துச் சென்றிடுமே**

(மீண்டும் கண்களைத் துடைத்துக் கொள்கின்றார். சற்று ஓய்வெடுத்து மீண்டும் தொடர்கின்றார்)

மீனா: இந்தியாவிலிருந்து வந்த போது வெறும் மனுசங்களாக மட்டும் வரவில்லை. மொழி, கலை, பண்பாடு, தன்னலம் பாராத உழைப்பு, பயிர் செய்தல் பற்றிய விசயங்கள், வழிபாடு, நம்பிக்கைகள், மனிதாபிமானம், ஒற்றுமை மனப்பாங்கு போன்ற எல்லாவற்றையும் கொண்டு வந்து கொடுத்தது நாங்கள். இன்று நன்றி கெட்ட கூட்டம் இப்படி பேசுவதை தாங்க முடியாமல் இருக்கிறது. பாடுகின்றேன் நன்றாகக் கேளுங்கள்

**காட்டைத் திருத்தினது இந்தியனாலே நீங்கள்**
**கற்றுக் கொண்டு பேசுவதும் இந்தியனாலே**
**நாட்டைத் திருத்தினதும் இந்தியனாலே**
**நன்றி கெட்டுப் பேசுவது ஆகாது சொல் மேலே**

வித்: இவர்கள் இந்தியர்களை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பதற்கான காரணங்களைக் கூற முடியுமா?

மீனா: இங்குள்ளவர்களுக்கு தோட்டப் பகுதிகளுக்குச் சென்று உழைக்க முடியாது. நாட்டை ஆளும் வெள்ளைக்காரன்கள் பலமுறை கூப்பிட்டும் இவர்கள் வரவில்லை. அதனால் தான் இந்தியாவிலிருந்து எங்களை ஏமாற்றிக் கொண்டு வந்தான். இப்போது இங்கு வேலை இல்லையாம். எனவே நாங்கள் வெளியேற வேண்டுமாம். இவர்கள் போன்ற சோம்பேறிகளுக்கு வேலை இல்லை தான். கடுமையாக உழைப்பவர்களுக்கு போதுமான வேலை உண்டு. மூளைக் கெட்ட மாதிரி பேசுவதனால் என்ன பயன் உண்டு சொல்லுங்கள். இந்த நாட்டை உருவாக்கியவர்கள் மீது கொஞ்சமாவது நன்றி இருக்கின்றதா? சொல்லுங்கள் பார்ப்போம்.

**எத்தனை பேர் இருந்தாலும் இலங்கையில் வேலையுண்டு**
**இதங் கெட்ட சோம்பேறிகட்கு எங்கும் கஸ்டம் கண்டு**
**பித்தனைப் போல் திரிந்தலைந்து பேசிப் பேசிக் கொண்டு**

**நூறு வருசந் தொட்டு லங்கையிலே**
**நேர்மையாய் வேலை செய்தும்**
**பாருங்கோ நன்றி கெட்ட மனிதரின்**
**பட்ச பாதகச் செயலை**

இவர்களிடம் பேதமை தான் உள்ளது. ஒற்றுமை என்ற எண்ணமே இல்லை. இந்த புத்தி கெட்ட மந்திரிகள் நம்மை விரட்டப் பார்க்கிறார்கள்.

**இந்தியத் தொழிலாளர் இங்கு வந்தார்கள்**
**இலங்கையைச் செழிக்கவே செய்து தந்தார்கள்**
**மந்திரிகள் மயக்கத்தில் மதி மறந்தார்கள்**
**மனம் வந்த படி சட்டமாக்கப் பிறந்தார்கள்**

வித்: இந்திய தொழிலாளர்கள் இந்த நாட்டுக்குச் செய்த வேறு சேவைகள் பற்றியும் சொல்லுங்கள் அம்மா.

மீனா: செத்து போனது போல் கிடந்த இவர்களுக்கு உயிர் கொடுத்து எழுந்து நிற்கச் செய்தது நமது மக்களே ஆவர். கற்பாறைகளைக் குடைந்து ரயில் பாதைகள் அமைத்தார்கள், புகைக் கோச்சியில் பயணங்கள் செய்ய உழைத்தார்கள், லொறி சேவை, துறைமுகங்கள் எல்லாம் ஆக்கித் தந்தார்கள். இவ்வாறு நாட்டை வளப்படுத்திய எங்களை துரோகிகள் விரட்டப் பார்க்கிறார்கள். எங்களால் தான் அவர்கள் உசிரே பிழைத்திருக்கிறது என்பதை மறந்து விட்டார்கள். அதைத் தான் இப்படி பாடினேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைக்கு உயிர் கொடுத்தால் போலே உங்கள்
காரியங்கள் இந்தியரி னாலே
வெட்ட வெளிச்சமான தாலே இப்போ
விரட்ட நினைத்தீர் மனம் போலே

நூறு வருசங்கள் முன்னாலே இலங்கையின்
நேர்த்தி தான் எப்படி இருந்த தென்று
பாருங்கள் பங்களா தோட்டங்கள் தேட்டங்கள்
பண்பாய் அமைந்து விளங்குவதை

அது மட்டுமா? பொது விசயங்கள் தெரியாமல் கிடந்த இவர்களுக்கு நாகரிகமாக வாழ பழக்கி யதும் நமது இந்தியத் தொழிலாளர்கள் தான். ஆனால் இது கலிகாலம் எது நீதி? எது அநீதி? என தெரியாத காலமாக இருக்கின்றது.

உய்யவும் அறியாது உடுக்கவும் தெரியாது
ஊமைகளைப் போல் திரிந்து
மண் மலைக் காடு செடி சஞ்சாரம் செய்திடும்
மதியில்லா வேங்கையது போல்
திண்ணெனத் திரிந்திட்ட பேர்களை
இந்தியர்கள் திருத்தியே தானெடுத்து
கண்ணெனச் செய்ததால் வந்த விபரீதமிது
கலிகால நேர்மை தானே

வித்: இனவாத அடிப்படையில் தான் மக்களை வெளி யேற்றப் பார்க்கிறார்கள். அப்படித் தானே?

மீனா: இனவாதம் இனவாதம்! இது தான் இந்த மந்திரி களின் போக்கு. சாதாரண மக்களுக்கு இது பற்றித் தெரியாது. கிராம மக்களும் தோட்டத் தெழிலாளர் களும் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்கிறார்கள். ஆனால் இனவாத மந்திரிகள் அப்படியல்ல. இந்த நாட்டை உருவாக்கிய அனைவரும் ஒற்று மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாதவர்கள். அதிலும் நமது மக்கள் பெருந் தொகையாக இருப்பது அவர்களுக்கு பிடிக்கவே இல்லை. அதை தான் இப்படி எழுதினேன்.

சிங்கள மந்திரிகளின் கூற்று மிக
சீரு கெட்டதென்னு சாற்று
சங்கடமே நேருமென தோற்று இந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

வித்: உங்களது கருத்துகளையும் பாடல்களையும் கேட் கும் போது கோபம் தான் வருகிறது. நன்றி கெட்ட கூட்டம் இந்த நாட்டில் வாழ்கிறது. இந்த நாட்டை வளப்படுத்திய நாமும் தலை நி;மிர்ந்து வாழ என்ன செய்ய வேண்டும்? அம்மா விளக்கமாகச் சொல்லுங்கள்.

மீனா: ஒற்றுமை - ஒற்றுமை தான் ஒரே வழி. தோட்டங் களில் உள்ள மக்கள் ஒன்று சேர வேண்டும்.

திருமதி கோ. ந. மீனாட்சியம்மாள்

*மலையகத் தமிழ் கவிஞர், எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர். இவரின் பல கவிதைகள் மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைத்து, அவர்களை தமது உரிமைகளுக்காகப் போராடும்படி தூண்டி அமைந்துள்ளன. இவர் மலையகத்தின், ஈழத்தின் முதல் பெண் கவிஞர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். இவர் மலையக அரசியல்வாதியும், தமிழறிஞரும், பதிப்பாளருமான கோ. நடேசய்யரின் மனைவி ஆவார்.*

இந்தக் கும்மி பாடலை எல்லோரும் பாடுங்கள்.

இலங்கை வாழ் இந்தியர் நலவுரிமை கோரி
ஏற்படப் போகின்ற போர் தனக்கே
பலமாய் எதிர்த்திட வேணும் நாமெல்லோரும்
பண்பாகக் கூடியே வாருங்களே

இந்தியர்கள் ஒன்று கூடி இனிதுரிமை தேடி நமக்கினிது உரிமை
சொந்தமாக ஒன்று கூடி சுதந்திரத்தை நாடி
சிந்தனை செய்து எல்லோரும் சீக்கிரமே கூடி
ஜெயம் பெறுவோம் வந்திடுவீர் சிரத்தையுடன் ஓடி

வித்: சிறந்த விளக்கம் அம்மா. உங்களது அறிவூட்டலை வரலாறு சொல்லும். இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

மீனா: சுய நலம் பார்க்காது மக்கள் சேவைக்காக பலரும் உழைக்க வேண்டும். அதுவே ஒருவனது வாழ்க் கையை பயனுறச் செய்யும். இந்தப் பாடல்களை நீங்களும் பாடுங்கள் பார்ப்போம்.

பொது ஜன சேவையே புனித வாழ்க்கை
புகன்றிடுவோம் நாமே
இதமுறு சுவர்க்க இன்பமும் உண்டென
இயம்பிடுவோம் நாமே
உடல் பொருள் ஆவியை உலகுக்களிப்பதே
உண்மையான தியாகம்

எமது காரியாலயத்தில் பல புஸ்தகங்கள் உள்ளன. அவற்றைப் படியுங்கள். மீண்டும் மீண்டும் சொல் கிறேன். ஒற்றுமையே பலம். உங்களைப் போன்ற மாதர்கள் துணிவுடன் முன் வர வேண்டும். நன்றி வணக்கம்.

வித்: நன்றி அம்மா. உங்களது அறிவுரைகளை மக்கள் பின்பற்றி நடப்பார்கள். நமக்கும் ஒரு வரலாறு எழுதப்படும். ஐயாவுக்கும் நன்றி. வெல்க உங்கள் மக்கள் பணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியா இருளுள்


குடும்பத் தலைவனின் குரல்:

ஆண்டாண்டு காலமாக அப்பன், பாட்டன் எல்லாரும்
தோண்டி நிலத்தைத் தேயிலைச் செடி வளர்த்து
மாண்டு போனாலும் அச்செடிக்கு உரமாகி
வேண்டுவது எல்லாம் வெளிச்சமான நல்வாழ்வு
கூண்டுக் கிளிபோல குச்சுக்குள் வாழாமல்
தாண்டும் பள்ளம் மேடுஇனிமேல் தாவ முடியாமல்
சீண்டும் வயோதிபமும் நெருங்கி வருவதனால்
மீண்டும் ஒருபிறப்பு வேண்டுவதோ இம்மாநிலத்தே?



குடும்பத் தலைவியின் குரல்:


அட்டைக் கடியும் அரிய வழிநடையும்
கட்டை இடறலும் கண்டலுத்த வாழ்வினிலே
மட்டமான புகையிலையை வாய்க்குள் ஊறவிட்டு
தட்டினாலும் விழாது... உறிஞ்சும் அட்டைக்கு
'பட்டெனத் துப்பினால் பாவியென் இரத்தத்துடன்
மொட்டைக் கறுப்பன்போல் கழன்று விழுகிறதே
ஏட்டையும் தொடாத இவ்வேழையின் விம்மல்
நாட்டிலுள்ள மக்களின் செவியில் கேட்கிறதா?



எங்களது வாழ்வுதான் இத்துடனே நிற்கட்டும்
"தங்களுக்கு நல்லுணவு, தரமான கல்வியுடன்
பொங்கும் புதுவாழ்வு பெற்றவர்கள் தரவேண்டும்
மங்காமல் நாங்கள் மனிதராக வாழ்வதற்கு
உங்களிடம் கேட்கின்றோம்" என்ற குழந்தைகட்கு
எங்களால் இயன்றவரை அல்லும் பகலும்
அங்கும் இங்கும் அலைந்து உழன்றாலும்
கங்குல் விடியாத காரிருளில் வாழ்கின்றோம்!

பள்ளி செல்லும் குழந்தைகளின் குரல்:

ரொட்டியும், தேனீரும் ஒட்டிய வயிறுமாக
முட்டி முடங்கிய அரைகுறை நித்திரையும்
பட்டப் படிப்புவரை படித்துவிட ஆவலுண்டு
"கெட்டித் தனமாக இரவெல்லாம் கண்விழித்து
சுட்டித்தன மாணவராய்... ஆழ்கின்ற வறுமையை
எட்டி உதைத்து எத்தனித்துப் படிப்போ"மென்றால்
கொட்டும் துயர் போதாதென்று 'கொரோனா'வே நம்மை
நட்ட நடுவழியில் மறந்தும் தொடராதே...!



**வள்ளியம்மை சுப்பிரமணியம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சி.குமார் உடனான சில நினைவலைகள்

## மொழிவரதன்

எமது வாழ்வின் சில பக்கங்கள் பசுமையானவை, மறக்க முடியாதவை. வாழ்வில் நாம் சந்திக்கும் பல்லாயிரம் மனிதருள் ஒரு சிலரே எமது உள்ளத்தில் ஆழ்ந்து உறைபவர்கள் ஆவர். அந்த வரிசையில் எனது வாழ்நாளில் நான் சந்தித்த மனிதருள் அமரர் மல்லிகை சி.குமார் அவர்கள் முக்கியமானவராகத் திகழ்கின்றார்.

பல கவி அரங்குகளில் நானும் அவரும் ஒன்றாகப் பங்கேற்று இருக்கின்றோம். மேலும் சில கவியரங்குகளில் அவர் கவி பாட நான் கேட்டிருக்கின்றேன். அவரது கவிவரிகள் அரசியல் சார்ந்தவை. ஆனால் அவை ஒரு வகையில் இதிகாசக் கதையைப் போல தொடரும். மிக நாசூக்காக கதைகளைப் பின்னி பிற்போக்கு அரசியல் வாதிகளை எள்ளி நகையாடுவதில் அவர் வல்லவராக விருந்தார்.



மல்லிகை மலர் போல மலரும் அவரது முகம் எவரையும் நோக வைத்ததாக நான் அறியவில்லை. சிந்தாமணியில் அவர் எழுதிய 'ஒரு கட்டு விறகு' தொடக்கம் அவர் இறக்கும் வரையில் எழுதிய கதை களில் மலையக மாந்தர்களை முன் னிலைப்படுத்தி அவர்களது பிரச்சி னைகளை முன்னிறுத்திப் பல கதைகளை எழுதினார்.

சாரல் பதிப்பக வெளியீடாக 'மனுசியம்' என்ற தலைப்பில் சிறுகதை தொகுதி வெளிவந்தது. மறைந்த எழுத்தாளர் சாரல்நாடன் இவ்வெளியீட்டுக்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கியிருந்தார். வெளியீட்டுக்குப் பின் னரான காலப்பகுதியில் குறித்த கதைகள் பற்றி பல முறை விரிவாக உரையாடினோம். தொலைபேசியில் நீண்ட உரையாடல்களை மேற்கொண்டோம். அடித் தட்டில் வாழும் உழைக்கும் மக்களின் நாடி நரம்பு களைப் பிடித்துப் பார்த்து எழுதும் அவரது ஆற்றல் எல்லோருக்கும் கைவராது எனலாம்.

குமார் அவர்கள் எனது குடும்பத்தினருடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார். எனது அண்ணன், தோட்ட அலுவலகத்தில் இலிகிதராக, பிரதம குமாஸ்தாவாக கடமை புரிந்த போது அறிவிப்பு பலகைகள் எழுதுவது தொடர்பான குமார் அவர்களின் ஆற்றல்களை அறிந்து அதற்கேற்ப பல தோட்டங்களின் பெயர்கள் மற்றும் அறிவிப்புகளை எழுதுவதற்குரிய பணியை ஒப்படைத்தார். 'ஒரு கட்டு விறகு' என்னும் கதை அவரை மிகவும் கவர்ந்திருந்தது. என்னை சந்திக்கும் வேளைகளில் குமார் அவர்களின் நினை வாற்றல், படைப்புகள் பற்றி சிலாகித்து பேசுவார். அவரது அணுகுமுறையை வியந்து போற்றுவார்.

நான் அவரது வீட்டுக்குச் சென்று இலக்கியம் மற்றும் செயற்பாடுகள் குறித்து உரையாடுவது உண்டு. அவரும் இத்தகைய கலந் துரையாடல்களில் ஈடுபடுவதற்காக எங்கள் வீட்டுக்கு வருகைத் தருவார். அவரது வரவேற்பும் உபசரிப்பும் உயர்ந்த மானுடனுக்குரிய தன்மைக ளைப் பிரதிபலிக்கும்.

எனது மனைவி ஒரு சித்திரப்பாட ஆசிரியர் ஆவார். அதன் காரணமாக குமாருடனான தொடர்பு மேலும் பலம் பெற்றது. கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஒரு சித்திரக் கூடம் அமைக்கப்பட்டது. அதில் குமார் அவர்களின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் அவரை பாடசாலையிலுள்ள ஆசிரி யர்களுக்கும் மாண வர்களுக்கும் அறிமுகப்படுத்தியுள்ளார். அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் மிகுந்த தன் னடக்கத்துடன் புன்னகையை சிந்தும் ஒருவராக இருந்தமையை அவர் இன்றும் நினைவு கூருகின்றார்.

ஆசிரியர் எஸ். யோகேஸ்வரனின் மகன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த போது மலையக படைப்பாளி ஒருவருக்கான பாராட்டு மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவம் வழங்க வேண்டும் என்றும் அதற்குப் பொருத்தமான ஒருவரை அறியத் தருமாறும் கேட்டுக் கொண்டார். இந்த கோரிக்கை தொடர்பில் கொட்டகலை தமிழ்ச் சங்கத்தில் கருத்துகளை முன் வைத்தபோது கவிஞர் சு.முரளீதரன் உள்ளிட்ட அனைவரும் மல்லிகை குமார் அவர்களை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இந்த முடிவை பல்கலைக்கழகத்தக்கு அறிவித்ததன் அடிப்படையில் குறித்த பாராட்டை அவர் நேரடியாகவே சென்று பெற்றுக் கொண்டார்.

2018-ம் ஆண்டு மாத்தளையில் இடம் பெற்ற தமிழ்மொழித்தின விழாவில் கௌரவம் பெறுவதற்கான பெயர் பட்டியலில் குமார் அவர்களின் பெயரும் இடம் பெற்றிருந்தது. எனக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இருவரும் சென்று குறித்த கௌரவங் களைப் பெற்றுக் கொண்டோம். உறவு மேலும் வலுவானது.

தமிழ்மொழித்தின போட்டிகளில் சிறுகதை போட்டிக் கான தெரிவுக் குழுவில் இருவரும் ஒன்றாகக் கடமை யாற்றியுள்ளோம். கதை தெரிவுகளில் இருவரது புள்ளி களும் ஒரே மாதிரியாக அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

அவர் நோய் வாய்ப்பட்டிருக்கும் போது வீட்டுக்கும் வைத்தியசாலைக்கும் சென்று சுகம் விசாரித்துள்ளேன். அந்த நேரங்களில் நோயை மறந்து இலக்கிய படைப்புகள் பற்றியே அவர் கரிசனை கொண்டிருந்ததை எண்ணி பெருமைப்படுகின்றேன்.

மல்லிகை சி குமார் அவர்கள் ஒரு ஓவியராக, கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, நாடக நடிகராக திகழ்ந்துள்ளார். அவரது சுய தேடல்களும் மக்களுக்கு இலக்கியம் படைக்கும் ஆற்றல்களும், நேர்மை, உழைப்பு, அர்ப்பணிப்பு போன்ற பண்புகளும் இளம் படைப்பாளிகளுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும். அவரது படைப்புகள் குறித்த ஆய்வுகள் மேலும் வெளிவர வேண்டும்.

அச்சில் இருக்கும் எனது கவிதை தொகுதியான "பேனையை கீழே வைத்துவிடாதே" குமார் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமை யுடன் பதிவு செய்கின்றேன். ❍

## இரு சிறுவர் கதை நூல்கள் அறிமுகம்



சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்களாக 'பென்குயின் பயணம்'. 'நண்பர்கள்' என இரு நூல்கள் 2020இல் வெளிவந்துள்ளன. யோகராணி கணேசன், கனிசா கணேசன், கஷ்வினி கணேசன், கேவின் கணேசன் ஆகியோர் இந்தக் கதைகளை எழுதியுள்ளனர். நோர்வேஜியன் சிறுவர்கதைகளைத் தழுவி எழுதப்பட்டுள்ள கதைகளைச் சிறுவர்களே எழுதியுள்ளதுடன் ஓவியங்களையும் அவர்களே வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பென்குயின் பயணம் என்ற நூலுக்கு அணிந்துரையைக் கவிஞர் மேமன்கவியும், நண்பர்கள் என்ற நூலுக்கு அணிந்துரையை வவுனியா கல்வியியல் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி க சுவர்ணராஜாவும் எழுதியுள்ளனர்.

இத்தொகுப்பைப் பொறுத்தவரை புலம்பெயர் தமிழரின் மூன்றாம் மற்றும் நான்காம் தலைமுறை சார்ந்த சிறார்களை மனம் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இத்தொகுப்பு முயற்சி புதியதும் பாராட்டத் தக்க ஒரு பணியும் ஆகும் என மேமன்கவி குறிப்பிட்டுள்ளார்.

எமது மரபு வழியான கதைகளிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ள இக்கதைகள் பெரும்பாலும் பிள்ளைகள் தாம் விரும்பும் கதாபாத்திரங்களைக் கொண்டமைந்துள்ளன. வசன அமைப்புகள் பிள்ளைகளின் வசன அமைப்புகளாகவே உள்ளன. இக் கதைகளை வாசிக்கும் பிள்ளைகள் தம்மாலும் எழுதமுடியும் என்ற தன்னம்பிக்கை பெறுவார்கள் என்பது எனது மதிப்பீடு ஆகும் என க. சுவர்ணராஜா குறிப்பிட்டுள்ளார்.



பென்குயின் பயணம் நூலில் பென்குயின் பயணம். காயாவும் அவனது கோபமும். நீங்கள் வளர்ந்து என்ன தொழில் செய்யப்போகிறீர்கள்?, சோழன் மிதியுந்து ஓட்டப்போட்டியில்..., என்ற நான்கு கதைகளும் நண்பர்கள் நூலில் சிறுவனும் தானியங்கியும், ஒரு காட்டுப் பயணம், இரண்டு நண்பர்கள், எனக்கு உங்களின் மேல் எவ்வளவு பாசம் இருக்கிறது என்று தெரியுமா?, எதிரிகள் என்ற ஐந்து கதைகளும் இடம்பெற்றுள்ளன.

இக்கதைகளை சுன்னாகம் நூலகத்தில் இடம்பெற்ற எங்கட புத்தகங்கள் கண்காட்சியில் சிறுவர்கள் கதைகூறல் நிகழ்வாக அறிமுக நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. எங்கட புத்தகங்கள் புத்தகசாலையிலும் புத்தக பண்பாட்டு வலையமைப்பு மூலமாகவும் யாழ்ப்பாணத்தில் இப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாசிப்பே வாழ்வை வளமாக்கும்

ஜோ. ஜெகன்

மனித வரலாற்றில் மிகவும் சுவாரசியமான விடயங் களில் ஒன்றாக புத்தகங்களின் உருவாக்கம் அமைந் துள்ளது. ஆரம்ப காலங்களில் மனிதன் தனது தகவல் களைத் தொகுத்து கல்வெட்டுகள், எரிந்த களிமண் தட்டுகள், ஓலைச் சுவடிகள் போன்றவற்றில் இயற்கை சாயங்கள், கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி பதித்து வைத்தான். ஆயினும் 15-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் காகித வருகையுடனும், அச்சு இயந்திரத்தின் வருகை யுடனும் புத்தக உருவாக்கம் மாபெரும் தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புபட்ட புத்தகங்களின் உருவாக்கம் மனிதனின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விலங்குகளின் வாழ்க்கை முறை கூட மாற்றமடைந்து செல்கின்றது. உதாரணம் மலையக பகுதிகளில் காணப்படும் குளவிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கூட்டமாகச் சென்று தாக்குகின்றன. இவ்வாறிருக்கையில் மனிதர்களின் பண்பாட்டு வளர்ச்சி என்பது இவற்றைக் காட்டிலும் மாபெரும் வரலாற்றுப் படிநிலைகளைக் கொண்டது. அது மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்து பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை அடைந்து வந்துள்ளது. முன்னோர்களின் அனுபவங்களையும், அறிவையும் எடுத்துக் கொண்டு அவர்கள் விட்ட இடத்திலிருந்து வாழ்வைத் தொடர்வதாலேயே மனித வாழ்வு வளர்ச்சியடைந்துள்ளது. முன்னோர்களின் அனுபவங்களையும், அறிவையும் எடுத்துக் கொண்டு அவர்கள் விட்ட இடத்திலிருந்து வாழ்வைத் தொடர்வதாலேயே மனித வாழ்வு வளர்ச்சியடைந்துள்ளது. அதில் புத்தகங்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

நூல்கள் வாசிப்பது என்பது ஓர் அற்புதக் கலை. கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரடீசுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு தனக்குக் கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டே இருந்தாராம். இலிபியா நாட்டு உமர் முக்தர் என்ற புரட்சியாளர் தூக்குக் கயிற்றை அவரது கழுத்தில் மாட்டும் வரை படித்துக் கொண்டிருந்தாராம். இலண்டன் நூலகத்தில் இருபது ஆண்டு காலம் படித்து ஆய்வு செய்த கார்ல் மார்க்ஸ் தான் பின்னாளில் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தையாக விளங்கினார். இவ்வாறு புத்தகங்களின் மகத்துவத்தையும், அதனால் உருவான வல்லமைகளையும் பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம். ஆயினும் இவ்வாறான மகத்துவத்தையும், பண் பாட்டையும் கொண்டுள்ள புத்தகங்களும், வாசிப்பு பழக்கமும் இன்றைய சூழலில் எவ்வாறான நிலையில் இருக்கின்றன என்பது கேள்விக்குட்படுத்த வேண்டிய ஒன்றே. ஒரு விடயத்தைத் திரும்ப திரும்ப சொல்லவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். ஒரு காலத்தில் படிக்காத மக்களிடம் போய் படியுங்கள் என்று சொன்னதைப் போல் இன்று படித்தவர்களிடம் போய் படியுங்கள், படியுங்கள் என்று சொல்ல வேண்டியுள்ளது.



புத்தகங்கள் என்பது ஒரு வெற்றுப் பொருளோ அல்லது வணிகப் பொருளோ இல்லை. மாறாக அது ஒரு எழுத்தாளனுடைய வாழ்வும், ஒரு மொழியினுடைய தொன்மையும் சேர்ந்த ஒரு உயிருள்ள ஜீவநாடியாகும்.

நம்மை மேம்படுத்திக் கொள்ளவும், நமது அனுபவங்களை மேம்படுத்திக் கொள்ளவும் மேலும் உலகத்தையும் உங்களையும் இணைப்பதற்குப் புத்தகங்களை தவிர வேறு வழி என்ன இருக்கிறது.

இன்றைய இளைஞர்கள் அனைவ ரையும் குறிப்பிடவில்லை. ஆனால் புத்தக வாசிப்பைத் தேவையற்றதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்ற இள வட்டங்களின் சமுதாயம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

எழுத்தாளர் எஸ். ரா அவர்கள் இதனை பின்வருமாறு வருத்தத்துடன் விபரிக்கின்றார். 'ஒரு புத்தகத்தின் வாசகன் என்ற வகையில் அதே புத்தகத்தை வாசித்த இன்னொரு வாசகனைத் தேடிச் சந்தித்து, புத்தகத்தை எழுத்தாளரைப் பாராட்டியும், கேள்வி கேட்டும், கோபித்துக் கொண்டும் பேசி மகிழ்வதற்கு இணையாக வேறு என்ன சுகம் இருக்கிறது? அந்த சந்தோஷத்தை ஏன் இந்த தலைமுறை தேவையற்றதாக கருதுகிறது."

நமது தமிழ் சமுதாயம் ஆரம்ப காலங்களில் இருந்து இன்றைய நவீன காலம் வரையில் இலக்கியங்களால் எடுத்துக் கொண்டுவரப்பட்ட ஓர் உன்னத பண்பாட்டைக் கொண்டுள்ளது. ஆனால் இன்றைய சூழலில் ஆசிரியர், கல்வித்துறை சார்ந்த பலர் புத்தக வாசிப்பில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாகவும், புத்தகங்களை நேசிப்பவர் களாகவும் இருக்கின்ற போதிலும் மற்றொரு பாலார் புத்தங்கள் வாசிப்பதையோ வாழ்க்கையையோ தங்கள் கையில் ஒப்படைத்துள்ள மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாசிப்பதை ஊக்குவிக்கின்றார்களா என்பதை சிந்தனைக் குள்ளாக்க வேண்டியுள்ளது.

இங்கு பாடப்புத்தகங்கள் படிப்பதும், நாம் பட்டம் பெறும் துறைசார்ந்து படிப்பதும் நமது கல்வித் தகுதிக் கானது. அதற்கும் புத்தகம் படிப்பதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. யார் வேண்டுமானாலும் வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் கல்வித் தகுதியைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் புத்தக வாசிப்பு என்பது ஓர் உணர்வு, ஒரு விருப்பம். அதை அவரவர் விருப்பில் அவர்தான் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

இன்றையச் சூழலில் புத்தகங்கள் படிப்பதால் எதையும் மாற்ற முடியுமா? காகிதங்கள் படிப்பதைவிட முதலில் மனித உணர்வுகளை அல்லவா படிக்க வேண்டும் என்றால் புத்தகங்ககளை வெறும் காகிதங் களாக பார்ப்போர் பார்வையில் மட்டுமே அம்மாதிரியான கருத்துகள் வரலாம். அவை வெறும் காகிதங்கள் அல்ல.



அவை ஒரு எழுத்தாளனின் உணர்வு வெளிப்பாடுகள். ஒரு சிறந்த வாசகனுக்கு வெறுமனே அது வாசிப்பாகத் தோன்றுவதில்லை. எழுத்தாளனுக்கும், தனக்குமான உரையாடலாகவே அமைகின்றது. அந்த உரையாடல் ஓசையற்றது. ஆனால் அது எல்லாவித உணர்வுகளையும் கொண்டது. அது வாசிப்பையும், புத்தகங்களையும் நேசிப்போரால் மட்டுமே உணர முடியும்.

இன்றைய காலச் சூழலில் ஒருவன் தன் வரலாறு என்ன? உலக இயக்கத்தின் அடிப்படைகள் எவை? உலகம் எவ்வாறு தோன்றியது? அதில் எமது பங்களிப்பு என்ன? இங்கு ஏன் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் என்பதையெல்லாம் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயமும் தேவையும் கூட. இவற்றையெல்லாம் வெறும் பள்ளிக் கல்வியிலோ, பல்கலைக் கழக பாடங்களிலோ அறிந்துகொள்ள முடியாது. இவற்றை யெல்லாம் நமக்கு விளக்க இருக்கும் பொக்கிஷங்கள் புத்தகங்களே! இதனாலேயே எழுத்தாளர் கார்க்கி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். "உண்மையை எடுத்து விளக்கும் புத்தங்களை மக்களிடம் கொடுங்கள். வாழ்க்கையின் கேள்விகளுக்கு அவர்களே விடை தெரிந்து கொள்வார்கள்."

இன்றைய நவீன காலகட்டம் என்பது உழைப்பவர்கள் முதல் படிக்கின்ற மாணவர்கள் வரையில் அனைவருக்கும் சவால் நிறைந்ததாக அமைந்துள்ளது. இதிலும் எதிர்கால தலைவர்களாக முன்னகரவேண்டிய சிக்கல்களைச் சந் திக்க வேண்டியுள்ளது. இதனைச் சட்டங்கள், தண்ட னைகள் என்பவற்றைக் காட்டிலும் அடிப்படையான பண்பாட்டு கலாசார அமைப்பாக ஒன்றிணைந்து தீர்வு காண முயல்வது தான் நிரந்தரமானதாக அமையும். இதில் நூலக கட்டமைப்பு, புத்தகங்கள் வாசிப்பதை ஊக்குவித்தல் என்பவற்றை அதிகமாக உள்வாங்கி வளப்படுத்த முற்படும் போது மாணவர்கள் அறிவார்ந்த சமூகமாகவும், ஒழுக்க நெறிகளை நோக்கமாக கொண்ட நற்பிரஜையாக வாழவும் வழி சமைக்கும்.

ஏனெனில் நூல்கள் வாழ்க்கை முறை மாறும் ஒழுக்க நெறிகளை நோக்கமாகக் கொண்டவை. நல்வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பது, நற்குணங்கள். அந்த நற் குணங்களை வெறுமனே சட்டங்கள், தண்டனைகள் மூலம் ஏற்படுத்தி விடமுடியாது. எமது முன்னோர்களின் வாழ்வியலில் இருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான ஊடகங்கள் நூல்களே என்று கூறமுடியும்.

இந்த மின்னணு யுகத்தில் கணினி, இணையம், இணைய தளம், மின்னணு நூலகம் ஆகியவற்றின் மூலம் தேவையான செய்திகளையும், வரலாற்று நிகழ்வு களையும் பெறமுடியும், அறியமுடியும் என்றாலும் அதற்கு இணையம், மின்சாரம், தொழில்நுட்ப உப கரணங்கள் என பல தேவைகள் அவசியமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் புத்தகங்கள் மூலம் படித்து அறிந்து கொள் வதற்கு புத்தகங்களும் அதற்கான மனநிலையும் மட்டும் இருந்தாலே போதுமானது. எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் படித்து அறிந்துகொள்ள முடியும்.

புத்தகங்கள் வாசிப்பதை ஊக்குவித்தல் அந்த கலாசாரத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் இன்றைய மின்னல் வேக காலவோட்டத்தில் சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனாலும் அதை முடியாத காரியம் என்று நாம் ஒதுக்கி வைத்துவிட முடியாது. ஏனெனில் அது அவசியம் நிறைந்ததாக காணப்படுகிறது. முதலில் மாணவர்களுக்கு புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வத்தை தூண்டும் வகையிலான செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதாவது கூட்டு வாசிப்பு திட்டங்களை ஏற்படுத்தி அதனூடாக முதலில் சிறியளவிலான சிறுகதைகள், கட்டுரைகளை வாசித்து அதனை சகபாடிகளுடன் கலந்துரையாடல் செய்ய வைத்தல் அதில் சிறப்பாக வாசித்து கருத்து முன் வைப்போருக்கு பரிசில்களைக் கொடுத்து ஊக்குவித்தல், கருத்துக் கூற கூச்சப்படுபவர்களை வற்புறுத்தாது அவர் களை சுவர் பலகையில் எழுத்துகள் மூலம் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் ஆரம்ப கட்ட புத்தக வாசிப்பாளர்களை ஊக்குவிக்க முடியும். அது பலனையும் தந்துள்ளதாக மலையகத்தின் நோட்டன் பிரதேச தோட்டம் ஒன்றில் இயங்கி வரும் பண்பாட்டு இயக்கமான 'ரூட்ஸ் அமைப்பு' அங்கத் தவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் ஓரளவு வாசிப்பு பழக்கத்தை கொண்ட உயர் வகுப்பு மாணவர்களை மாமனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்க வைப்பது, அவர்களின் துறைசார் வல்லுனர்கள், மற்றும் வரலாற்று நூல்களை வாசிக்கத் தூண்டுவது போன்றன சரியான வழியில் நடக்கவும், குறைகளை வெளியே கொட்டிவிட்டு நிறைகளை நிரப்பிக் கொள்ளவும் உதவுவதாக அமையும். எனவே புத்தகங்கள் வாசிக்கும் பண்பாட்டை வெறுமனே வாசியுங்கள் என்று கூறுவதால் மட்டும் ஏற்படுத்தி விட முடியாது. மாறாக, அதனை ஏற்படுத்த முயல்பவர்கள் அமைப்பு சார்பான சில ஏற்பாடுகளைச் செய்து மேற் குறிப்பிட்டது போன்ற சில அடிக்கட்டுமானங்களைப் பலமாக அமைப்பது மூலம்தான் மாற்றத்தை எதிர்பார்க்க முடியும்.

புத்தகங்களை வெறும் காகிதங்களாக பாராமல் அதை நமது வரலாற்று ஆசான்களாக ஏற்று அவற்றுடன் உரையாடும் சுகம் உன்னதமானது. மேலும் பழங்கால மகா புருஷர்களின் உரையாடலை புத்தகங்களினூடே கேளுங்கள். அவை அழகானவை, ஆழமானவை உங்களை மட்டுமல்ல உங்கள் சமூகத்தையும் மாற்றும் வல்லமை கொண்ட அறிவுரைகள் அதில் உண்டு.

"புத்தகங்களை நேசியுங்கள் தொடர்ந்து வாசியுங்கள்"

## அஞ்சலி



சமூக செயற்பாட்டாளர்

### அ. ஜெயரட்ணம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961-1965 காலப் பகுதியில் கல்விகற்ற அமரர் அ. ஜெயரட்ணம் அக்காலங் களில் பேச்சாளராகவும் விவாதியாகவும் கட்டுரையாளரா கவும் வலம் வந்தவர்.

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் 1982-ல் நடாத்தப்பட்ட பாரதி நூற்றாண்டு ஆய்வரங்கத் தொடரில் பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் 'பொருளியல் சிந்தனைகளும் பாரதியும்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வாசித்தார். பின்னர் அக்கட்டுரை 1983-ல் தாயகம் இதழில் பிரசுரமாகியது. பேரவையினால் அதன் முதலாவது வெளியீடாக வெளிவந்த 'பாரதி பன்முகப் பார்வை' நூலிலும் அக்கட்டுரை இடம்பெற்றது.

1960களின் நடுப்பகுதியில் கம்யூனிஸ கொள்கையை வரித்துக்கொண்டு வாலிபர் இயக்கத்திலும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திலும் சமூக அக்கறை மிக்க செயற்பாட்டாளராக தோழர் ஜெயரட்ணம் செயற்பட்டு வந்தார். அவர் தேசிய கலை இலக்கிய பேரவையுடனும் அதன் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்துடனும் நெருக்கமாக இருந்து அண்மைக் காலம்வரை நிகழ்வுகளில் பங்கு கொண்டு தனது அனுபவங்களைப் பகிர்ந்தும் வந்தவர். அச்சுவேலியைப் பிறப்பிடமாக கொண்ட இவர் கொக்குவிலில் தனது 80வது அகவையில் டிசம்பர் 2020இல் மறைந்தார்.

அவருக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் தமது அஞ்சலியை தெரிவித்து அவரது குடும்பத்தினருடன் துயரினைப் பகிர்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சி.குமார் நினைவுகள்



ப. செல்வராஜ்
பெரிய மல்லிகைப்பூ

மலையக மண்ணின் உண்மையான வாசத்தை தன் எழுத்துக்களில் வெளிக் கொணர்ந்த படைப்பாளி...

எல்லா வகையான அடக்குமுறைக்கும் எதிராக எழுத்து போராட்டம் நடத்திய பேனா போராளி...

எழுத்தாளனாக, ஓவியனாக,, நாடக ஆசிரியராக, நடிகனாக, பேச்சாளராக பல்துறை ஆற்றல் கொண்டிருந்த கலைஞர்..

இவை அனைத்துக்கும் அப்பால் அவர் என் தந்தையின் சகோதரியின் மகன்... என் உயிரோடு கலந்த என் பாசமிகு தங்கையின் கணவன்...

இந்த இரத்த உறவு அவரது படைப்புகளுக்கு அப்பால் அவரது குணாம்சங்களை நேசிக்க வைத்தது. இவர் மட்டுமல்ல தோட்டத் தொழிலாளியாக இருந்து இன்னொரு கட்டத்துக்கு வளர முயற்சிக்கும் எவரும் அல்லது தொழிலாளர்களின் பிள்ளைகள் ஆக இருந்து தன்னை இன்னொரு மட்டத்துக்கு வளர்த்துக்கொள்ள விரும்பும் எவரும் கடந்து வரவேண்டிய பாதைகள் மிகவும் கரடுமுரடானவை. சவால்கள் நிறைந்தவை. இலகுவில் சமூக அங்கீகாரம் பெற முடியாத போட்டிகள் நிறைந்த சமூக கட்டமைப்பை கொண்டவை .

ஆனால் இந்த தடைகளை எல்லாம் தகர்த்து இலக்கிய உலகில் தன்னை நிரந்தரமாக பதித்துக் கொள்வதற்கு அவருக்கு உறுதுணையாக இருந்த ஒரே குணாம்சம் அவரது நகைச்சுவை உணர்வு. அவரிட மிருந்த நகைச்சுவை உணர்வு தான், அவர் முகம் கொடுத்த அடக்குமுறைகளை அனுபவங்கள் ஆக்கியது; அரசு உத்தியோகத்தராக இருந்தபோது கிடைத்த அரசியல் பழிவாங்கல்களை கவிதைகளாக எழுதத் தூண்டியது.

தனது படைப்புகள் பலரால் கபளீகரம் செய்யப்பட்ட போது துவண்டு விடாமல் அடுத்த படைப்பை வடிக்கத் தூண்டியது.

தேடி வந்தவர்களுக்கு போலவே தேவையானவர் களுக்கு தேடிச் சென்றும் உதவுவார். இதனால் பலமுறை பல வடிவங்களில் ஏமாற்றப்பட்டாலும் அதையும் சிரிப்புடன் பகிர்ந்து மகிழ்வார்.

தலவாக்கலை நகரின் பிரதான வீதியில் தான் எமது வீடு அமைந்துள்ளது. தேவையான பொருட்களை சில நிமிடங்களில் வாங்கிக் கொள்ளக் கூடிய பயண வசதி ஆனால் அதனை விடவும் தரம் குறைந்த ஆனால் அதிகமான விலை உயர்ந்த பொருட்களை தூக்கி வைக்கும் வியாபாரிகளிடம் வாங்கிவிட்டு வீட்டிலுள்ள அனைவரினதும் விமர்சனங்களுக்கும் ஹா... ஹா..... என்று வாய்விட்டு சிரிப்பார்.

இரவில் பயணங்கள் தொடரமுடியாமல் வருபவர் களுக்கு அவர்கள் யார் என்று தெரியாமலே உணவு, தங்கும் வசதிகளைச் செய்து பயணத்துக்கு பணமும் கொடுத்து அனுப்புவார். இது போன்ற எல்லா செயல்களுக்கும் அவர் கூறும் மூன்று எழுத்து பதில் "பாவம்" என்பது மாத்திரமே.

நகைச்சுவை விரும்பிகளிடமிருந்து வெளிப்படும் கோபம் உண்மையானதாகவும் நிரந்தரமானதாகவும் இருக்கும் என்பது நண்பர்களிடம் கண்ட உண்மை.

இது இவரிடமும் இருந்தது எனக்கு சிறிய ஆச்சரி யத்தையும் தந்தது. எவ்வளவுக்கெவ்வளவு நகைச் சுவை உணர்வோடும் உதவும் பண்புடனும் இருந்தாரோ.... அதே போல தனது படைப்புகள் காழ்ப்புணர்ச்சியோடு விமர்சிக்கப்படும் போதும் தனது நேர்மை திட்டமிட்டு ஏமாற்றப்படும் போதும் அவர் அபரிமிதமான கோபம் கொள்வார். அதன் விளைவாக அவ்வாறு அவர்களிட மிருந்து நிரந்தரமாக ஒதுங்கி விடுவார்.

எங்கள் குடும்பத்தில் தந்தைவழி மைத்துனர்களையும் தாய்வழி மைத்துனர்களையும் அண்ணா என்றும் அக்கா என்றும் கருதுமளவுக்குக் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்தோம்.

இவர் என் தங்கையை மணம்முடித்த பின் நான் மாத்திரமல்ல என் தங்கையும் கூட இவரை அண்ணா என்றே விழிப்பார். அந்த அளவிற்கு புரிந்துணர்வும் பாச உணர்வும் கொண்டவராக அவரும் வாழ்ந்தார். நாங்களும் வாழ்ந்தோம்.


மனித வாழ்வில் மரணம் தவிர்க்கப்பட முடியாதது. ஆனால் எழுத்துலகுக்கு அவரது இழப்பு ஏற்படுத்திய வெற்றிடத்தினைப் போலவே எங்களின் பாச உறவிலும் நிரந்தர வெற்றிடம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் அவ ரின் இழப்பை... நாங்கள் எங்களைத் தேற்றிக் கொள்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

க. சிவகரன்

*சத்தம் போடக் கூடாது. நெளிய வளையக் கூடாது. நுளம்பு கடித்தாலும் ஆடக்கூடாது. கூப்பிய கைகள் எடுக்கக் கூடாது. வாயில் உரத்த சத்தம் வரவேண்டும். வெறும் வாய் ஆட்டக் கூடாது.*



வெள்ளிக்கிழமைகளில், அந்த வண்டில் வரும். பென்னம் பெரிய மாட்டுவண்டில், வெள்ளைநிற வடக்கன் மாடுகள், கழுத்தை ஆட்டும் பொழுது கணீர், கணீர் என்ற ஓசை இப்பொழுதும் காதில் கேட்கின்றது. மாட்டிலையான் கடிக்கும் பொழுது எருதுகள் காலை உதறி தலையை ஆட்டும். அந்தநேரம் சலங்கைச்சத்தம் வேறு ஒரு மாதிரிக் கேட்கும். வண்டில் நின்றுவிட்டு வெளிக்கிடும் பொழுது சோடிமாடுகள் தலையை ஆட்டி உன்னி இழக்கும் பொழுது கேட்கும் ஓசைவேறு, மாட்டு வண்டில் போகும் பொழுது அதன் ஓசையில் வைத்தே, பார வண்டிலா வெறும் வண்டிலா எனக் கண்டுபிடித்துவிடலாம். வெறும் வண்டில் கட, கடவென ஓடும் சலங்கை ஒலி தாராளமாகக் கேட்கும். சக்கரங்கள் விண் கூவிக் கிரீச்சிடும். பாரவண்டில் நெரு, நெருவெனத்தான் போகும். இதயத்தை அமுக்குவது போன்ற ஒரு நெருடல் ஓசை ராக், ராக்கென சக்கரங்கள் ஓசையிடும். திரும்பும் பொழுது சராக்கென ஓர் ஓசை கல்லுப்பாதையில் சக்கரத்தின் இரும்பு வளையங்கள் அகப்பட்ட சிறு கல்லை சராக் என ஏறி சர், சர் என அரைக்கும். சுண்ணாம்புக்கல் மாவாகி சக்கரத்தில் ஒட்டி மேல் ஏறி கீழ் இறங்கும், அந்த வண்டில் வெள்ளிக்கிழமைகளில் எங்கள் பள்ளிக் கூடத்தின் முன்னால் உள்ள கூப்பன்கடை முன் நிற்கும். அன்று மட்டும் எங்களுக்கு இலவசப் பயணம்.

அநேகமாக, பள்ளிக்கூடம் விட்டு நாங்கள் வெளிக்கிடவும், கூப்பன் கடையில் சாமான் இறக்கிமுடியவும் சரியாக இருக்கும். மணியண்ணை மாட்டை விரட்டும் கம்புடன் இருப்பார். ஆசனத்தில் ஏறி காலை மாட்டின் கவட்டுக்குள் துழாவி கூச்சம் காட்டி நாணயத்தை இழுத்து பட்டென இழக்கிவிட வண்டில் உண்ணி எழும்பி சரசரத்துப் பாயும். நாங்கள் தட்டிகளில் உள்ள கட்டைக் கம்புகளை ஒரு கையால் இறுகப்பிடித்துக் கொள்வோம். வண்டிலில் ஒரு மூட்டை தவிடு கிடக்கும். மற்றப்படி கூப்பன்மா சிந்திக் கிடக்கும். வெள்ளைப் பச்சையரிசியும் கைப் பிடியளவு அங்காங்கே சிதறிக் கிடக்கும். சின்னச்சின்ன வண்டுகளும் ஊரும் ஒருவித உறண்டை மணம் வரும். மத்தியானவேளை எங்கள் பசிக்கு அந்த மணம் மேலும் தீ மூட்டும்.

வண்டில் முதலில் கற்பாதைகளில் தான் போகும். கடகடவென ஓடும். மாடுகள் அநேகமாக களைத்துப் போய் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் வீட்டைபோகும் உற்சாகம் அது களுக்கும் இருக்கும் போல. எங்களைப் போல அவையும் பசியுடன்தான் போகும். கல்லு ரோட்டைக் கடந்து மணல் ஒழுங்கையில் வண்டில் ஆட்டம் போடாமல் போகும். மணல் வீதியில் ஓடி மணியண்ணை வீட்டு முகரியில் வண்டில் திரும்பும் பொழுது மாடுகள் வேகம் கொள்ளும். மணியண்ணை நாணயத்தை இழுத்தபடி திருப்பிப் பார்ப்பார். நாங்கள் பொத்துப் பொத்தெனக் குதிப்போம். அதன்பிறகு வீட்டை நோக்கி அவரவர் பாதையில் ஓடுவோம்.

இந்த வெள்ளிக்கிழமைகள் போனால் மற்றப்படி கால் நடையாகத்தான் பள்ளிக்குப் போவோம். வண்டிலும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஒழுங்காக வரும் என்று கூற முடியாது. ஆனால் அநேகமாக வரும். மற்றப்படி, நாங்கள் ஓடியும் நடந்தும் ஆடியும், பாடியும் மணல் ஒழுங்கை கடந்து வெள்ள வாய்க்காலில் இறங்கி வயல்வெளிகள் ஊடாக நடந்து கோடையிற் போவோம். மாரியில் கல்லுரோட்டில் ஏறி கடகடவென நடந்து ஓட்டமும் நடையுமாக சுற்றிப் போவோம். தூரம் கூடத்தான். கால்கள் கடுக்கும்! வயல் வெளியில் அறுவடை முடியும் பொழுது காலையில் சில்லென்று இருக்கும். மதியம் வீடேகும் பொழுது சூரியன் சுட்டெரிக்கும். ஆனாலும் அதில் ஒரு சுகம் இருக்கும். கல்லுரோட்டில் கவன மாகப் போகவேண்டும். அது டச்சுக்காலம் போட்ட பாதை எனக் கூறுவார்கள். இடை யிடையே எங்காவது ஓரிடம்தான் தார் தெரியும். மற்ற இடங்களில் மேடும் பள்ளமும், குட்டையும் குழியுமாகக் கிடக்கும். பூவரசம் இலைகள் மாரி காலங்களில் வீதியில் ஒட்டிக்கிடக்கும். முருக்கை வேலிகளின் சிறுதடிகள் காலில் பட்டுப் பதம் பார்ப்பதும் உண்டு. வழி நெடுக நடந்து பள்ளிபோய் வரும் பொழுது கூடவே வரும் பெடியள் செய்யும் குழப்படிகள் ஒருபக்கம்.

குழப்படி செய்வதில் தேவன் கெட்டிக் காரன். அடிபிடிகள் சண்டைகளில் அவ னுக்கு அலாதிப்பிரியம். ஐந்தாம் வகுப்புப் படித்து முடிக்கும்வரை அவன் அடிபடாத ஆட்களே கிடையாது. அவனுக்குப்பின்னே போவதால் வீண்வம்புகள், சாட்சிகள் சொல்லவேண்டி வருவதுண்டு. ஆனாலும் அவன் சண்டித்தனத்தில் தலைக்கிடாய் போல எல்லோரையும் முட்டி மோதுவதால் அவனுக்குப்பின்னே நாங்கள் ஒதுங்கிக் கொள்வோம்.

ஆரம்பப்பள்ளியில் படித்த காலங்களில் அந்தப் பள்ளிக்காலம் படிப்புக்காலங்களில் பொற்காலம் என்றுதான் கூறவேண்டும். என்ன வெள்ளிக்கிழமை தான் ஒரு நெருடல். நீண்டநேரம் சக்கப்பணிய இருந்து சிவ புராணம் சொல்ல வேண்டும். சத்தம் போடக் கூடாது. நெளிய வளையக் கூடாது. நுளம்பு கடித்தாலும் ஆடக்கூடாது. கூப்பிய கைகள் எடுக்கக் கூடாது. வாயில் உரத்த சத்தம் வரவேண்டும். வெறும் வாய் ஆட்டக் கூடாது. தேவனுக்கு இவை அறவே பிடிக்காது. ஆனா லும் அவன் அனுசரித்துப் போய்கொண்டு தான் இருப்பான். வெள்ளிக் கிழமை போனால் குருபூசை தினங்களில் நேரமினக் கேடு உண்டு. ஆனாலும் அதில் ஒரு சந்தோஷம் இருந்ததுபோல் நினைவு. சரஸ் வதி பூசைக்காலங்களில் கொஞ்சம் கலகலப்பு இருக்கும். விஜயதசமி அன்று கொண்டாட்டம் நன்றாக இருக்கும். இப்பொழுதும் அந்தக் காலத்து கொண்டற் கடலையை மறக்க முடியாது. அவலும் அப்படித்தான். அதில் ஓர் தனிச் சுவை உண்டு.

வெள்ளிக்கிழமைகளில் வேறு ஓர் சந் தோஷம் உண்டு. சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை வீட்டில் நிற்பதுதான். அழுக்கான ஆடைகளை அலசி மீண்டும் திங்கள்கிழமை புதுப்பொலிவுடன் பள்ளிக்கூடம் போவோம்.

கல்லு ரோட்டின் முடிவில் பிரதான வீதியில் ஏறினால் பெரிய பள்ளிக்கூடம் பெயரில் கல்லூரி என்ற பெயர். நாங்கள் எல்லோரும் ஆறாம் வகுப்பில் அங்கு போய்ச் சேர்ந்தோம்.

ஆரம்பப் பள்ளியில் வீசிய தென்றல் கல்லூரியில் காற்றாயும் மழையாயும் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலாயும் மாறத் தொடங்கியது. நாட்டுக் குழப்பங்கள் வெடியோசைக் காலங்கள் நாங்கள் படித்தோம். இடையிடையே அமைதி வரும். இலவசப் புத்தகங்களை இறுகப் பிடித்தபடி காலங்கள் ஓடின. தேவன் எனது வகுப்பானாலும் பின் வாங்கில் போய் அமர்ந்துவிட்டான்.

இன்று வெள்ளிக்கிழமை. பௌர்ணமியும் கூட. தேவன் ஊரில் நிற்கின்றான். ஒருமுறை என்னைப் பார்க்கவேண்டுமென விசாரித்தான் என்ற செய்தி எனக்கு மீண்டும் மாட்டு வண்டிச் சக்கரங்களின் ஓசையென கரீர் என என் நினைவுகளைக் கிளறிவிட்டது. எருதுகளின் சலங்கை ஒலி என் காதில் கேட்கின்றது. மணல் ஒழுங்கையில் மழை பெய்த பின் வரும் புழுதிமணம் மீண்டும் மணக்கின்றது. கல்லுரோட்டின் வண்டில் கடகடப்பு என இதயம் அடிக்கின்றது. அவனை ஒருக்கா பார்ப்போமா, விடுவோமா என மனம் கேட்கிறது. மறுக்கிறது. காலம் பல கடந்து போய்விட்டது. நான் நகர வாசியாகி விட்டேன். அந்தக் கிராமம் என்னிடம் இருந்து தூரப் போய்விட்டது. அங்கு போய் மீண்டும் அதே அழகைப் பார்க்க முடியாது. மனதின் நினைவுகள் கலையக் கூடும். வேண்டாம். விடுவோம் என்றபடி இருந்த எனக்கு ஏதோ ஒரு இழுப்பு போ, போ எனத் தள்ளியது.

இன்று வெள்ளிக்கிழமைதானே. கனடாவில் இருந்துவந்த தேவன் வீட்டிற் தானே நிற்பான். சிறுவயது நண்பன்தானே. எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வெறும் சின்னப் பெடியன் ஆகி அவனைப்பார்க்க புறப்பட்டு விட்டேன். எனது பட்டம் பதவி அதிகாரம் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டேன். கண்ணனிடம் சென்ற குசேலன் போல எளிமையாக வேடம் போட்டேன். வெள்ளிக்கிழமை என்பதால் வேட்டி ஒன்றைக் கட்டினேன். ஒரு அரைக்கை சேட்டைப் போட்டுக் கொண்டேன். எனது பழைய மோட்டார் சைக்கிளை உருட்டி உயிர்கொடுத்து ஏறிப் புறப்படுகின்றேன்.

பழைய கிராமத்தின் அனலும் புனலும் என்னை வா என அழைத்தன. வயல்களில் என்னைக் கண்டு ஓடிய நண்டுகள் மீண்டும் சுகம் விசாரிக்க கூடும். கொக்குகள் எனது வருகைக்காக தவம் செய்யக் கூடும். வெள்ளநீரில் கால் மடித்துச் சடார்... சடார் என அடிக்கும் வெடியோசை என் காதில் கேட்கின்றது. வெள்ள வாய்க்காலில் எதிரேறி ஓடிவரும் அயிரை மீன் குஞ்சுகள் என்னைக் கண்டு துள்ளிப்பாயவும் கூடும். நான் வருகிறேன். எனது பழைய ஊர் நோக்கி வருகின்றேன்.

காலச்சுழியில் சிக்குண்டு ஊரின் கோலம் மாறிப்போய்விட்டது. மணல் ஒழுங்கைகள் எல்லாம் தார்க்கோலம் பூண்டிருந்தன. பழைய நினைவுகளில் மட்டும் ஊரை மீட்டிக் கொண்டேன். ஊரில் வசதிபடைத்தவர்கள் வெளிநாட்டையும், உள்நாட்டின் நகர்ப்புறங்களையும் நாடிப் போய்விட்டனர். புதிய முகங்களையே தரிசிக்க முடிகின்றது. அவற்றில் புன்னகையைக் காணவில்லை. என்னையும் அவர்கட்குத் தெரியாது. எனக்கும் அவர்களைத் தெரியவில்லை. அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாது நான் தேவன் வீட்டை அடைகின்றேன்.

"வாரும்!" தேவனின் குரல் என்னை அழைத்தது. உள்ளே போய் கோலில் சோபாவில் அமர்ந்தேன். எப்படிச் சுகம் என்ற வழமையான உபசரிப்பு. "உமக்கு எத்தனை பிள்ளையள்." இரண்டென்றேன். "உமக்கென்ன அரசாங்க உத்தியோகம். நீர் இப்ப பெரியாளாகிவிட்டீர். ஊரையும் விட்டுப் போட்டீர்" தேவனின் பேச்சில் ஏதோ இடை வெளி தெரிகின்றது. அடோ, புடோ எனக் கதைத்தவன் நீ, நான் எனக்கதைத்தவன் என்னடா எப்படி எனக் கதைத்தவன் மரியாதைப் பன்மையிலே மட்டும் பேச வில்லை. அவன் பேச்சில் இடைவெளி தெரிகின்றது. அவன் என்னை இழக்காரமாகப் பேசுவது தெரிகின்றது. அவன் வீட்டுக் கோப்பியை மட மடவென கண்ணை மூடிக் கொண்டு குடிக்கின்றேன்.

விரைவாக வெளியேறி வீதியில் போகின்றேன். பழைய பள்ளிக் கூடத்தைப் பார்க்கின்றேன். நாங்கள் பாடிய சிவபுராணம் காதில் கேட்கின்றது. ஆம் இன்று வெள்ளிக் கிழமை.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை.சி.குமாரின் 'வேடத்தனம்' சிறுகதைத் தொகுதி பற்றிய பார்வையும் பதிவும்

இதயராசன்

மல்லிகை சி.குமார் ஒரு தொழிலாளியாக தோட்டத்து மக்களின் வாழ்வோடு பிணைப்புற்றவர். அந்த வாழ்வின் இன்ப துன்பங்களில் பங்காளியாக இறுதிவரை வாழ்ந்து மடிந்தவர். தன்னை ஒரு இலக்கிய ஆளுமையாக இனங்காட்டாமல், சாதாரண பாமரன் போலவே இனங் காட்டிக் கொள்வதிலே இயல்பாக இருப்பார்.

கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம், நாடகம் எனப் பல்துறை, பல்பரிமாணங்கொண்ட ஓர் ஆளுமை, குடத் துள் விளக்காக இறுதிவரை ஒளிர்ந்து அணைந்து விட் டது. ஆனால் அவர் ஏற்றிவைத்த தீபம், குன்றுகள் தோறும் என்றும் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

இவரது எழுத்துக்கள் தோட்டத்தையும், அவர்களின் வேலைப் பிரச்சினைகள், கூலி உயர்வு போராட்டம் பற்றியதாக மட்டுப்படாமல், மலையக மக்களின் வாழ்வி யலின் பல்பரிமாண அம்சங்களை எல்லாம், தனது கதைகளில் அழகுறவே செதுக்கியுள்ளார்.

'வேடத்தனங்கள்' என்ற தொகுதியிலுள்ள 15 கதை களையும் தனித்தனியாக நோக்குவதன் மூலமே இவரது பார்வைகள் எவ்வளவு கனதியானவை என்பதனை உணர்ந்து கொள்ளலாம். எனவே ஒவ்வொன்றாக நோக்குவோம்.

*1. ஒரு கல்லறையைத் தேடி.*

முப்பது வருடத்துக்கு முன்பு இறந்த சீமையின் தோட்டத்துரையது கல்லறையை அவரது பேரனுக்கு இடம் காட்டிய தொழிலாளி இறந்து, பதினைந்து வருடத்திற்கும் பின்பு வந்த, அந்த வெள்ளைக்காரனுக்குத் தனது தகப்பனின் புதைகுழியைக்கூடக் காட்டமுடியாத, தோட்டத்து மகனின் பரிதாபத்தினைச் சொல்கின்றது.

துரையின் ஆங்கிலப் பேச்சினை, அவர் எழுதிய கடிதத்தினை வாசிக்க முடியாத தாத்தாவுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்படுகின்றது. ஆனால் அந்த தொழிலாளியின் பேரன் ஆங்கிலம் கற்றுள்ளான். தொழிலாளர் வாழ்வில் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது. ஆனால் அதே லயத்துக்காம்பரா, தொழில், தபால் சேவை எல்லாம் மாறாமல் இருக்கிறது. சொந்தமாக ஒரு புதைகுழியும் இல்லை என்பதே யதார்த்தம். அப்ப டியானால் என்னதான் மாறியிருக்குதய்யா? என்று எம்மிடம் ஆசிரியர் ஆதங்கப்படுகின்றார்.

*2. வேடத்தனம்*

ஒரு அரசியல் கட்சியில் போட்டியிட்டு, எம்பி ஆன பின்னர், ஆளும் கட்சிக்குத் தாவி, பிரதி அமைச்சரான ஒருவரின் மனச்சாட்சி நியாயம் கேட்பதையும், இறுதி வரை அவரது வெற்றிக்காக உழைத்த தொழிலாளரின் பிரச்சினைகள் கவனிக்கப்படாமலே கிடப்பதையும் சொல்கின்ற கதை.

*3. மீசை*

தமது தலைவரின் மீசை இல்லாத படம்போட்ட பயிற்சிக் கொப்பியை மகனிடம் கொடுத்தபோது, அவ னது நண்பன் அதற்கு மீசை வைக்கின்றான். அதை அறிந்து ஆத்திரமுற்று, அந்தச் சிறுவனின் தந்தையுடன் சண்டைக்குப் போகின்றான்.

ஒரு தருணத்தில் அந்தச் சிறுவனின் தாத்தா, மீசை வைத்த தலைவரின் படத்தை பேப்பரில் காட்டும்போது, அவன் வெட்கித் தலை குனிகின்றான்.

இந்தக் கதையில் வருடக்கணக்காகத் தலைவரைக் காணாதபோதிலும் அவரது விஸ்வாசியாக வாழும் அப் பாவித் தோட்டத் தொழிலாளியின் அறியாமையினையும், அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தும் தலைமைகளையும் அவர்களின் வாழ்க்கையூடே சித்தரித்துள்ளார்.

*4. மணிக்கதவு*

தோட்டத்து அம்மன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்து, மணிக்கதவு பூட்டுவதே அந்த தோட்டத் தலைவரின் கனவு.

தலைவருக்கு விருப்பமில்லாத கட்சித் தலைவரின் படம், தனது வீட்டுக் கழிப்பறையின் கதவில் ஒட்டி யதற்காக பொங்கி எழுகின்றார். கழிப்பறை கதவின் ஓட்டையை மறைக்கவே தான் படத்தை ஒட்டியதாக மகள் கூறியபோது, தலை குனிகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டுக் கழிப்பறையின் கதவில் ஓட்டை விழுந்திருப்பதைக்கூட கவனிக்காமல், கோவிலுக்கு மணிக்கதவு போடும் கனவுடன் வாழ்கின்ற முரண் நிலையே கதையின் கரு.

மக்களின் பிரதான பிரச்சனைகளைத் தூரத்தில் வைத்து, தேவையற்ற பிரச்சனைகளை வீட்டிற்குள் கொண்டுவந்து, ஏழைத் தொழிலாளிகள் தமக்கிடையே சண்டையிட்டு, அறியாமையால் அல்லலுறுவதை கதை சித்தரிக்கின்றது.

*5. போதுமடி தாயே!*

தனது மனைவியை நம்பாத, சந்தேகப் பேர்வழியுடன் வாழ்ந்தும் வாழாத தோட்டத்துச் சராசரிப் பெண்களின் அல்லல் வாழ்வினை சித்தரிக்கின்ற கதை.

மனைவியையும் குழந்தையையும் மூர்க்கமாகத் தாக்கி, தாலியை அறுக்கும் உச்சக்கட்டத்தில், முன்னாள் காதலன் அவனிடமிருந்து காப்பாற்றி தன்னுடன் அழைத்துச் செல்வதாகக் கதை முடிகின்றது.

முடிவு என்னவோ தென்னிந்தியத் திரைப்படப் பாணியில் உள்ளது. ஆனால் கதையின் முற்போக்கான அம்சம் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பெண்ணடிமைத்தனத்தை உடைக்கின்ற வகையில் முதன்மை பெறுகின்றது.

*6. வேட்டி*

இறந்துபோன தந்தையின் பிரேதத்தினைப் போர்த்த வேட்டி இல்லாமல் துயருறும் போது, தனது சீருடைக்கான துணியை வேட்டியாகப் பயன்படுத்தக் கொடுக்கின்றாள் ஒரு ஏழைச் சிறுமி. வறுமையிலும் ஏழைகளிடம் காருண்யம் வெளிப்படும் விதத்தை கதை இலாவகமாகச் சொன்ன வகையில், மனித உறவுகளின் புனிதத்தினை உணர்த்தி நிற்கின்றது.

*7. ஐ லவ் யூ*

பிரஜாவுரிமை மறுக்கப்பட்டும், விருப்போடும் தொழிலாளர்கள் இந்தியா சென்றபோதும், இந்த மண்ணையும் தோட்டத்தையும் நேசித்து வாழ்பவர். காலமாற்றத்தால் மக்கள் நகரத்திலுள்ள சலூனுக்கு முடிவெட்டச் சென்றதால், தொழில் இழந்தபோதிலும் நாட்டுப்புறத்தில் தொழில் செய்து கௌரவத்தோடு வாழ்வதன் சிறப்பு சொல்லப்படுகின்றது.

தோட்டங்களின் வாழ்முறையில் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களை, ஒரு சித்திரம் போல் சொல்லிய வகையில் முதன்மைக்குரியது. தோட்டத்தில் தொழிலாளி என்ற ஒற்றை வார்த்தையில் அவர்களின் வாழ்வியலை அடக்க முடியாது என்பதையும் கதை பூடகமாக எடுத்துச் சொல்கின்றது.




*8. இதுவும் ஒரு முழக்கம்*

காலாகாலமாக தேயிலைத் தோட்டத்தில் கொத்தடிமைகளாக வேலை செய்து உழன்ற தொழிலாளர்கள், காலமாற்றத்தில் தொழிற்சங்கம், கட்சிகள் அமைக்கும் உரிமை பெற்று, தமது நலன்சார்ந்து போராடிப் பெற்ற உரிமைகள் பற்பல.

அதே நேரத்தில் தோட்டத்தில் வேலை இல்லாமல் அல்லது வேலை செய்ய விரும்பாமல் பெரு நகரங்களை அண்டிப் பிழைப்புக்குச் சென்ற இளைய தலைமுறையினர், நகரத்து பெரு, சிறு முதலாளிகளால் எட்டுமணி நேரத்திற்கும் அதிகமாக, அவர்களுக்குத் தங்குமிடம் வழங்குகின்றோம் என்ற போர்வையிலும் பதினாறு மணி நேரம் வரை சுரண்டுகின்ற அவலத்தினையும், அதிலிருந்து மீளமுடியாத திரிசங்கு சொர்க்க நிலையினையும் கதை தத்ரூபமாகச் சொல்கின்றது.

*9. இதுவும் ஒரு திருவிழா*

தீவிபத்தில் எரிந்த மேட்டு லயத்தினை மீளக்கட்டும் பொறுப்புகள் உரிய தரப்பினரால் தட்டிக்கழிக்கப்படுகின்ற அநீதி சொல்லப்படுவதோடு, லோவர் டிவிஷன் மக்கள் தமது திருவிழாவை சிக்கனமாகச் செய்து, மீதமாகும் நிதியை, வீடிழந்த மக்களுக்கு உதவ முன்வருவதாக கதை நிறைவுறுகின்றது.

தோட்டத்து இளைஞர்கள் சமூக அக்கறையுடன் வளர்வதை கதை எடுத்துக்காட்டுவதோடு, அப்படித்தான் புதிய தலைமுறை சிந்திக்க வேண்டும் என்ற இலட்சியத்தை முன்மொழிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10. ஆயிரம் ரூபா*

தோட்டத் தொழிலாளிகளின் குடியிருப்பு, அங்குள்ள வசதியீனங்கள், அவர்களின் வறுமை என்பவற்றைச் சொல்லி, அவர்களின் ஆயிரம் ரூபா சம்பளப் போராட்டத்தில் அம்மக்கள் தன்னெழுச்சியாக ஈடுபடுவதை எடுத்துக் காட்டுகின்றது.

அம்மக்களை ஏமாற்றும் தலைமையின் இரட்டை வேடத்தினையும் கதை பேசுகின்றது. இன்றுகூட இப்பிரச்சினை எரியும் பிரச்சினையாக உள்ளமையே யதார்த்தமாகும். ஏமாற்றுகிற கூட்டம் ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றது. ஏமாறும் கூட்டமும் ஏமாறிக்கொண்டே இருக்கின்றது. அதற்கு முடிவு தோன்றும் என்ற குறியீடாக செங்கமலத்தின் தீக்குளிப்பு அமைகின்றது.

*11. கொழுந்து மாலை*

தோட்டத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையே தெரியாத தோட்டத் தலைவர், கட்சித் தலைவர்கள் மக்களின் எந்தப் பிரச்சினையைத்தான் தீர்த்து வைப்பார்கள் என்ற முக்கியமான வினாவை எழுப்புகின்ற கதை.

தமது பதவியைத் காப்பாற்றிக் கொள்வதற்கான வேலை முறைகளைச் செய்வதுதான் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை நடைபெறுகின்றது என்ற யதார்த்தத்தினையும், மக்களுக்காக உழைத்தவர்களை எளிதாக மறந்துவிடுகின்றார்கள் என்பதையும் கதை பதிவு செய்கின்றது.

இவை எல்லாவற்றினையும்விட மக்கள் முற்போக்காகச் சிந்திக்கின்றார்கள் என்பதை கதையோட்டத்தில் சொல்லுகின்றமை சிறப்பாக உள்ளது.

*12. புது வெள்ளம்*

தோட்டத்து வேலையை விட்டு, நகரத்தின் மேசன் வேலை செய்யும் மணியரசும் பியதாஸவும் நண்பர்கள். கடும் மழை காரணமாகப் பலநாட்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். அன்று இரவும் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில், இருவரும் பாரில் சண்டை இடுகின்றனர். நள்ளிரவில் மணியரசின்வீடு வெள்ளத்தில் அள்ளுண்டு போகும் ஆபத்துணர்ந்து, பியதாஸா குடும்பம் காப்பாற்றுகின்றது.

இனத்தால் வேறுபட்டாலும் உழைக்கும் மக்கள், அயலவர்கள், நண்பர்கள் என்ற பந்தம் ஆற்று வெள்ளத்தையும் தாண்டி, பிரவாகிக்கும் உறவு வெள்ளத்தை உணர்வோடு சொல்கின்றது. எம்மையும் அறியாமல் அந்த நெகிழ்வில் மூழ்கடித்து விட்டது கதை.

*13. ஒரு வாழைக்கன்று*

ஒரு தோட்டத்து இளைஞன் மாணிக்கவேல், பாடசாலைக் காவலாளி என்பதையும் தாண்டி மக்களின் நலனுக்காக உழைக்கின்றான். இவனில் காதல் கொண்ட கிறிஸ்டினா கர்ப்பம் அடைகின்றாள், வருகின்ற கிறிஸ்மஸ்ஸுக்கு பதிவுத்திருமணம் செய்வதாகத் திட்டமிட்டு இருக்கின்றனர். ஆனால் அவன் பாடசாலை கட்டிடம் இடிந்து மரணிக்கின்றான்.

அவனது உறவினர், அவன் திருமணம் செய்யாதவன், சந்ததி இல்லாதவன் என்று, தமது சம்பிரதாயப்படி வாழை வெட்டி, பிரேதத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்கின்றனர்.

கிறிஸடினாவைக் கருவைக் கலைக்கச் சொல்கின்றாள் பாட்டி. "நான் அழிக்க மாட்டேன். எனது காதலனது உயிர். வாழையை வெட்டினால் வம்சம் அழிஞ்சிடுமா?" என்று தனது குழந்தையை வளர்க்க உறுதி எடுப்பதாக கதை முடிகின்றது.

கணவன் இறந்தாலும் ஒரு தாய் தனது கருவைச் சுமந்து குழந்தையைப் பெறுவதற்கு எவ்வளவு சுதந்திரம் உள்ளதோ, அவ்வளவு சுதந்திரமும் உரிமையும் அவனது காதலிக்கும் இருக்கின்றது, என்ற யதார்த்த நிலையினை மாறிவரும் சூழ்நிலையுடன் பொருத்திப் பார்க்கவும் சிந்திக்கவும் வைக்கின்ற, பண்பாட்டுத் தளத்தில் அதிர்வை ஏற்படுத்துகின்ற கதை என்று சொல்லவேண்டும்.

*14. தேங்காய்*

ஆற்றங்கரை ஆலமரம், அதனடியில் சாய்ந்த பிள்ளையாரையும் சுற்றிச் சுழன்று, அங்கு விளையாடவரும் சிறுவர்கள் உரையாடல் மூலம் அந்த மக்களின் வாழ்வின் வெட்டுமுகத் தோற்றத்தை, எம்மையும் தரிசிக்க வைக்கின்றது கதை.

ஆலமரத்தின் முக்கியத்துவம், சாய்ந்த பிள்ளையாராலும், பிள்ளையாரின் முக்கியத்துவம் ஆலமரத்தாலும் என்றவாறு, ஒன்றிலொன்று சார்ந்திருப்பதைச் சொல்வதின் ஊடே, ஏமாற்றிப் பிளைக்கும் பண்டாரத்திலிருந்து, மந்திரி வரை சிதறு தேங்காய் உடைப்பது போல் உடைக்கின்றார்.

இறுதியில் உடையவேண்டிய தேங்காய் சிறுவனின் தலையை உடைத்து மண்ணில் உருள, கிளவி மந்திரியின் பஜ்றோவின் கண்ணாடியை உடைப்பதோடு நிறைவடையாமல் இன்னும் எதையோ உடைப்பது போல், கதையை வாசிப்போரை நிச்சயமாகச் சிந்திக்கவைக்கின்றது.

*15. தூரத்து உறவு.*

மலையக நகரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைச் சொல்வதன் மூலம், மலையகத்தின் சமூக மாற்றத்தையும், தொழில் முறைகளின் விரிவையும் எம் கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகின்றார்.

மக்களின் மனநிலையும் முதலாளித்துவத்தின் மன நிலைக்கு கட்டமைக்கப்பட்டிருப்பதனைத் தனது சகோத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்குச் சுகமில்லாததை டீவி பார்த்துக்கொண்டு சொல்வதை சொல்லி, உறவுகளைவிட அவர்களின் தனிமனித சுகபோகங்களே முக்கியமாகிவிட்ட உறவுகளின் சிதைவை நெஞ்சை நெருடவைக்கும் வகையில் சொல்லியுள்ளார்.


இவரது கதைகள் ஒவ்வொன்றையும் நோக்கும்போது, இவரது கதைக்கான கருக்களும் வளர்நிலையை அடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. இத் தொகுதியிலுள்ள 15 கதைகளில் போதுமடி தாயே, புது வெள்ளம், ஒரு வாழைக்கன்று, தேங்காய், தூரத்து உறவு ஆகிய ஐந்து கதைகளும் மலையகத்தின் தற்கால மாற்றங்களை நுணுக்கமாகச் சொல்கின்றது.

மேலும் இவர் வெறுமனே கதை சொல்லியாக மட்டுமல்ல. தோட்டத்து மக்களின் வாழ்வியல் பற்றிய ஏராளமான விடயங்களைப் பதிவுசெய்பவராகவும் திகழ்கின்றார். எதிர்காலத்தில் ஒரு பொக்கிஷமாக இவை திகழும் என்பதில் சந்தேகமில்லை.

இச்சிறுகதைத் தொகுதி, கொடஹே பரிசு பெற்ற கதை என்பதையும் தாண்டி எதிர்காலத்தில், உலகத் தமிழ் சிறுகதைக்கான அனைத்துத் தகுதியையும் கொண்டுள்ளது என்பது, எனது கணிப்பாகும்.

○○○

*கவிதை*



# புயல்

**சா. கா. பாரதி ராஜா**

கடலிலிருந்து
உருவாகி பாயும்
மாய அலையே!

வாயில்லாதவனே!
வெளியையே
குழலாக மாற்றி விட்டாய்
ஊதல் சத்தத்தால்!

மின்சாரமில்லா குடிசையின் மீது
வீழ்ந்து கிடக்கிறது
மின் கம்பம்!
எரிகிறது
ஏழைகளின் வயிறு!

நீரின்றி
தத்தளித்த நகரங்கள்
தத்தளிக்கின்றன
சூழ்ந்த நீரால்!

மரங்களுக்கும்
குடிசைகளுக்கும்
சிறு குழந்தையைப் போல
கதறவிட்டே அடிக்கிறாய்
மொட்டையை!

ஒரு கன்னத்தைக்
காண்பித்த மலைகள்
மறு கன்னத்தையும்
காண்பிக்கின்றன
நீ விடும்
அறையை வாங்க!

கொன்றுவிட்டு
மரங்களுக்கு நீரையும்
ஊற்றிவிட்டே செல்கிறாய்
இறுதி காரியமாக!

அலையில் விளையாடிய
படகுக் குழந்தைகளை
திருப்பிப் போட்டு அடித்தாலும்
மீண்டும் தவழ்கிறது
கடலன்னையின் மடியில்!

உன்னோடு எல்லையில்
போராடித்தான்
வீழ்ந்து கிடக்கின்றன
தென்னை சிப்பாய்கள்!

நீ உண்டாக்கிய
காயத்தின் மீது
மருந்தாக
நினைத்து தேய்க்கிறாய்
தென்றலை!

ஊர் முழுக்க
கொக்கரித்தாலும்
சொல்லாமல் சென்றுவிட்டாய்
மடியை இழுக்கும்
கன்றுவிடம்
பசு இறந்துவிட்ட
செய்தியை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் பிளாஸ்டிக்கனி

கடலின் சுவையோடு
மலையின் கனத்தில்
ஒவ்வொரு
தலையிலும் தொங்கிக் கொண்டிருந்தது
விதியின் பிளாஸ்டிக் கனி

கனிந்த விதியின்
பிளாஸ்டிக் விதைகள்
காடுகளாக இருந்தது
கடவுள்களாக உருமாறியது
பின்
மனிதர்களை பரவசமாக்கியது

காடுகளில் கனிந்தவர்கள்
விதி கனியை
சாறு பிழிந்தனர்

தாகம் தீராமல்
காடாகினர்

பிளாஸ்டிக் தலைவர்கள்
காட்டை கைப்பற்றினர்

மரங்களை
விதம்நூறாய்
பிளாஸ்டிக் ஆக்கினர்

தான்னியக்க கருவியில்
பூக்களை
பூக்கச் செய்தனர்

விரும்பி வண்ணத்தில்
பூக்களை தந்தனர்

பெறக்கூடிய வாசனைகளை
பட்டியல் படுத்தினர்

உயிரை உழைப்பை
விலையாக்கினர்

விதியின்
நிகழ் கனி
பச்சையம் இழந்தது

இப்போது
பிளாஸ்டிக் காடுகளில்
பிளாஸ்டிக் கனியுண்டு
பிளாஸ்டிக் மனிதர்களாய்
வாழ்கிறோம்...



# வேட்டை

திரை விலகியது
சிங்கம்
மேடையின்
வலது மூலையில்
பதுங்கியிருந்தது
புலி
இடது மூலையில்
பதுங்கியிருந்தது
நரி
சிங்கத்திற்கும்
புலிக்கும்
நடுவே
பம்மியிருந்தது

நான்
மேடையின்
மையத்தில்
எல்லாம் இழந்து
கொல்லப்படுவதற்கு
நிற்கின்றேன்

படபடக்கும்
இதயத்தின்
துடிப்பொலிக்கு
அவை
கூரிய நகங்களை நீட்டி
அண்மிக்கின்றன
நரிகளுக்கு
கொண்டாட்டம்
திரைக்குள்
சலனம்.
நான்
நரியை
வேட்டையாடினேன்
சிங்கமும் புலியும்
திரைக்கு பின்னால்
ஓடிக்கொண்டிருக்கின்றன
நீங்கள்
உங்கள் மேடையிலிருக்கும்
எதை
வேட்டையாடப்போகின்றீர்கள்...

**சண்முகம் சிவகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப்பதிவு

சு.தவச்செல்வம்



"கடவுள், மதங்களெல்லாம் மனுசே உருவாக்கிகொண்டது காலா அதான் இந்த ஓகைத்துல இவ்வளோ பெரச்சன"

காலன் தாத்தாவின் நடையும் அவரது முகபாவங்களும் லிங்கப்பாவின் நினைவலைகளைதான் மீட்டுகின்றன என்பதை அந்தப்பாதையில் செல்லும் யாரும் ஊகிக்காமலிருக்கமுடியாது. வெள்ளைச்சாரத்துடன் ஒரு முழுக்கைச் சேட்டை போட்டு கையை மட்டும் ஒரு மடிப்புடன் நிறுத்தி சாரத்தின் இரு கரைகளையும் நடுவிரல்களால் பிடித்துக் கொண்டு எட்டி நடந்து கொண்டிருந்தார். பாதையில் கிடக்கும் கற்களையெல்லாம் ஒரு ஆளைப்பார்ப்பது போல வெறித்துப் பார்த்து நடக்கும் அவர் சரஞ் சரமாக அவரது அருகில் நடந்து செல்லும் மனிதர்களை ஏறிட்டுப்பார்க்கிறாரில்லை அவரது உடல் முழுவது சோகம் துளையிட்டிருந்தது. "நல்ல யோகமான ஆளுதான் சம்பளநாளா பார்த்து செத்து போயிருக்கு இந்தண்ணே" என்ற வார்த்தைகள் தாத்தாவின் காதில் விழாமலில்லை.

கோவில் லயத்தின் அறுபது குடும்பங்களும் ரெட்டை லயத்தின் பதினேழு குடும்பங்களும் அன்று வேலைக்குச் செல்லவில்லை. லிங்கப்பாவின் சாவை கேள்வியுற்றதிலிருந்து காலன் தாத்தா நேற்றிலிருந்து மாட்டுக்கு பில்லறுக்கவும் செல்லவில்லை. சுருட்டைப் புகைத்தப்படி அங்குமிங்கும் தன்னந்தனியாகவே அலைந்து கொண்டிருக்கிறார். அவரது கால்கள் ஓரிடத்தில் நிலைக் கொள்ளவில்லையென்பதை எல்லோரும் அறிந்து கொண்டு விட்டார்கள். நேற்று காலை ஒன்பது மணியிலிருந்து அந்தி வரை லிங்கப்பாவின் வீட்டு முற்றத்திலேயே அமர்ந்தார், அலைந்தார், நின்றார் பின்னர் வீட்டுக்கு வந்தார் யாரிடமும் பெரிதாக பேச்சு கொடுக்கவில்லை. ஒரு ஏழு மணியளவில் அவரது கருப்பு சுயிட்டரைப் போட்டு தலைப்பாகையை சுற்றி கொண்டு மீண்டும் லிங்கப்பாவின் மையவீட்டுக்குச் சென்றார். விடியும் வரை அங்கிருந்துவிட்டு மீண்டும் காலை ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தார். "தாத்தா காலையிலயும் பட்டி பக்கம் போகவில்லை" அவளது பேத்தியின் குரல் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்ததையும் அவர் பொருட் படுத்தவில்லை.

முதல் நாள் லிங்கப்பாவின் சாவை கேள்விப்பட்ட அந்தோட்டத்து மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வீட்டி லிருந்து விட்டனர். இன்று அவர் இறந்த கோவில் லயத்து ஆளுகளும் ரெட்ட லயத்து ஆளுகளும் மும்முரமாக மைய வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலை ரெண்டுபேர் வீட்டுக்கு வீடு காசு சேர்த்து சமைக்க சென்று விட்டார்கள். ரெண்டு லயத்திலுள்ள அத்தனை வீடுகளும் இழவு வீடு போல ஒதுங்க வைத்தாயிற்று, பகல் சாப்பாடு தயாரித்தல், வருகிறவர்களுக்கு தேத்தண்ணி ஊத்துதல், பாக்குவெட்டுதல், வெற்றிலை வைத்தல், ஜீஸ் கொடுத்தல் என்று ஏற்பாடுகள் நடந்தேறுகின்றன. ஆனால்! லிங்கப்பா அந்த தோட்டத்தில் கங்காணியாகவோ, காவல் காரணாகவோ, தலவராகவோ இருந்ததில்லை தோட்டத்தில் அவர் முக்கி யமானவர் என்பதை எல்லோரும் மனதளவில் உணர்ந்திருந்தார்கள்.

மீண்டும் காலன் தாத்தா ஒம்போது மணி யளவில் மையவீட்டுக்குச் சென்று கொண் டிருக்கிறார் அவர் செல்லும் அந்த வழியில் லிங்கப்பாவின் நினைவுகளை அசைபோட் டபடி நடக்கிறார். இன்று லிங்கப்பாவின் உடல் நல்ல மாதிரி அடக்கம் செய்யப்பட வேண்டுமென அவர் நினைத்துக்கொண்டே நடக்கிறார். “முப்பத்தஞ்சி வருசமாக ரெண்டு பேரும் மலையில் வேல செஞ்சோம். இருவது வருசமா கொழும்புல வேல. இப்ப உன்னோட சேந்துட்டான்” என்று அவரது நடை வழியில் அமைந்திருந்த கம்பி முனியைப் பார்த்து புலம்பிக் கொண்டிருந்தார்.

காலன் தாத்தா ஆறாடி உயரம் கரு கருத்த கணக்கான உடல்வாகு, ஆனால் லிங்கப் பாவோ நான்கடி ஐந்தங்குலம்தான் இருப் பார். லிங்கப்பாவை அந்ததோட்டத்திலுள்ள பேசுவதற்கு முயற்சிக்கும் பிள்ளை முதல் கிழடுவரை “லிங்கப்பா” என்றெ கூப்பிட்டு பழக்கம். அந்த உரிமையை அவர் வழங்கா மலே அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் பெரும்பாலும் சாவதற்கு மூன்று வருடங் களுக்கு முன்பு வரை அவரை டவுசர் சேட்டுனேயே கண்டிருக்க முடியும். தோட் டத்தில் வேலைசெய்த அரைவாசி காலத் துடன் அவர் கொழும்புக்கு வேலைக்குச் சென்றுவிட்டார் ரொம்ப நாளாக கொழும் பிலேயே தான் வேலை செய்தார். கிழமைக்கு ஒரு தரம் வீட்டுக்கு வந்துபோவார்.

கொழும்பிலிருந்து வந்தாரென்றால் சனிக் கிழமை “அரைநேரத்துக்கு” பின் சொந்தக் காரங்க, நண்பர்களெல்லாரையும் சுகம் விசாரிக்க ஒரு ரவுன் வருவார். வீட் டுக்கு வரும்போது சனிக்கிழமை இரவு எட்டு மணியாகும். “வந்தா ஊருல உள்ள வுங்கள பத்தி விசாரிக்கவே ஒங்களுக்கு நேரோ சரியா பொயிடும்” என்று பொட்டுவும் பேசிக் கொண்டிருப்பாள். ஞாயிற்றுக் கிழமை காலையிலிருந்தே காலன் தாத்தாவுடன்தான் நேரம் கழியும். லிங்கப்பாவின் வரவுச்செய்தி அவரது காதுக்கு எட்டியதுடன் காலை பத்து மணிக்கெல்லாம் அங்கு சங்கமமாகிவிடுவார். இல்லாவிட்டால் லிங்கப்பா காலை ஏழு மணிக் கெல்லாம் காலன் தாத்தாவின் அடுப் படியில் அமர்ந்துவிடுவார். அங்கிருந்து ஆரம்பமாகும் அவர்களது வீட்டு நடப்பு, தோட்ட நடப்பு நாட்டு நடப்பு பற்றிய அரசியல் மாநாடு, இந்த தோட்டத்தில் அரசியல் சாதி மத விவகாரங்களையெல் லாம் வெளிப்படையாக திறந்த மனதுடன் பேசக்கூடியவர்களில் லிங்கப்பா ஆர்வம் காட்டுவதால் எல்லோரும் அவரை சூழ்ந்து கொள்வார்கள்.

அடுப்படியில் அமர்ந்துகொண்டு அரசி யல் பேசுவதும், சாமியறை பாயில் படுத் துக்கொண்டு சாமிப்படங்களைப் பார்த்து கேலி செய்வதும், காலனிடம் பல கேள்வி களை எழுப்புவதிலும் அவரை பகுத்தறிவாள ராக உறுதிப்படுத்திக்கொள்வார். காலன் தாத்தாவும் அந்த காலத்தில் லேசுபட்டவ ரல்ல “என்னாவோய் சாமிய கேலி பாண்ணுற ஒலகத்துல தெய்வத்துக் மிஞ்சினது எதுவும் இருக்காவோய்” “காலா நீ சொல்றதும் உம்ம தான் கடவுளுக்கு மிஞ்சினது ஒன்னுமில்லனா கடவுள் ஏ ஆயுதங்களை வச்சீருக்காரு?” என்று அவர் சுண்டிவிடும் கேள்விக்கு காலன் அமைதியாய் ஆமோதிப்பார். நய்யாண்டியும் கேலியும் கலந்து உண்மையை ஆராய்ப் புகு வார்கள் காலன் தாத்தாவும் லிங்கப்பாவும்.

மீண்டும் லிங்கப்பா “கடவுள், மதங்க ளெல்லாம் மனுசே உருவாக்கிகொண்டது காலா அதான் இந்த ஒலகத்துல இவ்வளோ பெரச்சன” என்று சூடு பிடிக்கும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகங்களுக்கு "மனுசே தெய்வத்துக்கு அடங்கிதான் போவனும் மோய்" என்ற வார்த்தையோடு பாயிலிருந்து எழும்புவார் காலன்.

லிங்கப்பா வயதாகி ஓய்ந்ததும். அங்கங்கு பேச்சு கொடுப்பவர்கள் அவர் இயற்றிய "ஊரே என் உறவு" நாடகத்தைப் பற்றி வியந்து பேசுவார்கள் கிட்டத்தில் அழகர் வீட்டில் காலன் தாத்தா, லிங்கப்பா, முனுசாமி ஆகியோர் பேசிக் கொண்டிருந்த போது பக்கத்து லயத்திலுள்ள நாலைந்து பேர் கூடிவிட்டார்கள். "அண்னே! நீங்க செஞ்ச சேவையெல்லாம்மாரி இப்ப உள்ளவிங்களால செய்ய முடியுமாண்ணே! லிங்கப்பா நாடகம் போடுறாருன்னா? அடுத்த தோட்டத்துல உள்ளவிங்கலெல்லாம் ஆளுகட்டிக்கிட்டு வருவானுங்களேண்ணே" என்று அவருடைய "ஊரே என் உறவு" நாடகத்தில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் தோட்டத்தவுட்டு போற இளைஞன் வேடத்தில் நடித்த அன்பரசு சொல்லிக்கொண்டிருந்தான்.

"ஆமா காமங்கூத்து பாக்க போறமாதிரி பெலாங்கட்டெல்லாம் சுத்திகிட்டு வருவானுங்க இந்த தோட்டத்துல ஓவுட்டு நாடகத்துக்கு இருந்த மவுசு வேற எவனுங்களுக்கும் இல்லடா!" என்று காலன் தாத்தாவும் அந்த பேச்சை மெருகேற்றினார்.

"ஆமா அதுவொரு காலந்தான் அந்த நாள்ல இப்ப மாதிரியாக இந்த தோட்டோ இருந்திச்சி அழகர்ண்ணே? போட்டி போறாம அடுத்தவனப்பத்தியே யோசிச்சிக் கிட்டிருக்கிறது. அந்த நாள்ல எப்புடிப்பட்ட மனுசேங்க இருந்தாய்ங்க இந்த தோட்டத்துல எந்த வேல வேணுமுனாலும் செய்யலாமே அழகர்ண்ணே ஒங்களுக்கு ஞாபகமிருக்கா 'அண்ணா' வாலிபர் சங்கம் அமச்சி வேல செஞ்சது? ஆமா கல்யாண வீடு சாவு வீடு சடங்கு வீடுன்று சேவை செஞ்சீங்க, எவ்வளோ வேல அழகர்ண்ணே.

இல்ல இப்புடிதாணேண்ணே அந்த நாள்ல தோட்டோ நல்லா இருந்ததுக்கும் மனுசே நல்லா இருந்ததுக்கும் ஓங்க மாதிரி ஆளுகபோட்ட நாடகெல்லாம் ஒரு எடுத்துக்காட்டத்தானே இருந்துச்சி மாசத்துல ஒரு நாடகோ போடுவீங்கதானே!" "வெளையாட்டுப்போட்டி ஒலி ஒளி எல்லாமே வாலிபர் சங்கோந்தானே ஏற்பாடு செய்யும்" இடையில் தெளிவில்லாத பேச்சுக்குரலில் காலன்.

"அதுநா நெசோம் அன்பரசு இவேவுட்டு நாடகோ எல்லாமே சமூகத்துக்கு சேதி சொல்றதுதானே 'ஊரே என் உறவு', 'ஏழையின் செல்வன்', 'நீதி முரசு' இப்புடி எத்தன நாடகோ ஒரு முப்பது நாடகம் போட்டிரும்போமா லிங்கோ?" பகுத்தறிவு சுவடுகளை மீட்கும் பிரவாகிப்பில் குரல்கள் முட்டி மோதின. அன்று "இல்ல இருவத்தி ஏழு நாடகோ" என்று லிங்கப்பா சரியான கணக்கை சொன்னார். அது இல்ல "ஒரு மொற தீவாளிக்கு 'கங்காணியின் மகன்' நாடகம் போட்டு அரவாசியில் கங்காணி வீட்டுக்காரனுங்க மேட்டு லயத்துல இருந்து கல்லடிச்சிபுட்டானுங்க ஞாபகமுருக்கா லிங்கோ"

"ஆமான்னே"

"நாடகம் பார்க்க வந்தவிங்க எல்லோரும் கங்காணி வீட்ட அடிச்சி நொருக்க ரெடியா கிட்டாய்ங்க"! "நா... சொல்லவுந்தானே நிப்பாட்டுனாய்ங்க" என்று புன்முறுவலுடன் லிங்கப்பா பேசிக் கொண்டிருந்தார். அவர் வயதாகியும் ஆர்வமாக உற்சாகமாக பேசிக் கொண்டிருந்த கடைசி பேச்சும் அதுவாகத் தான் இருந்தது.

லிங்கப்பா தோட்டத்தில் வேலைசெய்த காலம்வரை காலனும் துடிதுடிப்பாக அவருடன் இயங்கிக் கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து நாடகம் போடுவதிலும் சரி, பொது வேலைகள் செய்வதிலும் சரி இருவரும் "இணைந்த கைகள்தான்" "தோட்டத்து யூனியன் தலவர்மாருகூட இவுங்க பேச்ச கேட்டுத்தான் வேல செய்வாங்க" என்று பெண்கள் மலையில் பேசிக்கொள்ளுமளவுக்கு முக்கியமானவர்களாக செயற்பட்டார்கள். சில நாட்களில் தோட்டங்களில் நடக்கும் அரசியல் கூட் டங்கள், மேதினக்கூட்டங்களில் லிங்கப்பாவை பேசச்சொல்வார்கள். அவரை அழைத்ததும் பலத்த கைத்தட்டல்களும் விசில்களும் பறக்கும், "பெரியார் சொன்னார்" என்றுதான் அவரது பேச்சை ஆரம்பிப்பார். அவர் எந்த கட்சிக்கும் ஆதரவாக பேசமாட்டார் பொதுமக்களுக்கு விழிப் பாக சிலவார்த்தைகளைச் சொல்லி, அண்ணாத் துரையின் மேற்கோளுடன் விடை பெறுவார்.

"லிங்கப்பா என்னைக்கி கொழும்புக்கு போனீச்சோ அன்னியோட காலப்பா மொடங்கிருச்சி மாட்டோட நின்னுடுச்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வார்த்தை ஒரு தடவை மட்டும் அவர் காதில் விழவில்லை. எனினும் லிங்கப் பாவுடன் இணைந்து செய்த வேலைகளை அவரால் தனியாக முன்னெடுக்க முடிய வில்லை என்றே கூறலாம். தோழமையை இடைபிரிந்த உணர்வோடு பொருளற்று நடமாடிக்கொண்டிருந்த காலன் தாத்தா இன்று வெற்றுடலுடன் உலாவுகிறார்.

இரண்டு லயத்திற்கும் நுழைகின்ற ஆல மரத்தடி குறுக்குப்பாதை வழியே ஏறுகின் றார் லிங்கப்பாவுக்கு நீர்மாலை எடுக்கப் பதற்காக டோவி பாபர் சகிதம் இறங்கு கின்றனர். மரண வீட்டில் குழுமியிருந்த அனைவரது பார்வைகளும் காலன் தாத்தா வின் வருகையையும் அவரது முகநடப்புகளை அவதானிப்பதிலும் நிலைக்குத்தியிருந்தன. அவரது சிறிய அசைவையும் பார்த்திருக் கின்றவர்கள் உணருகின்றனர் என்பதையும் அவர் அறிகிறார். லிங்கப்பாவின் முழுமை யான ஆற்றலை அறிந்தவராகவும். இந்த லயத்து மக்களுக்கிடையில் எப்படி வாழ்ந்தார் என்பதையும் உணர்ந்தவராகவும் காலன் தாத்தா மட்டுமே இருக்கிறார். அவர்கள் நடத்திய அண்ணா வாலிபர் சங்க உடைந்த கட்டிடத்தில் பல அரசியல் கட்சித்தலைவர் களின் துண்டு பிரசுரங்கள் அவர்களின் ஒளி இழந்த முகம்... லிங்காப்பாவின் வீட்டில் முன் விறாந்தையில் தான் அவர் வைக்கப் பட்டிருந்தார். சாமியறைப்பக்கம் பெரிதாக அவர் போவதில்லையென்று காலன் தாத்தா வுக்கு நன்கு தெரியும். ஆனால் விறாந்தாவில் எல்லோருக்கும் காட்சிதரும் வகையில் பெரி யாரது படமும், எதிரே அண்ணாவின் படமொன்றும் மாட்டப்பட்டிருக்கும் இன் றும் அந்தப் படங்களுக்குக் கீழே அவர் உறங்கிக் கொண்டிருக்கிறார். அருகிலே விளக் கொன்று விம்மி விம்மி எரிந்து கொண டிருந்தது. காலன் தாத்தாவின் கண்கள் படங்களையும் விளக்கையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தன.

○○○

# அஞ்சலி



மா பா சி என அன்புடன் அழைக்கும் எழுத்தாளர்

## மா. பாலசிங்கம்

மா பா சி கேட்டவை என்ற நூலின் மூலம் கலை இலக்கிய நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து தடம் பதித்தவர். முற்போக்கு எழுத்தாளரான இவரது படைப்புகள் மனிதப் புயலில், ஒரு கொடியும் கொம்பும், தரிசுகள், முற்றுகை, இப்படியும் ஒருவன் (மல்லிகைப் பந்தல் வெளியீடு, 2002), எதிர்க்காற்று (2008), மா. பா. சி. கேட்டவை (கட்டுரைத் தொகுதி, 2016) தழும்பு (புதினம், புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடு)

கடந்த 31.10.2020 அன்று காலமாகிய எழுத்தாளர் மா. பாலசிங்கம் அவர்களுடைய பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவுகள், நண்பர்களுடன் இணைந்து தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு துயரைப் பகிர்ந்துகொள்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சி.குமார் என்ற மனிதநேய படைப்பாளி

## மாத்தளை மலரன்பன்

ஒரு பிற்பகலில் எழுத்தாள நண்பர் மு.சிவலிங்கம் கைபேசியில் கம்மிய குரலில் சொன்ன செய்தி என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

"மல்லிகை சி. குமார் காலமாகிவிட்டார். நாளை நல்லடக்கம் தலவாக்கலையில்......." ஸ்தம்பித்துப் போன நான் சிறிது நேரத்தின் பின்னர், பிரயாணத்துக்கு தயாரா கின்றேன். நாளை காலையில் புறப்பட்டால் குறித்த நேரத்துக்கு போய்ச்சேர முடியாது.

மீண்டும் கைபேசியின் ஒலி "நாளைக்காலை கண்டிக்கு வாருங்கள். எனது காரில் ஒன்றாகவே போகலாம் தலவாகொல்லைக்கு".... என்கிறார் எழுத்தாளர் சுதர்ம மகாராஜன்.

"தோதுபடாது, இப்போதே புறப்படுகிறேன். அட்டனில் எனது மூத்த மகளின் வீட்டில் தங்கி காலையில் புறப்படுவது தான் வசதியானது".

கண்டி இராமனோடு தொடர்பு கொண்டேன். அவருக்கு செய்தி கிடைத்திருந்தது. மறுநாள் அதி காலையில் புறப்பட்டு நேரங்காலத்தோடு அட்டன் பஸ் நிலையத்துக்கு வந்துவிட்டார். இருவரும் முச்சக்கர வண்டியில் பயணிக்க, எனது மனம் பழைய நினைவுகளில் பயணிக்கிறது.

அறுபதுகளில் இன்று போல் இல்லாமல் தோட்டங் களில் படித்தவர்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருந்ததொரு சகாப்தம். தமது மக்களின் அவல வாழ்வை எண்ணி, சிந்தித்து அதற்கான விடிவுக்காக தமது கருத்துக்களை புகுத்தி நாடகங்கள் எழுதி படித்த ஓரிரு இளைஞர்கள் ஏனைய இளைஞர்களையும் சேர்த்துக்கொண்டு மேடையேற் றியமை ஒரு தோட்டத்தில் மட்டுமல்ல மலையகத்தின் பல தோட்டங்களில் இடம்பெற்றமை வரலாறாகும்.

தான் பிறந்து வளர்ந்த தோட்டத்தின், மக்களின் வாழ்வை கருப்பொருளாகக்கொண்டு தானே எழுதி வாலிபர்களை இணைத்துக்கொண்டு மேடையேற்றியதன் மூலம் மல்லிகை சி.குமாரின் கலை இலக்கிய பயணம் ஆரம்பமாகிறது.

இளம் எழுத்தாளர்கள் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என எழுதிய ஓரிரு படைப்புகள் வெளி வந்தாலும் பிரசுர களம் பெரிதாக இல்லாத நிலையில், வீரகேசரியின் மலையக சிறுகதை போட்டியில் பரிசுக்குத் தெரிவான கதையின் மூலம் வெளிச்சத்துக்கு வந்த, ஆத்திரப்பரம்பரை என அப்போது முத்திரை குத்தப் பட்ட எழுத்தாளர்கள் சிலரில் மல்லிகை சி.குமாரும் ஒருவர். சிறுகதை, குறுநாவல் ,கவிதை என அவரது படைப்புலகம் விசாலமானது.

வர்க்க முரண்பாட்டின் விளைவுகளான ஏற்றத் தாழ்வுகள் கொண்ட இந்த சமுதாய அமைப்பின் அவ லங்களை பேசுவது மட்டுமல்லாமல் போராட்டமே விடி வுக்காண பாதை என்பதையும் சில படைப்புகளில் கோடிட்டு காட்டியுள்ளார்.

அலங்காரங்களுக்காக கவிதை எழுதும் கவிஞர் மத்தியில் உணர்வு பூர்வமாக கவிதை வடித்திருக்கிறார். மல்லிகை சி.குமார். ஒரு சில கவிதைகளில் வாழ்க்கை எங்கோ ஓரிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. பல கவி தைகளில் வாழ்க்கை அங்கங்கே ஒட்டிக் கொண்டிருக் கின்றது. மீதமுள்ள கவிதைகள் வாழ்க்கையாகவே இருக் கின்றன......" என எழுதிச் செல்கின்றார், கவியரசு வைரமுத்து, 'மாடும் வீடும்' கவிதைத் தொகுதியின் முன்னுரையில்.

கவிஞர்கள் சு.முரளிதரன், குறிஞ்சித்தென்னவன் போன்ற மூத்த கவிஞர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க மற்றுமொருவர் மல்லிகை சி.குமார்.

"கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம் என்று தன் ஆளுமையை சமூகப்பார்வையுடன் வெளிப்படுத்தி யுள்ளார். இவரது கந்தகவரி கவிதைகள் பொய் முகங் களை இனங்காட்டியுள்ளன" என அந்தனி ஜீவா குறிப் பிட்டுள்ளது சரியானதே.

"மாடும் வீடும்" கவிதைத்தொகுதி மிகவும் சிலாகித்து பேசப்பட்டதொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கி கொண்டிருந்த
உங்கள்
முகவரியை
மேலே தூக்கி
வெளிச்சம்
போட்டு
காட்டியது
எங்கள்
ஓட்டுகள்...
இது உண்மையிலேயே
எங்கள் தவறு தான்
நாங்கள் போட்ட
பூமாலைகள் தான்
அவர்களை நிமிர விடாமல் தடுக்கின்றன....

என அவர் குறிப்பிடுவது அரசியலில் இன்றும் நாம் காணும் நிதர்சனம்....

நாங்கள் மரண வீட்டையடைந்த போது நாவல் நகர் கே. பொன்னுத்துரையுடன் மேமன்கவி மிகுந்த பிரயாசையுடன் தானே முன்னின்று வெளிக்கொணர்ந்த கொழும்பு கொடகே நிறுவனத்தின் வெளியீடான குமாரின் வேடத்தனம் சிறுகதைத் தொகுதியின் பிரதிகளைக் கொண்டு வந்திருந்தார்.

நம் நாட்டு தமிழ் இலக்கியவாதிகளின் படைப்புகளை நூலுருவில் கொண்டுவரும் ஒரே ஒரு ஸ்தாபனம் கொடகே நிறுவனம் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் மேமன்கவியின் பங்கும் போற்றத்தக்கது.

மு. சிவலிங்கம், மகள் சுகுணா, மகன் மாறன் என்ற உறவினரோடு இலக்கியவாதிகள் சூழ்ந்திருக்க வேடத்தனம் நூல் குமாரின் பேழையிலிருந்த உடலில் வைக்கப்பட்டது. கண்கள் பனிக்க அஞ்சலி செலுத்தினோம்.

கல்வியியலாளர் செல்வராஜாவின் தலைமையுரையுடன், எழுத்தாளர் மொழிவரதன், மு. சிவலிங்கம், சிவனு மனோகரன், பிரமிளா பிரதீபன், சு. முரளிதரன், சுதர்மமகாராஜன், நாவலர் நகர் பொன்னுத்துரை, மேமன்கவியென... இன்னும்

குழுமியிருந்தவர்களில் சிலர் இரங்கலுரை நிகழ்த்திய பின்னர் குமாரின் இறுதிப் பயணம் ஆரம்பமாகியது.

... கண்டிப்பாக
நாங்கள் ஒரு காலம் மேலே
எழுவோம்
பட்டமே
உன்னையும் உன்னை இயக்குபவர்களையும்
நாங்கள் பள்ளத்தில்
இறக்குவோம்
அன்று
உண்மையில்
தீபாவளி எங்களுக்கு தான்...

அவரது கவிதையின் வரிகள் ஞாபகத்துக்கு வர ஊர்வலத்தில் நடக்கின்றேன்.

---

கவிதை

# மழை பெய்யும்



## ஜெயதர்மன்

*தாரை விழுந்த சுவர்களும்,*
*அதையுண்ட இருளும்*
*மட்டுமே மீதமாயுள்ள*
*என்னிடம்,....,*
*ஒரு வீட்டையொத்த*
*கூடொன்றின்*
*வரைப் படத்தை*
*பரிசாக தருகிறாய்...*
*தொலைதல்கள் மிச்சமற்ற*
*என்*
*கனவுகளின் மிச்சத்தில்*
*வடுவாக இருக்கிறது*
*ஒரு தனித்த வீடு....*

*நீ கொடுத்த வரைப்படத்தை*
*வைக்கக் கூட*
*நிலமற்ற என்னிடம்*
*மீண்டும் ஒரு வாக்கை*
*கேட்கிறாய்...!*
*எப்போதும்*
*என் வாக்குகளை மீறும்*
*உனக்கு*
*மீண்டும் ஒரு*
*வாக்களிக்கிறேன்...*

*வென்றபடி மலையிறங்கு...*
*எனக்கான வீட்டையும்*
*அதற்கான நிலத்தையும்*
*என் எதிர்காலத்திடம்*
*விதைத்திருக்கிறேன்...*
*விதை, செடியாகி, விருட்சமாகும்,*
*பின்*
*காடாகி...*
*மழை பெய்யும்...!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் மக்கள் இலக்கியமும்: அடையாளம், அரசியல், அதிகாரம்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்

சமூக வாழ்வின் பிரிக்கவொண்ணா அம்சமாக கலையும் இலக்கியமும் திகழ்கின்றன. இலக்கியம் என்பது அடிப்படையில் மனிதரது சமூக இருப்புப் பற்றியது. எனவே இலக்கியம் படைப்போர் தாம் வாழும் சமூகத்தையும் அதன் அசைவியக்கங்களையும் அவ தானிக்காது இலக்கியம் படைக்க இயலாது. சமூகத்தில் ஒரு முரண்பாட்டைக் காணுகிற ஒருவரால் அதை புறக்கணிக்க இயலாது. அதையும் மீறி அம்முரண்பாட்டைப் புறக்கணிப்பதானது சில இடங்களில் நடந்தேறுகிறது. தூய இலக்கியத்தின் பெயரால் அதைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவ்வாறான படைப்பாளிகளதும் அவர் தம் படைப்புகளினதும் சமூகப்பெறுமதி கேள்விக்குரியது. இவ்விடத்தில் இலக்கியம் என்பது யாருக்காக எதற்காக ஆகிய வினாக்களை நாம் தொடுத்தாக வேண்டியுள்ளது.

சமூகமாக இயங்குகின்ற மக்கள் கூட்டத்தினரிடையே கலையும் இலக்கியமும் இயல்பான ஒன்று. அன்றாட வாழ்வியலின் அழகுகளை, அவலங்களைக் கண்கூடாகக் காணும் மனிதரிடையே அதை வெளிப்படுத்தும் வெவ் வேறு வடிவங்கள் தோற்றம் பெறும். அவற்றில் கலை இலக்கியங்களுக்கு முக்கிய பங்குண்டு. அவை வாய் மொழியில் அமைந்தனவாய் இருப்பினும் மக்களைச் சென்றடையும் போது காலம் கடந்து நிலைக்கின்றன. அதேவேளை எழுத்தில் வடிவில் அமைந்த மக்களுக்கு அந்நியமான இலக்கியங்கள் தங்கள் சாவை விரைவில் எட்டி விடுகின்றன. இதுவே மக்கள் இலக்கியத்தின் தேவையை எமக்கு உணர்த்தி நிற்கிறது.

மலையகத் தமிழர்களின் வாழ்வியல் நெடிய போராட்ட வரலாற்றை உடையது. அவர்தம் போராட்டத் தோடும் வாழ்வியலோடும் கலையும் இலக்கியமும் இரண்டறக் கலந்துள்ளன. அவற்றில் பல வாய்மொழி இலக்கியங்களாக இன்றும் எம்மத்தியில் உயிர்ப்போடு இருக்கின்றன. இன்னும் சில எழுத்துவடிவம் பற்றி மலையக மக்களின் வாழ்வியலின் சித்திரிப்புக்களாக, உணர்வுகளாக இருக்கின்றன. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் மலையகத்து இலக்கியப் படைப்புக்கள் உத் வேகம் கண்டிருக்கின்றன. இந்த மாற்றம் வரவேற்கத் தக்கது. இப்படைப்புக்களின் மக்கள் இலக்கிய நோக்கு, அதிகாரத்தை நோக்கிப் பேசுதல், அடை யாளத்தை மீட்டெடுத்தல் ஆகியன குறித்த பல வினாக்கள் எழுந் துள்ளன. இது குறித்த ஒரு மீள்பார்வை அவசியமாகிறது. மாறிவருகின்ற ஈழத்து இலக்கியச் சூழல், அங்கீகாரத்துக் கான அவா, தமிழகம் குறித்த பார்வை என்பன இதற்கு பங்களித்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இந்தப் பின்னணியில் மலையகத் தமிழரது உரிமைக்கான போராட்டத்தில் இலக்கியத்தை எவ்வாறு பங்காளி யாக்குவது என்ற வினாவை நோக்கிய தாக இக்கட்டுரை அமைகிறது.

### மலையகத்து மக்கள் இலக்கியம்

மலையக இலக்கியத்தின் வளர்ச்சிப்போக்கையும் அது எவ்வாறு மெதுமெதுவாக மக்கள் இலக்கியம் நோக்கி நகர்ந்தது என்பதை நோக்கினால் மலையகத்து இலக்கியப் போக்கின் நோக்கைப் புரிந்து கொள்ளவியலும். முதலில் மக்கள் இலக்கியம் என்றால் என்னவெனப் பார்ப்போம். மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களின் சார்ப்பான இலக் கியம், மக்களைச் சென்றடையும் இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களால் உருவாக்கப்படும் மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று பலவாறாக நோக் கலாம். இவற்றுள் அதி முக்கியமானது கடைசியாகக் குறிப்பிடப்பட்ட பண்பாகும்.

இலங்கை சுதந்திரமடையும்வரை மலையக மக்க ளுக்கு கல்வி என்பது கிடைப்பதற்கு அரியதாகவே இருந்து வந்திருக்கிறது. இலங்கையின் சுதந்திரத்துக்கு முந்தைய பத்தாண்டுகளில் வாய்மொழி இலக்கியங்களைத் தாண்டி எழுத்து வடிவில் இலக்கியங்களை ஒரு சிலரே படைத்து வந்தனர். சி. சுப்பிரமணியம், ஆர். இராமையா, வெற்றிவேல்கவிராயர் போன்றோர் இந்தியப் பத்திரிகை களுக்கு சஞ்சிகைகளுக்கும் எழுதினர். அவர்களின் படைப்புக்கள் ஆன்மீகம் தொடர்பானதாக இருந்தது. அவை கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் வெளிப் பட்டன. இப்படைப்புகள் மக்களை மக்களின் நிலையை, சமூகச் சூழலைப் பிரதிபலிக்கவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து கலைஞர்கள் இலங்கைக்கு வந்து நிகழ்ச்சி களை வழங்கியதோடு பாடல்களையும் பாடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் மலையகத்தில் பாரதியார் பாடல்கள், சங்கரதாஸ் சுவாமிகள், மதுரை பாஸ்கரதாஸ் ஆகியோரின் கீர்த்தனைகள், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து என்பன புகழ்பெற்று விளங்கின. இதை அடியொற்றி நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை, எஸ்.எஸ். நாதன், கந்தசாமி கணக்குப்பிள்ளை ஆகியோர் பாடல்களை இயற்றிப் பாடினார்கள். இது மக்கள் மத்தியில் பரவலாகச் சென்றடைந்தது. சில துண்டுப் பிரசுரங்களாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இது மலையக இலக்கியம் மக்கள் இலக்கியமாக உருமாறத் தொடங்கிய புள்ளி எனலாம்.

இதைத் தொடர்ந்து அ. சிதம்பரநாதப் பாவலர், சக்தி ஏ. பாலையா ஆகிய கவிஞர் காத்திரமான படைப்புக்களைத் தரத் தொடங்கினார்கள். இதன் தொடர்ச்சியாக மொழிபெயர்ப்புகளில் சி.வி. வேலுப்பிள்ளை மற்றும் கே. கணேஷ் ஆகியோர் முன்னோடியான முயற்சிகளில் இறங்கினார்கள். இக்காலத்தில் மலையகத்தில் கல்வி அறிவு மெதுமெதுவாக வளரத் தொடங்கியது. இலங்கையில் பத்திரிகைத் துறை கொஞ்சம் விரிந்தது. தமிழக சஞ்சிகைகள் இலங்கையில் பரவலாகக் கிடைத்தன. இதற்கு உத்வேகம் அளித்தாற்போல் புதுமைப்பித்தன் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அவலத்தைச் சித்திரிக்கும் 'துன்பக்கேணி' என்ற சிறுகதையை எழுதினார்.

இந்தப் பின்புலத்தில் மலையக மக்களின் துன்பங்களைப் பிரதிபலிக்கும் நாவல்கள் தோற்றம் பெற்றன. இதில் சி.வி வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' மற்றும் 'வாழ்வற்ற வாழ்வு' டி. எம் பீர் முகம்மதின் 'கங்காணி மகன்' என்பன முக்கியமானவை. இக்கட்டத்தில் பிறமொழி நாவல்களையும் கவிதைகளையும் மொழிபெயர்த்துக் கொண்டிருந்த கே. கணேஷிற்கு ஜப்பானிய அரசவையிலிருந்து பாராட்டுக் கிடைத்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.

மலையக வாழ்வியலைப் பிரதிபலிக்கும் சிறுகதைகள் 1950களில் தொடர்ச்சியாக வெளிவரத் தொடங்கின. இதை எழுதியவர்களில் பலர் மலையகத்தைச் சாராதவர்களாக இருந்தபோதும் அம்மக்களின் துன்பமும் போராட்டமுமே பேசுபொருளாக இருந்தன. இதன் தொடர்ச்சியாகவே மலையகத்திலிருந்து பலர் சிறுகதைகளை உருவாக்கத் தொடங்கினர். அதில் மல்லிகை சி. குமார் குறிப்பிடத்தக்கவர். இக்கதைகள் தொழிலாளர்களது வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டின. அவர்களது வர்க்க உணர்வையும் போராட்ட குணத்தையும் பிரதிபலித்தன. இந்தக் காலத்தின் மலையக மக்களின் வாழ்வியலும் இலக்கியப் பரீட்சயமும் குறித்து ஒரு குறுக்கு வெட்டுப் பார்வையை 'எங்களோடு சி.வி சில நாட்கள்" என்ற மல்லிகை சி. குமாரின் நினைவுக்குறிப்புகள் அழகாகத் தருகின்றன.

இவ்வாறு வளர்ந்த மலையக் இலக்கியம் 1970களில் நல்ல நாவல்கள், கருத்தாளம் மிக்க கவிதைகள், சிறுகதைகள் என வளர்ந்து பல புதியவர்களையும் ஈர்க்கத் தொடங்கியது. இது பல புதிய எழுத்தாளர்களை 80களிலும் 90களிலும் தோற்றுவித்தது. 90களில் வளமான கவிதைகள் வீச்சுடன் வெளிப்படத் தொடங்கியது. 1993ம் ஆண்டு தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக வந்த "குன்றத்துக் குமுறல்" என்ற கவிதைத்தொகுதி முக்கியமானது. இது மலையகத்தில் 1980களில் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆற்றிய காத்திரமான பங்களிப்புகளின் தொடர்ச்சி. பல புதிய தலைமுறை மலையக எழுத்தாளர்களுக்கான களமாக தேசிய கலை இலக்கியப் பேரவையும் அதன் இதழான "தாயகமும்" முக்கிய பங்காற்றின. பாரதி நூற்றாண்டு விழா, லூசுன் நூற்றாண்டு விழா, கைலாசபதி நினைவு நிகழ்வுகள் என்பன இதில் குறிப்பிடத்தக்கவை. புதிய தலைமுறை மலையக இலக்கியப் படைப்பாளிகளையும் வாசகர்களையும் மக்கள் இலக்கியம் நோக்கி நகர்த்தியதில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பங்களிப்பு கணிசமானது.

இசைப்பாடல்கள், நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் எனத் தோட்டந்தோட்டமாக தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னெடுத்த முயற்சிகள் கலை இலக்கியங்களை அடித்தட்டு மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது. 1980களின் தொடக்கத்தில் மலையகக் கலை இலக்கியப் படைப்பாளிகளுடன் தொடர்ச்சியான உறவைப் பேணி கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களை வழிகாட்டிய பேராசிரியர் க. கைலாசபதியை இங்கு நினைவுகூர்தல் பொருத்தம். 1990களின் நடுப்பகுதியில் இருந்து மலையகத்தில் இரண்டு போக்குகள் விருத்தி பெற்றன. முதலாவது என்.ஜி.ஓக்களின் வருகையைத் தொடர்ந்து அங்கு உருவாகிய அரசியல் நீக்கம் பெற்ற கலை இலக்கியங்கள் என்ற எண்ணக் கரு. இது காலப்போக்கில் மக்கள் விரோத நிலைப்பாடுகளை சில மலையகப் படைப்பாளிகள் எடுப்பதற்கும் அரசியலை இலக்கியத்திலிருந்து பிரித்து நோக்க வேண்டும், இலக்கியம்; அரசியல் பேசக்கூடாது என்ற கருத்தை முன்னிறுத்தியது. இதன் மறுதளத்தில் இலக்கியத்தை போராட்டத்தின் கருவியாக்குவது பற்றி மக்கள் படைப்பாளிகள் சிந்திக்கத் தொடங்கினார்கள். இவ்விரு போக்குகளும் எதிரெதிர்த்தளத்தில் நின்றன.

மேல்கொத்தமலைத் திட்டத்திற்கெதிரான போராட்டம் இந்த வேறு பாட்டை மிகத்தெளிவாகக் காட்டியது. இலக்கியச் சிகரங்கள் என்று தம்மை கூறிக்கொண்ட சில மலையக இலக்கியவாதிகள் அரசியல் சமர சங்களுடன் மக்கள் விரோத நிலைப்பாடுகளை எடுத்து தம்மை வெளிப்படுத்தி மக்கள் இலக்கியத்தின் எதிர்த்தளத்தில் நின்றதையும் காண முடிந்தது. கடந்த இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தங்களில் மலையக இலக்கியங்கள் நூலுருப் பெறுவது அதிகரித்துள்ளது. அதேவேளை இன்னொரு வருந்தத் தக்க போக்கும் உருவாகியுள்ளது. அங்கீ காரத்துக்கும் தனிமனிதப் புகழ்ச்சிக்காகவும் எதை யும் எழுதி நூலுருவாக்கும் செயல்கள் முனைப்படைந் துள்ளன. இது மலையக இலக்கியத்தின் பாடுபொருட்களை மாற்றியுள்ளது. கற்பனையும் வர்ணனையும் நிறைந்த மாய உலகைக் கட்டமைக்கும் படைப்புக்களின் அதிகரிப் பையும் அவதானிக்க முடிகிறது. இவை வெகுசனங்களின் சிந்தனையை மழுங்கடிக்கச் செய்யும் முனைப்பையுடைய நலிவு இலக்கியங்கள் மட்டுமன்றிச் சமூக நலன்கட்குப் பகைமையான நச்சு இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன. வெகுசனங்களின் ரசனையையும் அழகுணர்வையும் கீழ்மைப்படுத்தும் நோக்கில் திட்டமிட்டே வணிகக் கலை இலக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை அழகியல் பண்புடையவை என்றும் அரசியல் அற்றவை என்றும் இவை முன்தள்ளப்படுகின்றன. அரசியல் பேசும் இலக்கியங்கள் அழகியலற்றவை என்றும் இலக்கியமன்று என்று புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன.

இவ்விடத்து மக்கள் இலக்கியங்களின் முக்கியமான பண்பு குறித்து அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டி யிருக்கிறது. அழகியலைப் புறக்கணித்து வெறும் அரசி யற் சுலோகங்களை இலக்கியமாக்கி விட முடியாது. இது கலை இலக்கியம் பறறி முற்போக்குச் சிந்தனை யாளர்கள் தொடர்ந்து வலியுறுத்திய கருத்து. அழகியலைப் புறக்கணித்து வெறும் அரசியலைப் புரட்சிகர இலக்கியமாக மக்கள்முன் வைப்பது மக் களுடைய அழகுணர்வை அவமதிப்பதாகும். எனவே மக்களுக்கான இலக்கியம் என்பது என்றுமே அழகி யலைப் புறக்கணிப்பதல்ல. நல்ல மக்கள் இலக்கியங்கள் இன்றும் மக்கள் மனதில் நிலைப்பதற்கு காரணம் அதிலுள்ள அழகியல் கூறுகளே.

### அடையாளமும் அரசியலும் அதிகாரத்திற்கெதிரான குரலும்

மலையகத் தமிழர்கள் தங்கள் அடையாளத்திற்கானதும் உரிமைகளுக்கானதுமான போராட்டத்தைத் தொடர்ச் சியாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. பண்பாட்டுத் தளத்தில் அதற்கான போராட்டங்கள் தவிர்க்கவியலா தவை. இன்று தகவல் தொடர்பாடல் புதிய களங்களை எட்டியுள்ள நிலையில் இலக்கியங்கள் நல்லதொரு போராட்டக் கருவியாகும். இலக்கியம் எப்போதுமே பிரசாரம் செய்து வந்துள்ளது. ஒரு போராட்டச் சூழலில் இலக்கியம் போராட்ட நியாயத்திற்குச் சார்பாக இல் லாதபோது, அதற்கு எதிரானதாக அமை யும் வாய்ப்பு அதிகம். அதை இலங்கைச் சூழலில் நாம் கண்டுள்ளோம். எனவே உழகை;கும் மக்களின் போராட்ட நியாயத் திற்கு ஆதரவான இலக்கியத்தைப் படைப்பதும் இலக் கியவாதிகளை உருவாக்குவதும் அவசியம். அடையா ளங்கள் நெருக்கடிக்குள்ளாகும் போது அதைத் தக்க வைக்க வரலாற்றைப் பதிய உணர்வூட்ட என அனைத் தையும் இலக்கியத்தால் செய்திட முடியும். எந்தவொரு போராட்ட நியாயத்தினதும் அடிப்படை சமூக நீதி. எனவே படைப்பாளி முதலிற் சமூக நீதியை வலியு றுத்துவது அவசியமாகிறது. சமூக நீதியை வலியுறுத்தாத படைப்பாளிகளால் மக்கள் இலக்கியத்தைப் படைக்க முடியாது.

சமூக அக்கறையுள்ள படைப்பாளி தன் படைப்பின் மூலம் சமூக அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதோடு தனது முடிந்து விட்டது என்று அமைதியாக இருந்துவிட முடியாது. சமூகச் சீரழிவுக்கு உரமிடுகிற சமூக நலிவுக் கான கலை இலக்கியப் போக்குகட்கு எதிராக சமூகத் தளத்திற் போராட வேண்டும். அதற்கு எதிரான குரலாக ஒலிக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான எதிர்ப்புக் குரலகள் அதிகாரத்திற்கெதிரான குரல்களாக அமைவது இயற்கை. மக்கள் இலக்கியம் படைக்கப் புறப்பட்ட நேற் றைய மலையக இலக்கியப் பிதாமகர்கள், இன்று அரச அங்கீகாரத்துக்காகவும் விரு துகட்காகவும் அலைகிற அவலம், அவர்களது மக்கள் இலக்கியப் பிரகடனங்கள் எவ்வளவு பாசாங்கானவை என்று காட்டி யுள்ளன. அவர்களுக் கெதிரான குரல்கள், அவர்களது முகத்திரைகள் கிழிக்கின்ற குரல்கள் அதிகாரத்திற்கெதிரான குரல்களே. இலக்கியத்தை சொந்த அரசியல் இலாபத் திற்கும் தனிநலனுக்கும் பயன்படுத்திய இலக்கிய வியாபாரம் செய்வோர் மலிந்து கிடக்கிறார்கள் என்பதையும் நாமறிவோம்.

இவ்விடத்தில் தான் உண்மையான இலக்கியப் படைப்பாளி என்பவன் யார் என்ற வினா எழுகிறது. மலையக எழுத்துச்சூழல் இலக்கியத்தில் தன்னைத் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளது. தன்னையறி யாமலே அதன் பலமும் பலவீனமும் அதிற் பதிவா கின்றன. அவ்வகையில் மக்கள் விரோத எழுத்துக்கள் தானாகவே அம்பலமாகின்றன. அரசனின் நிர்வாண ஆடைபோல அப்படைப்பாளிகள் மக்கள் முன் நிற் கிறார்கள். மலையக மக்களின் போராட்டங்கள் பரந்து பட்டவை. அது பலதளங்களில் விரிவடைய வேண்டியது அவசியம். அதற்கு சமரசமற்ற மக்கள் நல நோக்கிலான பார்வைகொண்ட இலக்கியங்கள் அவசிய மாகின்றன. ஒருபுறம் நுகர்வுப்பண்பாடு, இன்னொருபுறம் அரசியல் சலுகைகள் என படைப்பாளிகளைக் கவர்ந்திழுந்து பாழ்படுத்தும் அம்சங்கள் அதிகம் நிறைந்த சூழலில் எனது படைப்புகள் யாருக் கானவை என்ற வினாவை ஒவ்வொரு படைப்பாளியும் கேட்டாக வேண்டும். கோட்பாட்டுத்தெளிவு இதற்குப் பயன்தரும். இது தொடர்பில் மக்கள் இலக்கியத்திலிருந்து மலையக இலக்கியப் படைப்பாளிகள் கற் றுக் கொள்ளவியலும். மக்கள் இலக்கி யத்தின் அவசியமான தேவையாக பண்பு யாதெனில் அது மக்களிடமிருந்து அந்நியப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாமையே. இதை உணர்ந்த படைப்பாளிகளால் மக்கள் இலக்கியத்தைப் படைக்க முடியும்.




***நிறைவாக***

மலையக மக்கள் இன்று முன்னெப்போதுமில்லாதளவு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளார்கள். இந்த நெருக்கடிளை எதிர்கொள்ள பரந்துபட்ட மக்கள் ஒற்றுமையும் ஊக்கமும் முன்னோக்கும் அவசியமாகின்றது. இதை சாத்தியமாக்குவதற்கு இலக்கியத்தின் பங்கு தவிர்க்க வியலாதது. முக்கள் இலக்கியம் பற்றிப் பேசுகின்ற ஒவ்வொரு தடவையும் அதன் தரம் குறித்த விமர்சனம் வைக்கப்படுகிறது. இவ்விடத்தில் மக்கள் கலை இலக்கியத்திற்கான யெனான் கருத்தரங்கில் மாஓ சேதுங் கூறியவை சிந்திக்கத் தக்கவை:

"சனரஞ்சகப்படுத்துவது என்றால் மக்களுக்காகச் சனரஞ்சகப்படுத்துவது. தரத்தை உயர்த்துவது என்றால் மக்களின் மட்டத்தை உயர்த்துவது. இப்படி உயர்த்துவது அந்தரத்திலிருந்தோ மூடிய கதவுகளின் பின்னாலிருந்தோ நடப்பதில்லை. மாறாக அது, உண்மையிலேயே சனரஞ்சகப்படுத்துவதன் அடிப்படையிலேயே நடக்கிறது. நம்மளவில், தரத்தை உயர்த்துவது என்பது சனரஞ்சகப்படுத்துவதன் அடிப்படையில் நடக்கும் அதேவேளை, சனரஞ்சகப்படுத்தல் தரத்தை உயர்த்துவதால் வழிநடத்தப்படுகிறது. அச்சொட்டாக, இக்காரணங் கொண்டே, நாம் கூறுகிற சனரஞ்சகப்படுத்தும் பணி, தரத்தை உயர்த்துவதற்குத் தடையாக இருப்பதற்கு மாறாகத், தரத்தை உயர்த்துவதற்கான அடிப்படையை வழங்குகிறது. மக்களுக்காகப் பேசுவதன் மூலமே புரட்சிகர எழுத்தாளரோ கலைஞரோ அவர்கட்குக் கற்பிக்க இயலும். அவர் களது மாணவராக இருப்பதன் மூலமே அவர்களது ஆசிரியராகவும் இயலும்."






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் வீதி, மனிப்பாய்.

# நிலா

077 850 3153
077 212 8586

உயர்தர சைவ உணவகம்



P.P.N

EXPRESS TRANSPORT
INTERNATIONAL COURIER SERVICES
COLOMBO ⇄ JAFFNA ⇄ POINTPEDRO





COLOMBO BOOKING
B1/G1 Bloumendhal Flats,
Colombo -13
077 789 70 70 | 077 640 70 70

JAFFNA BOOKING
449, KKS Road, Jaffna.
077 228 70 70 | 077 784 49 04

BUS HIRE & TRANSPORT
077 -61 55 162



# ஹரிஷ் கார்டன்

பிரைவேட் லிமிடெட்

பூக்கள் , பூங்கன்றுகள் , பழமரக்கன்றுகள் , புல் வகைகள் மற்றும் அழகு தாவாரங்கள் உட்புறத்தாவரங்கள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்

0776524970

Haris Garden kokuvil
ASK Garden nunavil
ASK Garden urumpirai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசிகா லேணர்ஸ்

# THE SASIKA LEARNERS



**தலைமைக் காரியாலயம்**

இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

021 221 7678, 077 722 6247

அரச அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சிப் பாடசாலை

**கிளைக் காரியாலயங்கள்**

வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

கே.கே. எஸ் வீதி, மல்லாகம்
021 224 3393
070 301 3014

ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664, 070 301 3016

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு
021 225 2333, 071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999, 071 775 0999

இல. 821C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
021 222 8004, 070 301 5004

பழைய கண்டி (பிரதான வீதி) காரைநகர்
021 225 2454, 070 510 2484

**வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றிப் பயிற்சி வழங்கப்படும்.**
**(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org